


# பணம் மைனஸ் பணம்

எண்டமூரி வீரேந்திரநாத்



## இந்நூலாசிரியரைப் பற்றி...

எண்டமூரி வீரேந்திரநாத்தின் பெயர் தமிழ் வாசகர்களுக்குப் புதிதல்ல.. தெலுங்கில் எழுத்தாளராக இருக்கும் இவருக்கு, பத்து வயதுக் குழந்தை முதல் எழுபது வயது வரை வாசகர்கள் இருக்கிறார்கள்.

வெவ்வேறு வகையான கதைகளை எழுதுவதில் விருப்பமுள்ளவர். கிட்டத்தட்ட ஐம்பது நாவல்களை எழுதி இருக்கிறார். இந்த ஐம்பது நாவல்களில் சுமார் பாதிக்கு மேல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கதை அமைப்பைப் பொறுத்தவரை எல்லோருக்கும் பொருத்தமானதாகத் தேர்ந்தெடுப்பதாலும், சுவாரசியமான நடையில் எழுதுவதாலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைத் தன்பால் ஈர்த்து, இணைத்துக் கொண்டவர். தொழில் முறையில் ஒரு சார்ட்டட் அக்கவுண்டண்ட்டாக இருந்தவர். ஆந்திரா வங்கியில் பதினைந்து வருடங்கள் வேலை பார்த்து, எழுத்தின்மீது உள்ள ஆர்வத்தால் அதைத் துறந்து, முழு நேர எழுத்தாளராக மாறி விட்டார். இவரது நாவல்களில் பத்துக்கு மேற்பட்டவை சினிமாவாக வெளிவந்து உள்ளன.

சமீபத்தில் இவர் எழுதிய புத்தகம் பர்சனாலிட்டி டெவலப்மெண்ட் பற்றியது – "விஜயானிகி ஐது மெட்லு" (வெற்றிக்கு ஐந்து படிகள்) வெளிவந்த ஒரே வருடத்தில் இருபதாயிரம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

6/9/06
24/9/06
10/10/06
13 DEC 2007
26 DEC 2007
2 FEB 2008
9 AUG 2008
19 AUG 2008
31 AUG 2008
28 SEP 2008
9 OCT 2008
13 NOV 2008
14 DEC 2008
28 DEC 2008
1 JAN 2009
24 FEB 2010
25 APR 2010
17 MAY 2010
1 JUL 2010
22 AUG 2010
26 SEP 2010
18 DEC 2010
19 JAN 2011
07-08-11
08-08-11
18-10-11

# பணம் மைனஸ் பணம்

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்
கௌரி கிருபாநந்தன்

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

6/9/06
24/9/06
10/10/06
13 DEC 2007
6 DEC 2007
2 FEB 2008
9 AUG 2008
9 AUG 2008
1 AUG 2008
8 SEP 2008
9 OCT 2008
3 NOV 2008
14 DEC 2008
28 DEC 2008
1 JAN 2009
24 FEB 2010
29 APR 2010
7 MAY 2010
1 JUL 2010
22 AUG 2010
26 SEP 2010
18 DEC 2010
19 JAN 2011
07-08-11
08-08-11
18-10-11
37809

# பணம் மைனஸ் பணம்

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்
கௌரி கிருபாநந்தன்

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு - 2003

© ஆசிரியருக்கு

விலை : ரூ.75-00

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால்பெட்டி எண்.617
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி - 24941314

37809
5476729

Typesetting : IMAGE - DTP, Chennai - 17
Printed by : kay em Packaging Industries, Chennai - 14.

# முன்னுரை

திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய 'டப்பு மைனஸ் டப்பு'' என்ற நாவலை தமிழாக்கம் செய்து "பணம் மைனஸ் பணம்'' என்ற தலைப்பில் வாசகர்களுக்கு முன்னால் வைத்துள்ளேன்.

காதலியின் பிறந்த நாளன்று ஃபோன் செய்து வாழ்த்துக்களை தெரிவிக்க கையில் ஒற்றை ரூபாய் கூட இல்லாத ஒரு இளைஞனின் கதை இது.

பணம் சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கை இல்லை என்றாலும் கூழோ கஞ்சியோ குடித்துக் கொண்டு, தான் காதலித்த நபருடன் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியும் என்ற கூற்று திரைப்படங்களிலும், நாவல்களிலும் மட்டுமே சாத்தியம்.

பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் குறிக்கோள் என்று வாழ்க்கையின் சந்தோஷத்தை பணயம் வைக்கும் நபர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். கஷ்டங்கள் யாருக்குத்தான் இல்லை? ஆனால் அதை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறும் போதுதான் சுகத்தின் உண்மையான மதிப்பு புரியும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இலட்சியம் இவை மூன்றும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

மொழி மாற்றத்திற்கு அனுமதி அளித்த திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

—கௌரி கிருபாநந்தன்

## பதிப்புரை

நமது பாரத தாய்த்திரு இந்திய நாட்டில் எல்லா விதமான இயற்கைச் செல்வங்களும் நிறைந்து உள்ளது. திறமை உள்ளவர்கள் நன்கு வாழ்கின்றனர். திறமையற்றவர்கள் தவிக்கின்றனர். இதிலும் திறமை உள்ளவர்களில் சிலர், தனது புத்தி சாதுர்யத்தால் பிறரை ஏமாற்றியும், ஏராளமாகச் சம்பாதிக்கின்றனர். திறமையில்லாத, சிந்திக்காத, சிந்திக்கத் தெரியாத மெத்தனமாக வாழும் மக்கள் இவர்களிடம் ஏமாறுகின்றனர். இதுதான் இன்றைய சமுதாய நிலை. இதைத்தான் இந்தக் கதையும் சொல்கிறது.

இந்தக் கதையைப் படித்த பிறகாவது வாசகர்கள் சிந்தித்துத் தங்கள் வாழ்க்கையை நல்ல விதமாக அமைத்துக் கொள்வார்கள் என எண்ணுகிறோம்.

இப்படிப்பட்ட அருமையான கதையை எழுதிய எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், தமிழ் மொழியாக்கம் செய்த கௌரி கிருபானந்தன் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பதிப்பகத்தார்.

37869
5476729
கொளத்தூர், சென்னை

# பணம்
# மைனஸ்
# பணம்

பாரமாகப் பெருமூச்சு. "அப்படின்னா எனக்குத் தெரியாது என்கிறாய். அப்படித் தானே" என்றான் பாபு வலது கையால் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து கொண்டே. ஸ்ரீ லக்ஷ்மி வினாடி நேரம் கூட யோசிக்காமல் "எம்.ஏ.வில் கோல்டு மெடல் வாங்கியிருக்கிறாய். அதனால் புத்திசாலி என்று நினைத்து காதலித்தேன். ஆனால் நீ வெறும் புத்தகப் புழு என்றும், பிழைப்பதற்குத் தேவையான சாமர்த்தியம் கொஞ்சமும் இல்லாதவன் என்றும் இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்" என்றாள் எரிச்சலோடு.

"நீ இவ்வளவு உறுதியான முடிவிற்கு வந்ததற்குக் காரணம் தெரிந்துகொள்ளலாமா?"

"நாமிருவரும் சந்தித்து நேற்றோடு சரியாய் நாலு வருஷம் முடிந்து விட்டது. நம் முதல் சந்திப்பின் நாலாவது ஆண்டு விழா நாள் அன்றைக்கு நீ வந்து என்னைக்

குறைந்த பட்சம் ஹோட்டலுக்காவது அழைத்துக் கொண்டு போவாய் என்று நேற்று முழுவதும் எதிர்பார்த்தேன்."

"எனக்கு நினைவு இருந்தது. ஆனால் நேற்று உன்னைப் பார்க்க வருவதற்கு பஸ் சார்ஜ் கூட என்னிடம் இல்லை. அதான் வராமல் இருந்து விட்டேன்."

"நான் சொல்ல வந்ததும் அதுதான். குறைந்தபட்சம் போன் செய்து சொல்வதற்கும் ஒற்றை ரூபாய் கூட இருக்க வில்லை அப்படித்தானே."

"மிகச் சரியாக புரிந்துகொண்டு விட்டாய். உன்னைப் போல் புரிந்துகொள்ளக் கூடிய கேர்ல் பிரண்ட் இருப்பது என் அதிர்ஷ்டம்."

"ஆனால் இந்த உலகில் என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருக்கமாட்டார்கள்." கவலையுடன் சொன்னாள்.

அவன் அவளை இரக்கத்தோடு பார்த்துவிட்டு, "மற்ற ஆண்களைப் போல் இல்லாமல் காதலித்து நான்கு வருடங்கள் ஆகியும் கூட நம் முதல் சந்திப்பின் தேதியை நான் நினைவு வைத்துக்கொண்டு இருப்பதால் நீ அதிர்ஷ்டசாலி என்றுதான் நினைக்கிறேன்" என்றான்.

அதைக் கேட்டதும் ஸ்ரீ லக்ஷ்மிக்கு தலை முதல் கால் வரையில் எரிச்சல் ஏற்பட்டது.

"இந்தக் காலத்துப் பெண்கள் பாய்பிரண்ட்ஸ் எவ்வளவு தீவிரமாய் தம்மை நேசிக்கிறார்கள் என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. தமக்காக எவ்வளவு கஷ்டப்படு கிறார்கள் என்றுதான் யோசிக்கிறார்கள். அந்தக் காலத்தில் இளவரசியின் மோதிரம் விரலிலிருந்து நழுவி சிங்கத்தின் கூண்டுக்குள் விழுந்து விட்டால் காதலன் உயிரை



பணயமாக வைத்து அதை எடுத்துக் கொண்டு வருவானாம். இந்தக் காலத்து இளைஞர்கள் காதலிக்கு போன் செய்வதற்குக் கூட ஒரு ரூபாய் செலவாகுமே என்று யோசிக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்" என்றாள்.

"என் காதலை குறைவாக எடைபோடாதே ஸ்ரீ லக்ஷ்மி."

"காலங்காலமாய் சொல்லப்பட்டு வரும் வசனம்."

"பின்னே என்ன செய்யணுமோ அதைச் சொல்லு."

"நாம் சுகமாக வாழ்வதற்குத் தேவையானது பணம். புத்தியைப் பயன்படுத்தித் தேவைப்பட்டதைச் சேகரித்துக் கொள்ள முடியாமல் போனால் அது எப்படி புத்தி சாலித் தனம் ஆகும்?"

"ஆனால் காதல்... அன்பு... உன் மீது உள்ள நேசம்..."

"அதெல்லாம் மனதில் இருக்கலாம். ஆனால் அதை வெளிப்படுத்தணும் என்றால் சில செயல்கள் அவசியம். நாளைக்குக் கல்யாணம் ஆன பிறகு தாமிருவரும் காதலைச் சாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்து விட முடியாது இல்லையா. உன்னுடைய திறமையை பயன்படுத்தி ஏதாவது பிசிநெஸ் செய்வதாக சொல்கிறாய். பிசிநெஸ் என்றால் கொஞ்சமோ நஞ்சமோ பிறரை ஏமாற்றணும். திறமையை பணமாக மாற்றிக் கொள்ளணும். அப்படித் தானே."

"ஆமாம். ஆனால் எனக்கு இதுவரையில் அந்தத் தேவை ஏற்படவில்லை.

"ஏற்படவில்லையா? நேற்றைக்கு எனக்கு போன் செய்வதற்கு ஒரு ரூபாய் தேவைப்படவில்லையா?"

"என் திறமையை ஒரு ரூபாய் சம்பாதிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்வதை நான் விரும்பவில்லை" என்றான் பாபு. தனிமையில் இருக்க நினைக்கும் காதலர் களின் தவிப்பை சாதகமாய் எடுத்துக்கொண்டு தன் வியாபாரத்தை பெருக்கிக் கொண்டிருக்கும் வேர்கடலை வியாபாரியைப் பார்த்துக் கொண்டே.

"கையால் ஆகாதவர்கள் சொல்லும் வார்த்தை இது. மனசாட்சியை அழகாக ஏமாற்றிக் கொள்வது அவர்களுக்கு கை வந்த கலை." வெறுப்போடு சொன்னாள்.

"சரி. என் சாமார்த்தியத்தைப் பயன்படுத்தி அடுத்த மாதம் வரப்போகும் உன் பிறந்த நாளுக்கு நானே சுயமாக சம்பாதித்த பணத்தில் பரிசு வாங்கித் தரப் போகிறேன். சரிதானே?" சவால் செய்வது போல் சொன்னான்.

"எப்படிச் சம்பாதிக்கப் போகிறாய்?" ஸ்ரீ லக்ஷ்மி ஆர்வத்துடன் கேட்டாள்.

"அதான் பார்க்கப் போகிறாயே. என்னைக் கல்யாணம் செய்து கொண்டாலும் எதிர்காலத்தில் உனக்கு பணக் கஷ்டம் எதுவும் வராதபடி பார்த்துக் கொள்ளும் புத்திசாலித்தனம் என்னிடம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவாவது நான் சம்பாதித்துக் காட்டுகிறேன். போதுமா?"

"ஓ.கே."

"உன் போட்டோ ஒன்றை எனக்குக் கொடு."

"வ்வாட்!"

"நாளைக்கு வரும்போது உன்னுடைய போட்டோ ஒன்றை எடுத்துக் கொண்டு வா."



"இவ்வளவு நாளாக இல்லாமல் இப்பொழுது போட்டோ எதுக்கு? உன் சாமர்த்தியத்தை நிரூபித்துக் காட்டுவதற்கு என் போட்டோவுடன் ரொமான்ஸ் நடத்தப் போகிறாயா?"

"என் ரொமான்ஸ் வெறுமே உன் போட்டோவுடன் நின்று விடாமல் இருப்பதற்கான முயற்சி இது. அதற்குத் தான் உன் போட்டோ வேண்டும். இதற்கு மேல் விவரங் களை கேட்காதே."

"சரி. நாளை மாலையில் தருகிறேன்."

வழக்கம் போல் பஸ் ஸ்டாப் அருகில் இருவரும் பிரிந்து போனார்கள்.

* * *

பதினைந்து நாட்களுப் பிறகு.

ஸ்ரீ லக்ஷ்மியின் முகம் உதயிக்கும் சூரியனை விட சிவப்பாய் கன்றிப் போயிருந்தது கோபத்தால். அவள் கையில் ஒரு பிரபல வார இதழ் இருந்தது. அதில் அவள் புகைப்படம் பிரசுரமாகியிருந்தது. புகைப்படத்தோடு கேராஃப் பாபுவின் முகவரியும் வெளியாகியிருந்தது. அதன் கீழ் "யாரோ வரப்போகிறார்" என்ற தலைப்புடன் ஒரு கவிதை வெளியாகி இருந்தது.

" வெயிலுக்குக் காய்ந்து பாளமாய் வெடிப்பு கண்ட
நிலம் மழைத்துளிக்காக காத்திருப்பது போல்...
மரத்தின் கீழே துளிர்த்த கொடியானது
மெம்மேலே படர்ந்து கிளைகளைப் பிண்ணிக்
கொள்ள அவசரப்பட்டாற்போல்...

நான் காத்திருக்கிறேன்
தனிமை நிறைந்த இந்த வாழ்க்கையில்
எனக்குத் துணை யாரோ?
கண்ணுக்குத் தெரியாத அந்த நண்பன் யாரோ?
நண்பனே! உனக்காக முத்துச்சிப்பியைப்போல்
காத்திருக்கிறேன்.

சினேகிதனே!

உன் கரங்களில் இளைப்பாற
நினைக்கிறேன்
தோழனே!

உன் காதலில் என்னையே நான்
மறந்து போய்விட வேண்டுமென்று தவிக்கிறேன்
என் இதய அறையின் தனிமையைத்
துடைத்தெறிவதற்கு துடைப்பக்கட்டையாய்
நீ வருவாய் என்று"

அன்று மாலை பாபு பார்க்கிற்குப் போனபொழுது ஸ்ரீ லக்ஷ்மி காத்துக் கொண்டிருந்தாள். கோபத்தினால் ஜிபுஜிபு என்று இருந்த அவள் முகத்தை முறுவலுடன் பார்த்தான் பாபு.

அவனைப் பார்த்ததும் பத்திரிகையை அவன் முகத்தில் வீசி எறிந்தாள்.

"இதென்ன? காய்ந்த நிலமாவது? மழைத் துளியாவது? கொடியாய் பின்னிக்கொள்வதாவது? நான் காதலுக்காக தவித்துப் போய்க் கொண்டிருக்கிறேனா? எனக்கு துடைப்பைக் கட்டை போன்ற நண்பன் வேண்டுமா? போட்டோ கேட்ட போது எதற்காகவோ என்று நினைத்தேன். என் அனுமதி இல்லாமல் என் பெயரில் கண்ட குப்பையை எழுதுவாயா? மேலும் பக்கத்திலேயே என் போட்டோவையும் போடச் செய்வாயா?"



வெள்ளமாய் தாக்கிய அவள் வசைமாரியைக் கேட்டு உல்லாசமாக சிரித்தான் பாபு.

அதைப் பார்த்ததும் ஸ்ரீ லக்ஷ்மிக்கு உடல் பற்றி எரிவது போல் கோபம் வந்தது.

"இதெல்லாம் என்ன என்று கேட்டால் பதில் சொல்லாமல் சிரிக்கிறாயே. பதில் சொல்லு" என்று காலரைப் பிடித்து உலுக்கினாள்.

"உடனே பதில் சொல்வதற்கு எதுவும் இல்லை. வெயிட் அண்ட் ஸீ." மெதுவாய் அவள் கையை விலக்கிக் கொண்டே சொன்னான்.

"ஏன்? அதற்குள் பதில் யோசித்து வைக்கப் போகிறாயா?

"ஆமாம். உன் பிறந்த நாள் அன்றைக்கு சொல்கிறேன் இதற்கு பதிலை."

"ஓஹோ! இந்த கவிதை மூலமாய் கிடைக்கும் பணத்தைக் கொண்டு என் பிறந்த நாளுக்குப் பரிசு தரப் போகிறாயா?"

"இது போன்ற கவிதைகளுக்கு பத்திரிகைக்காரர்கள் இருபது ரூபாய்க்கு மேல் அனுப்ப மாட்டாங்கன்னு நினைக்கிறேன். என் காதலிக்கு அவ்வளவு சின்னப் பரிசைத் தர விரும்பவில்லை."

ஸ்ரீ லக்ஷ்மி புரியாதவள் போல் பார்த்துவிட்டு "பின்னே?" என்றாள்.

"அப்புறமாக சொல்கிறேன்."

★ ★ ★

பதினைந்து நாட்களுக்குப் பிறகு மலையாய்க் குவிந்து கிடந்த கடிதங்களிலிருந்து ஒவ்வொன்றாய் எடுத்து பிரித்துப் பார்க்கத் தொடங்கினான் பாபு. ஏறத்தாழ ஐநூறு கடிதங்கள் இருந்தன. எல்லாமே ஆண்கள் எழுதியவை தான்.

"உங்கள் கவிதை மிக அருமையாக இருந்தது" என்று தொடங்கி "உங்க போட்டோவைப் பார்த்ததும் உடனே உங்களுடன் நட்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றிவிட்டது" என்ற வரியுடன் முடிவடைந்த கடிதங்கள்தான் பெரும்பாலும் இருந்தன.

சிலர் போலீஸ் வேலைக்கு மனுப்போடுவது போல் உயரம், எடை, பருமன் போன்ற அளவுகளை குறிப்பிட்டு புகைப்படத்தையும் அனுப்பியிருந்தார்கள். மேலும் சிலர் குடும்ப விவரங்களை குறிப்பிட்டு இருந்தார்கள். சிலர் தாம் ஏதோ மேதாவிகளைப் போல் அக்கவிதையில் இருந்த பிழைகளை சுட்டிக் காட்டிவிட்டு 'அன்போடு' ஆசிகளை வழங்கிவிட்டு முகவரியைத் தந்து பதில் எழுதச் சொன்னார்கள்.

இன்னும் சிலர் அதிமேதாவித்தனமாய் கண்டனம் தெரிவித்து விட்டு உங்களுக்கு நேர்மை இருந்தால் பதில் எழுதுங்கள் என்று சவால் செய்தார்கள்.

எல்லா கடிதங்களிலும் பொதுவாக இருந்த கருத்து "உங்கள் கவிதை அற்புதமாக இருக்கிறது. என் மனதை நெகிழ்த்தி விட்டது. ஒவ்வொரு வரியிலும் உங்கள் தவிப்பு தென்படுகிறது. நானும் அன்பு நிறைந்த நேசக்கரம் ஒன்றிற்காக தவித்துப் போய்க் கொண்டிருக்கிறேன். உங்களோடு நட்பு வைத்துக் கொள்ள விரும்புகிறேன்" என்பதுதான்.



சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலிருந்து வந்திருந்த கடிதங்களுக்குப் பதில் எழுதத் தொடங்கினான். எல்லாவற்றுக்கும் ஒரே பதில்.

"உங்கள் கடிதம் என்னை அன்பால் திணறடித்து விட்டது. நேரில் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன். ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி காலையில் ஸ்னோஹில் ஐஸ் கிரீம் பார்லரில் (முகவரியை கீழே தந்துள்ளேன்) பத்தரை மணிக்கு எதிர்பார்க்கவும்.

உங்களுடைய

'நான்'

இந்த விதமாக பத்தரை மணி என்று ஒரு இருபது பேருக்கு எழுதினான். மேலும் இருபது பேருக்கு பதினொன்றரைக்கு வரச் சொல்லியும், அதற்கடுத்த வர்களுக்கு இரண்டு மணிக்கு வரச்சொல்லியும் இவ்வாறு எழுதி தபாலில் சேர்த்தான்.

அதே விதமாக மதுரை, கோவையைச் சேர்ந்தவர் களுக்கும் கடிதம் எழுதினான்.

பார்த்துக் கொண்டிருந்தபோதே ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியும் வந்து விட்டது.

* * *

ஆகஸ்ட் பதினைந்தாம் காலை. வெங்கடராம் பதினாறாவது முறையாக கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு விட்டுப் புறப்பட்டான். அப்பொழுது நேரம் ஒன்பதரை ஆகியிருந்தது. அவன் பத்தே கால் மணிக்கெல்லாம் ஸ்னோஹில் ரெஸ்டா ரெண்டிற்கு வந்து

சேர்ந்தான். உள்ளே போய் மறுபடியும் சட்டைப் பையிலிருந்து சீப்பை எடுத்து தலைவாரிக் கொண்டான். அதற்குள் பேரர் வரவே ஐஸ் கிரீமிற்கு ஆர்டர் தந்தான். வெங்கடராமின் பார்வை வாசல் பக்கமாகவே இருந்தது.

க்ளீனர் வந்து காலியான கப்புகளை எடுத்துச் சென்று விட்டான்.

பத்தே முக்காலுக்கு வெங்கடராமிற்கு சந்தேகம் வந்தது. 'அந்தப் பெண்' வெளியே தனக்காக காத்திருக்கிறாளோ என்று. வெளியே போய் சாலையில் இருபுறமும் பார்த்துவிட்டு வந்தான். யாருமே இருக்க வில்லை. கூட்டம் மட்டும் அளவுக்கு மீறி இருந்தது. அவன் வெளியே போய் விட்டு வருவதற்குள் வேறு யாரோ அந்த சீட்டில் உட்கார்ந்து விட்டார்கள். அவன் வேறு மேஜைக்கு முன்னால் போய் உட்கார வேண்டி யிருந்தது. பேரர் மறுபடியும் வந்தான். சற்று முன் வேறொரு மேஜையின் முன்னால் அமர்ந்து ஐஸ்கிரீம் சாப்பிட்டதாகச் சொல்ல முடியாதவனாய் மறுபடியும் இன்னொரு ஐஸ்கிரீமிற்கு ஆர்டர் தந்தான்.

பதினொன்றே கால் ஆயிற்று.

பதினொன்றரை.

அதற்குள் சில பேர் போய் விட்டாலும் நிறைய பேர் வந்து விட்டதால் காலையை விட இன்னும் கூட்டம் அதிகமாக இருந்தது. பன்னிரெண்டு மணி அளவில் நிற்கக் கூட இடமில்லாத அளவுக்கு நெருக்கடியாகி விட்டது. கையில் இருந்த கப்பில் ஐஸ்கிரீம் தீர்ந்து போனதுமே வெளியே போய்த் தீர வேண்டியிருந்தது. அல்லது இன்னொரு கப்பிற்கு ஆர்டர் கொடுக்க வேண்டியிருந்தது. வெங்கடராமிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை.



மேற்கொண்டு ஐம்பது ரூபாய் செலவழித்துவிட்டு மேலும் அரைமணி நேரம் உட்கார்ந் திருந்தான்.

பன்னிரெண்டரை மணியாகும் போது அவன் அந்த ரெஸ்டாரெண்டை விட்டு வெளியே வந்தான். அவன் மட்டும் கூர்ந்து கவனித்து இருந்தால் பத்தரை மணிக்கு தன்னோடு வந்தவர்கள் எல்லோரும் அதே விதமாய் ரெஸ்டாரெண்ட்லேயே இருந்து வந்ததைத் தெரிந்து கொண்டிருக்கலாம்.

* * *

**"என்ன** இது?" கேட்டாள் ஸ்ரீ லக்ஷ்மி.

"உன் பிறந்த நாள் பரிசு." பாக்கெட்டைத் தந்தான்.

அதைப் பிரித்துப் பார்க்கும் போதே வியப்பாய் அவள் கண்கள் அகல விரிந்தன. தன்னையும் அறியாமல் "வாவ்!" என்று மெலிதாக கத்திவிட்டாள்.

அந்தப் பாக்கெட்டில் பட்டுப்புடவை இருந்தது.

"இவ்வளவு பணத்தை எப்படிச் சம்பாதித்தாயோ சொல்லமாட்டாயா?"

பாபு முறுவலித்துவிட்டு பேசாமல் இருந்தான். அவள் மேலும் மேலும் கெஞ்சவே ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் காண்பித்தான். ஸ்னோஹில் குழுவினர் எழுதியிருந்த கடிதம் அது. அதில் இவ்வாறு இருந்தது.

"நீங்கள் கேட்டுக் கொண்டபடி ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி லீவு நாளில் எங்கள் சென்னை, மதுரை, கோவை பிராஞ்சுகளைத் திறந்து வைத்தோம். அன்றைக்கு நீங்கள் சொன்னபடியே எங்கள் விற்பனை கணக்கிட முடியாத

அளவுக்கு மிக அதிகமாக இருந்தது— அவ்வளவு கூட்டத்திற்குக் காரணம் இன்னும் எங்களுக்குப் புரிய வில்லை. உங்களுக்கு எங்கள் பாராட்டுக்கள். லீவு நாளில் விற்பனை அதிகரிப்பு விஷயத்தில் உத்திர வாதமாக நீங்கள் செலுத்திய டிபாஸிட் தொகையைத் திருப்பி அனுப்புவ தோடு உங்கள் கமிஷன் ஆயிரத்தி ஐநூறு ரூபாய்க்கான காசோலையை அனுப்பியிருக்கிறோம். பெற்றுக் கொள்ளவும்.

நீங்கள் ஒப்புக்கொண்டால் அடுத்த ஞாயிற்றுக் கிழமை கூட கடையைத் திறந்து வைக்கிறோம். முன்னை விட இரண்டு சதவீதம் கமிஷனை அதிகமாக தருவதற்கு தயாராக இருக்கிறோம். தங்களுடைய ஒப்புதலைத் தெரியப் படுத்தவும்.

ஸ்ரீ லக்ஷ்மி நம்பமாட்டதவளாய் அக்கடிதத்தைப் பார்த்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள். பிறகு அதே திக்பிரமையுடன் நிமிர்ந்து பாபுவைப் பார்த்தாள். நடந்ததை எல்லாம் புரிந்து கொள்வதற்கு அவளுக்கு ஐந்து நிமிடங்கள் பிடித்தன. பாபு தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருந்தான்.

அவள் இன்னும் நம்ப முடியாதவாள் "இவ்வளவு விற்பனையா? மனிதர்கள் இப்படி... இப்படிக் கூட இருப்பார்களா?" என்றாள்.

"ஒரு பெண்ணுக்காக இளைஞர்கள் காத்திருப்பது ரொம்ப சாதாரண விஷயம். மனிதர்கள் இதை விட டிபென்டெண்டாக இருப்பார்கள். கவலையுடன், இரக்கத்துடன் யார் மீதாவது சார்ந்து இருக்க தயாராக இருப்பார்கள். அவர்களை குற்றம் சொல்ல முடியாது. அவர்களுடைய கஷ்டங்கள் அப்படிப்பட்டவை. குழந்தை



பிறக்கவில்லை என்றால் போலி சாமியார்களை அணுகுவார்கள். ஹிப்னாடிஸத்தால் இதய நோயை குணப் படுத்த நினைப்பார்கள். இவ்வளவு பேர் அப்பாவிகள் இருக்கும் இந்த உலகில் அடுத்தவனின் முட்டாள் தனத்தைப் பணமாக்கிக் கொள்வது ரொம்ப சுலபம். உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் எதிர் காலத்தில் எந்தக் கஷ்டமும் வராதபடி பார்த்துக் கொள்ளும் சாமர்த்தியம் என்னிடம் உள்ளது என்று நிரூபித்துக் கொள்வதற் காகத்தான் இதையெல்லாம் செய்தேன். இப்பொழுதாவது என் புத்திசாலிதனத்தை ஒப்புக் கொள்கிறாயா?"

ஸ்ரீ லக்ஷ்மியின் முகத்தில் எதிர் பார்த்த அளவுக்கு மகிழ்ச்சி தென்படவில்லை. கையில் இருந்த கடிதத்தை பார்த்தபடி "அந்த ஞாயிற்றுக்கிழமை காண்ட்ராக்டை ஒப்புக்கொள்ளப் போகிறாயா?" என்று கேட்டாள்.

"அந்த முடிவு என் வாழ்க்கைத் துணைவி ஆகப் போகும் உன் மீது தான் ஆதாரப்பட்டிருக்கிறது. நீயே சொல்லு. அந்த அப்பாவி இளைஞர்களை இன்னும் ஏமாற்றச் சொல்கிறாயா?" நாடக பாணியில் கேட்டான்.

அவள் கையிலிருந்த கடிதத்தை நான்காக கிழித்து காற்றில் பறக்க விட்டாள்.

"தாங்க்ஸ். உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது" என்றான் பாபு மனப்பூர்வமாக.

★ ★ ★

# 2

"நம் திருமணத்தைப் பற்றி உனக்குத் தெரியாத ரகசியத்தை சொல்லட்டுமா?" பாபு சொன்னான்.

ஸ்ரீ லக்ஷ்மி நிமிர்ந்து சந்தேகத்துடன் பார்த்துவிட்டு "என்ன விஷயம்?" என்றாள்.

"சொல்லத்தான் போகிறேன். அது இருக்கட்டும். ஒவ்வொரு விஷயத்திற்கும் இப்படி சந்தேகத்தோடு பார்ப்பானேன்? உனக்குத்தான் அழகான பெரிய கண்கள் ஆச்சே. கொஞ்சம் காதலோடு சந்தோஷமாக பார்க்கலாம் இல்லையா?" என்றான் குறிப்பு தருவது போல்.

"உனக்குத் தெரியாத ரகசியத்தைச் சொல்கிறேன் என்று கணவன் சொன்னால் எந்த மனைவியும் காதலோடு பார்க்கமாட்டாள். எந்த புது செட்டப் பற்றிச் சொல்லப் போகிறானோ என்று புயலில் சிக்கிய கப்பல் போல் தவிப்பாள். சரி. விஷயத்தைச் சொல்லுங்கள் கதா நாயகன் அவர்களே! யார் அந்த ஜெயபிரதா?"

"என் முகத்திற்கு ஜெயபிரதா தான் பாக்கி. இருக்கும் ஸ்ரீ தேவிக்கே இரண்டு வேளை சாப்பாடு போட முடியாமல் திண்டாடுவது போறாதா?

"சரி. விஷயத்தைச் சொல்லு."

"சாதாரணமாக எல்லோரும் மூன்று முடிச்சுகள் போடுவார்கள் இல்லையா. நான் ஐந்து முடிச்சுகள் போட்டேன்."



"அதுதான் ரகசியமா?"

"வேண்டுமானால் பிரித்துப் பார்த்து எண்ணிக் கொள்."

"அமங்களமாய் பேசாதீங்க."

"ஐந்து முடிச்சு ஏன் போட்டேன் என்று கேட்க மாட்டாயா?"

"ஏனாம்?"

"ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவுத் திருமணம் செய்து கொண்டு வீட்டுக்குப் போனால் எங்க வீட்டார் வாசற் படியில் காலை வைத்தால் ஒடித்து விடுவதாக மிரட்டினார்களே. நினைவு இருக்கா?"

"அதனால்தானே தனிக்குடித்தனம் வந்தோம் என்றாள்."

"தனிக்குடித்தனம் தொடங்கிய இரண்டாவது நாள் வீட்டிலேயே உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன்."

"ஆமாம். சாஸ்திரிகளோ, கெட்டி மேளமோ எதுவும் இல்லை. நாமே பஞ்சாங்கத்தைப் பார்த்துவிட்டு நல்ல நாள் என்று முடிவு செய்தோம். நினைவு இருக்கு."

"உண்மையில் அன்றைக்கு அமாவாசை. தாலியைக் கட்டினால் தவிர முதலிரவுக்கு சம்மதிக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டாய். அதான் நல்ல நாள் என்று சொல்லி விட்டேன். அது வேறு விஷயம்.

"அப்படி என்றால் நீ என்னையும் ஏமாற்ற தொடங்கி விட்டாயா?"

"இல்லை. இல்லை. உன் மீது ஆணை."

"அது போகட்டும். ஐந்து முடிச்சு ஏன் போட்டாயோ அதைச் செய்து முதலில்."

பாபு கனவுலகில் மிதப்பது போல் கண்களை மூடிக் கொண்டு சொல்லத் தொடங்கினான். "அந்த அறையில் நாமிருவர் மட்டுமே இருந்தோம். நம் திருமணம் முடிந்து இரண்டு நாட்கள் ஆகியிருந்தாலும் சம்பிரதாயமான தாம்பத்திய வாழ்க்கை இன்னும் தொடங்கியிருக்கவில்லை. நீ அந்தப் பக்கமாக திரும்பியிருந்தாய். உனக்கு பின்னால் நான் நின்றிருந்தேன். மெதுவாக கைகளை உயர்த்தி அருகில் நகர்ந்தேன். இரு. அவசரப்படாமல் கேட்டுக்கொள். நீயாக ஏதேதோ கற்பனை செய்து கொண்டு பதட்டமடையாதே. நான் நகர்ந்தது உன் கழுத்தில் தாலியைக் கட்டுவதற்காக. நீ புனிதமான எண்ணங்களில் மூழ்கி கண்களை மூடியிருந்தாய். மனதிலேயே கடவுளை பிரார்த்தித்துக் கொண்டு இருந்தாய் போலும். உன் இதழ்கள் தெளிவில்லாமல் அசைந்து கொண்டிருந்தன. ஒரு இனிமையான உணர்வை மனப்பூர்வமாக அநுபவிப்பதற்கான உன் மனதை ஒரு முகப்படுத்தியிருந்தாய். நம்மிடம் இருந்த பணத்தை எல்லாம் திரட்டி திருமாங்கல்யத்தை வாங்கினோம். அதை உன் கழுத்தைச் சுற்றிலும் அணிவித்து முதல் முடிச்சு போட்டேன். உன் புடவைத் தலைப்பு லேசாக நழுவியது. நீ உன் உலகத்தில் ஆழ்ந்து போயிருந்தாய். நான் திருமாங்கல்யத்தின் விளிம்புகளை பார்த்துக் கொண்டிருந்தேன். கழுத்தின் வழியாய் மெலிதான கோடு ப்ளவுசுக்குள் மறைந்து போய்க் கொண்டிருந்தது. இரண்டாவது மூன்றாவது முடிச்சுகளை போட்டேன். உன் பிளவுசின் மேல் ஹுக் இருக்கவில்லை. அதனால் வளைவுகள் மேலும் ஸ்பஷ்டமாக தென்பட்டன. அதைப் பார்த்துக் கொண்டே என்னையும் அறியாமல் நான்காவது முடிச்சுப் போட்டேன். என் விரல்களின்



தொடுகைக்கு உன் உடல் சிலிர்ப்பதை என்னால் உணர முடிந்தது. அப்படி சிலிர்க்கும் போது கழுத்தின் கீழே காணாமல் போன கோடு மேலும் கொஞ்ச தூரத்திற்கு தென்பட்டது. ஒரே செயலுக்கு உடல் வேறு விதமாகவும், மனம் புனிதமாகவும் உணர்ச்சிவசப்படுவது பெண்களுக்கு மாங்கல்யதாரணத்தின் போதுதானோ. கையை உன் கழுத்திலிருந்து எடுத்துவிட்டால் நீ உன் கனவுலகிலிருந்து வெளியே வந்து விடுவாயோ என்ற பயம், உன் பின்னாலிருந்து நான் பார்த்துக் கொண்டிருந்த காட்சி என்னை நகர விடாமல் தடுத்து விட்டன. அந்த மயக்கத்தில் ஐந்தாவது முடிச்சையும் போட்டுவிட்டேன். அதுதான் நடந்தது" என்று முடித்தான்.

ஸ்ரீ லக்ஷ்மியிடமிருந்து எந்த சலனமும் தென்படவில்லை.

பாபு அருகில் சென்று அவள் முகத்தை தன் பக்கம் திருப்பிக் கொண்டு "இப்பொழுது புரிந்ததா ஐந்து முடிச்சு ஏன் போட்டேன் என்று" என்றவன் வியப்புடன் "ஸ்ரீ! என்ன இது?" என்று கேட்டான்.

ஸ்ரீ லக்ஷ்மியின் கண்களில் கண்ணீர்.

"இதென்ன? ஏன் அழுகிறாய்?"

அவள் உடனே பதில் சொல்லவில்லை. இரண்டு மூன்று முறை வற்புறுத்தி கேட்ட பிறகு தேறிக் கொண்டு சொன்னாள். "கட்டிய புடவையோடு வந்த எனக்கு கல்யாணத் தன்றைக்கு உடுத்திக்கொள்ள பட்டுப்புடவை இல்லாதபோதும் நான் வருத்தப்படவில்லை. ஆனால் நம்மிடம் உள்ள பணத்தை எல்லாம் ஒவ்வொரு பைசாவுமாக துடைத்துப் போட்டு தாலியை வாங்கினோம். ஜாக்கெட்டின் ஹுக் அறுந்து போய்விட்டதென்று எனக்கு

முன்பே தெரியும். தைத்துக் கொள்ளலாம் என்றால் ஊசி நூல் இல்லை. உனக்குத் தெரியுமா சேப்டி பின் வாங்குவதற்காக வீடெல்லாம் தேடிப் பார்த்தால் சல்லிக் காசு கிடைக்கவில்லை."

"அதற்காக அழுதாயா?" வியப்போடு கேட்டான்.

"ஆமாம். அதனால்தான் அழுதேன். ரிஜிஸ்டர் ஆபீசிலிருந்து வீட்டிற்கு வருவதற்கு ரிக்ஷாவுக்குப் பணம் இல்லாமல் "நடந்தால் கால்களுக்கு பலம்" என்று மனச்சாட்சியை ஏமாற்றிக் கொண்ட பொழுது எனக்கு அழுகை வரவில்லை. ஆனால் ஒரு பெண்ணாய் என்னை நான் மறைத்துக் கொள்வதற்கு நம்மிடம் குறைந்த பட்சம் பத்து பைசா கூட இல்லையே என்ற உண்மையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அழுதேன்."

அவன் கூட நெகிழ்ந்து விட்டான். "ஐயாம் சாரி" என்றான் தலையைக் குனிந்தபடி.

இருவரும் வெகு நேரம் நிசப்தமாக இருந்தார்கள். அவன் சொன்னான். "நீ என்னைக் காதலிக்காமல் இருந்திருக்கணும் ஸ்ரீ. இல்லாவிட்டால் குறைந்தபட்சம் எனக்கு ஏதாவது வேலை கிடைக்கும் வரையிலாவது நாம் கல்யாணம் செய்து கொள்ளாமல் பொறுத்திருந்திருக்கணும். இந்த வறுமை இருக்கிறதே. இது காதலுக்கு மிகப் பெரிய விரோதி."

அதற்குள் அவள் இயல்புக்குத் திரும்பினாள். "போட்டும். சீக்கிரத்திலேயே உனக்கு ஒரு வேலை கிடைத்து விடாதா?" என்றாள்.

"அதுவரை எப்படிப் பிழைக்கிறது?"



"இந்த உலகத்தில் நிறைய பேர் பிழைக்கவில்லையா?"

"பிழைக்கிறாங்க. ஏமாற்றிக் கொண்டோ, ஏமாற்றப் பட்டுக்கொண்டோ, உழைத்துக் கொண்டோ, பிறர் உழைப்பை கொள்ளை அடித்துக் கொண்டோ. நான் ஒன்று சொல்லட்டுமா ஸ்ரீ லக்ஷ்மி! மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்க நினைத்தால் அது ஒன்றும் கஷ்டமான வேலையே இல்லை.

"ஆனால் அந்த வழி வேண்டாமென்று முடிவு செய்து விட்டோமே."

"அது அப்பாவி மக்களை."

"அப்படி என்றால்?"

"நாம் பணக்காரர்களை ஏமற்றுவோம். அதிகம் வேண்டாம். ஒரு பத்தாயிரம். அதில் இரண்டு மாதங்கள் தாராளமாக கழிந்து போய் விடும். மக்களை கொள்ளையடித்து பணம் சம்பாதிப்பவனை ஏமாற்றி நாம் பணம் சம்பாதித்துக் கொண்டால் அதில் தவறென்ன இருக்கு?"

"அப்படிப்பட்டவன் எங்கே இருக்கிறான்?"

"சேட் அம்பாலால் பகன்சந்த்தன் ஹீலால். எல்லோரும் சுருக்கமாக ஏ.பி.சி.டி. என்று அழைப்பார்கள். மக்களுக்கு கடன் கொடுத்து விட்டு அதற்கு மேல் இரு மடங்குக்கு வட்டியை வசூல் பண்ணிக் கோடிக் கோடியாய் சம்பாதித்து விட்டான். காதலித்த பெண்ணிற்காக மணிக்கணக்காக ஐஸ்கிரீம் சாப்பிடும் அப்பாவிக் காதலர்களை ஏமாற்றினால் தான் தவறு. இப்படிப்பட்ட அக்கிரம பேர்வழிகளை வலையில் வீழ்த்தினால் தவறே இல்லை. உன் தாலியைக் கொடு. சொல்கிறேன்.

அதுவரையில் சாதாரணமாக கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீ லக்ஷ்மி கடைசி வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டு "வ்வாட்!" என்றாள்.

"தாலி" இயல்பான குரலில் சொன்னான்.

"கல்யாணம் ஆவதற்குமுன் போட்டோவைக் கேட்டு வாங்கிக் கொண்டு போய் பத்திரிகையில் போடச் செய்தாய். இப்பொழுது தாலியா?"

"ஆமாம்."

"என்ன செய்யப் போகிறாய்?"

"சொல்ல மாட்டேன்."

"நம்மிடம் உள்ள பணத்தையெல்லாம் போட்டு தாலியை வாங்கினோம். அந்த விஷயம் நினைவு இருக்கா?"

"இரு. இனி கேள்வி கேட்பதை நிறுத்திக்கொள் தர்மபத்னியே. அன்றைக்கு அரிச்சந்திரனுக்கு சந்திரமதி..."

"போதும் போதும். இதோ பெற்றுக்கொள்ளுங்கள் கலியுக அரிச்சந்திரரே! ஆனால் என் மாங்கல்யத்தை ஒரு மாதத்திற்குள் எனக்குத் திருப்பித் தராத பட்சத்தில் உங்களை உடன் கட்டை ஏற்றிவிடுவேன். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொண்டே கழுத்தைச் சுற்றிலும் கையை போட்டாள். அவன் கழுத்தைச் சுற்றி அல்ல. தன் கழுத்தைச் சுற்றி.

★ ★ ★

"இதை அடமானம் வைத்துக் கொண்டு எவ்வளவு பணம் தருவீங்கன்னு சொல்லுங்க சேட்." தாலியை அவனுக்கு முன்னால் தள்ளிக்கொண்டே கேட்டான் பாபு.



அம்பலால் பகன்சந்த்தன்ஹீலால் அதைக் கையில் எடுத்துக் பரிசீலித்தான். எது அசல் தங்கம் எது போலி என்று பார்த்த மாத்திரத்திலேயே சொல்லிவிடக் கூடிய பதினைந்து வருட அநுபவம் இருந்தது அவனுக்கு.

அது அசல் தங்கம் தான்.

"ஐநூறு ரூபாய் தர முடியும்" என்றான்.

பாபுவின் முகம் வாடி விட்டது. "ஐயாயிரம் கொடுத்து வாங்கினோம் இதை" என்றான். உண்மை தான். ஸ்ரீ லக்ஷ்மிக்கு இது போன்ற விஷயங்களில் விருப்பம் அதிகம். ரிஜிஸ்டர் ஆபீசிலிருந்து வந்த பிறகு கையில் இருந்த பணத்தை எல்லாம் போட்டு தாலியை வாங்கிக் கொண்டாள்.

"ஐநூறு ரூபாய்க்கு மேல் தரமுடியாது."

பாபு ஒரு நிமிடம் யோசித்துவிட்டு "சரி. விற்று விட்டால்?" என்று கேட்டான்.

"ஆயிரம் ரூபாய் தருகிறேன்."

பாபு கோபத்தை அடக்கிக்கொண்டு "ஒரு மாதத்திற்கு முன்னால் இதை ஐயாயிரத்துக்கு வாங்கினேன். இப்பொழுது இதற்கு ஆயிரம் ரூபாய் தரேன்னு சொல்றீங்களே?" என்று கேட்டான்.

"இது இரண்டாயிரத்திற்கு மேல் பெறாது. யாரோ உங்களை ஏமாற்றி தலையில் கட்டியிருக்காங்க."

"நீங்கள் தான்."

ஏ.பி.சி.டி. நாக்கைக் கடித்துக்கொண்டு "இது எங்களிடமிருந்து வாங்கினதாகத் தெரியவில்லை" என்று சமாளிக்கப் பார்த்தான்.

பாபு பதில் சொல்லாமல் அந்தத் தாலியை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து போன் மணி ஒலித்தது.

"அம்பாலால் ஸ்பீக்கிங்" என்றான் ஏ.பி.சி.டி. ரிஸீவரை எடுத்து.

"நான்தான். சென்டல் கிரைம் ஸ்க்வாட் இன்ஸ்பெக்டர் பேசுகிறேன்."

அம்பாலால் அடென்ஷனுக்கு வந்து "சார்! சொல்லுங்கள்" என்றான்.

"இரண்டு நாட்களுக்கு முன் மெயின் ரோட்டில் செயின் ஸ்னாட்சிங் நடந்தது. டி.ஐ.ஜி.யின் மனைவி காரில் ஏறப்போகும் போது யாரோ தாலியைப் பறித்துக் கொண்டு ஓடிப் போய் விட்டானாம். இருபத்தைந்து வயது இளைஞன். உங்களிடம் விற்பதற்கு வந்தால் ஒரு கண் வைத்திருங்கள். பையனுக்கு சுருட்டைத் தலைமுடி. அழகாக இருப்பான்."

அம்பாலால் திடுக்கிட்டு "சார்! இப்பத்தான்"— என்று ஏதோ சொல்ல முயன்று சுதாரித்துக் கொண்டான். "இந்தத் திருட்டுப் பசங்க திருடிய உடனேயே வந்து விற்க மாட்டாங்க சார். நாலைந்து மாதங்கள் கழித்து கேசு பழசான பிறகு வந்து விற்பாங்க."

"யார் எப்போ வந்து விற்பாங்கன்னு நீங்க எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. நாலைந்து மாதங்கள் கழித்து விற்பது என்பது பழைய டெக்னிக். நாலு மணி நேரத்திற்குள் போலீஸ்காரர்கள் எல்லோருக்கும் செய்தியை அனுப்புவதற்குள் விற்று விடுவாங்க இப்போ." மறுமுனையில் போன் வைக்கப்பட்டுவிட்டது.



அம்பாலால் ரிஸீவரை அதன் இடத்தில் வைத்து விட்டு வேகமாக வெளியே சென்று சாலையின் இரு புறமும் பார்த்தான். யாருமே தென்படவில்லை.

ஆனால் இது நடந்த ஐந்து நிமிடத்திற்கெல்லாம் பாபு திரும்பவும் கடைக்குள் நுழைந்தான். அவனைப் பார்த்ததுமே ஏனோ அம்பாலாலின் கண்களில் மகிழ்ச்சி தென்பட்டது.

பாபு தாலியைத் தந்துவிட்டு "ஆயிரம் ரூபாய் கொடுங்கள். தந்து விடுகிறேன்" என்றான் இரக்கம் ததும்பும் குரலில் வேறு வழியில்லாதவன் போல் சொன்னான்.

"ஐநூறு ரூபாய்க்கு மேல் ஒரு பைசா கூட கொடுக்க மாட்டேன்," கச்சிதமாக சொன்னான் அம்பாலால்.

பாபு மறுபடியும் படியிறங்கப் போனான். "நில்" என்றான் அம்பாலால். "இது திருட்டுச் சொத்து என்று எனக்குத் தெரியும். ஐநூறு ரூபாய்க்குத் தந்தால் சரி. இல்லா விட்டால் இப்பொழுதே போலீசுக்கு போன் செய்கிறேன்."

பாபு வியப்போடு "திருட்டுச் சொத்தா? இது என் மனைவியின் தாலி" என்றான். ஐந்து நிமிடங்கள் விவாதம் நடந்தது.

"சரி. ஆயிரம் தருகிறேன். கொடுத்துவிடு" என்றான் ஏ.பி.சி.டி. வாய்ப்பை கை நழுவ விரும்பாதவனாய்.

"இவ்வளவு ரகளை நடந்ததால் மூவாயிரத்திற்கு ஒரு ரூபாய் குறைந்தால் தர மாட்டேன்." பாபு சொன்னான்.

அம்பாலால் ரிஸீவரை எடுத்து காவல் நிலையத்திற்கு போன் செய்து "அந்த தாலித்திருடன் இங்கேதான் இருக்கிறான்.. வாங்க" என்று சொன்னான்.

பாபு அவனை இரக்கத்தோடு பார்த்தான். போனில் தன் குரலையே அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத சேட். அவ்வளவு கோடிக்கணக்கான பணத்தை எப்படித் தான் சம்பாதித்தானோ என்று.

* * *

இன்ஸ்பெக்டர் பிசி. ரெட்டி உற்சாகத்துடன் ஜீப்பில் ஏறினார். அவர் கையில் முதல் நாள் பேப்பர் இருந்தது. அதில் ஒரு செய்தி இருந்தது.

"தாலித் திருடன்"

"நேற்று மாலையில் கோவிலிலிருந்து வெளியே வந்து காரில் ஏறப்போன மணமான பெண்மணி ஒருவரின் கழுத்திலிருந்த தாலியை இளைஞன் ஒருவன் உருவிக் கொண்டு ஓடிப் போய் விட்டான். அப்பெண்மணி காவல் உயர் அதிகாரி ஒருவரின் மனைவி என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன."

பிசி. ரெட்டியின் ஜீப் வந்து அம்பாலாலின் கடையின் முன்னால் வந்து நின்றது. வேகமாய் உள்ளே போனார் இன்ஸ்பெக்டர். பாபுவைப் பார்த்து விட்டு "இவன்தானா?" என்றார்.

"ஆமாம் சார்" என்றான் அம்பாலால்.

இன்ஸ்பெக்டர் தாலியைக் கையில் எடுத்து பரிசோதித்துக் கொண்டே "உங்களுக்கு எப்படி சந்தேகம் வந்தது?" என்று கேட்டார்.

"க்ரைம் ஸ்குவாட் இன்ஸ்பெக்டர் போன் செய்தார் சார். திருடனின் அடையாளங்களைக் கூடச் சொன்னார். சுருட்டைதலைமுடி. மூக்குக்கு பக்கத்தில் மச்சம்"



(இரண்டாவது தானே கற்பித்துச் சொன்னது) என்றான் அம்பாலால்.

இன்ஸ்பெக்டர் பாபு பக்கம் திரும்பி "என்னடா! எப்படித் திருடினாய்?" என்று கேட்டார்.

அதைக் கேட்டு விட்டு "மரியாதையைக் கொடுத்து வாங்குவது நல்லது" என்றான் பாபு கோபமாய்.

அவன் வார்த்தைகள் முடியக் கூட இல்லை. பளார் என்று இன்ஸ்பெக்டர் அவன் கன்னத்தில் அறைந்தார். பாபு போய் கேஷ் கௌண்டரின் மேல் விழுந்தான். அவன் கன்னம் சிவந்து கன்றி விட்டது.

அதற்குள் அங்கே மக்கள் கூட்டமாகக் கூடி விட்டார்கள். நகைக் கடையின் முன்னால் போலீஸ் ஜீப் வந்து நின்றதே ஒரு பெரிய சென்சேஷன்.

இன்ஸ்பெக்டர் பாபுவை ஜீப்பில் ஏற்றி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஸ்பெஷல் ஸ்குவாட்டிலிருந்து போன் வந்ததுமே தான் எவ்வாறு திருடனைப் பிடித்துக் கொடுத்தான் என்பதைப் பற்றி கதை கதையாய் தற்பெருமையுடன், கொஞ்சம் ஜோடனை சேர்த்து எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருந் தான் அம்பாலால்.

* * *

டி.ஐ.ஜி. மனைவியுடன் சேர்ந்து காவல் நிலையத்திற்கு வந்தபோது பாபுவின் கண் நன்றாக வீங்கிப் போயிருந்தது. முதுகிலும், கையிலும் சிகப்பாய் தழும்புகள். திருடு நடந்த இரண்டு நாட்களிலேயே திருடனைப் பிடித்து விட்டதற்கும், மேலதிகாரியின் பாராட்டைப் பெறக் கூடிய சந்தர்ப்பம்

கிடைத்ததற்கும் இன்ஸ்பெக்டர் பி.சி. ரெட்டி கொஞ்சம் உற்சாகமடைந்து பாபுவின் மீது தன் கைவரிசையை கொஞ்சம் அதிக மாகவே காட்டி விட்டார்.

உள்ளே வந்த டி.ஐ.ஜி. யின் மனைவி பரபரப்புடன் தாலியைக் கையில் எடுத்துக் கொண்டு பரிசீலித்தாள். இன்ஸ்பெக்டர் பெருமையிடன் அந்த தம்பதிகளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

அந்த அம்மாள் ஒரு வினாடிக்கு மேல் அதைப் பார்க்க வில்லை. சட்டென்று மேஜை மீது வீசிவிட்டு "ச்சி.. ச்சி... இது என்னுடையது இல்லை" என்றாள்.

இன்ஸ்பெக்டர் ரெட்டி திடுக்கிட்டு அந்த அம்மாளை பயத்துடன் (பயங்கரமாக) பார்த்தான். இரண்டடி முன்னால் வைத்து "அது உங்களுடையது தான் மேடம். கொஞ்சம் கவனமாய் பாருங்க" என்றார்.

அவள் அவரை கடித்து விழுங்கிவிடுவது போல் பார்த்து விட்டு "மூவாயிரம் கூட பெறாத அந்த மெல்லிய தாலி என்னுடையது என்கிறீங்களா?" என்றாள், நான் என்ன அவ்வளவு தரம் தாழ்ந்து போன வளாய் தென்படு கிறேனா என்பது போல்.

அதற்குள் ரெட்டியின் ரத்த அழுத்தம் ஏறிக் கொண்டிருந்தது. ஆமாம், பின்னே. சுயமாக போன் செய்து டி.ஐ.ஜி.யை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்தது அவர்தானே.

"இவன் தான் மேடம். உங்க கழுத்திலிருந்து நகையைப் பறித்துக் கொண்டு ஓடியவன்" என்றார் கொஞ்சம் பதட்டத்துடன்.



"எவன் பறித்துக்கொண்டு போனானோ நான் பார்க்க வில்லை. இது மட்டும் என்னுடையது இல்லை." டி.ஐ.ஜியின் மனைவி கச்சிதமாக சொல்லிவிட்டாள்.

டி.ஐ.ஜிக்கு எரிச்சல் தலைக்கேறிவிட்டது. "ஆமாம். எந்த நம்பிக்கையில் எங்களை இவ்வளவு தூரம் வரச் சொல்லி அழைத்தாய்? ஊரில் எந்த திருடனிடம் தாலி கிடைத்தாலும் நாங்கள் இது போல் காவல் நிலையத்திற்கு வரணும் என்பது உன்னுடைய உத்தேசமா?" கோபமாக கேட்டார்.

"அது இல்லை சார். மேடத்திடமிருந்து தாலியைப் பறித்துக் கொண்டு போனவனுக்கு சுருட்டைத் தலை முடி, மூக்கு பக்கத்தில் மச்சம், கட்டம் போட்ட ஷர்ட் போட்டிருந்தான் (மூன்றாவது அடையாளம் சொந்த கற்பனை) என்று ஸ்பெஷல் ஸ்குவாட் சொன்னார் சார்." ரெட்டி சொன்னார்.

"ஸ்பெஷல் ஸ்குவாடா? அதென்னது? என் மனைவி யின் தாலியை யார் பறித்துக்கொண்டு போனானோ எங்களுக்கே தெரியாது. அவங்களுக்கு எப்படித் தெரிந்தாம்? என்ன கௌரி? நீ பார்த்தாயா?" மனைவி யிடம் கேட்டார்.

"இல்லைங்க. அங்கே இருட்டாக இருந்தது" என்றாள் அந்த அம்மாள்.

இன்ஸ்பெக்டர் மென்று விழுங்கிக் கொண்டிருந்தார்.

"ஆமாம் இந்தத் தாலியை எந்த இடத்தில் பறித்தானோ கேட்டாயா?" டி.ஐ.ஜி. கேட்டார்.

"எவ்வளவு அடித்தாலும் சொல்ல வில்லை சார்."

"அந்த விஷயத்தை தெரிந்து கொள்ளாமலேயே எங்களை வரச் சொன்னாயா? கோவிலுக்கு அருகில் என்று பேப்பரில் கூட வந்திருந்ததே."

"படித்தேன் சார்."

"அதைப் படித்துவிட்டு ஏதோ தாலி கிடைத்ததும் அது எங்களுடையதுன்னு நினைத்து போன் செய்தாயா? நான் ரொம்பவும் வேலையற்று இருப்பதாய் நினைத்துக் கொண்டு விட்டாயா?" என்று உலுக்கி எடுத்தார்.

அப்பொழுதுதான் குறுக்கிட்டான் பாபு. "இந்தத் தாலி என் மனைவியோடது சார்" என்றான். "எங்கள் திருமணம் நடந்து கொஞ்ச நாள் தான் ஆகிறது. சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத நிலையில் விற்கப் போன பொழுது அரெஸ்ட் பண்ணி இங்கே அழைத்துகிட்டு வந்து விட்டார். நான் யூனிவர்சிடி பஸ்ட் ரேங் வாங்கியவன் சார். இந்தத் தாலி எங்களுடையதுதான். எங்கேயும் திருடவில்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தேன். கேட்டுக் கொள்ள வில்லை. அழைத்துகிட்டு வந்து செம்மையாய் அடித்து விட்டார்."

டி.ஐ.ஜி.யின் மனைவி பாபுவை இரக்கத்துடன் பார்த்தாள்.

"ஐயாம் சாரி. நடந்ததற்கு வருத்தப்படுகிறேன்" என்று தோளில் தட்டிவிட்டு டி.ஐ.ஜி., அதற்கு மேல் அங்கே நிற்க விரும்பாதவராய் மனைவியை அழைத்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டார்.

பாபு தன்னுடைய தாலியை எடுத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டான்.

இது நடந்து சரியாக ஒரு மணி நேரம் கழித்து இன்ஸ்பெக்டர் பி.சி. ரெட்டிக்கும், சேட் அம்பாலால் பகல்



சந்தன் ஹீலாலுக்கும் நஷ்டஈடு கேட்டு லீகல் நோட்டீஸ்கள் வந்தன.

அது மட்டுமில்லை. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் இந்த விஷயத்தை செட்டில் செய்யவில்லை என்றால் படித்த இளைஞன் ஒருவனை எந்த ஆதாரமும் இல்லாமல் லாக்கப்பில் வைத்து அடித்ததற்கு மேலதிகாரிகளிடம் புகார் செய்யப்படும் என்றும் போன் வந்தது. அதற்கு சாட்சிகள் பலமாக இருந்தார்கள். டி.ஐ.ஜியும் அவர் மனைவியும். இதைக் காட்டிலும் சிறந்த சாட்சிகள் யார் இருப்பார்கள்?

வேலை சஸ்பெண்ட் ஆவது ஒரு பக்கமும், நஷ்டஈடு கேட்டு கோர்ட்டில் கேஸ் நடப்பது இன்னொரு பக்கமும் ஈஸ்ட்மன் கலரில் காட்சிகள் தென்பட்டன பி.சி. ரெட்டிக்கு.

ஜீப்பை எடுத்துக் கொண்டு காற்றிலும் வேகமாய் அம்பாலாவிடம் வந்தார். அதே நேரத்தில் அம்பாலாலும் தனக்கு வந்த நோட்டீஸைப் படித்துக் கொண்டிருந்தான்.

உள்ளே வரும்போதே கெட்ட வார்த்தை ஒன்றை பிரயோகித்து விட்டு "அவன் தான் திருடன் என்று ஏன் சொன்னாய்" என்று பாய்ந்தார்.

அம்பாலால் ஏதோ சொல்லப் போனான். பி.சி. ரெட்டி அவனை பேச விடவில்லை. அம்பாலால் கூட எதிர்த்து வாதாடவில்லை. அவன் ஒரு வியாபாரி. அந்த ஏரியா இன்ஸ்பெக்டரை எதிர்த்து என்ன பேச முடியும்? மௌனமாக வசவுகளை ஏற்றுக் கொண்டான்.

இங்கே சைக்காலஜி பற்றிய சின்ன விஷயத்தை கவனிக்க வேண்டும். இன்ஸ்பெக்டர் மீது கூட தவறு இருந்தது. ஆனால் அதிகாரம் இருந்ததால் தவறு முழுவது மாய் அம்பாலால் மீது தள்ளி விட்டார்.

"நீ சொன்னதால்தான் அடித்தேன். அசல் திருடனைப் பார்த்தாற் போலவே பேசினாய். இப்பொழுது என் வேலை போனால் நீ தான் ஜவாப்தாரி. அந்த இளைஞனை அழைத்து இரண்டு கேசு களையும் வாபஸ் வாங்கிக் கொள்ளும் படியாக செய்யணும். எப்படிச் செய்வாயோ உன் இஷ்டம். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அந்த செய்தி எனக்கு வந்தாகணும். இல்லாவிட்டால் நன்றாக இருக்காது" என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

ஒரு மணி நேரம் கழித்து அம்பாலால் இன்ஸ்பெக்டருக்கு போன் செய்து "விஷயத்தை செட்டில் செய்துவிட்டேன் சார்" என்றான். மனதில் திட்டிக் கொண்டாலும் சந்தோஷமாக இருப்பது குரலில் காட்டிக் கொண்டான்.

★ ★ ★

# 3

பாபு குப்புறப்படுத்துக் கொண்டிருந்தான். வெறுமையாய் இருந்த அவன் முதுகில் ஸ்ரீ லக்ஷ்மி ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் இந்த உலகிலேயே இல்லாதவன் போல் கண்களை மூடிக் கொண்டிருந்தான். அவள் விரல்கள் தாளகதியில் நகரும் போது மட்டும் அவனையும் அறியாமல் உடம்பு தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது.

அவள் சோர்ந்து போனாற்போல் தென்பட்டாள்.

"மல்லாந்து படுத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம்" என்றாள். மூச்சு இரைத்தது அவளுக்கு.

"சற்று நேரம் நிறுத்தக் கூடாதா?"

"ஏன்? உனக்குத் தொந்தரவாக இருக்கா?" ஸ்ரீ லக்ஷ்மி கேட்டாள்.

"எனக்கு இல்லை. உனக்கு."

"இதில் எனக்கென்ன தொந்தரவு?"

"இந்தச் சின்ன வேலைக்கே உனக்கு மூச்சு இரைக்கிறதே?"

"பரவாயில்லை. அவ்வப்பொழுது இப்படிச் செய்து கொண்டிருந்தால் உன் மீது எனக்கு எவ்வளவு அன்பு இருக்குன்னு உனக்குப் புரியும்."

"அது புரிந்ததோ இல்லையோ, உன்னிடம் அபாரமான கலைத் திறமை இருக்கிறது மட்டும் நன்றாகப் புரிந்து விட்டது."

"கலைத் திறமையா? எனக்கா?"

"ஆமாம். உடம்பில் எந்த பகுதியை எவ்வளவு அழுத்தணுமோ, எவ்வளவு மென்மையாக கையாளணுமோ..."

ஸ்ரீ லக்ஷ்மி அழகாக வெட்கப்பட்டுக் கொண்டே 'ஷட்டப்!' என்றாள்.

"உண்மையாகத்தான் சொல்கிறேன். பெரும்பாலான பெண்களுக்குத் தெரியாத விஷயம் இது."

"எத்தனை பெண்களை தெரியும் உனக்கு?"

"பாராட்டினாலும் தவறுதானா? பெண்களுக்கே பொறாமை அதிகம் என்று பெரியவர்கள் சும்மா சொல்ல வில்லை."

அவள் பதில் சொல்லாமல் அழுத்தமாக ஒத்தடம் கொடுத்தாள்.

பாபு பலமாக தலையணையின் விளிம்புகளை பற்றிக் கொண்டு "அம்மா!" என்றான்.

"ஏன்? வலி அதிகமாக இருக்கா?"

"அதிகமாக இருக்கா என்று கேட்கிறாயா? சுயமாக அநுபவித்தால்தான் புரியும் அந்த வேதனை."

"இப்போ புரிகிறதா? பெண் என்பவள் பொறுமையில் பூமா தேவி போன்றவள் என்று."



"உனக்கு எப்போதும் அந்த யோசனைதான். நான் சொன்னது இந்த நிலையைப் பற்றி."

அவள் சற்று குனிந்து அவன் காதை மென்மையாக கடித்தாள். "நான் சொன்னதும் இதைத்தான்" என்றாள்.

"காரியத்தை பாதியில் நிறுத்திவிட்டு நீ இப்படி வம்பு பேசுவது நன்றாக இல்லை."

"உண்மையாகவா?" இரட்டிப்பது போல் கேட்டாள். "வேலை முடிந்ததும் நீ அந்தப் பக்கம் திரும்பி தூக்கத்தில் ஆழ்ந்து போவது எனக்குப் பிடிக்கவில்லை என்று ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். இப்போ புரிகிறதா அதிருப்தியானது மனிதனை எந்த அளவுக்கு பாதிக்கும் என்று."

"இன்றைக்கு என்னை பழி வாங்குவதற்காகத்தான் இப்படி படுக்க வைத்து விட்டாயா?"

"உண்மையைச் சொன்னால் பழிவாங்குவது போல் தோன்றுகிறதா?" கையில் இருந்த துணியை பலமாக பிழிந்துகொண்டே சொன்னாள்.

"ஏற்கெனவே பலவீனமாக இருக்கிறாய். எதற்காக சிரமப்படுகிறாய்?"

"இப்படி பிழிய வில்லை என்றால் உன் முதுகும் படுக்கையும் ஈரமாகிவிடும்."

"உனக்கு அவ்வளவு தெம்பு இருக்கும்னு தோணலை" என்றான்.

"தெம்பு இல்லதான். இரண்டு நாள் சாப்பிட்டால் நான்கு நாட்கள் பட்டினிக்கிடக்கும் நமக்கு உடம்பில் தெம்பு இருக்கும் என்று நினைத்தால் அது பிரமைதான்."

டாபிக் திடீரென்று திசை மாறியதும் அவனுக்கு வருத்தமாக இருந்தது. "ஸ்ரீ லக்ஷ்மி!" என்றான் கனிவுடன்.

அவள் பதில் சொல்லவில்லை.

அவள் மனதை மாற்றுவதற்காக "உன்னிடம் அற்புத மான கலைத்திறமை இருப்பதாகச் சொன்ன போது நீ அதை வேறு விதமாக புரிந்துகொண்டு ரொம்பவும் வெட்கப்பட்டாய். என் உத்தேசம் அது இல்லை. என்ன வென்று கேட்க மாட்டாயா?"

"என்ன?"

"எங்கே உடம்பை அழுத்தணும்? காயங்களுக்கு எப்படி மருந்து போடணும்? எப்படி ஒத்தடம் கொடுக்கணும் என்று உனக்குத் தெரிந்த அளவுக்கு நிறைய பேருக்குத் தெரியாது."

"நீ இன்னும் நாலு தடவை இதே போல் போலீஸ் கிட்டே உதை வாங்கிகிட்டு வா. எனக்கு இன்னும் நன்றாக பிராக்டீஸ் ஆகிவிடும்." எரிச்சலுடன் சொன்னாள்.

"ஒவ்வொரு தீமைக்கும் அதற்குத் தகுந்த பலன் இருக்கும். எங்கே பணம் சம்பாதிக்க முடியுமோ அங்கே ரிஸ்க் கூடவே இருக்கும். சேட் அம்பாலாவிடமிருந்து அவ்வளவு பணத்தை நஷ்ட ஈடாக வசூல் செய்யணும் என்றால் இந்த அளவுக்காவது போலீஸிடம் அடி வாங்கத் தயாராக இருக்கணும்."

"அப்போ இதற்கும் திருட்டுத் தனத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? சாதாரண மனிதன் கூட போலீசாரின் அடிக்கு பயந்துதான் திருடாமல் இருப்பான். இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் மனிதன் திருடனாக மாறாமல் தடுப்பது நல்லொழுக் கத்தின்பால் இருக்கும் மதிப்பு இல்லை. ஜெயிலுக்கு போக வேண்டியிருக்குமே என்ற பயம்தான்.



"ஆமாம். ஆனால் மனிதன் சட்டத்திற்குட்பட்டு மக்களை எப்படி ஏமாற்றலாம் என்று யோசிப்பான். அரசியலில் சேர்ந்து ஏமாற்றுவான். சினிமா டைரக்டராக இருந்தால் ஹீரோயினை மேலும் கவர்ச்சியாய் எப்படி காட்டலாம் என்று யோசிப்பான். ஆக, மொத்தம் மற்றவர்களை ஏமாற்றும் வழிகளை மனிதன் யோசித்துக் கொண்டே இருப்பான்.

"ஆனால் எல்லோருமே அப்படி இருக்க மாட்டார்கள். ஒரு டாக்டர் தான்பட்ட கஷ்டத்திற்குத் தகுந்த பீஸை வசூலிக்கலாம். ஒரு பாடகன் தன் பாட்டுக்குத் தகுந்த பிரதிபலனை வசூலித்துக் கொள்ளலாம். மக்களுக்கு ஏதாவது சேவை செய்தோ, அல்லது ஒரு சந்தோஷத்தைத் தந்தோ அதற்குத் தேவைப்பட்ட பணத்தைச் சம்பா தித்துக் கொண்டால் அது எப்படி மோசம் ஆகும்?"

பாபு சிரித்தான். "தன் பாட்டை மக்கள் விரும்பு கிறார்கள் என்று தெரிந்தால் பாடகன் ரேட்டை உயர்த்து வான். அது போலவே டாக்டரும்."

"அதெல்லாம் மோசடி என்கிறாயா?"

"மோசடி இல்லை. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது. நான் சொல்ல வந்தது ஒன்றுதான் லக்ஷ்மி. இந்த மக்கள் இருக்கிறார்களே. அடிப்படையில் ரொம்ப அப்பாவிகள். பலவீனமான மனம் கொண்டவர்கள். இவர்களிடமிருந்து பணத்தை வசூலிப்பது ரொம்ப சுலபம். சிலர் இவர்களுக்கு 'பொருட்களை' விற்று பணம் சம்பாதிப்பார்கள். சிலர் 'கனவுகளை' விற்றும் இன்னும் சிலர் எதிர்காலத்தை விற்றும் பணம் சம்பாதிப்பார்கள்."

"விற்பதில் தவறென்ன இருக்கு?"

"விற்பதில் தவறு இல்லை. விலையை முடிவு செய்வதில் தான் தவறு இருக்கு."

"ஒரு பாடகனின் பாட்டைக் கேட்கும் போது ரசிகன் நாத இன்பத்தை அடைகிறான். அதனால் அந்த கேசட்டை வாங்கிக் கொண்டு பணம் தருகிறான். இதில் லாபம் தானே தவிர நஷ்டம் என்ன இருக்கு?"

"லாபமா நஷ்டமா என்பது விற்கப்படும் பொருளை பொறுத்து இருக்கும். உதாரணமாக ஒரு ஹிப்னாடிஸ்ட் இருக்கிறார் என்று வைத்துக் கொள். மனோ வசியத்தின் மூலம் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்து படிப்பில் முன்னுக்குக் கொண்டு வரமுடியும் என்று விளம்பரம் கொடுப்பான். அதைப் பார்த்துவிட்டு அவனிடம் செல்லும் அப்பாவி இளைஞர்கள் சிகிச்சைக்குப் பிறகு நினை வாற்றல் பெருகி விட்டதாய் தம்மை தாமே ஏமாற்றிக் கொண்டு பணம் கொடுப்பார்கள். அதானே தவிர உண்மையில் அந்த ஹிப்னாடிஸ்ட் எத்தனை பேரை குணப்படுத்தியிருக்கிறான் என்று அங்கே வந்திருக்கும் மக்களை விசாரிக்க மாட்டார்கள். தங்களுக்கு மட்டும் தான் இந்த சிகிச்சை பலன் தரவில்லை போலும் என்று நினைத்து பேசாமல் இருப்பார்களே தவிர அந்த மோசடியை வெளிப்படுத்த மாட்டார்கள்."

"ஏற்கெனவே காலம் விரயமாகிவிட்டது. இன்னும் வீணாக்க வேண்டாமே என்று நினைத்திருக்கக் கூடும் இல்லையா."

"சரி. நீ சொல்வதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சிகிச்சைக்கு முன்னாடியாவது, 'உங்களிடம் குணமடைந்த ஓரிரு நபர்களை சொல்லுங்கள், என்று கேட்டு உண்மை யைத் தெரிந்து கொள்ளலாம் இல்லையா. மனிதனுக்கு



அவ்வப்பொழுது தன் பிரச்னைக்குப் பரிகாரம் வேண்டுமே தவிர சாசுவதமான தீர்வு தேவையில்லை. சின்ன ஆசையை காட்டிவிட்டால் போதும். தன் லெவலில் செலவு செய்யத் தொடங்கி விடுவான்."

"மனிதர்களை ஏமாற்றாமல், போலீசாரிடம் உதை வாங்காமல் பணம் சம்பாதிக்கிற வழியே இல்லையா?"

பாபு மறுவலித்து விட்டு "ஏன்? மறுபடியும் ஏதாவது தேவை ஏற்படப் போகிறதா?" என்றான்.

"நாம் இருவரும் மூன்று பேராகப் போகிறோமோ என்று சந்தேகமாக இருக்கு" என்றாள்.

பாபு திடுக்கிட்டு கட்டிலில் எழுந்த உட்கார்ந்து கொண்டான். தன் காயங்களையும் பொருட்படுத்தாமல் ஸ்ரீ லக்ஷ்மியை அருகில் இழுத்துக் கொண்டு, "இவ்வளவு நல்ல செய்தியை இவ்வளவு சாதாரணமாகவா சொல் வாங்க" என்றான்.

"சாதாரணமாக இல்லை. பயத்துடன் சொல்கிறேன். கணவனுக்கு அடிபட்டிருக்கும் போது ஒத்தடம் கொடுக்கக் கூட தெம்பு இல்லை என்னிடம். பலத்தை ஊட்டக் கூடிய சத்தான ஆகாரம் சாப்பிடுவதற்குப் போது மான பணம் நம்மிடம் இல்லை. இந்த நிலைமையில் இன்னொரு உயிரை இந்த பூமிக்குக் கொண்டு வருவது நம் கஷ்டங்களில் பங்கு எடுத்துக் கொள்வதற்காகத் தானே தவிர வேறெதற்கு?"

"பின்னே என்ன செய்யலாம்?"

"அமுல் பேபி போன்ற ஆரோக்கியமான குழந்தை பிறக்க வேண்டுமென்றால் எல்லாவற்றையும் விட முக்கியமாக பணம் வேண்டும். அந்தக் குழந்தை நன்றாக வளர வேண்டும் என்றால் பணம் வேண்டும். படிக்க வேண்டும் என்றால் இன்னும் இன்னும் பணம் வேண்டும்."

பாபு முறுவலித்தான். "தேவை என்பது மனிதனை நிழலாகத் துரத்திக் கொண்டே இருக்கும் என்று நினைக்கிறேன். முதலில் நீ என் கேர்ல் பிரண்டாக இருந்த போது உன் பிறந்த நாளுக்காக கொஞ்சமாக பணம் சம்பாதிக்க வேண்டியிருந்தது. திருமணம் ஆன பிறகு பணத் தேவை ஏற்பட்டு திருட்டுக் குற்றத்தைத் தலை மேல் போட்டுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது."

"இந்த முறை அப்படி செய்ய வேண்டாம். மக்களை ஏமாற்றாமல் போலீசாரின் ஜோலிக்குப் போகாமல், மோசடி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நம் குழந்தையை வளர்ப்பதற்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். அப்பொழுதுதான் நீ புத்திசாலி என்று ஒப்புக் கொள்வேன்."

"அதாவது ஒரு வாரத்திற்குள் பத்து லட்சத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்கிறாய்."

அவள் பதில் பேசவில்லை.

அவன் யோசனையில் ஆழ்ந்தான். ஒரு வாரத்திற்குள் பத்து லட்சம்!

நடக்காத காரியம்.

ஆனால் தன் புத்திசாலித்தனத்திற்குப் பரிசோதனை.

மக்களை ஏமாற்றாமல்...

போலீசாரின் ஜோலிக்குப் போகாமல்

எப்படி?

அவன் பார்வை பேப்பரின் மீது விழுந்தது. "இன்றே ரிலீஸ்! மெகா ஸ்டார் சிரஞ்சிவி நடித்த "சாரிலஞ்ச்"



இதற்கு முன்பு இதே போல்தான் பேப்பரில் பார்த்தான் டி.ஐ.ஜி.யின் மனைவி கழுத்திலிருந்து தாலி திருட்டுப் போய் விட்ட செய்தியை.

இப்பொழுது சிரஞ்சிவி.

கட்டை விரலை உயர்த்தி சவால் செய்வது போல் சிரஞ்சீவியின் போட்டோ.

பாபுவும் அந்த போட்டோவைப் பார்த்துவிட்டு சவால் செய்வது போல் கட்டை விரலை உயர்த்திக் கொண்டே கட்டிலை விட்டு இறங்கினான்.

"ஸ்ரீ லக்ஷ்மி! இப்பொழுது பெரிய மீனுக்காக வலை வீசப் போகிறேன். விழுந்தால் லட்சாதிபதி ஆவோம். இல்லையா நீரில் மூழ்கி விடுவோம்" என்றான்.

"இத்தனை காயங்களோடு எங்கே கிளம்பிப் போறீங்க? பதட்டத்துடன் கேட்டாள்.

"நமக்குப் பிறக்கப் போகும் பையனுக்காக இந்த அளவுக்காக கஷ்டப்பட்டுத்தான் தீரணும்."

"மறுபடியும் ஏதாவது ரகளை ஆகிவிடுமோ என்னவோ."

"இந்த முறை போலீசாரின் பிரஸ்தாபனையே இல்லை."

"ஆமாம். எங்கே போகப் போறீங்க?"

"மெகா ஸ்டார் சிரஞ்சீவியைச் சந்திப்பதற்கு."

"அவர் உங்களுக்கு ஏன் இண்டர்வ்யூ கொடுக்கப் போகிறார்?"

"ஒரு வாரத்திற்குள் பத்து லட்சங்களை சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிறவன் இது போன்ற சின்ன சந்தேகங்களுக்காக நின்று விடமாட்டான். போய் சகுனமாய் எதிரே நடந்து வா."

ஸ்ரீ லக்ஷ்மி இன்னும் நம்பிக்கை ஏற்படாதவளாய் எழுந்துபோய் எதிரே நடந்து வந்தாள். பாபு கிளம்பினான்.

★ ★ ★

# 4

சீ நிய ப்ரீஃப் கேசுடன் காரிலிருந்து இறங்கிய இளைஞனை தடுத்து நிறுத்துவதா, உள்ளே அனுப்புவதா என்று தெரியாமல் ஒரு நிமிடம் தடுமாறினான் சிரஞ்சீவி வீட்டு முன்னால் நின்று கொண்டிருந்த கூர்க்கா.

அந்த ஒரு நிமிடம் போதும் பாபுவுக்கு. நேராக உள்ளே போய் விட்டான்.

கீழே ஹாலில் யாருமே இல்லை. அக்கௌண்டெண்ட் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். கண்ணாடி அறைக்குப் பக்கத்திலிருந்த படிகளில் ஏறி மாடிக்குப் போனான்.

மேலே விசிட்டர்ஸ் ரூமில் இரண்டு பேர் காத்திருந்தார்கள். இருவரில் ஒருவர் படத் தயாரிப்பாளரைப் போல் இருந்தார். ரொம்பவும் பதட்டத்துடன் கைகளை பிசைந்து கொண்டே கால்களால் தரையில் தாளம் போட்டுக் கொண்டு இருந்தார். பக்கத்தில் இருந்தவர் அந்த தயாரிப்பாளர் அழைத்து வந்த கதாசிரியர் போலும்.

உலகத்தில் உள்ள அறிவு முழுவதும் தன்னிடம் இருப்பது போல் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியில் கம்பீரமாய் சூனியத்தைப் பார்த்துக் கொண்டே சிகரெட் புகைத்தபடி யோசித்துக் கொண்டிருந்தார்.

எழுந்து ஜன்னலுக்கு அருகில் சென்று கொஞ்ச நேரம் வெளியே பார்த்தார். இயற்கைதான் அவருக்கு எந்த யோசனையும் தரவில்லையோ அல்லது வந்த யோசனை தான் பிடிக்கவில்லையோ தெரியாது. தலையை ஆட்டிக் கொண்டே மறுபடியும் தன் இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டார்.

பாபு வந்த பத்து நிமிடங்களுக்குப் பிறகு இன்னொரு குடும்பத்தார் படியேறி மாடிக்கு வந்தார்கள். கணவன், மனைவி, மனைவியின் தங்கை மற்றும் மூன்று குழந்தைகள்.

அதில் ஒரு பையனுக்கு எட்டு வயது இருக்கும். புதிய பேண்ட் உயரம் அதிகமாகி விட்டதால் மடித்து விட்டிருந் தான். வெள்ளை ஷூக்களின் மீது யானைப் படம் இருந்தது.

இன்னொரு பையன் மேஜை மீது இருந்த விலை உயர்ந்த ஆஷ்ட்ரேயை நகர்த்தப் போன பொழுது மனைவி யின் தங்கை அவனைப் பிடித்து தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்.

அதற்குள் சிரஞ்சீவியின் செகரெட்ரி வந்தான். படத் தயாரிப்பாளரையும், கதாசிரியரையும் உள்ளே வரச் சொன்னதாய்ச் சொன்னான்.

"கதையை முழுவதுமாக சொல்லுங்கள். எங்கேயும் சுருக்க வேண்டாம்" என்று கதாசிரியரிடம் சொல்லிக் கொண்டே உள்ளே அழைத்துப் போனார் படத் தயாரிப்பாளர்.

ஆனால் ஐந்து நிமிஷத்திலேயே இருவரும் வெளியே வந்து விட்டார்கள். 'அதுதான் நல்லது. ஞாயிறு அன்று சந்தித்துப் பேசுவோம். இன்னும் நேரம் கிடைக்கும். அப்பொழுது விரிவாக பேசமுடியும்.' அதிருப்தியை



திருப்தியாக மாற்றிக்கொண்டு தமக்குள் பேசிக் கொண்டே போய் விட்டார்கள் அவ்விருவரும்.

அதற்குள்...

பாபு நினைத்தாற்போலவே நடந்தது. செகரெட்ரி மறுபடியும் வந்தான். பாபுவைக் கேள்விக் குறியோடு பார்த்தான்.

'யார் நீ? அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா? எதற்கு வந்தாய்?' போன்ற ஆயிரம் கேள்விகள் அப்பார்வையில் தென்பட்டன.

'போய்விடு' என்று அனுப்பிவிடுவானோ என்று பாபு பயந்தான். அதற்குள் செகரட்ரி அருகில் வந்து கேட்டான்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"என் பெயர் பி.சி. ஹெச். பாபு."

அதனால் என்ன என்பது போல் பார்த்தான் செகரெட்ரி.

"அமெரிக்கன் யூத் ஸ்டூடெண்ட்ஸ் வீக் சார்பில் வந்திருக்கிறேன். சான் பிரான்ஸிஸ்கோ விங் கல்ச்சுரல் அகாடமி ஆஃப் அக்கல்ட் ஆர்ட்ஸ்." தான் சொன்னது என்னவென்று தனக்கே பாதி புரியவில்லை பாபுவுக்கு.

செகரெட்ரிக்கு முழுவதுமே புரியவில்லை. மேலும் ஏதோ விவரங்களை கேட்க போனபொழுது சிரஞ்சீவி அங்கே வந்தான்.

பெண்கள் இருவரும் உணர்ச்சி வசப்பட்டவர்களாய் எழுந்து நின்று கொண்டார்கள். அவர்களோடு வந்திருந் தவனை சிரஞ்சீவி அன்போடு விசாரித்துக் கொண்டிருந் தான். அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது என்ன

வென்றால் வந்திருந்த நபரும் சிரஞ்சீவியும் ஆரம்பப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள் என்பதே.

சிரஞ்சீவி பெண்கள் பக்கம் திரும்பி பேசத் தொடங்கினான். அவர்களின் உத்வேகம் கொஞ்சம் தணிந்தது.

"என் பையன் அச்சு உங்களைப் போலவே டான்ஸ் ஆடுவான். ஸ்டெப்ஸ் உங்களைப் போலவே போடுவான். எங்கள் தெருவில் எல்லோருமே அப்படித்தான் சொல் வார்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தான் அந்தப் பையனின் தந்தை. சின்ன மகளைக் காட்டி "டி.வி.யில் உங்கள் பாட்டு வந்து விட்டால் போதும் இவளுக்கு சாப்பாடு கூட வேண்டாம். என்ன பாட்டும்மா அது?" என்று செல்லமாகக் கேட்டார்.

"கன்னத்தில் உன் கையால் அடிவாங்கினால்" கொஞ்சலான குரலில் சொன்னாள் அந்தப் பெண்.

மூன்றாவது பையனை அவள் தாய், "அங்கிள் பார்க்கணுமாம். டான்ஸ் ஆடி காட்டும்மா" என்று முன்னுக்குத் தள்ளிவிட்டாள்.

"மாட்டேன்" என்றான் அவன் பின்னால் நகர்ந்து கொண்டே.

"பரவாயில்லை ஆடு. அங்கிளைப் போலவே ஆடுவாயோன்னோ."

"நான் மாட்டேன்" என்றான் அவன் வெட்கப்பட்டுக் கொண்டே.

"ஆடுவாயா மாட்டாயா?" கோபமாய் அதட்டினார் அவன் தந்தை.



பாபு சற்று தொலைவில் நின்றுகொண்டு சுவற்றில் இருந்த இந்தியாவின் வரைபடத்தையும், சரஸ்வதி தேவியின் சிலையையும் பார்த்துக் கொண்டிருந்தான். சிரஞ்சீவி சிறுவர்கள் எல்லோருக்கும் ஆட்டோகிராஃப் தந்து அனுப்பினான்.

பிறகு பாபுவை நோக்கித் திரும்பி "சொல்லுங்கள்" என்றான்.

"என் பெயர் பாபு. நான் உங்கள் விசிறி." என்றான்.

தொலைவில் புத்தகங்களை அடுக்கிவைத்துக் கொண்டிருந்த செகரெட்ரி திடுக்கிட்டு பாபுவைக் கோபமாய்ப் பார்த்தான். பாபு அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்காதவன் போல் நடித்தான்.

சாதாரணமாக ரசிகர்கள், அபிமானிகள் இப்படி உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு சாவகாசமாக பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

சிரஞ்சீவி கூட வியப்படைந்தவன் போல் தென் பட்டான். ஆனால் உடனே சமாளித்துக் கொண்டு "அப்படியா. என்ன செய்துகிட்டு இருக்கீங்க?" என்று கேட்டான்.

"உங்களுடைய சினிமாக்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன்."

"அது சரி. அதைத்தவிர."

"அப்படி என்றால் உங்க உத்தேசம் வருமானத்திற்கு என்ன செய்கிறேன் என்றா?"

"ஆமாம்."

பாபு முறுவலித்தான். "உங்க சினிமாக்களைப் பார்த்துக் கொண்டே பணம் சம்பாதிப்பேன் சார். எனக்கு வேறு எந்த வேலையும் இல்லை" என்றான்.

"எப்படி?" வியப்படைந்தவனாய்க் கேட்டான் சிரஞ்சிவி.

"எங்க முதலாளிக்கு இந்த ஊரில் ஐந்து சினிமா தியேட்டர்கள் இருக்கு. ஏதாவது ஒரு தியேட்டரில் எப்போதும் உங்க சினிமா ஓடிக் கொண்டேயிருக்கும். உங்களிடம் எனக்கு எவ்வளவு அபிமானமோ எங்க முதலாளிக்கு தெரியும். அதனால் அந்த தியேட்டரில் வேலை செய்வதற்கு அநுமதி தருவார். கேட் அருகில் நின்று டிக்கெட்டுகளை வாங்கும் வேலையை முடித்து விட்டு சினிமா பார்த்துக் கொண்டே உட்கார்ந் திருப்பேன். ஒரு நாளைக்கு நான்கு ஷோக்களை அவ்விதமாக பார்ப்பேன்."

சிரஞ்சிவிக்கு இதேதோ ஆர்வம் தரக்கூடிய விஷயமாக தோன்றியது. "எவ்வளவு நாட்களாய் இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"1982லிருந்து. 'என் புருஷன்' என்ற சினிமாவிலிருந்து "வாடகைக் கணவன்" சினிமா வரைக்கும் ஒரு நாள் கூட லீவு போடாமல்."

"வ்வாட்!"

"ஆமாம் சார் மொத்தம் பதினாலாயிரம் தடவை பார்த்திருப்பேன் உங்க சினிமாக்களை."

சிரஞ்சீவி பேசவில்லை. பத்து வருடங்கள். நாளொன்றுக்கு நான்கு ஷோக்கள் வீதம்.

"உங்களோட சினிமாக்கள் எல்லாமே வெரைட்டி தான்" என்று ஏதோ சொல்ல வந்த பாபுவை பாதியி



லேயே இடைமறித்துவிட்டு "நீ என்ன படித்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"கிராஜு-வேஷன்."

இது இன்னொரு அதிர்ச்சி.

"சினிமா தியேட்டரில் வேலை செய்துகொண்டே பட்டப் படிப்பு வரை படித்திருக்கிறாயா?"

"ஆமாம். பிரை வேட்டாய்."

"ஃபெண்டாஸ்டிக். இது ஒரு புரட்சிகரமான செய்தி. காபி சாப்பிடுகிறாயா?"

"வேண்டாம் சார். நீங்க இவ்வளவு தூரம் பேசுவீங்கன்னு நினைத்திருக்கவில்லை. எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு" என்று சொல்லிக்கொண்டே பிரிஃப் கேஸைத் திறந்து அதிலிருந்து கார்ட்டை எடுத்தான்.

"ஆட்டோகிராபா?"

"ஆமாம் சார்." விசிட்டிங் கார்டுடன் ஆட்டோ கிராஃப் புத்தகத்தை தந்தான்.

பாபு தந்த விசிட்டிங் கார்ட்டைக் கூர்ந்து பார்த்து விட்டு ஆட்டோகிராஃப் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு, "இன்னும் எவ்வளவு நாள் இப்படி சினிமா தியேட்டரில் வேலை செய்யலாம்னு இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"கோடி ரூபாய் சம்பாதிக்கும் வரையில்"

"வாட்!"

37809
5476729

யாரிந்த பைத்தியக்காரன் என்பதுபோல் பார்த்தான் செகரெட்ரி.

"சார். நான் வந்தது ஆட்டோகிராப் வாங்கு வதற்காகத் தான். ஆனால் அதை விட முக்கியமான வேலை வேறொன்று இருக்கிறது."

"என்ன?"

கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்துவிட்டு பிறகு மெதுவாகச் சொன்னான் பாபு. "நான் உங்களை வைத்து சினிமா எடுக்கலாம்னு நினைக்கிறேன்."

செகரெட்ரியின் கையிலிருந்த புத்தகம் தன்னறியாமல் நழுவிக் கீழே விழுந்தது. அந்த நிசப்தத்தில் அந்தச் சத்தம் பெரிதாகக் கேட்டது.

சிரஞ்சிவி சிரித்து விட்டான். "என்னை வைத்து சினிமா எடுக்கணும்னா ஒரு பைசா கூட முதலீடு தேவை யில்லை என்று உனக்கு யாராவது சொன்னாங்களா?"

"எனக்கு அந்த விஷயம் எதுவும் தெரியாதுங்க." அப்பாவித்தனமாகச் சொன்னான் பாபு.

சாதாரணமாக இருந்தால் உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு உள்ளே போயிருப்பான்தான். ஆனால் இவ்வளவு அன்பு வைத்திருக்கும் நபரின் மனதை புண்படுத்தும் விதமாக உள்ளே போவது பிடிக்கவில்லை சிரஞ்சீவிக்கு. அதோடு பாபுவிடம் ஏதோ புரியாத கவர்ச்சியும் இருந்தது.

சிரித்துக் கொண்டே "அப்போ என்னை வைத்து சினிமா எப்படி எடுக்கப் போகிறாய்?" என்று கேட்டான்.

பாபு ப்ரீஃப் கேஸைத் திறந்தான். "நான் உங்கள் சினிமாவை முதல் முதலாக பார்த்த போதே உங்களை



வைத்து சினிமா எடுக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்துவிட்டேன். அப்பொழுதிலிருந்து சாப்பாடு இருந்தாலும் சரி பட்டினிக் கிடந்தாலும் சரி. ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் சேர்க்கத் தொடங்கினேன். உங்களை வைத்து படம் எடுக்க வேண்டும் என்பதற்காக பத்து வருடங்களாக பணம் சேர்த்துக் கொண்டு வந்தேன்."

சிரஞ்சிவி கண் இமைக்கவும் மறந்தவனாய் அவனையே பார்த்தான். பாபு ஒரு அற்புதமான மனிதனாய் தென்பட்டான். பலதரப்பட்ட அபிமானிகளைப் பார்த்திருக்கிறான். தான் நடித்த படங்களை நூறு தடவைப் பார்த்ததாக சொன்னவர்கள், தன் முன்னாடியே டான்ஸ் ஆடிக் காட்டியவர்கள், தன்னைப் பற்றிக் கவிதை எழுதி படித்து காட்டியவர்கள், கையில் தன் பெயரை பச்சை குத்திக் கொண்டவர்கள்... இப்படி பல பேரை பார்த்திருக் கிறான். ஆனால் இந்த விதமாக திட்டமிட்ட யோசனை களுடன் இருப்பவர்களை பார்ப்பது அரிது.

"அப்படியே இருந்தாலும் மூன்று நான்கு ஆயிரங் களுக்கு மேல் இருக்காதே. நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பத்து வருடங்களுக்கு." சிரஞ்சீவி சொன்னான்.

"இந்த ப்ரீஃப் கேஸில் பதினைந்தாயிரம் இருக்கு சார். அதில் நீங்க சொன்னது போல் மூவாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபாய்தான். அந்த விதமாக சேர்த்து வைத்த பணம். மற்றது "சிரஞ்சீவி பிராடக்ட்ஸ்" மூலமாக நான் சம்பாதித்தது.

"சிரஞ்சீவி பிராடக்டா? அதென்ன?"

"ஈவ் கார்னரில் ஒரு பெட்டிக் கடை வைத்திருக்கிறேன். அதில் வேலை செய்யும் பையனுக்கு மாதம் ஐநூறு ரூபாய் தருகிறேன். அதில் எல்லாமே

சிரஞ்சீவி பிராடக்ட்ஸ்தான் இருக்கும். சிரஞ்சீவி சீப்பு, சிரஞ்சீவி மீடாபான் இப்படி. எப்போதும் கூட்டமாக இருக்கும் அந்தக் கடையில் செலவு போக மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வரும். அந்த விதமாக இந்த வருடத்தில் பத்தாயிரம் சம்பாதித்தேன். மொத்தம் பதினைந்தாயிரம்" என்று நிறுத்திவிட்டு மேலும் சொன்னான். "அடுத்த வருடம் இருபதாயிரம் வரை சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கு."

"போகட்டும். அப்படி இருந்தால் கூட நீ பத்து லட்சம் சம்பாதிப்பதற்கு முப்பது வருடங்கள் ஆகுமே."

"ஆமாம் சார். அதனால்தான் நான் உங்களோடு 2025ல் சினிமா எடுக்கலாம்னு நினைக்கிறேன்."

ஜென்னல் கதவு லேசாய் ஆடிற்று காற்றுக்கு. அது வரையில் சலனமில்லாமல் இருந்த அவ்வறைக்குள் மெல்லிய தென்றல் காற்று நுழைந்த சலசலப்பு. செகரெட்ரி சுவற்றில் சாய்ந்து கொண்டு சிலையாய் நின்று விட்டான். சிரஞ்சீவின் கண்களில் ஆச்சரியம் வெளிப்படையாக தென்பட்டது.

"2025ல் என்னோடு சினிமா எடுக்கப் போகிறாயா? அதாவது முப்பது வருடங்களுக்கு அப்புறம்?"

"ஆமாம் சார்" என்றான் பாபு. "இந்த முடிவை நான் சாதாரணமாகச் சொன்னால் நீங்கள் நம்ப முடியாமல் போகலாம். என்னைப் போன்ற தீவிர அபிமானிகள் நிறைய பேரைப் பார்த்திருப்பீங்க. அதனால் பத்து வருடங்களாக என் எண்ணங்களுக்கு அஸ்திவாரம் போட்டுக் கொண்டே வந்தேன். பதினைந்தாயிரம் உங்கள் கண்ணோட்டத்தில் ரொம்பவும் குறைவாக இருக்கலாம். ஆனால் அதுதான் பத்து வருடங்களாய் என் தவம்.



கொஞ்சம் கூட தணியாத விருப்பம். உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இருந்தால் முப்பது வருடங்களுக்கு அப்புறம் நான் எடுக்கப் போகும் படத்தில் ஹீரோவாக நடிக்கிறேன் என்று வாக்களியுங்கள் போதும்."

"ஆனால் அதற்குள் என் வயது" ஏதோ சொல்லப் போன சிரஞ்சீவியின் பேச்சை இடைமறித்து எந்த வயதிலும் நடிக்கலாம் என்று நம் முந்தைய தலைமுறை நடிகர்கள் நிரூபித்து இருக்கிறார்கள். அப்பொழுது நீங்கள் இதைவிட இன்னும் கிளாமராய் இருப்பீங்கன்னு என் மனம் சொல்லுகிறது. நீங்க தவறாக நினைக்கவில்லை என்றால், என்னைக் கோபித்துக் கொள்ள மாட்டேன் என்றால் இன்னொரு விஷயமும் சொல் கிறேன். இப்பொழுது நீங்க வாங்குகிற தொகைக்கு அப்போதைய நிலவரப்படி கணக்கிட்டு சன்மானத்தைத் தருகிறேன்" என்று பணத்தை எடுத்து மேஜை மேல் வைத்து விட்டு "இது என்னுடைய அட்வான்ஸ்" என்றான்.

வேறு எந்த சந்தர்ப்பத்திலாவது, எந்தப் படத் தயாரிப்பாளராவது இந்தக் காரியத்தை செய்திருந்தால் சிரஞ்சீவிக்கு நிச்சயமாக கோபம் வந்திருக்கும். ஆனால் எதிரே இருந்த அபிமானியைப் பார்த்தபோது கோபம் வரவில்லை. மாறாக ஆர்வம் ஏற்பட்டது. சினிமாத் துறையில் நுழையும்போது தனக்கு இருந்த லட்சிய வெறியும், பிடிவாதமும் நினைவுக்கு வந்தன.

"நான் சம்மதிக்கிறேன்" என்றான் சுருக்கமாக.

பாபுவின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

"ஆனால் இந்தப் பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்."

"சார்!" என்றான் பதட்டத்துடன்.

"நான் யாரிடமும் அட்வான்ஸ் வாங்கிக் கொள்ள மாட்டேன். நீ உண்மையிலேயே அவ்வளவு கஷ்டப்பட்டு முப்பது வருடங்களில் அந்த நிலைக்கு வர முடிந்தால் உனக்காக ஒரு சினிமாவில் நடிப்பதாக வாக்குத் தருகிறேன்."

"தாங்க்ஸ்."

பாபு பணத்தை ப்ரீஃப் கேஸில் வைத்து விட்டு அதிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து சிரஞ்சீவியின் முன்னால் வைத்தான்.

"என்ன இது?" வியப்புடன் கேட்டான் சிரஞ்சீவி.

"அக்ரிமெண்ட் சார்."

"அக்ரிமெண்டா? எதுக்கு?"

தொலைவிலிருந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த செகரெட்ரி பரபரப்பை அடக்க முடியாதவனாய் அருகில் வந்தான். பாபுவின் கையில் இருந்த ஸ்டாம்ப் பேப்பரை பார்த்தபோது அவன் கோபம் மேலும் அதிகரித்தது. இதுபோல் அக்ரி மெண்டில் கையெழுத்துப் போடுவது, அட்வான்ஸ் பெற்றுக் கொண்டது போல் ரசீது தருவது என்பதெல்லாம் எப்பொழுதுமே இருந்ததில்லை. விவகாரங்கள் எல்லாம் வெறும் வாய் வார்த்தையிலேயே முடிந்து விடும்.

சிரஞ்சீவியும் அதையே சொன்னான். "நான் தான் உன் படத்தில் நடிப்பதாக சொல்லிவிட்டேனே. இன்னும் இந்தக் கையெழுத்தெல்லாம் எதுக்கு?"

"மன்னியுங்கள் சார். உங்கள் மீது நம்பிக்கை இல்லாமல் இல்லை. இது கூட உங்கள் படத்தின் மூலமாக கிடைத்த ஐடியாதான்."



"என் படத்திலா? எப்படி?" வியப்புடன் கேட்டான்.

"சாலெஞ்ச்" என்ற படத்தில் நீங்க ஹீரோயின் தந்தையிடம் இது போல் அக்ரிமெண்ட் பேப்பரில் கையெழுத்துப் போடச் சொல்லி கேட்பீங்க. அதுதான் என்னுடைய இன்ஸ்பிரேஷன்."

சிரஞ்சீவி நகைத்து விட்டான். "அப்படி என்றால் நான் உனக்கு வில்லனை போல் தென்படுகிறேனா?"

"ரியல்லி சாரி சார். உண்மையில் என் அபிப்பிராயம் அது இல்லை. என் வாழ்க்கையின் லட்சியம் இந்த சினிமா. உங்கள் வாழ்க்கையில் நாள் தோறும் ஏதாவது த்ரில் இருந்து கொண்டே இருக்கும். எங்களைப் போன்றவர் களுக்கு வருடத்திற்கு ஒரு த்ரில் ஏற்பட்டால் அதிகம். அதுவும் இப்படிப்பட்ட அபூர்வமான சம்பவம் என்றால் வாழ்க்கையில் இன்னொரு தடவை நிகழாமல் போகலாம். அதனால் நீங்க இதில் கையெழுத்து போட்டால் அது எனக்கு முப்பது வருஷங்களுக்கு இன்ஸ்பிரேஷன் தந்து கொண்டே இருக்கும். நீங்கள் நம்பினாலும் நம்பா விட்டாலும் இந்த நிமிடத்திற்காக பத்து வருடங்களாக ஒவ்வொரு ரூபாயாக சேமித்துக் கொண்டு வந்தேன். உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் வேண்டாம் சார். ஆனால்... "மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாதவன் போல் மௌனமாகி விட்டான்.

சிரஞ்சீவி அவன் கையிலிருந்த பேப்பரை வாங்கிப் படித்தான்.

"பாபு என்கிற என் அபிமானிக்கு 2025ம் வருஷத்தில் நான் ஒரு சினிமாவில் ஹீரோவாக நடிப்பதற்கு என் சம்மதத்தைத் தெரியப்படுத்து கிறேன்."

சிரஞ்சீவி.

படித்து முடித்ததும் நிமிர்ந்து "பேனா இருக்கா?" என்று கேட்டான்.

அந்தத் திடீர் கேள்வி வெடிகுண்டாக வெடிக்க வில்லை. பூ மழையாய் பொழிந்தது.

பாபுவின் முகம் மலர்ந்தது. ஜேபியிலிருந்து பேனாவை எடுத்துத் தந்தான். கடைசியில் இன்னொரு வரியை எழுதி கையெழுத்துப் போட்டுத் தந்தான் சிரஞ்சீவி.

அந்த வரி என்னவென்று ஆர்வத்துடன் பார்த்தான் பாபு.

"இதற்காக நான் எந்த விதமான சன்மானமும் பெற்றுக்கொள்ள மாட்டேன்... சிரஞ்சீவி."

பாபு திகைத்துப் போனவனாய் நிமிர்ந்து பார்த்தான். அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. "இது... இது.." என்றான்.

சிரஞ்சீவி அவன் தோளில் தட்டிவிட்டு "ஒரு லட்சியத்துடன் நீ முப்பது வருஷகாலம் கஷ்டப்பட்டு அவ்வளவு பணம் சம்பாதித்தால் அப்பொழுது நான் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் உனக்காக ஒரு படம் இலவசமாக நடிக்கிறேன். என் திறமையின் மீது உனக்கு நம்பிக்கை இருப்பது போலவே உன் உழைப்பு வெற்றி அடைய வேண்டும் என்று எனக்கும் ஆசையாக இருக்கிறது. விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்" என்று கை குலுக்கினான்.

பாபு ப்ரீஃப் கேஸை மூடி வைத்துவிட்டு சிரஞ்சீவி யிடம் விடை பெற்றுக் கொண்டு கீழே இறங்கி வந்தான்.

"என்னிடம் சான்பிரான்ஸிஸ்கோ அக்கல்ட் விங் என்று எதற்காக பொய் சொன்னாய்?" செகரெடரி



கேட்டான். பாபு தன்னை ஏமாற்றியதில் கோபமாக இருந்தான். சிரஞ்சீவி அக்ரிமெண்ட் பேப்பரில் கையெழுத்துப் போட்டதைப் பார்த்ததும்... அதற்கு மேல் அவனால் வாயைத் திறக்க முடியவில்லை.

பாபு முறுவலித்தான். "சாலெஞ்ச் சினிமாவில், கதாநாயகியை ஈர்ப்பதற்கு 'பிறந்த நாளைச் சொல்வது' என்ற டிரிக்கை சிரஞ்சீவி பயன்படுத்துவார் நினைவு இருக்கா. அதே போல்தான் உள்ளே நுழைவதற்கு 'சான்பிரான்ஸிஸ்கோ' என்ற ட்ரிக்கை பயன் படுத்தினேன்.

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். அங்கே சில பெண்கள் மேக்கப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த பாபு "இன்றைய ஷுட்டிங் இந்த வீட்டில் தானா?" என்று கேட்டான்.

"இல்லை. இல்லை. அவர்கள் சிரஞ்சீவி சாரை பேட்டி எடுக்க வந்த பெண் எழுத்தாளர்கள்" என்றான் செகரெட்ரி.

அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு பாபு வெளியே வந்தான்.

★ ★ ★

**பாபு** அங்கிருந்து நேராக வாசுதேவனிடம் போனான். வாசுதேவன் பிரபலமான இசையமைப்பாளர். எப்பொழுதாவது யாராவது தொலைக் காட்சியில் கோஷ்டிகானம் என்ற நிகழ்ச்சியைத் துரதிர்ஷ்டவசமாய் பார்க்க நேரிட்டால் அதில் ஒரு மூலையில் கேமிராவுக்கு முன்னால் நின்று கொண்டு இரண்டு கைகளையும் தேவைக்கும் மீறி காற்றில் ஆட்டிக் கொண்டே தன்னை மறந்த லயிப்பில் கண்களை மூடியிருக்கும் நபரை

கவனிக்கலாம். அந்த நபரை இசையமைப்பாளர் என்பார்கள். ஏதோ அரும் பெரும் சாதனையை புரிவது போல் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இவர்கள் நடுவில் கைகளை ஆட்டுவதை விட்டுவிட்டாலும் அந்தப் பாட்டு அப்படியே தொடர்ந்து கொண்டே இருக்கும்.

பாட்டின் தொடக்கத்தில் ஒரு அம்மாள் தீனமான முகத்துடன் "இந்த நாடு என்னுடையது... என்னுடையது" என்று பாடுவாள். பின்னால் நின்று கொண்டிருக்கும் பத்து பேர் ஆண்களும், பெண்களுமாய்ச் சேர்ந்து வித விதமான முகபாவங்களுடன் "இந்த நாடு என்னுடையது" என்று உரத்த குரலில் பாடுவார்கள். முன்னால் நின்று கொண்டிருக்கும், அம்மாள் திரும்பவும் உணர்ச்சியற்ற குரலில் "இந்தக் கொடி என்னுடையது" என்று பாடுவாள். பின்னால் நிற்பவர்கள் பல்லாக்கைச் சுமப்பவர்களைப் போல் "பொம்... பொம்" என்று குரல் கொடுப்பார்கள். இப்படித்தான் பாட்டு போய்க் கொண்டிருக்கும்.

இது ஒரு பெரிய ஹர்ஷத் மெஹதா விவகாரம். ஒருத்தரே பாடினால் அவங்களுக்கு ஒரு இருநூறு ரூபாய் கொடுத்தால் போதும். இப்படி இருபது பேர் இருந்தால் ஆளுக்கு இருநூறு வீதம் கொடுக்க வேண்டியிருக்கும். மைக்கின் முன்னால் நின்று வெறுமே கோரஸ் பாடினாலும் இந்த சன்மானம் கிடைத்து விடும். அதனால் தான் ஸோலோக்களும், ட்யூயெட்களும் போய் கோஷ்டி கானம் வந்து விட்டது. அதோடு பத்து பேரில் ஒருத்தர் அபஸ்வரம் பாடினாலும் அது வெளியில் தெரியாது.

வாசுதேவன் இந்த விதமாகத்தான் தொலைக் காட்சியில் மியூசிக் டைரக்டராய் இருந்துகொண்டு தன் மனைவி மக்களையும் கோஷ்டிகானக் குழுவில் சேர்த்து



விட்டிருந்தார். பணம் நிறையவே கிடைத்துக் கொண்டிருந்தது. அவரிடம் போனான் பாபு.

"ஐந்து பாட்டுகள் ரிக்கார்ட் பண்ணணும். எவ்வளவு ஆகும்?"

நேருக்கு நேராய் வந்து இந்தக் கேள்வியைக் கேட்டதற்குக் கொஞ்சம் பதற்றமடைந்தார் வாசுதேவன்.

"கோஷ்டிகானமா?" என்று கேட்டார்.

"இல்லை. சிரஞ்சீவியின் சினிமாவுக்கு நீங்கள் தான் மியூசிக் டைரக்டர். இதோ ஆயிரத்தோரு ரூபாய் அட்வான்ஸ்."

வாசுதேவனின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழவில்லை. அதற்குள் மூர்ச்சையடைந்து கீழே சாய்ந்து விட்டார்.

* * *

# 5

டாக்ஸி வந்து வீட்டின் முன்னால் நிற்கவே ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்த ஸ்ரீ லக்ஷ்மி நிமிர்ந்து பார்த்தாள். பாபு இறங்கி உள்ளே வந்தான்.

கடந்த பதினைந்து நாட்களாய் அவன் மிகவும் பிசியாய் இருந்ததைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். முக்கியமாக சிரஞ்சீவியிடம் போய் விட்டு வந்ததிலிருந்து.

சிரஞ்சீவி எழுதிக் கொடுத்த ஒப்பந்தக் கடிதத்தைக் கூடப் பார்த்தாள். எப்போதோ 2025ம் வருடத்தில் நடிப்பதாக எழுதிக் கொடுத்த காண்ட்ராக்ட்.

அதனால் பாபு பிசியாய் இருந்ததற்குக் காரணம் சிரஞ்சீவியின் சினிமா விஷயம் அல்ல என்று தெளிவாகப் புரிந்தது. பின்னே விஷயம் என்னவாக இருக்கும்? எவ்வளவு கேட்டாலும் அவன் சொல்ல வில்லை. சிரித்து விட்டு பேசாமல் இருந்தான்.

டாக்ஸியை விட்டிறங்கி உள்ளே வந்த பாபு "புறப்படு" என்றான்.

அவள் வியப்புடன் "எங்கே?" என்று கேட்டாள்.

"ஊருக்கு போகிறோம்" என்றான். அவன் கையில் சின்ன பாக்கெட் இருந்தது.

அவள் மேலும் வியப்படைந்தவளாய் "ஊருக்கா? உங்களுக்கு மூளை கலங்கி விட்டதா என்ன? எந்த ஊரு? இதென்ன பாக்கெட்?" என்றாள்.



"கிளம்பு. சொல்கிறேன்."

"ஒன்றையுமே எடுத்து வைத்துக் கொள்ள வில்லையே?"

"டூத் பேஸ்ட் உள்பட எல்லாவற்றையும் வெளியே வாங்கிக் கொள்வோம். பூட்டிவிட்டுப் புறப்படு."

"ஆனால் துணி மணிகள்?"

"நமக்கென்னவோ பத்து ஜோடி உடைகள் இருப்பது போல் பேசுகிறாயே. இருக்கிறதென்னவோ நம் உடம்பின் மீதே இருக்கு. சீக்கிரம் கிளம்பு. வெளியே டாக்ஸிகாரன் கத்தத் தொடங்கிவிடுவான்."

அவள் முணுமுணுத்துக் கொண்டே உடனே தயாராகி வெளியே வந்தாள். "இதெல்லாம் என்ன பாபு? நாம் எங்கே போகிறோம்? எந்த ஊருக்குப் போகிறோம்?"

"சஸ்பென்ஸ்!" என்றான் பாபு. "இதோ பாரு லக்ஷ்மி. நம்முடையது ரொம்ப சாதாரணமான வாழ்க்கை. இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் நம் வாழ்க்கையில் சந்தோஷம் நிறைந்த த்ரில்கள் ரொம்பவும் குறைவு. அப்படிப்பட்ட த்ரில்லை உனக்குக் கொடுக்கணும்னு நினைக்கிறேன். இந்த ஒரு கேள்வியை நாம்ப அங்கே போய்ச் சேருகிற வரைக்கும் கேட்காமல் இருக்க முடியாதா உன்னால்?" வேண்டுகோள் விடுப்பது போல் கேட்டான்.

அவன் மனதைப் புரிந்து கொண்டாற் போல் அவள் மௌனமாக இருந்து விட்டாள்.

டாக்ஸி ஸ்டேஷனுக்குப் போனபிறகு புரிந்தது அவளுக்கு, தாம் பம்பாய்க்குப் போவதாய்.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட பஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்ட். இருவருக்கும் போதுமான கூபே. குளிர்ந்த காற்று, தண்ணீர் கூஜா, காலிங் பெல், ஜென்னலுக்கு அழகான திரைச்சீலைகள், மெத்தென்ற விசாலமான படுக்கை, அதன் மீது மல்லிக்கைப் பூ போன்ற வெண்மையான படுக்கை விரிப்புகள்.

அதுதான் முதல் முறை அவள் முதல் வகுப்பில் பயணம் செய்வது. அதுவும் ஏ.சி. செய்யப்பட்ட முதல் வகுப்பு கம்பார்ட்மெண்ட். ஒரு பக்கம் மனதில் லேசான தயக்கம்.

“இன்னும் ஏதாவது வேண்டுமா சார்” அடெண்டர் பணிவுடன் கேட்டான்.

“வேறொன்றும் தேவையில்லை” என்று பாபு சொன்னதும் அடெண்டர் போய் விட்டான்.

கதவைச் சாத்தி விட்டால் வெளியே பகலா இரவா என்று புரியாத மங்கலான விளக்கு வெளிச்சம். திரைச் சீலையை விலக்கிப் பார்த்தால் ஜன்னல்களுக்குக் கூட நீல நிறக் கண்ணாடிகள்.

“ஐயாம் சாரி” என்றான்.

“எதுக்கு?” என்றாள் வியப்போடு.

“திருமணம் ஆன இத்தனை நாட்களுக்குப் பிறகு ஹனிமூனுக்கு அழைத்துப் போவதற்கு.”

அவள் அவன் தோள்களைச் சுற்றிலும் அன்போடு கைகளைப் போட்டுக் கொண்டே, “எனக்கு நம்ப முதலிரவு ரொம்ப நன்றாகவே இருந்தது” என்றாள்.

“வெறும் பாயின் மீது தலையணை கூட இல்லாமல் பழைய துணிகளை மூட்டையாகக் கட்டி... அதுவா உனக்கு



நன்றாக இருந்தது?” சிரித்துக் கொண்டே கேலியாக கேட்டான்.

அவள் சிரிக்காமல் “ஆனாலும் அது நம் முதல் இரவு இல்லையா?” என்றாள்.

அவன் கையிலிருந்த பாக்கெட்டை அப்பொழுது பிரித்தான்.

ஒரு கிலோ மல்லிகைப் பூக்கள்.

அவற்றை படுக்கையின் மீது பரத்திக் கொண்டே “பாக்கெட்டில் என்ன இருக்கு என்று கேட்டாய் இல்லையா. முதல் சஸ்பென்ஸ் இது தான்” என்றான்.

“இரண்டாவது சஸ்பென்ஸ் எது?” என்றாள்.

“அது நாளை வரை சஸ்பென்ஸ்” என்றான் ஒரு கண்ணை சிமிட்டிக் கொண்டே.

மறுநாள் காலையில் பாம்பே ஃபோர்ட் ஸ்டேஷனில் ரயில் நின்றது. டாக்ஸியில் ஏறிக் கொண்டார்கள்.

“ஸீராக்” ஹோட்டலுக்கு முன்னால் வந்து நின்றது டாக்ஸி. ரிசெப்ஷன் இடமே ஏதோ சினிமா செட்டிங் போல் இருந்தது. முன் கூட்டியே அறையை ரிசர்வ் செய்திருந்தான் போலும். ஃபாரத்தில் அவன் கையெழுத்து போடும் போது அவள் சுற்றிலும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரிசெப்ஷனில் ஆண்கள் சூட்களிலும், பெண்கள் பட்டுப் புடவையிலும் இருந்தார்கள்.

“இவர்களுக்கு நடுவில் நாம் திருஷ்டிப் பொம்மையை போல் இருக்கிறோம் இல்லையா?”

"நிச்சயமாக இல்லை" என்றான் பாபு. "செல்வந்தர்கள் நம்மை போலவே சிம்பிளாக இருப்பார்கள். ரிசெப்ஷனில் இருப்பவர்களுக்கும் அது தெரியும். லட்சாதிபதிகளைத் தவிர இந்த ஹோட்டலில் யாருமே தங்க மாட்டார்கள். இங்கே ஒரு நாள் வாடகை அவர்களுடைய மாதச் சம்பளம்."

"இப்போ நாம் தங்கப் போகும் அறைக்கு வாடகை எவ்வளவுங்க?" அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

"ஒரு நாள் வாடகை மூவாயிரத்து ஐநூறு ரூபாய்."

"அம்மாடி!" என்றாள் உரத்தக் குரலில். அவளுக்கு எவ்வளவு வியப்பு ஏற்பட்டது என்றால், அது ஹோட்டல் என்றும், எல்லோரும் கேட்பார்களே என்றும் கூட மறந்து போய்விட்டாள்.

"வா. போகலாம்" லிப்ட்டை நோக்கி நடந்து கொண்டே சொன்னான்.

"நடிகர் சிரஞ்சீவி பதினைந்தாயிரம் அட்வான்ஸ் வேண்டாமென்று சொல்லிவிட்டார் என்று அந்தப் பணத்தை இந்த விதமாக செலவழிக்கிறீங்களா?"

அவன் சிரித்தானே தவிர பதில் சொல்லவில்லை.

இருவரும் லிப்ட்டிற்குள் நுழைந்தார்கள். அவன் மாடிக்குப் போவதற்கு பட்டனை அழுத்தப் போன பொழுது மேக்கப் பையனோடு கூட இன்னொரு பெண் உள்ளே வந்தாள். லிப்ட்டின் கதவுகள் மெல்ல சாத்திக் கொண்டன. லிப்ட் மேலே போகத் தொடங்கியது.

உள்ளே வந்த அழகான பெண் யாராக இருக்கும் என்று பார்த்த ஸ்ரீ லக்ஷ்மி உள்ளேயிருந்து லேசாக வரப் போன கத்தலை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டே மூச்சை இழுத்துப் பிடித்தாள்.



அவள் ஸ்ரீ தேவி. பிரபல நடிகை ஸ்ரீ தேவியேதான்.

நிமிடத்தில் சுதாரித்துக்கொண்டு "நீங்க ஸ்ரீ தேவிதானே?" என்றாள்.

அந்தக் கேள்விக்கு ஸ்ரீதேவி முறுவலித்துவிட்டு தலையை அசைத்தாள். அப்பொழுதுதான் புரிந்தது ஸ்ரீ லக்ஷ்மிக்கு, தான் எப்படிப்பட்ட முட்டாள்தனமான கேள்வியைக் கேட்டு விட்டோம் என்று.

"நான் காலேஜில் படித்துக்கிட்டு இருந்தபோது உங்க விசிறிங்க" என்றாள்.

ஸ்ரீ தேவி சிரித்துக்கொண்டே "இப்பொபது இல்லையா?" என்றாள்.

திரும்பவும் தான் எவ்வளவு முட்டாளாய் பேசி விட்டோம் என்று புரிந்தது ஸ்ரீ லக்ஷ்மிக்கு. "சாரி. உங்களைப் பார்த்த எக்ஸைட்மெண்டில் என்ன பேசுகிறேன் என்று எனக்கே தெரியவில்லை" என்றாள்.

புரிந்து கொண்டாற்போல் தலையை அசைத்து விட்டு "தேன்நிலவுக்கு வந்தீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீ தேவி.

"ஆமாம். கொஞ்சம் தாமதமாய்" என்றான் பாபு பக்கத்திலிருந்து.

அதற்குள் இரண்டாவது மாடி வந்து விட்டது. ஸ்ரீ தேவி அந்த இடத்தில் இறங்கிக் கொண்டாள். லிஃப்ட் மறுபடியும் நகர்ந்தது.

"ஏதோ பத்திரிகையில் படித்தேன். அவள் பம்பாய்க்கு வரும்போதெல்லாம் இந்த ஹோட்டலில் தான் தங்குவாளாம்." பாபு சொன்னான்.

ஸ்ரீ லக்ஷ்மி இன்னும் திக்பிரமையிலிருந்து மீள வில்லை. "என் மார்பு இன்னும் வேகமாக அடித்துக் கொண்டே இருக்கிறது. ஸ்ரீ தேவியோடு சேர்ந்து ஒரே லிஃப்டில் பயணம் செய்தேன் என்றால் நம்பவே முடியவில்லை" என்றாள்.

இருவரும் அறைக்குள் நுழைந்தார்கள். வால்டு வால் கார்ப்பெட், மேஜை மீது பிளவர் வேசில் ரோஜாக்கள், விசாலமான கட்டில், பக்கத்திலேயே போன்.

"நான் ஒன்று சொல்கிறேன். தவறாக நினைக்க மாட்டீங்களே?" என்றாள்.

"என்ன?"

"கூடிய சீக்கிரம் இந்த அறையை காலி செய்து விட்டு போய் விடலாம். இங்கே இருந்தால் சந்தோஷத்தை விட இவ்வளவு விலையைப் பார்த்துவிட்டு என் இதயம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. நாம் சம்பாதித்த கொஞ்சம் பணமும் இந்த இரண்டு நாளிலேயே செலவழித்து விட்டால், இனிமேல் நம்மால் எப்படி காலத்தைக் கழிக்க முடியும்?"

"நாம் இருவரும் மூன்று பேராக ஆகிவிட்டால் எப்படியும் இவ்வளவு சுதந்திரமாக இருக்க முடியாது. அதனால் இந்த ஆறுமாதமும் என்ன செய்வோம்...! சரி. உன் விருப்பம்போலவே இன்று மாலையிலேயே இங்கிருந்து போய் விடலாம். சரிதானே?"

அவள் திகைத்துப் போய் "இன்று மாலையிலேயா?" என்றாள்.

அவன் சிரித்தான். "இவ்வளவு அழகான அறையில் ஒரு இரவைக் கூட கழிக்காமலேயே எப்படிப் போவது



என்று நினைக்கிறாய் இல்லையா?" ஆனால் போய்த்தான் ஆகணும். வேறு வழியில்லை" என்றான்.

அன்று மாலை வரைக்கும் அறையில் இருந்துவிட்டு மாலையில் புறப்பட்டார்கள்.

"பம்பாயில் எங்கேயும் சுத்தி பார்க்கவே இல்லை." குறைப்பட்டுக் கொள்வது போல் சொன்னாள்.

அவன் அவளைக் கூர்ந்து பார்த்து விட்டு "உன்னிடம் மாறுபாடு வெளிப்படையாக தெரிகிறது" என்றான்.

"என்ன மாறுபாடு?"

நேற்று வரை கல்லூரியில் படிக்கிற பெண் போல் இருந்தாய். இப்பொழுதோ கட்டுப்பெட்டியான இல்லத் தரசியாய் மாறிவிட்டாய். என்னை பண்மையில் விளிக் கிறாய்."

அவள் அழகாக வெட்கப்பட்டாள். டாக்ஸி ஜவுளிக் கடையின் முன்னால் நின்றது.

"சிராக் தீப்" இந்தியாவிலேயே மிக விலை உயர்ந்த கடைகளுக்குள் ஒன்று. அவன் இரண்டு ஜோடி உடைகளை வாங்கிக் கொண்டான். அவளுக்கு வேறொரு கடையில் உடைகளை வாங்கினான். டூத் பேஸ்ட் போன்ற சில்லறை பொருட்களையும் வாங்கிக் கொண்டார்கள்.

டாக்ஸி புறப்பட்டதும் "இதென்ன? நாம் இந்த உடைகளையும், பேஸ்ட் போன்ற சமாசாரங்களையும் வாங்குவதற்காகத்தான் பம்பாய்க்கு வந்தோமா?" என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

டாக்ஸி விமான நிலையத்தின் முன்னால் நின்றது. அவள் வாயடைத்துப் போய் "இதென்னங்க? இவ்வளவு செலவு எதுக்கு?" என்றாள் கவலையோடு. "யாராவது கேட்டால் நமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதுன்னு நினைச்சுப்பாங்க. ரயிலில் காலையில் வந்து விட்டு மாலையில் விமானத்தில் திரும்பினோம் என்று சொன்னால் சிரிக்க மாட்டாங்களா? இந்தச் செலவைக் கூட மிச்சம் பிடித்திருந்தால் அந்த ஹோட்டலிலே நாளை வரை இருந்திருக்கலாமே?"

"உனக்கு அந்த ஹோட்டல் அறை ரொம்பவும் பிடித்து விட்டது போலிருக்கே. வேண்டுமென்றால் பத்து நாள் கழித்து வந்து தங்குவோம்."

"நன்றாகச் சொன்னீங்க போங்க. மறுபடியும் இங்கே வருவதா?" மார்பின் மீது கையை வைத்துக் கொண்டே சொன்னாள்.

இருவரும் விமான நிலையத்திற்குள் சென்றார்கள். அவளுக்கு எல்லாம் புதிதாக இருந்தது. விதவிதமான மக்கள்... வெளிநாட்டினர். எங்கும் ஒரே பரபரப்பாய் இருந்தது.

அவன் கௌண்டரிடம் சென்று இரண்டு சிறிய புத்தகங்களைப் போல் இருந்தவற்றை கொடுத்தான். பதிலுக்கு டிக்கெட்டுகளை பெற்றுக் கொண்ட பிறகு அவளிடம் "வா போகலாம்" என்றான். வாட்சுகள், கேக்குகள் விற்கும் கடைகள் வரிசையாக இருந்தன. கொஞ்சம் தூரம் போனதும் விசாலமான வீட்டைப் போல் இருந்தது ஏரோ பிரிட்ஜ். வழியில் விளக்குகள் பட்டப் பகல் போல் ஜொலித்துக் கொண்டிருந்தன. மேற் கூறையிலும் விளக்குகள் இருந்தன. சுற்றிலும் கண்ணாடிச் சுவர்கள்.



அந்த வழியில் நடந்து போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று தாம் விமானத்திற்குள் நுழைந்து விட்டதை உணர்ந்தாள் ஸ்ரீ லக்ஷ்மி. உண்மையில் விமானமே தான். சினிமாவிலும், டி.வி.யிலும் காட்டுவது போல் படிகள் ஏறுவது, விமானத்திற்குள் நுழைவது எதுவும் இல்லை. எப்போ உள்ளே நுழைந்தோமோ, தெரியாத வகையில் வித்தியாசமான அநுபவம். புரிந்து கொள்வதற்கே ஐந்து நிமிடங்கள் ஆயிற்று.

இருவரும் சீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். அரை மணி நேரம் கழித்து விமானம் புறப்பட்டது. ஏர் ஹோஸ்டஸ் அகலமான ட்ராலியைக் கொண்டு வந்தாள். எல்லாம் விலை உயர்ந்த பானங்கள். அவன் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு அவளிடமும் ஒரு கிளாஸை தந்தான்.

"இதென்ன பானம்?" ஸ்ரீ லக்ஷ்மி கேட்டாள்.

"ஒயின்."

"ச்சீ" என்றாள்.

"ப்ளீஸ் லக்ஷ்மி எனக்காக. எனக்கும் முதல் தடவைதான். ப்ளீஸ் குடித்துப் பாரு." வேண்டுகோள் விடுத்தான்.

அவன் பேச்சைத் தட்ட முடியாமல் கொஞ்சம் குடித்தாள். உண்மையில் நன்றாகவே இருந்தது.

"இதன் விலை எவ்வளவு இருக்கும்?"

"வெளிநாட்டுச் சரக்கு. ரூபாய் கணக்கில் மதிப்பிட்டால் ஒரு பெக் இருநூறு ரூபாய் வரையில் இருக்கும். இதில் இன்னும் விலை உயர்ந்த டிரிங்க்ஸ் கூட இருக்கு."

"மைகாட்!"

"இதை நமக்கு ப்ரியாக தருவார்கள்."

"எவ்வளவு குடித்தாலும் தருவாங்களா?" நம்ப முடியாதவளாக கேட்டாள்.

"கொடுப்பார்கள்."

அதற்குள் சாப்பாடு வந்தது. அதோ பழங்கள், டிரை ஃப்ரூட்ஸ். இரண்டு விதமான ஐஸ்கிரீம்கள்.

இவ்வளவு விலையுயர்ந்த பானங்கள், சாப்பாடு இதையெல்லாம் தந்தால் இனி இவர்களுக்கு என்ன மிஞ்சும்?"

"வியாபாரத்தை வளர்த்துக் கொள்வதற்காகத்தான் இந்த வசதிகள் எல்லாம்" என்றான்.

ஏர் ஹோஸ்டஸ் வந்து காதுகளில் ஹெட்போன்ஸ் மாட்டி விட்டாள். சீட் அருகில் ஐந்து பட்டன்கள் இருந்தன. ஒன்றை அழுத்தினால் சித்தார் இசை. இன்னொன்றை அழுத்தினால் மேல் நாட்டு இசை. இப்படி விதவிதமான சானல்கள்.

ஒயின் குடித்ததில் அவளுக்கு தூக்கம் வருவது போல் இருந்தது. ஜென்னல் வழியாய் கீழே பார்த்த போது ஒரே இருட்டு. எதுவுமே தென்படவில்லை. இனிமையான இசை காதுகளில் ஒலிக்க, அவன் தோளில் சாய்ந்து உறங்கிப் போய்விட்டாள்.

ஸ்ரீ லக்ஷ்மிக்கு மறுபடியும் விழிப்பு வந்த பொழுது இளஞ்சூடான சூரிய கிரணங்கள் விமானத்தின் ஜென்னல் வழியாய் உள்ளே நுழைந்து கன்னத்தில் பட்டுக் கொண்டிருந்தன. அவ்வளவு ஆழ்ந்து உறங்கிப் போய்



விட்டதற்கு வெட்கப்பட்டுக் கொண்டே "மணி என்ன?" என்று கேட்டாள்.

"தெரியாது."

"உங்கள் கையில்தான் வாட்ச் இருக்கே?"

அவன் அதற்கு சரியாக பதில் சொல்லாமல் "சூரியோதயம் ஆகிவிட்டது இல்லையா. ஆறுமணி இருக்கலாம்" என்றான்.

அவள் வெளியே பார்த்தாள். சூரிய உதயத்தை விமானத்திலிருந்து பார்ப்பதை விட அற்புதமான காட்சி வேறென்ன இருக்க முடியும்? அவள் வெகுநேரம் வரை அந்த தொடுவானத்தையே பார்த்துக் கொண்டு தன்னையே மறந்திருந்தாள். சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவளாக "இதை விட ரயில் பயணம் சுகமாக இருந்தது. அது கூட காலையிலேயே போய்ச் சேர்ந்துவிடும் இல்லையா? விமானத்தில் இவ்வளவு நேரம் பயணம் எதுக்கு?" என்றாள்.

அதற்குள் பைலட்டின் குரல் மைக்கில் கேட்டது. "வி ஆர் நெள டிராவலிங் ஓவர் ஆஸ்ட்ரியா."

அவன் என்ன சொன்னான் என்று அவளுக்கு சரியாக புரியவில்லை. அடுத்த அரை மணி நேரத்தில் விமானம் தரையில் இறங்கியது. வெளியே வந்து பார்த்தபொழுது பெரிய பெரிய எழுத்துக்களில் தென்பட்டது.

"ZURICH"

எல்லோருமே வெளிநாட்டினர்தான்.

அவள் குழப்பமடைந்தவளாய் கேட்டாள். "நாம் எங்கே வந்திருக்கிறோம்?"

தொலைவில் உயரமாய் வெண்மையாய் இருந்த மலைகளைப் பார்த்துக் கொண்டே அவன் சொன்னான்.

"சுவிட்சர்லாந்திற்கு."

அவள் துள்ளி முன்னால் விழப் போய் எப்படியோ சமாளித்துக் கொண்டாள். "சுவிட்சர்லாந்திற்கா?" என்றாள். உலகமே கண் முன்னால் சுழன்றாற் போல் இருந்தது.

"ஆமாம். ஏறக்குறைய பத்து மணி நேரம் விமானத்தில் பயணம் செய்து இருக்கிறோம். தூக்கத்தில் உனக்குத் தெரியவில்லை.

"ஆனால்... ஆனால்."

"நாம் வந்தது ஸ்விஸ் ஏரில். அதனால்தான் ஒயினை ப்ரீயாக தந்தாங்க" என்றான். இமிக்ரேஷன் கௌண்டருக் கருகில் க்யூவில் நின்று கொண்டே.

அவள் சுதாரித்துக் கொள்ள இரண்டு நிமிடங்கள் ஆயிற்று. "இது... இதெல்லாம் எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. நாம்ப திரும்ப ஊருக்குப் போய்க் கொண்டிருக் கிறோமா அல்லது சுவிட்சர்லாந்திற்கு போய்க் கொண்டிருக்கிறோமா என்று கூடத் தெரியாத அளவுக்கு அஞ்ஞானத்தில் இருந்திருக்கிறேனா?" தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

"முதல் தடவையாய் விமானத்தில் ஏறியதால் அந்தப் பதட்டத்தில் இதெல்லாம் தெரியாமல் போய் விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. முன்னாடியே விவரங்களை தெரிந்திருப்பதால் அந்த பதட்டம் எனக்கு இல்லை. அவ்வளவுதான்."

"ஆனால் பாஸ் போர்ட்டுகள்?"



கையிலிருந்த இரண்டு புத்தகங்களைக் காட்டிவிட்டு "இதோ" என்றான்.

அவளால் இன்னும் நம்பவே முடியவில்லை. தனக்குள் சொல்லிக் கொள்வது போல் "பம்பாயிலிருந்து நம் ஊருக்கு வருவதற்கு இவ்வளவு நேரம் ஆன போதும் எனக்கு சந்தேகம் வரவில்லை. இவ்வளவு பேர் வெளி நாட்டவர்களை விமானத்தில் பார்த்த போதும் சந்தேகம் வரவில்லை. கடைசியில் புறப்படும் போது டிக்கெட் வாங்கும் கௌண்டரில் "சுவிஸ் ஏர்' என்று இருந்த போது கூட அதேதோ விளம்பரம் என்று நினைத்தேன். நீங்க சொன்னது போல் முதல் முறை விமானத்தில் ஏறியதால் ஏற்பட்ட பதற்றத்தில் இதெல்லாம் தெரிய வில்லை" என்று நிறுத்தியவள் ஏதோ நினைவுக்கு வந்தாற்போல் "ஆமாம். பாஸ் போர்ட்டை இவ்வளவு சீக்கிரமாக எப்படிப் பெற முடிந்தது? அதுவும் என் கையெழுத்து இல்லாமல்" என்றாள் சந்தேகத்தோடு.

"பணம்" என்றான் பாபு. "பணத்தால் சாதிக்க முடியாதது என்ன இருக்கு சொல்லு? கையெழுத்து இல்லாமல் எப்படி என்கிறாயா? நீ என் மனைவிதானே. உன் கையெழுத்தை நானே போட்டு விட்டேன்."

திடீரென்று அவள் முகம் களை இழந்தது. "இவ்வளவு நேரமாக எனக்கு இந்த சந்தேகமே வர வில்லை. இவ்வளவு பணத்தை எப்படிச் சம்பாதிச்சீங்க? சிரஞ்சீவி போட்டுக் கொடுத்த காண்ட்ராக்டை பயன்படுத்தி யாரையாவது ஏமாற்றினீங்களா?"

"இல்லை. இல்லை. சிரஞ்சீவி படத்தில் நடிக்க வாய்ப்பு தருவதாக விளம்பரப்படுத்தி புதிய நடிகர் நடிகைகளிடமிருந்து பணம் வசூல் செய்யவில்லை. 2025

என்று இருந்ததை 1995 ஆக மாற்றி ஏரியாக்களை விற்று பணம் மூட்டை கட்டவில்லை. மக்களை ஏமாற்றக் கூடாது என்ற நம் கொள்கையை நான் கொஞ்சம் கூட மீற வில்லை. ஸ்ரீ லக்ஷ்மி! என்னை நம்பு" என்றான் நேர்மையாய்.

இமிக்ரேஷனை முடித்துக் கொண்டு அங்கிருந்து வெளியே வந்து ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட வேனில் புறப்பட்டார்கள். இருநூறு கிலோ மீட்டர் பயணம். சாலையில் இரு பக்கங்களிலும் சீமை வாதாம், வால்நட், பைன், ஓக் போன்ற மரங்கள். தொலைவில் ஆரஞ்ச், செஸ்டநட் மரங்கள். விசாலமான மைதானம், ஒய்யாரமாக பாய்ந்து கொண்டிருந்த ரைன் நதி. எல்லாவற்றையும் தாண்டி டூஃபோர் பாயிண்டுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆல்ஃப்ஸ் மலையின் உச்சியில் சமவெளிப் பிரதேசம். சுற்றிலும் வெண்மையான பனி. சுவிட்சர்லாந்தின் மிக உயரத்தில் இருக்கும் பனிமலைப் பிரதேசம் டூஃபோர் பாயிண்ட்.

கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கொண்டு அவர்கள் வெளியே வந்தார்கள். மாலை நான்கு மணி ஆகியிருந்தது.

அந்தக் காட்சியை எந்தக் கவிஞனாலும் வர்ணிக்க முடியாத அளவுக்கு அற்புதமாக இருந்தது. கண்ணுக்கு எட்டிய வரை வெண்மையான பனி. வெளியில் குளிர்ச்சியாய் உல்லென் ஸ்வெட்டருக்குள் இளம் சூடாக இருந்தது.

தொலைவில் கரும் பச்சை நிறத்தில் பைன் மரங்கள். கண்ணுக்கு எட்டாத தொலைவில் மங்கலாக தென்படும் ஸ்கீயிங் செய்யும் மனிதர்கள். பனித் திரையின் ஊடே வீசும் காற்றின் சத்தம் தவிர எங்கும் நிர்மானுஷ்யமான நிசப்தம்.



அந்த நிமிடத்திற்காகவே அதுவரை காத்திருந்தாற் போல் அவன் அவளை அருகில் இழுத்துக் கொண்டான். இரு கைகளையும் அவளுடைய ஸ்வட்டருக்குள் விட்டு மெல்லிய இடையை அழுத்தமாகப் பிடித்து லேசாக தூக்கி அவள் முகத்தை தன் இதழ்களுக்கு அருகில் கொண்டு வந்து அழுத்தமாக முத்தம் பதித்தான். நின்று கொண்டே எப்பொழுது முத்தமிட்டாலும் அவனுக்கு அதுதான் பழக்கம். அவளும் கால் விரல்களை உயர்த்தி எம்பி நின்று அவன் இதழ்களில் நுனி நாக்கால் ஓவியம் வரைவது பழக்கம்.

இம்முறை அப்படிப்பட்ட எதிர் செயல் எதுவும் இல்லாமல் போனதால் அவன் தன்னறியாமல் அவளை கீழே இறக்கி தொலைவில் நகர்ந்து கொண்டு "என்ன வாச்சு ஸ்ரீ?" என்றான்.

"பத்து நாட்களில் இவ்வளவு பணத்தை எப்படிச் சம்பாதிச்சீங்க? அது தெரியும் வரையில் என்னால் பழைய இயல்புக்கு வர முடியாது. என்னை மன்னி யுங்கள்" என்றாள்.

அவன் அவள் மனநிலையைச் சரி செய்வதற்காகச் சிரித்துவிட்டு "பணம் என்று வந்தால் பத்தே நாட்களில் வரும். ஹர்ஷத் மெஹதா ஒரு வருடத்தில் நூறு கோடி சம்பாதிக்க வில்லையா?" என்றான்.

அவள் சட்டென்று "அதுதான்... அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள். "நீங்க இன்னொரு ஹர்ஷத் மெஹதாவாக ஆகி அரெஸ்ட் ஆவது எனக்குப் பிடிக்கவில்லை."

"அரெஸ்ட் ஆகும் அளவுக்கு தவறான காரியம் எதுவும் நான் செய்யவில்லை."

"பின்னே இவ்வளவு பணம் இவ்வளவு குறுகிய காலத்தில் எப்படி வந்தது? யாரையும் ஏமாற்றாமல்."

அதைச் சொல்வதற்கு முன் சில விஷயங்களை உன்னிடம் சொல்ல வேண்டும். ஸ்ரீ லக்ஷ்மி! என்னுடைய எண்ணங்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவை. ஒவ்வொரும் தாம் சந்தோஷப்படும் அளவுக்கு மற்றவர்கள் யாரும் வாழ்க்கையில் சந்தோஷத்தை அநுபவித்ததில்லை என்று நினைப்பார்கள். ஒருவிஷயம் சொல்லட்டுமா. வாழ்க்கையில் சந்தோஷத்தை இது வரை நான் உணர்ந்ததேயில்லை. இதைவிட சிறப்பாக வாழ்வது எப்படி என்று யோசிப்பதிலேயே காலத்தைக் கழித்து விடுவேன்.

"உதாரணமாய் லிஃப்ட்டில் நடிகை ஸ்ரீதேவியைச் சந்தித்ததை, அவளுடன் சேர்ந்து லிஃப்ட்டில் போனதை உன் வாழக்கையில் பெரிய த்ரில்லிங்காக உணர்ந்தாய். ஆனால் எனக்குள் ஏதோ புதைந்து போகிற உணர்ச்சி தான் ஏற்பட்டது. ஸ்ரீ தேவியைப் பார்த்து சந்தோஷப் படுகிற ஆயிரக்கணக்கான மக்களில் நான் ஒருத்தனாக முடியாது. சிரஞ்சீவியின் முன்னால் மகனை டான்ஸ் ஆடவைக்கிற நூற்றுக்கணக்கான பெற்றோர்களில் நான் ஒருத்தனாக முடியாது. லட்சம் பேருக்கு நடுவில் என்னுடைய தனித் தன்மையை நிலைநாட்டிக் கொள்வது எப்படி என்று யோசிப்பேன்.

"நம் திருமணத்திற்கு முன்னால் ஒரு வார்த்தை சொன்னாய். இந்தக் காலத்துப் பெண்கள் தம் பாய்பிரண்ட்ஸ் தம்மை எவ்வளவு ஆழமாய் நேசிக்கிறார்கள் என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. தமக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று தான் யோசிக்கிறார்கள் என்றாய். சில சமயம் அடுத்தவங்க



சாதாரணமாக சொல்கிற வார்த்தைகள் கூட நம் மனதில் ஆழமாய் பதிந்துவிடும். திருமணத்திற்கு முன்னால் உனக்கு எதுவும் செய்ய முடியவில்லை. திருமணமான பிறகாவது நீ கனவிலும் ஊகித்திராத அற்புதமான அநுபவத்தைத் தர விரும்பினேன். அதனால் தான் உனக்கே தெரியாமல் உன்னை சுவிட்சர்லாந்திற்கு அழைத்து வந்தேன். வெற்றி கிடைக்கும் போது ஏற்படுகிற திருப்தி எனக்கு வேறு எதிலும் கிடைக்காது. கடைசியில் உன்னிடம் கூட. ப்ளீஸ்! என்னைப் புரிந்து கொள்."

அவள் அவனருகில் வந்து "புரிந்தது" என்றாள். "எந்த பாய்பிரண்டுமே தன் சிநேகிதிக்குத் தர முடியாத அதிசயத்தக்க பரிசை நீங்க எனக்கு தந்திருக்கீங்க. நீங்க இன்னிக்கு என் கண்களுக்கு ரொம்ப வித்தியாசமாய் தென்படுறீங்க. நான் அறிந்த பாபு நீங்கள்தானா என்று கூட ஆச்சரியமாய் இருக்கு. இவ்வளவு சாமர்த்தியம் உங்களுக்கு எப்படி வந்தது?"

அவன் சிரித்து விட்டுப் பேசாமல் இருந்தான்.

"இவ்வளவு பணத்தை எப்படிச் சம்பாதிச்சீங்க? சொல்ல மாட்டீங்களா? இந்த அழகான பனிமலை களுக்கு இடையில் கொஞ்சம் தாமதமாகி விட்ட நம் தேன் நிலவை நான் மனப்பூர்வமாக உணர்ந்து மகிழ வேண்டுமென்றால் இந்த ஒரு சந்தேகத்தை தீர்த்து வையுங்களேன் ப்ளீஸ்" என்றாள்.

அவன் சொல்லத் தொடங்கினான்.

★ ★ ★

# 6

“சிரஞ்சீவியின் சினிமா என்றால் மக்களுக்கு எவ்வளவு மோகம் என்று உனக்குத் தெரியும் இல்லையா. மக்களின் மோகத்தை அனுசரித்து தான் படத்தை வாங்குபவர்களின் டிமாண்டும் இருக்கும். அதனால் சிரஞ்சீவி காண்ட்ராக்டில் கையெழுத்துப் போட்டதுமே ஒரு தலை நரைத்த மியூசிக் டைரக்டரைப் பிடித்துப் பாட்டுகளை ரிகார்ட் செய்ய வைத்து ஆடியோ உரிமைகளை விற்று விட்டேன்.

"எத்தனைக்கு?" சந்தேகத்துடன் கேட்டாள்.

"எட்டு லட்சத்திற்கு." சொன்னான்.

அவள் எவ்வளவு வியப்படைந்தாள் என்றால் கொஞ்ச நேரம் வரை பேசமுடியாதவளாகி விட்டாள்.

அவளுடைய வியப்பைக் கவனித்தவனாய் மேலும் சொன்னான். சாதாரணமாக இருந்தால் பன்னிரெண்டிலிருந்து பதினைந்து லட்சம் வரை கிடைக்கும். அதை ஆடியோ ரைட்ஸ் என்பார்கள். ஆனால் மியூசிக் டைரக்டர் புதியவர். அதனால் குறைவாக வந்தது. இன்னும் இரண்டு லட்சம் இருந்திருந்தால் பெரிய மியூசிக் டைரக்டர் யாருக்காவது அட்வான்ஸ் தந்து இன்னும் அதிகமாக சம்பாதித்திருப்பேன்."

அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

அவள் மௌனத்தை வேறு விதமாகப் புரிந்து கொண்டு, "இதில் யாரையும் ஏமாற்றுவது என்ற



பேச்சுக்கே இடமில்லை ஸ்ரீ லக்ஷ்மி. இளம் பெண் எழுதினாற்போல் கடிதங்களை எழுதிவிட்டு ஐஸ்கிரீம் கடையில் விற்பனை அதிகரிக்கச் செய்வது, சேட் அம்பாலாலை மிரட்டி பணம் வசூல் செய்வது போன்ற செயல்கள் எதுவும் இல்லை. மக்களுக்கு காசெட் தருகிறோம். அதில் பாட்டுகள் இருக்கின்றன. 2025ல் இந்த சினிமாவை எப்படியும் எடுக்கப் போகிறோம்" என்றான்.

அதற்குள் சுதாரித்துக் கொண்ட ஸ்ரீ லக்ஷ்மி முறுவலித்துக் கொண்டே "யூ ஆர் ஜீனியஸ்" என்றாள்.

"ஒரு அழகான பெண் தன் கணவனை புகழ்கிற விதம் இதுதானா?"

"பின்னே?" புரியாமல் கேட்டாள்.

"கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டு குதிகாலை உயர்த்தி..."

அவன் வார்த்தைகள் முடியக் கூட இல்லை. அவள் அவன் உதட்டின் மீது தன் இதழ்களை பதித்து அழுத்தமாக ஒற்றினாள்.

வானத்திலிருந்து வெள்ளையாய் மாவு தூவினாற் போல் பொழியும் பனித்துகள்கள். இயற்கை அன்னை வரைந்த ஓவியத்தில் அத்தனையும் வெள்ளையாக இருந்தால் நன்றாக இராது என்பது போல் தொலைவில் மெல்லிய கோடுகளாய் மலை உச்சியின் மீது பைன் மரங்கள்.

அந்த தனிமையைக் கெடுக்க விருப்பம் இல்லாதது போல் எங்கும் நிசப்தம். அந்த நிசப்தத்திலிருந்து நூறு வாத்தியக்காரர்கள் தம் வயலின்களில் மெல்லிய கமகத்தை இசைத்தாற் போல் மலைகளுக்கு இடையில் வீசும் காற்று.

குறைந்த பட்சம் அந்தக் காற்று கூட தம்மிரு வருக்கும் இடையே நுழைவதை சகித்துக் கொள்ள முடியாதது போல் அவன் அவள் இடுப்பில் கையைப் பதித்து மேலும் அருகில் இழுத்துக் கொண்டான். அவளும் அவனை இன்னும் அழுத்தமாய் அணைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

அதற்குள் அவளுக்கு ஏதோ நினைவுக்கு வரவே "முத்தமிடும் போது கண்களை எதுக்கு மூடிக் கொள்வார்களோ தெரியுமா?" என்றாள்.

அதுவரை இன்ப மயக்கத்தில், வேறு ஏதோ உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பாபு கண்களை மூடிக் கொண்டே "இந்த ஆராய்ச்சி இப்போ தேவையா சொல்லு" என்றான்.

"காது கொடுத்துக் கேட்டுக் கொள்ளலாம் இல்லையா?" பழிப்பது போல் சொன்னாள்.

"இதுவரை எத்தனையோ கவிஞர்கள் எத்தனையோ விதமாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்."

"நான் புது விதமாக சொல்லப்போகிறேன்."

அவன் உற்சாகத்தோடு கண்களைத் திறந்து "சொல்லு" என்றான்.

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு மனோகரமாக இருந்தது.

"முத்தமிடும் போது நானும் நீங்களும் நம்மையே மறந்து போய் விடுவோம். மனம் என்ற அறையிலிருந்து கண்கள் என்ற வாசல் வழியாய் நழுவிப் போய் விடாமல் இருப்பதற்காக இருவரும் அழுத்தமாக கண்களை மூடிக் கொண்டு விடுகிறோம்."



அந்த விளக்கம் கேட்டு அவன் உணர்ச்சி வசப்பட்ட வனாய் அவளை அப்படியே தரையில் சாய்த்தான். அந்த இடத்தில் ஆளரவமில்லாமல் இருந்தது. வானத்தில் ஒரு பறவை கூட இருக்கவில்லை. அவளும் பெரிதாக மறுப்புத் தெரிவிக்கவில்லை. ரொம்ப வித்தியாசமான அநுபவம்.

மேலே இருந்த அழுத்தத்திற்கு கீழே பனி உருகிக் கொண்டே... உருகும் பனிக்கட்டியிலிருந்து மேலும் குளிர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்க... மேலே இளம் சூடாக அவன்.

"நீங்க எப்போதாவது ஃப்ரைட் ஐஸ்க்ரீம் சாப்பிட்டிருக்கீங்களா?" என்று கேட்டாள்.

"இப்போ ஐஸ்க்ரிம் நினைவு எதுக்கு வந்தது?"

"ஐஸ்க்ரீமை நடுவில் வைத்து பிஸ்கெட்டை சுற்றிலும் வைத்துத் தருவாங்கன்னு. நினைக்கிறேன் சுற்றிலும் வெதுவெதுப்பாய் உள்ளே குளிர்ச்சியாய் இருக்கும். இப்பொழுது இதற்கு நேர் மாறாக இருக்கு. அதாவது சுற்றிலும் குளிர்ச்சியாய் உள்ளே வெது வெதுப்பாய்."

"நீ தமிழ் மாத நாவல்கள் நிறைய படிப்பாய் போலிருக்கு."

"அவளுக்கு தான் பேசியதிலிருந்த தவறு புரிந்தது. சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டே, "ச்சீ... என் உத்தேசம் அது இல்லை. இதயத்தில் என்று சொல்ல வந்தேன்." விளக்கம் சொன்னாள்.

"தமிழ் மாத நாவல் என்றதுமே ஏதோ கெட்ட வார்த்தையைக் கேட்டுவிட்டாற் போல் அப்படி ரியாக்ட் ஆவானேன்?" என்றான்.

"நாம்ப இந்த நேரத்தை இதை விட நல்ல விதமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்."

"உண்மைதான்." அவள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டான்.

அவள் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். அவளுக்கு ரொம்ப வியப்பாக இருந்தது.

எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்து படிப்பு முடித்த தான்... இங்கே இன்றைக்கு இப்படி ஆல்ப்ஸ் மலைகளுக்கு இடையில்... சுவிட்சர்லாந்தில்...

அவன் சொன்னது போல் இந்தப் பணம் இப்படித் தான் வருமோ என்னவோ.

அவன் திரும்பிப் படுத்துக் கொண்டான். இருவரும் மல்லாந்து படுத்தபடி... வானத்தைப் பார்த்துக் கொண்டே.

மேலே வானம் கீழே பூமி. இரண்டுமே வெண்மையாய்.

அவன் சொன்னான். "ரொம்ப பேர் சொல்வாங்க. பணம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உயிருக்குயிராய் நேசிக்கும் உள்ளம் இருந்து விட்டால் போதும் என்று. அதென்னவோ கதைகளிலும், காவியங்களிலும், பதினாறு வயது பிராயத்திலும் படிப்பதற்கு நன்றாக இருக்குமோ என்னவோ. ஆனால் யதார்த்தத்தில் அப்படியில்லை. காதலிக்கிற ஒரு நபர் இருந்தால் நன்றாக யிருக்கலாமோ என்னவோ. ஆனால் வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கடைசி வரை அநுபவிக்கணும் என்றால் நிச்சயமாக பணம் வேண்டும். ஒரு கட்டத்திற்குப் பிறகு பணம் இல்லாமல் போவது என்பது காதலைக் கொன்று விடும். வாழ்க்கையில் தேவைகளைத் தீர்த்துக் கொள்வதே கஷ்டமாக இருக்கும் போது இனி புத்தம் புதிதாய் காதலில் விழவேண்டும் என்றால் அந்தப் பெண்ணும் பையனும் ரொம்ப நேர்மையாக காதலித்து இருக்க வேண்டும். அது மிகவும் அரிது."



"நீங்க ரொம்ப மெட்டீரியலிஸ்ட் ஆக மாறிக் கொண்டிருக்கிறீங்க பாபு."

"இல்லை. பிராக்டிகல் மனிதனாக மாறிக் கொண்டிருக்கிறேன்."

"இவ்வளவு தூரம் வந்து விட்டு இவ்வளவு சந்தோஷத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் போது நாம் வாதாட வேண்டிய விஷயம் இதுதானா?"

"இவ்வளவு தூரம் வந்ததால் இந்த சங்கதி தெரிந்தது. இல்லாவிட்டால் இவ்வளவு சந்தோஷம் இருப்பது எப்படித் தெரிந்திருக்கும்? ஆனால் இந்தச் சந்தோஷத் திற்குப் பின்னால் பணம் இருக்கு. இல்லையா?"

"நீங்க என்னை பயமுறுத்தறீங்க. தயவு செய்து அப்படிப் பேசாதீங்க ப்ளீஸ்" என்றாள் கவலையுடன்.

அவன் அவள் வார்த்தைகளைப் பொருட் படுத்தாமல் தொடர்ந்தான். "தன் பொறுப்புகளைச் சாதாரணமாக நிறைவேற்றுகிற ஒரு கணவன். அதற்குத் தேவையான அளவு பணம் ஒரு பக்கமும், மழை வந்தால் ஒழுகும் ஓலைக் குடிசையில் வாழ்க்கை. அதோடு மனதைப் புரிந்து கொண்டு அளவுக்கு அதிகமாக நேசிக்கும் கணவன் ஒரு பக்கம். இவ்விரண்டில் எது வேண்டும் என்றால் எதைக் கேட்பாய் நீ?" என்று கேட்டான்.

அவள் இரண்டு நிமிடங்கள் ஆழ்ந்து யோசனை செய்து விட்டு "முதல் இரண்டு வருஷமும் இரண்டாவது. அதற்கப்புறம் முதலாவது" என்றாள்.

அவன் அவளை நோக்கித் திரும்பி "தாங்க்ஸ். அதனால் தான் உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. அடுத்தவர்கள் என்னைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்ளும் விதமாக பேசமாட்டாய். உன் மனதிற்கு சரி என்று பட்டதைச் சொல்லுவாய்" என்றான்.

* * *

பாபு தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தான். அவ்வறையில் நிசப்தம் ராட்சத்தனமாய் நாட்டியமாடிக் கொண்டிருந்தது. சிரஞ்சீவி இன்னும் வரவில்லை.

இப்படிப்பட்ட நிலைமை எதிர்ப்படும் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரமாக வந்து விடும் என்று நினைக்கவில்லை. அவர்கள் சுவிட்சர்லாந்த் டிரிப்பை முடித்துக் கொண்டு திரும்பி வந்த போது வீட்டு வாசலில் ஒரு ஆள் காத்துக் கொண்டிருந்தான். பாபுவை நடிகர் சிரஞ்சீவி அழைத்து வரச் சொன்னதாய் சொல்லி கையோடு கூட்டிக்கொண்டு போனான்.

பாபு போனபொழுது அங்கே சூழ்நிலை மிகக் கம்பீரமாக இருந்தது. செகரெட்ரி அவனிடம் பேசக் கூட இல்லை. சீரியஸாக பார்த்துவிட்டு ஏதோ வேலையிருப்பது போல் உள்ளே போய்விட்டான்.

உள்ளே சிரஞ்சீவி இருப்பது போல் சந்தடி பறைச்சாற்றியது. அவன் காத்திருக்கத் தொடங்கினான்.

* * *

இன்ஸ்பெக்டர் அந்த கம்பிளைண்டைக் கவனமாக பரிசீலித்தார். ஆதித்யா ஆடியோ கம்பெனிக்காரர்கள் கொடுத்த கம்பிளைண்ட் அது.



2025ல் சிரஞ்சீவியுடன் எடுக்கப் போகும் படத்திற்கு சம்பந்தப்பட்ட பாட்டுகளின் கேசட்டுகளை, ஆடியோ உரிமைகளை எட்டு லட்சம் ரூபாய்களுக்கு பாபு என்ற நபர் தங்களுக்கு விற்றார் என்றும், எப்பொழுதோ முப்பது வருடங்களுக்குப் பிறகு ரிலீசாகப் போகிற படம் என்று சினிமா இண்டஸ்ட்ரியில் பேச்சு அடிபடுவதாகவும், அந்த காசெட் மக்களுக்கு இடையே போனால் தமக்கு விற்பனை இருக்காது என்றும், அதனால் பாபுவிடமிருந்து தமக்கு பணத்தை திருப்பி வாங்கித் தரச்சொல்லி அந்த புகாரில் கூறப்பட்டிருந்தது.

புகாரை முழுவதுமாக படித்துவிட்டு இன்ஸ்பெக்டர் சொன்னார். "பணத்தைத் திருப்பி வாங்கித் தருவதற்கு இது கோர்ட் இல்லை. உன்னுடையது சிவில் வழக்கும் இல்லை. இது போலீஸ் ஸ்டேஷன். இந்த கம்பிளைண்டில் பாபு செய்த மோசடி எதுவும் இல்லை. அவன் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?"

"ஏதோ ஒன்று செய்யுங்கள் சார். சிரஞ்சீவியின் படம் என்றதும் அது எப்பொழுது ரிலீசாகும் என்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் வாங்கிவிட்டேன் சார். அந்த மியூசிக் டைரக்டர் ரொம்ப மோசமாக ட்யூன் போட்டிருக்கிறார் நாலே நாலு வாத்தியங்களைதான் பயன்படுத்தியிருக் கிறார்."

"இதெல்லாம் பாபுவின் மோசடி எப்படி ஆகும்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். எப்டியாவது நீங்க எனக்கு உதவி செய்யணும். அவனை மிரட்டி என் அட்வான்ஸ் பணத்தை எனக்குத் திருப்பி வாங்கித் தந்தால் உங்க உதவியை ஆயுள் முழுவதும் மறக்க மாட்டேன்.' கடைசி வார்த்தையை அழுத்திச் சொன்னான்.

"அட்வான்ஸ் எவ்வளவு கொடுத்தாய்?"

"இரண்டு லட்சம். ரசீது கூட இருக்கு சார்."

இன்ஸ்பெக்டர் ஒரு வினாடி மூச்சு விடவும் மறந்து போனார். "இரண்டு... லட்சம்!"

இப்பொழுது இன்ஸ்பெக்டர் அந்தக் கம்பிளைண்ட் பற்றி யோசிக்கவில்லை. பாபுவிடம் இரண்டு லட்சங்கள் இருக்கு. அதைப்பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தார்.

தாலி விஷயத்தில் சேட் அம்பாலாலை ஏமாற்றி விட்டு, தன் வேலையை போக்கடித்து விடுவேன் என்று பயமுறுத்தி பணத்தை வசூல் செய்து கொண்ட பாபுவின் உருவம் கண் முன்னால் நிழலாடிற்று.

பாபுவைப் பழிவாங்குவதற்கு இதைக்காட்டிலும் நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது. ஒரு வினாடி யோசித்தார். "ஒரு காண்ட்ராக்ட்டைத் தயாரித்துக் கொண்டு வா" என்றார்.

ஆதித்யா ஆடியோ உரிமையாளர் உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டே, "என்ன காண்ட்ராக்ட் சார்?" என்றார்.

"அடுத்த மாதம் பாபு எடுக்கப் போகும் படத்தில் நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்து சிரஞ்சீவி ஒரு அக்ரிமெண்டை பாபுவிடம் கொடுத்திருக்கிறார். அதைக் காட்டி பாபு உன்னிடமிருந்து இரண்டு லட்சங்களை வாங்கிக் கொண்டான். அதற்கு ரசீதும் தந்திருக்கிறான். இப்படி பொய்யாக பத்திரங்களை உருவாக்குவோம். அதன் மூலமாக உன்னை ஏமாற்றியிருப்பது போல் காட்டினால்



போலீஸ் கேஸ் போடுவதற்கு தேவையான ஆதாரம் உனக்குக் கிடைத்துவிடும். ஒரு தடவை அந்த பாபுவை அரெஸ்ட் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். காவல் நிலையத்திற்கு வந்து அவனிடமிருந்து இரண்டு லட்சங்களையும் கக்க வைத்து விடுவேன். கோர்ட் வரைக்கும் போக வேண்டிய அவசியம் இருக்காது. இதற்கு முன்பே அவன் என் அடிகளை ருசி பார்த்திருக்கிறான். அதனால் அதிகமாக எதிர்க்க மாட்டான்" என்றார்.

ஆதித்யா ஆடியோ உரிமையாளர் வெளியே போய் ஒரு மணி நேரத்திற்குள் திரும்பி வந்தார். அவர் கையில் போலி காண்ட்ராக்ட் பத்தரங்கள் இருந்தன. "நீங்கள் கேட்டுக் கொண்டது போலவே தயாரித்திருக்கிறேன் சார். சிரஞ்சீவியின் கையெழுத்துக்கூட அசல் அதே போலவே வந்திருக்கு" என்றார்.

இன்ஸ்பெக்டர் அந்தக் காகிதங்களை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தார்.

வேகமாய் பாபுவின் வீட்டை நோக்கிப் பறந்தது மோட்டார் சைக்கிள்.

★ ★ ★

# 7

ஐந்து நிமிடங்கள் கழித்து சிரஞ்சிவி வந்தான். அவன் ரொம்பவும் சீரியஸாக இருப்பான் என்று எண்ணிக் கொண்டிருதான் பாபு. ஆனால் அப்படி ஒன்றும் இருக்கவில்லை. பாபு எழுந்து வணக்கம் தெரிவித்தான்.

"உட்கார்" என்று சொல்லி விட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டான். சிரஞ்சீவியோடு சேர்ந்து இன்னொரு டைரக்டரும் உள்ளேயிருந்து வந்தார். அவரும் அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்து கொண்டார். சிரஞ்சீவி என்ன சொல்லப் போகிறானோ என்று ஆர்வத்துடன் காத்திருந்தான்.

தான் என்ன காரியம் செய்திருக்கிறோம் என்று அவனுக்குத் தெரியும். அதனால் எதிராளிக்கு, முக்கியமாக சிரஞ்சீவி நிலையில் உள்ள நபருக்கு எவ்வளவு எரிச்சல் ஏற்படும் என்றும் அவன் அறிவான். என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டே மனதிற்குள் பதிலைத் தயார் செய்துகொண்டிருந்தான்.

"உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கு?" சிரஞ்சீவி கேட்டான்.

வேறு ஏதோ கேட்பான் என்று நினைத்திருந்த பாபு திகைப்படைந்தவனாய் "தெரியாதுங்க" என்றான்.

"எடுத்துப் பாரு."

பாபு இன்னும் குழப்பம் நீங்காதவனாய் ஜேபியிலிருந்து பர்ஸை எடுத்துப் பணத்தை எண்ணி விட்டு "எழுநூற்று ஐம்பது இருக்கு சார்" என்றான்.



"அறுநூறை கொடு."

அவ்வளவு அவசியம் என்ன ஏற்பட்டிருக்குமோ என்று புரியாதவனாய் அறுநூறு ரூபாயை எண்ணித் தந்தான். அந்தப் பணத்தை எடுத்து பின்னால் இருந்த மேஜை டிராயருக்குள் போட்டுவிட்டு "இந்த அறுநூறு ரூபாயை எப்போ திருப்பித் தரணும்?" என்று கேட்டான்.

"உங்கள் விருப்பம் சார்."

"தராமலேயே போய் விட்டால்?"

பாபு சங்கடமடைந்தவனாய் "பரவாயில்லைங்க" என்றான்.

சிரஞ்சீவி அவனுடைய போக்கைப் பார்த்துவிட்டு "அதில் செக் புத்தகம் இருக்கா?" என்றான்.

"இருக்கு சார்."

"பாங்கில் எவ்வளவு இருக்கும்?"

"ஒரு லட்சம் வரை இருக்கும்."

"அதற்கு ஒரு செக் எழுதிக்கொடு, என் செகரெட்ரியின் பெயரில்."

பாபு தடுமாற்ற மடைந்தான்.

"ஏன் தயங்குகிறாய்?" என்றான் சிரஞ்சீவி. "ஒரு வாரத்தில் திருப்பித் தந்து விடுவதாக என் செகரெட்ரியிடம் ஒரு லட்சம் ரூபாய்க்கு செக் வாங்கி பாங்கில் கேஷ் பண்ணிக் கொண்டாய் இல்லையா?"

"நோ. நான் வாங்கிக் கொள்ளவில்லை."

"இதென்னப்பா. இப்பொழுதுதானே பத்து நாட்களுக்கு அறுநூறு ரூபாய் வட்டி என்று சொல்லி விட்டுத் தந்தாய்" என்றான் சிரஞ்சீவி அப்பாவிக் குரலில்.

சிரஞ்சீவி தன்னை ஏதோ வலையில் சிக்க வைத்துக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது பாபுவுக்கு. ஆனால் எந்த வழியில் என்று தெரியவில்லை. வலிந்தச் சிரிப்பை உதிர்த்து விட்டு "நீங்க ஜோக் அடிக்கறீங்க" என்றான் பாபு.

"இதில் ஜோக் என்ன இருக்கு? சரி. போகட்டும். ஒரு அறுநூறு ரூபாய்க்கு செக் எழுதிக்கொடு" என்றான் சிரஞ்சீவி.

எதுக்கு என்று கேட்க நினைத்தவன் அறுநூறு ரூபாய் தானே என்று எண்ணி மளமளவென்று செக்கை எழுதிக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு சிரித்தான் சிரஞ்சீவி. "பணத்தை வேண்டுமானால் கொடுக்கவேயில்லை என்று டபாய்த்து விட முடியும். இப்பொழுது இந்த செக்கை வட்டிக்காக தரவில்லை என்று சொல்லி விட முடியுமா?"

பாபு பதில் பேசவில்லை. ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்று புரிந்தது. ஆனால் அது என்ன என்று தான் புரியவில்லை.

"நான் லட்ச ரூபாய் வாங்கிக் கொள்ளவே இல்லை சார்" என்றான். அந்த விஷயம் உங்களுக்கும் தெரியும் என்பது போல்.

"இல்லை. பத்து நாட்களுக்கு முன்னால் நீ பம்பாய்க்கு போயிருந்தாய். அவசரமாக ஒரு லட்சம் ரூபாய் வேண்டும் என்றும், உன் ட்ராவலர்ஸ் செக் தொலைந்து விட்டதாகச் சொன்னாய். நீ என் படத் தயாரிப்பாளர் என்பதால் என் செகரெட்டரியை ஒரு லட்சம் ரூபாயை கொடுக்கச் சொல்லி உத்தரவு தந்தேன். அவர் உனக்கு செக் தந்தார். அதை கேஷ் செய்து கொண்டு அன்று மாலையே நீ



மனைவியோடு சேர்ந்து சுவிட்சர்லாந்திற்குப் போனாய். இப்படி வாதாடினேன் என்று வைத்துக் கொள். உன்னால் என்ன செய்ய முடியும்?"

அந்தக் கடைசி வார்த்தைகளைக் கேட்டதும் பாபுவுக்கு ஒரு பாயிண்ட் கிடைத்து விட்டாற் போலிருந்தது. "பம்பாயில் எனக்கு அகௌண்ட் இல்லை. அங்கே நான் எந்த செக்கையும் மாற்றிக் கொள்ள வில்லை" என்றான்.

சிரஞ்சீவி மேஜை டிராயரிலிருந்து ஒரு பாஸ் புத்தகத்தை எடுத்து பாபுவின் முன்னால் போட்டு விட்டு "இதென்ன?" என்றான்.

பாபு வியப்போடு அதைப் பார்த்தான்.

பாங்க் ஆஃப் மகாராஷ்ட்ரா, ஃபோர்ட், பம்பாய் என்றிருந்தது. புத்தகத்தின் மீது பாபு என்று எழுதியிருந்தது.

சிரஞ்சீவியுடன் இருந்த டைரக்டர் இதையெல்லாம் பார்வையாளராய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். மின்சாரம் தாக்கியவனைப் போல் நிமிர்ந்தான் பாபு.

"எடுத்துப் பாரு" என்றான் சிரஞ்சீவி நாற்காலியில் பின்னால் சாய்ந்துகொண்டே...

பாபு குழப்பம் தீராத நிலையிலேயே பாஸ் புக்கை பிரித்துப் பார்த்தான். சரியாக பத்து நாட்களுக்கு முன்னால் அந்த அகௌண்ட் நூறு ரூபாயுடன் தொடங்கப் பட்டிருந்தது. அதில் ஒரே ஒரு கிரெடிட் எண்ட்ரி இருந்தது. அதே நாளில் மொத்தப் பணத்தையும் வித்ட்ரா செய்து விட்டாற்போல் டெபிட் எண்ட்ரி இருந்தது.

ஒரு லட்ச ரூபாய்க்கு!

"இந்த அகௌண்டை... இந்த அகௌண்டை நான் தொடங்கவில்லை" என்றான் தடுமாறிக் கொண்டே.

"நான்தான் அப்படிச் செய்ய வைத்தேன்" என்றான் சிரஞ்சீவி நிதானம் தவறாத குரலில்.

பாபு சரேலென்று நிமிர்ந்தான்.

"நீ ஆடியோ உரிமைகளை விற்று விட்டதாக தெரிந்ததுமே முதலில் கோபம் வந்தது. உன் புத்தி சாதுரியத்தை பாராட்டத் தோன்றினாலும் நீ மட்டுமே யில்லை. உன்னைப்போன்றவங்க நிறையபேர் இருப்பாங்கன்னு உனக்குப் புரிய வைக்க வேண்டுமென்று நினைத்தேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். "நீ பாம்பே போயிருக்கிறாய் என்று தெரிந்து, என் மேக்கப் அசிஸ்டெண்டை பாங்க் ஆஃப் மஹாராஷ்ராவுக்கு அனுப்பினேன். அவன் பாபு என்ற பெயரில் அகௌண்டைத் தொடங்கினான். என் செகரெட்ரி அவனிடம் ஒரு லட்சம் ரூபாய்க்கு செக் தந்தான். அதை மாற்றுவதற்காக எங்கள் மேக்கப் அசிஸ்டெண்ட் போன பொழுது பாங்க் மேனேஜர் என் செகரெட்ரிக்கு போன் செய்து "இந்த பாபு என்பவர் நம்பிக்கை யானவர்தானா?" என்று கேட்டார். என் செகரெட்ரி "நம்பிக்கையானவர் தான். அர்ஜெண்டாக வேண்டும் என்றதால் நான்தான் ஒரு லட்ச ரூபாய்க்கு செக் தந்தேன்" என்று பதிலளித்தார். அந்த அக்கௌண்டை அந்த விதமாக முடிக்கப்பட்டு விட்டது.

"அதாவது இன்னொரு விதமாக சொல்ல வேண்டும் என்றால் என் செகரெட்ரியிடமிருந்து பாபு என்கிற நீ பாங்க் ஆஃப் மகாராஷ்ட்ரா மூலமாக ஒரு லட்சம் ரூபாயை கடனாக வாங்கிக் கொண்டிருக்கிறாய் என்று ரிகார்டுகளில் இருக்கிறது. அதற்கு வட்டியாக இப்பொழுது நீ எழுதித் தந்த செக் கூட என்னிடம் இருக்கிறது. அந்த லட்சம் ரூபாய் களோடு நீ சுவிட்சர்லாந்திற்கு போனாய்."



"ஆனால் நான்..."

"நீ உன் பணத்தில்தான் போனாய், நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நிறைய கருப்புப் பணத்தையும் செலவழித்திருக்கிறாய். விமான நிலையத்தில் நீ கட்டிய கஸ்டம்ஸ் ட்யூடியே இதற்கு சாட்சி. அவ்வளவு பணம் உனக்கு எப்படி வந்தது?"

"ஆடியோ காசெட்காரங்க கொடுத்தாங்க. பிளாக் மணி."

"கோர்ட்டில் அந்த விஷயத்தை உன்னால் சொல்ல முடியாது. என் செகரெட்ரி கொடுத்த ஒரு லட்சம் ரூபாயைத் தான் செலவழித்ததாக சொல்ல வேண்டி யிருக்கும்."

பாபு தலை குனிந்தபடி அமர்ந்திருந்தான். வேலைக் காரன் காபியைக் கொண்டு வந்தான். பாபு நிமிர்ந்து பார்க்காமலேயே கோப்பையை எடுத்துக் கொண்டான். அந்த அறையில் சிரஞ்சீவியின் குரல் கணீரென்று ஒலித்தது.

"சகமனிதனை நம்புவது மனிதனின் தர்மம். நான் உன் பர்ஸில் ஏதாவது பணம் இருக்கா என்று கேட்டதுமே ஏன் தந்தாய்? அதற்கு அத்தாட்சி என்ன? நான் திருப்பித் தராவிட்டால் உன்னால் என்ன செய்ய முடியும்?"

பாபு பதில் சொல்லவில்லை.

"அது போலவே நீ என்னிடம் வந்தாய். நான் உன் அக்ரிமெண்டில் கையெழுத்துப் போட்டது, நீ என் தீவிர ரசிகன் என்பதற்காக அல்ல. உன் உறுதியைப் பார்த்து. முப்பது வருடங்கள் வரை அந்த உறுதி உன்னுள் அப்படியே நிலைக்க வைப்பதற்காக கையெழுத்து

போட்டேன். அதனால்தான் ஒரு பைசா கூட அட்வான்ஸ் வேண்டாம் என்றேன். அசல் அந்த அக்ரிமெண்ட் சொல்லுமா? செக்ஷன் 2 காண்ட்ராக்ட் சட்டத்தின் படி கன்சிடரேஷன் இல்லாமல் எந்த உடன்படிக்கையும் செல்லாது. அதனால் நான் உன் படத்தில் நடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதே போல் அந்த காண்ட்ராக்ட் ஆதாரமாய் நீ அந்த ஆடியோ கம்பெனிகாரர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் கூட செல்லாது. நான் சொல்வது சரிதானே."

பாபு தலை குனிந்தபடியே இருந்தான். "வாழ்க்கையில் முன்னுக்கு வந்து விட்டவன் மீது எந்த விதமாக சேற்றை வாரிப் பூசலாம் என்ற பலவிதமாக திட்டம் போட்டுக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது இந்த காசெட் மார்க்கெட்டிற்கு வந்துவிட்டால் எத்தனையோ வதந்திகள் வெளியே வரும். ஏதாவது லாபம் இல்லாமல் சிரஞ்சீவி கையெழுத்து போட்டிருப்பானா என்று சிலரும், சிரஞ்சீவி இவ்வளவு சுலபமாக எப்படி ஏமாந்து போனான் என்று சிலரும் பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள். வெறும் அபிமானத்தினாலும், நம்பிக்கையினாலும் இப்படி ஊக்கமளித்தான் என்றால் யாருமே நம்பமாட்டார்கள். ஏனென்றால் நம் மக்களில் நிறைய பேருக்கு நெகடிவ் திங்கிங் அதிகம்" என்று நிறுத்திவிட்டு மேலும் சொன்னான்.

"இப்பொழுது கூட அந்த அக்ரிமெண்ட் செல்லாது என்று கோர்ட்டுக்குப் போக என்னால் முடியும். ஆனால் சீட்டிங் கேஸில் உன்னை அரெஸ்ட் செய்வார்களே. என்ன செய்யலாம்."

தன்னையே யோசனை கேட்டதும் அந்த அபிமானத்திற்கு பாபுவின் கண்களில் கண்ணீர் தளும்பியது. அவன்



37809
547672

இதையெல்லாம் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. இளமையின் உற்சாகத்தில் மலையுச்சியில் ஏறிவிடலாம் என்று முயன்று அங்கிருந்து நழுவிக் கீழே விழுந்து விட்டவனைப் போல் இருந்தது. அவனுக்கு.

ஒரு முடிவுக்கு வந்தவன் போல் செக் புத்தகத்தை எடுத்தான். ஏழு லட்சத்திற்கு செக் எழுதினான். 'நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு' என்று அதில் எழுதி சிரஞ்சீவியிடம் கொடுத்தான்.

"என்ன இது?"

"சக மனிதன் மீது இருக்கும் நம்பிக்கையை எப்படி கேஷ் செய்து கொள்ளலாம் என்று இவ்வளவு நாளாக யோசித்துக் கொண்டிருந்தேன். அதைக் காட்டிலும் உயர்வானது ஒன்று இருக்கு என்று புரிந்துகொண்டு விட்டேன். நான் செய்த காரியத்திற்கு உங்களைப் போன்ற உயர்ந்த நிலையில் இருக்கிறவர் யாராக இருந்தாலும் என்னை சும்மா விட்டிருக்க மாட்டார்கள். நான் என் சுயநலத்திற்காக செய்தது உங்களுக்கு மனதளவில் எவ்வளவு கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன். என்னிடம் உள்ள பணத்தை எல்லாம் தானமாக கொடுத்து விடுகிறேன். இனிமேல் இப்படிப்பட்ட மோசடிகளை செய்யமாட்டேன் என்று உத்திரவாதம் அளிக்கிறேன். ஆனால் பணத்தை மிகச் சுலபமாக சம்பாதித்த ஆர்வத்தில் மனைவியோடு சேர்ந்து சுவிட்சர்லாந்திற்குப் போனேன். அந்த லட்சம் மட்டும் திருப்பித் தர முடியவில்லை. மன்னியுங்கள்."

"அதை என் சார்பில் உங்கள் திருமணப் பரிசாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்றான் சிரஞ்சீவி. அதற்குப் பிறகு பாபு கொடுத்த அறுநூறு ரூபாய்க்கான செக்கை

அவனிடமே திருப்பித் தந்து விட்டு "இனி ஒரு போதும் இதுபோல் யாராவது கேட்டதுமே செக்கைத் தந்துவிடாதே" என்றான்.

பாபு வியப்புடன் "அப்போ பம்பாய் வங்கியில் என்னுடைய கடன்?" என்றான்.

சிரஞ்சீவி சிரித்துவிட்டு "அது சும்மா நான் சொன்ன கதை. மனிதனை மனிதன் எவ்வளவு சுலபமாக ஏமாற்ற முடியும் என்பதை நிரூபிப்பதற்காக" என்று சொன்னான்.

திடீரென்று மனதில் இருந்த வருத்தங்களை எல்லாம் யாரோ கையால் துடைத் தெறிந்து விட்டாற் போல் மனம் இலேசாகிவிட்டது. "தாங்க்ஸ்" என்றான். அதை விட வேறு என்ன சொல்வது என்று தெரிய வில்லை.

"இனி இந்த விஷயத்தை மறந்துவிடு. இவர் யாரென்று தெரியுமா? பிரபல டைரக்டர் விஸ்வநாதன்."

பாபு அவருக்கு வணக்கம் தெரிவித்தான். "உங்க சினிமா பேனர்களை, பத்திரிகையில் வரும் விளம் பரங்களை பார்த்திருக்கிறேன். ரொம்ப வித்தியாசமாக, ஆர்வத்தைத் தூண்டும் விதமாக இருக்கும்" என்றான்.

"சிரஞ்சீவி எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டார்" என்றார் விஸ்வநாதன். "உன் புத்தி சாதுரியத்தைப் பயன்படுத்தி எனக்கு ஒரு யோசனை சொல்லு" என்றார்.

பாபு தயக்கத்துடன் "உங்களுக்குச் சொல்லக் கூடிய அளவுக்கு நான் பெரியவன் இல்லை சார்" என்றான்.

"அரை மணியில் எட்டு லட்சங்களைச் சம்பாதித்து இருக்கிறாய். உனக்கு சாமர்த்தியம் இல்லை என்றால் என்னால் நம்பமுடியாது" என்றார் விஸ்வநாத்.



சிரஞ்சீவி இடையில் புகுந்து "இதில் யாரையும் ஏமாற்ற வேண்டியதில்லை. அவருடைய சமீபத்திய படம் சரியாக ஓடவில்லை. சினிமா மட்டும் ரொம்ப நன்றாக இருக்கிறது. தியேட்டருக்கு மக்களை வரவழைக்கும் வழி என்ன? அதுதான் பிரச்னை" என்றான்.

பாபு யோசனையில் ஆழ்ந்தான். அந்தக் காலத்தில் அரசவையில் கவிதையின் ஒருபகுதியைத் தந்துவிட்டு மற்றதை முடிக்கச் சொல்லி பரீட்சை வைப்பார்களாம். இப்பொழுது தன் திறமையை நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்றால் நிமிடத்தில் ஏதாவது ஒரு திட்டத்தை யோசித்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இவர் களுடைய பார்வையில் தான் ஒரு ஏமாற்றுக் காரனாய் எஞ்சி நின்று விடுவான்.

ஒரு நிமிடம் யோசித்துவிட்டு "தினந்தோறும் ஒரு காட்சியை இலவசமாக காட்டினால் அப்படிப் பார்த்தவங்கள் வெளியே போய் சினிமாவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லுவார்கள்" என்றான், தன் யோசனை எப்படி இருக்கிறதென்பது போல் அவர் களுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"இதில் ஒரு ரிஸ்க் இருக்கிறது. மக்களின் மனநிலை எப்படி இருக்கும் என்றால் ஒருக்கால் சினிமா நன்றாக இருக்கிறது என்றாலும் மறுநாள் இலவசமாக எப்படியும் போடுவார்களே அப்பொழுது போய் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொள்வார்கள். அந்த ஒரு காட்சிக்கு மட்டும் விழுந்தடித்துக் கொண்டு கூட்டம் வந்து விடும். யாரும் பணம் கொடுத்து பார்க்க மாட்டார்கள். அதோடு இலவசமாக காட்டப்படும் சினிமா என்ற தாழ்வான கருத்து கூட ஏற்பட்டு விடலாம்.

"சினிமாக்களில் டி.வி. ஆர்டிஸ்டுகளை அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் போவதற்குக் காரணம் கூட அதுதான். எப்படியும் இலவசமாக டி.வியில் பார்க்கிறோம் இல்லையா. பணத்தைக் கொடுத்து கூட அவர்களையே என் பார்க்க வேண்டும் என்று நினைப்பார்கள். சினிமா ரொம்ப அற்புதமாக இருந்தால் தவிர இலவசமாக பார்த்தவங்க போய் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் அதைப்பற்றிச் சொல்லி காசு கொடுத்து சினிமாவுக்குப் போகும்படி செய்ய மாட்டார்கள். அதை விட நான் வேறொன்று யோசித் திருக்கிறேன்.

"ஒவ்வொரு காட்சிக்கும் நாலில் ஒரு பங்கு டிக்கெட்டுகளை இலவசமாகத் தருவோம். மொத்தம் டிக்கெட்டுகள் ஐநூறு என்றால் முதலில் வந்த நூற்று இருபத்தி ஐந்து பேர் ஃப்ரீயாக சினிமா பார்க்கலாம். க்யூவில் நிற்கும் மற்றவர்கள் எப்படியும் கௌண்ட்ர் வரைக்கும் வந்து திரும்பிப் போய் விடமாட்டார்கள். அதோடு நாம்ப காட்சியைக் கொஞ்சம் தாமதமாகத் தொடங்குவோம். மற்ற தியேட்டர்களில் எல்லாம் அதற்குள் கௌண்டரை மூடியிருப்பார்கள். சாதாரண மாய் சினிமாவுக்குப் புறப்பட்டுவிட்டவர்கள் பார்க்காமல் திரும்பிப் போய் விடமாட்டார்கள்." விஸ்வநாதன் ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"ஆனால் இதில் ஒரு ரிஸ்க் இருக்கிறது. இலவச டிக்கெட்டுகள் முடிந்து சாதாரண டிக்கெட்டுக்களை விற்கத் தொடங்கியதுமே 'இதில் ஏதோ மோசடி இருக்கிறது. இலவச டிக்கெட்டுகளை சொன்னபடி 25% தரவில்லை என்று ரௌடிக்கள் ரகளை செய்யக் கூடிய ஆபத்து கூட இருக்கிறது. அதனால் இந்த யோசனையை விட்டுவிட்டேன்."



இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்த பொழுதே பாபு யோசித்துக்கொண்டிருந்தான். அவன் மனதில் ஒரு யோசனை பளிச்சிட்டது. "நான் ஒரு யோசனை சொல்கிறேன் சார். இது மட்டும் பலித்தால் உங்க சினிமா ஒரு வருஷத்திற்கு ஓடும்" என்றான்.

சிரஞ்சீவி முறுவலுடன் அவனைப் பார்த்தான். "உங்க சினிமாவுக்கு வரும் ஒவ்வொரு பார்வையாளருக்கும் மூன்று கூப்பன்களை இலவசமாக தருவோம். அவற்றின் விலை உங்க சினிமா டிக்கெட்டின் விலையில் பாதி யிருக்கும். அந்த மூன்று டிக்கெட்டுகளையும் விற்று பார்வையாளர் தம் பணத்தைத் தாம் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும். இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் சினிமாவை இலவசமாக பார்த்தாற்போல் ஆகிவிடும் என்றான் பாபு. "அது மட்டுமே இல்லை. இன்னொரு மூன்று ரூபாய் லாபம் கூட வரும் அந்த சினிமாவைப் பார்த்ததில்."

"புதிதாக வந்த இயக்குனர் முதல் படத்திலேயே தனக்குத் தெரிந்ததை எல்லாம் புகுத்தி பார்வையாளனை குழப்பிவிட்டது போல் நீ சொன்னது எதுவும் எனக்குப் புரியவில்லை" என்றார் விஸ்வநாத்.

சிரஞ்சீவி இருவரையும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாபு சொன்னான். "உதாரணமாய் உங்க சினிமா வைப் பார்க்க வந்த ரசிகன் ஆறு ரூபாய்க்கு டிக்கெட்டை வாங்கினான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதோடு மூன்று ரூபாய் கூப்பன்களை மூன்று தருவோம். அந்த ரசிகன் அந்த மூன்று கூப்பன்களை மூன்று பேருக்கு விற்றுக் கொள்ளலாம். அவனுக்கு மொத்தம் ஒன்பது

ரூபாய் கிடைக்கும். சினிமாவை ஃப்ரீயாக பார்த்தாற் போலவும் இருக்கும். அதோடு மூன்று ரூபாய் லாபம் வேறு."

"அந்த மூன்று கூப்பன்களை அவங்க என்ன பண்ணுவாங்க?" விஸ்வநாத் கேட்டார்.

"அந்த கூப்பன்களுடன் நம்ப சினிமாவைப் பார்க்க வருவாங்க. அந்தக் கூப்பனைத் தந்து மேலும் மூன்று ரூபாய் கொடுத்தால் போதும். நாம் சினிமாவைக் காட்டுவோம். அது மட்டுமே இல்லை. இன்னொரு மூன்று கூப்பன்களையும் தந்து அனுப்புவோம். அவற்றை விற்றுக் கொண்டால் அந்த இரண்டாவது ரசிகன் கூட இலவசமாக சினிமா பார்த்தாற்போல் ஆகும். மேலும் மூன்று ரூபாய்கள் லாபமாக மிஞ்சும்" என்று முடித்தான். அவ்வறையில் ஆழ்ந்த நிசப்தம் சூழ்ந்து கொண்டது.

"மைகாட்! என்றார் விஸ்வநாத் ஆழமாய் மூச்சு விட்டுக் கொண்டே.


தான் சொன்னது இன்னும் புரியவில்லையோ என்றெண்ணிக் கொண்டு பாபு மறுபடியும் விவரித்தான்.

"இதனால் நமக்கென்ன லாபம்?"

சிரஞ்சீவி இடைபுகுந்து. "பாபு சொன்னது சரியாக நடந்தால் சினிமா ஒரு வருடம் வரை ஓடும். அப்பொழுது கூட நாம் வலுக்கட்டாயமாக தியேட்டரை விட்டு எடுத்தாலே ஒழிய" என்றான்.

"ஆமாம் சார்" என்றான் பாபு. உடனுக்குடன் ஒரு சார்ட்டை வரைந்து காட்டினான். அதில் இவ்வாறு இருந்தது





மொத்தம் பதிமூன்று பேர் பார்த்தால் நமக்கு நாற்பத்தி இரண்டு ரூபாய் வரும். பாதி விலைக்கு சினிமா காட்டினாற் போல் ஆகும். ஸ்லாப் சிஸ்டம் என்பதால் நமக்கு பெரிய பிரச்னை எதுவும் இருக்காது— தியேட்டரின் வாடகை வந்தால் போதும். இனி பப்ளிசிடி என்கிறீங்களா. அதை மக்களே செய்து விடுவார்கள். கூப்பன்களை கையில் வைத்துக் கொண்டு அவங்களே தியேட்டருக்கு முன்னால் நின்றுகிட்டு இருப்பாங்க."

"மூன்று ரூபாய்க்காக அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்வார்களா என்றுதான் சந்தேகமாக இருக்கு".

"நம் நாட்டில் மக்களுக்கு இதை விட எண்டர் டெயின்மெண்ட் சாதனம் வேறு இல்லை. படத் தாயரிப்பாளர் ஒருவர் தினமும் ஒரு காட்சியை ஃப்ரீயாக போடுவோம் என்று சொன்னதுமே தியேட்டரில் சமாளிக்க முடியாத அளவுக்கு கூட்டம் வந்து விட்டது. அப்படியிருக்கும் போது நாம் சினிமாவோடு மூன்று ரூபாய்வரும் வழியைக் கூடச் சொல்கிறோம் என்றால் மக்கள் விழுந்தடித்துக் கொண்டு வருவார்கள். சார்ட்டைப் பாருங்கள். முதல் நாள் ஒருத்தன் வாங்கினால் மூன்றாவது நாள் ஒன்பது பேரிடம் கூப்பன்கள் இருக்கும். இதில் குறைந்தது பாதி பேராவது வருவாங்கன்னு வைத்துக்கொண்டாலும், பத்தாவது நாள் ஆனதுமே தியேட்டரில் இடம் இருக்காது."

"சினிமா படு மோசமாக இருந்து மூன்று ரூபாய் தட்சணை தருவதாகச் சொன்னாலும் பார்க்கச் சகிக்காமல் இருந்தால் தவிர" என்று சொல்லிவிட்டு சிரஞ்சீவி சிரித்தான்.

விஸ்வநாதன் இன்னும் மனதிற்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார், எந்த விதமாய் இதை மாஸ்டர் பிளானாகத் திருத்தி அமைக்கலாம் என்று.

சிரஞ்சீவி கைக் கடியாரத்தைப் பார்த்துக்கொண்டு "எனக்கு நேரமாகிவிட்டது" என்று எழுந்துகொண்டான். பாபுவும் எழுந்துகொண்டு விடைபெற்றுக் கொள்வது போல் கைகளை ஜோடித்தான்.

சிரஞ்சீவி அவன் தோளில் தட்டிவிட்டு "உண்மையில் உன் புத்திசாதுரியம் அபாரம். ஆனால் அதை வைத்துக் கொண்டு நம்பியவர்களை ஏமாற்றாதே" என்றான் அறிவுரையை வழங்குவது போல்.

"நம்பினவங்களை மட்டுமே இல்லை. யாரையுமே ஏமாற்றமாட்டேன். அப்படி ஏமாற்றி சம்பாதித்த பணத்தில் ஒரு ரூபாய் கூட இல்லை இப்பொழுது. இந்த நிமிடத்தி லிருந்து யாரையும் ஏமாற்ற மாட்டேன் என்று என் மனைவி மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்" என்றான். அவன் குரலில் நேர்மை வெளிப்பட்டது.

அவனுக்கு அந்த நிமிடத்தில் தன் வாக்குறுதியைக் கெடுப்பதற்காக ஒரு ஆபத்து மறைந்திருக்கிறது என்பது தெரியாது.

* * *



"நிஜமாக அப்படியா செய்தீங்க?" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி வியப்புடன்.

பாபு சிரித்து விட்டு "ஏன்? இதில் வியப்பு என்ன இருக்கு?" என்று கேட்டான்.

"அவ்வளவு லட்சங்களையும் கொடுத்து விட்டீங் களா?"

"இந்த பிசினெஸில் அப்படித்தான். வந்தால் இரவோடு இரவாக லட்சங்கள் வரும். போனால் ஜெயிலில் உட்கார வேண்டிவரும். ஹர்ஷத் மெஹ தாவைப் போல்."

"நாம் ஒண்ணும் அப்படிப்பட்ட மோசடி எதுவும் செய்யவில்லையே?"

"அந்த ஒப்பந்தம் செல்லாது" என்றான் பாபு. "அந்த விஷயத்தை நான் மறந்து போய் விட்டேன். மோசடி செய்பவன் ஏதோ ஒரு இடத்தில் தவறு செய்து விடுவான். அதைத்தான் நானும் செய்துவிட்டேன்."

"திரும்பவும் அதே வார்த்தையைச் சொல்றீங்க. நீங்க யாரை என்ன மோசடி செய்தீங்க பாபு?"

"இனி அந்தப் பேச்சை விடு. நடந்ததென்னவோ நடந்து விட்டது. இனி மேல் எந்த வேலையாவது தொடங்குவதற்கு முன் முழுவதுமாக அதைப் பற்றித் தெரிந்து கொள்ளணும். இந்த நிகழ்ச்சியின் மூலமாக அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.

ஸ்ரீ லக்ஷ்மி அவனை யோசனையுடன் பார்த்தாள். உண்மையான காரணம் அது மட்டுமே இருக்காது. சிரஞ்சீவின் வார்த்தைகளில் எங்கேயாவது உண்மை வெளிப்பட்டிருக்கும். 'உன் மீது இருந்த அன்பால் நான்

கையெழுத்து போட்டதற்கு நீ என்னை இப்படி ஏமாற்றலாமா?' என்ற வார்த்தைகள் இதயத்தின் ஆழத்தைத் தொட்டுவிட்டிருக்கும். அதனால்தான் இந்த முடிவுக்கு வந்திருப்பான்.

அவளும் நிம்மதியாக "போகட்டும் விடுங்க. நடந்தது நடந்து விட்டது. அந்த காண்ட்ராக்ட் புண்ணியத்தில் சுவிட்சர்லாந்தையும், ஸ்ரீ தேவியையும் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைத்தது" என்றாள்.

பாபுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "இனி உன்னை யாராலும் திருத்த முடியாது. உன்னை என்று இல்லை. உங்கள் பெண் இனத்தையே யாராலுமே திருத்தி விட முடியாது. ஸ்ரீ தேவியையும், சுவிட்சர்லாந்தையும் ஒரே லெவலில் எண்ணிச் சந்தோஷப்படுவாங்களா யாராவது?" என்றான் பற்களைக் கடித்துக் கொண்டே கோபமாக.

ஸ்ரீ லக்ஷ்மி சிரித்துக் கொண்டே "போகட்டும். தவறாக பேசி விட்டேன். மன்னித்துவிடுங்கள்" என்றாள் கன்னத்தில் போட்டுக் கொள்வது போல் நடித்துக் கொண்டே. அதற்குள் வாசலில் சந்தடி கேட்டது. இருவரும் திரும்பி அந்த பக்கம் பார்த்தார்கள்.

கதவிற்கருகில் போலீஸ் கான்ஸ்டேபிள் நின்று கொண்டிருந்தான்.

★ ★ ★

"உன்னை அரெஸ்ட் செய்து கூட்டிட்டு வந்திருக் கலாம். ஆனால் இளைஞன் என்றும், இப்பொழுதுதான் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறாய் என்றும் இரக்கப்பட்டு விட்டு விட்டேன்" என்றார் இன்ஸ்பெக்டர் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே..

"நான் என்ன குற்றம் செய்தேன்?"

"போலியாய் ஒரு காண்ட்ராக்டை தயாரித்து ஆதித்யா ஆடியோக்காரர்களை ஏமாற்றியிருக்கிறாய்."

பாபு திகைத்து விட்டான். போலியான காண்ட் ராக்டா? அது உண்மையான காண்ட்ராக்ட் தான்" என்றான். அவன் மனம் ஏதோ தீங்கை எடை போட்டது. அவன் பயம் உண்மையாகிவிட்டது.

இன்ஸ்பெக்டர் சிரித்தார். "அடுத்த மாதம் நீ எடுக்கப் போகும் படத்தில் நடிக்கப் போவதாக சிரஞ்சீவி எழுதித் தந்த காண்ட்ராக்டின் நகலை ஆதித்யா ஆடியோகாரர்கள் என்னிடம் தந்தாங்க."

"இல்லை." கத்தினான் பாபு. "அப்படிப்பட்ட காண்ட்ராக்ட் எதுவுமே இல்லை."

"என்று நீ சொல்கிறாய். அதெல்லாம் கோர்ட்டில் முடிவு செய்யப்படும். அது வரையில் நீ லாக்கப்பில் இருந்தாகணும்."

பாபு கோபத்தை அடக்கிக் கொண்டான். "2025ல் சினிமா எடுப்பதைப் பற்றி ஆதித்யா ஆடியோக் காரங் களுக்கு நன்றாகத் தெரியும். சினிமா எப்பொழுது ரிலீஸ் ஆனால் என்ன? முதலில் பணம் வந்து விடும் இல்லையா என்று அவர் தெளிவாக என்னிடம் சொன்னார்."

"அதெல்லாம் எனக்கும் தெரியும். அசல் விஷயத்தைச் சொல்கிறேன். கேட்டுக்கொள். அந்த போலி காண்ட்ராக்ட்டை உருவாக்கச் சொன்னதே நான்தான். 2025ல் சினிமா எடுப்பதைப் பற்றி உன்மீது குற்றமில்லை

என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்றால் அது போலி காண்ட்ராக்ட் இல்லை என்று முதலில் கோர்ட் நம்ப வேண்டும். அதாவது சிரஞ்சீவி கோர்ட்டுக்கு வந்து அடுத்த மாதம் நீ எடுக்கப் போகும் படத்தில் நடிக்கப் போவதாகவும், அது உண்மையான காண்ட்ராக்ட்தான் என்றும் சொல்ல வேண்டும்."

"சிரஞ்சீவிசார் கோர்ட்டுக்கு வரமாட்டார். என் உடம்பில் உயிருள்ளவரை அது நடக்காது." உரத்த குரலில் சொன்னான் பாபு. அவன் என்றுமே இப்படிப் பட்ட ஆதரவற்ற நிலைமையை அநுபவித்தது இல்லை. முன்பு இதே போலீஸ் ஸ்டேஷனில் இதே இன்ஸ்பெக்டர் அடித்த பொழுது கூட.

இன்ஸ்பெக்டர் அவன் நிலைமையை பொருட் படுத்தாதவராய் சொன்னார். "சிரஞ்சீவி கோர்ட்டுக்கு வராமல் போனால் உன் மீது இருக்கும் கேஸை யாராலும் அடித்து விட முடியாது. எப்பொழுதோ 2025ல் எடுக்கப் போகும் சினிமாவுக்காக ஆதித்யா கம்பெனிகாரர்கள் இரண்டு லட்சம் தந்ததாகச் சொன்னால் யாருமே நம்ப மாட்டார்கள். அவர்களுடைய வாதம்தான் பலமாக இருக்கும். அடுத்த மாதம் எடுக்கப் போகும் சினிமா என்று மோசடி செய்து நீ இரண்டு லட்சம் வாங்கிக் கொண்டாய் என்று தண்டனை கொடுப்பார்கள்."

"இது– இதெல்லாம் எதுக்கு?"

"ஒரு பைசாவுக்கும் பிரயோஜனம் இல்லாத மியூசிக் டைரக்டரை வைத்து படு மோசமான பாட்டுகளை ரிக்கார்ட் செய்து தந்ததற்கு."

"அதை வாங்கப் போவது மக்கள். இதில் யாருக்கு என்ன நஷ்டம்? நான் செய்ததை சிரஞ்சீவி சாரே என்னை மன்னித்துவிட்டார்."



"சேட் அம்பாலால் விஷயத்தில் நீ என்னை ஏமாற்றினாய். அதற்குப் பழி வாங்குவதற்காக பல நாட்களாக காத்திட்டிருந்தேன். உன்னை இவ்வளவு நேரமாக அரெஸ்ட் செய்து செம்மையாய் உதைக்காமல் இருந்ததற்குக் காரணம் ஒன்று இருக்கிறது."

"என்ன?"

"ஆதித்யா கம்பெனியிடமிருந்து வாங்கிக் கொண்ட இரண்டு லட்சம், அவருடைய இன்வெஸ்ட்மெண்ட் ஐந்து லட்சம், எனக்கு ஒரு லட்சம்... ஆக மொத்தம் எட்டு லட்சங்களைத் தந்தால் உன்னை விட்டுவிடுகிறேன்."

பாபுவின் தலையில் இடி விழுந்தாற்போல் இருந்தது. "என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. அசல் பணமே இல்லை."

"ஆமாம். எப்படி இருக்கும்? மனைவியை அழைத்துக் கொண்டு சுவிட்சர்லாந்திற்குப் போனாய்?" ஏளனமாய் சொன்னார்.

"இருந்த பணத்தையெல்லாம் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக கொடுத்து விட்டேன். இனிமேல் மோசடி செய்ய மாட்டேன் என்று என் மனைவியின் மீது ஆணை விட்டுச் சொல்லி விட்டேன்."

இன்ஸ்பெக்டர் எழுந்துகொண்டு அருகில் வந்தார். "ஒரு முறை குற்றவாளியாகி விட்டவன் எப்பொழுதுமே குற்றவாளிதான். செய்த பாவத்தைச் செய்துவிட்டு, அதற்கப்புறம் நல்லவனாகி விட்டேன் என்று சொன்னால் நடக்காது. யோசித்துப் பார்த்துக் கொள். பத்து நாள் டயம் தருகிறேன்."

பாபு எழுந்து வெளியே வந்தான்.

பத்து நாட்களில் எட்டு லட்சங்கள்! இல்லையானால் ஜெயில் தண்டனை... அரெஸ்ட்... லாக்கப்!

தன் மீது கேஸ் பலமாக இறுகிக்கொண்டு விட்டது என்று அவனுக்குத் தெரியும். என்ன செய்வது?

இனிமேல் மோசடி செய்யமாட்டேன் என்று சபதம் செய்தது நினைவுக்கு வந்தது.

"ஒருமுறை குற்றவாளியாகி விட்டவன் எப்பொழுதுமே குற்றவாளிதான்."

ஆமாம். இந்தப் பிரச்சையிலிருந்து விடுபட்டு மறு படியும் சமுதாயத்தில் கௌரவமாக வாழவேண்டும் என்றால் மறுபடியும் குற்றம் புரிய வேண்டும். இல்லா விட்டால் தன்மீது குற்றவாளி என்ற முத்திரை சாசுவதமாக பதிந்துவிடும்.

ஆனால்... ஆனால்,

பத்து நாட்களில் எட்டு லட்சங்கள்! எப்படி?

சட்ட ரீதியில் ஐந்து ஆண்டுகளில் அந்த காந்தி ஐம்பது லட்சங்களைச் சம்பாதித்தான். ஆனால் பத்து நாட்களில் எட்டு லட்சங்களை சம்பாதிக்க தன்னால் முடியுமா?

தன் மோவித்தனத்திற்கு இது பரிசோதனை.

★ ★ ★

# 8

"என் பெயர் பரமசிவம்" என்றான் அந்த ஆள். சில்க் சட்டை, விரல்களில் மோதிரங்கள், சுருட்டை முடி. முன்னோர்கள் சம்பாதித்த சொத்து நூறு ஏக்கர்கள் நிலம்... அசல் தஞ்சாவூர் ஜில்லா இளைஞனைப் போல் இருந்தான் அவன். கண்களில் முறுவல், முகத்தில் உற்சாகம் பளிச் சென்று தென்பட்டன.

"நீங்கள்!" என்றான் பாபு.

"விஸ்வநாத் சார் அனுப்பினார். உங்கள் திட்டத்தை நான் அமலாக்கி விட்டேன் நேற்றிரவே."

பாபு வியப்போடு "எந்தத் திட்டம்? ஒரு டிக்கெட் வாங்கினால் மேலும் மூன்று டிக்கெட் பாதி ரேட்டுக்கு அதுதானே?" என்று கேட்டான்.

"ஆமாம்."

பாபுவின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. இதுவரை தனக்குத் தெரிந்த யோசனைகள் எல்லாவற்றையும் தானே சுயமாக அமலாக்கிக் கொண்டிருந்தான். தன் திட்டத்தை மற்றவர்கள் அமலாக்குவது இதுதான் முதல் தடவை.

"ரிசல்ட்ஸ் எப்படி இருக்கு?" பரபரப்புடன் கேட்டான்.

"முந்தா நாள் முதல் தான் தொடங்கினோம். இன்னும் பலன் வெளிப்படவில்லை.

"என்னை மன்னியுங்கள். அந்தச் சமயத்தில் தோன்றிய யோசனையை சொல்லிவிட்டேன். கேட்பதற்கு நன்றாக இருக்கலாம். நடைமுறைக்கு வரும்போது எப்படி நடக்குமோ என்று ஊகித்துப் பார்க்கவில்லை. உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் அந்தத் தியேட்டருக்கு போய்ப் பார்க்கலாமா?"

"வாங்க. நானும் அதற்காகத்தான் வந்தேன்" என்றான் பரமசிவம்.

பாபு உள்ளே போய் ஸ்ரீ லக்ஷ்மியிடம் "இரவு நான் வரத் தாமதமாகும்" என்று சொன்னான்.

"கல்யாணம் ஆகி ஒரு வருஷம் கூட ஆகவில்லை. அதற்குள் இந்த மாதிரிப் பேச ஆரம்பித்து விட்டீர்களா?" என்றாள்.

"ச்ச... ச்ச... அதில்லை" என்று சினிமா டிக்கெட் திட்டத்தைப் பற்றிச் சொன்னான். "செகண்ட் ஷோ தொடங்கும் வரையில் இருக்கவேண்டியிருக்கலாம். அதனால்தான் தாமதமாகும் என்று சொன்னேன். ஒருக்கால் இந்தத் திட்டம் சரியாக பலன் தராமல் போனால் ஏற்கெனவே வசூல் சரியாக இல்லை என்கிற பொழுது இருக்கிற டிக்கெட்டுகளை பாதி விலைக்கு விற்கச் செய்ததற்கு இந்த பரமசிவம் தியேட்டருக்கு முன்னாடியே என்னை செம்மையாய் உதைக்கலாம். அதனால்தான் தாமதமாகும் என்று சொன்னேன்."

ஸ்ரீ லக்ஷ்மி யோசித்துக் கொண்டே "ஆமாம். உங்களை செம்மையாய் உதைக்கத்தான் சான்ஸ் அதிகமாக இருக்கு" என்றாள்.

"நிச்சயமாக அப்படித்தான் என்கிறாயா?" அவன் கவலையோடு கேட்டான்."



"எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது."

"அப்படி என்றால் போவதற்கு முன்னால் ஒரு தடவை" என்று பாதியில் நிறுத்திக் கொண்டான்.

ஸ்ரீ லக்ஷ்மி திடுக்கிட்டு "வெளியே அவரை உட்கார வைத்துவிட்டா?" என்றாள் மார்பின் மீது கையை வைத்துக்கொண்டே.

"படுத்துக்கொண்டு நிதானமாக பால் குடிப்பதைக் காட்டிலும் நின்றுகொண்டு அவசரம் அவசரமாய் தண்ணீர் குடிப்பது நல்லது என்று சீனாவில் ஒரு பழமொழி இருக்கிறது. இதில் இருக்கிற த்ரில் வேறு எதிலும் இருக்காதாம். அவசர அவசரமாக தண்ணீர் குடித்து விட்டுப் போய் விடுகிறேன் ப்ளீஸ்."

"ஆனால் வெளியே அவர்..."

அதற்குள் பாபு ஓரடி முன்னோக்கி வைத்தான். அவனை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று புரியவில்லை அவளுக்கு. அவனுக்கு மூட் வந்து விட்டால் கவச குண்டலங்களைக் கூட பொருட்படுத்தாத கர்ணன். அதற்கப்புறம் கும்பகர்ணன்.

அவள் ஓரடி பின்வாங்கி "ஒரு நல்ல காரியத்திற்காக போகும்போது இப்படிப்பட்ட புனிதமில்லாத காரியத்தை செய்யக் கூடாது. நீங்கள் இப்பொழுது போய்விட்டு இரவு சீக்கிரமாக வந்து விட்டால் நான் உங்களுக்கு ஜப்பானிஸ் ஸ்டைல் லவ் மேக்கிங் கற்றுத் தருகிறேன்" என்றாள்.

"ஜப்பானிஸ் ஸ்டைலா? அதென்னது?" என்றான் சந்தேகத்துடன்.

"இன்று காலையில் ஒரு புத்தகம் பார்த்தேன். அந்த ஸ்டைலில் கணவன் மனைவி கூடினால் அற்புதமான

புத்திசாலித்தனத்தோடு கூடிய மகன் பிறப்பானாம்" என்றாள்.

"எங்கே அந்தப் புத்தகம்?" ஆர்வத்துடன் கேட்டான்.

"அவரை வெளியே நிற்க வைத்துவிட்டு இப்பொழுது இந்தப் புத்தக ஆராய்ச்சி தேவைதானா?"

"என்னைச் சீக்கிரமாக வெளியே துரத்துவதற்காகத்தான் இந்த நாடகமாடுகிறாயோ என்று சந்தேகமாக இருக்கு."

இனி எவ்வளவு வாதாடினாலும் பிரயோஜனம் இல்லை என்று நினைத்து உள்ளே போய் புத்தகத்தை எடுத்து வந்து காண்பித்தாள். அவன் பரபரப்புடன் அதைப் பிரித்துப் பார்க்கப் போனான். அவள் அவனைத் தடுத்துவிட்டு "முதலில் முன்னுரையைப் படியுங்கள்" என்றாள் பதட்டத்துடன்.

"அவ்வளவு பதட்டப்படுவானேன்?"

"படியுங்கள் முதலில்."

அவன் முதல் பக்கத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். அதில் இவ்வாறு இருந்தது.

"ஜப்பான் தேவதை ஹியோ சின் மின்னின் பாதங்களின் மீது ஆணை. குழந்தைச் செல்வத்திற்காக தம்பதிகள் பின்பற்ற வேண்டிய முறைகள்.

பதினேழாம் நூற்றாண்டில் மங்கோலிய மன்னரான தங்கார்கான் தன் ஆஸ்தானத்து பண்டிதர்களைக் கொண்டு பல நூல்களைச் சோதிக்கச் செய்தார். ரகசிய காவியங்களில் புதையுண்டிருந்த இந்தச் சோதனைகளை வெளியே கொண்டு வந்து இளமையில் இருக்கும் கணவன்



மனைவியர்களை இந்த வழிகளை பின்பற்றச் செய்து நல்ல பலனை அடைந்தார்கள். நீங்களும் அந்த வழிகளை பின்பற்றி பயன் அடையுங்கள்.

பாபு பரபரப்புடன் அடுத்த பக்கத்தைப் புரட்டினான். அந்தப் பக்கத்தில் இன்டெக்ஸ் இருந்தது. எந்தெந்தப் பக்கங்களில் என்னென்ன இருக்கிறதோ தெரியப்படுத்தும் இன்டெக்ஸ் அது.

1. புத்திசாலியான மகன் பிறக்க வேண்டுமென்றால்–
2. மிக அழகான மகள் பிறக்க வேண்டுமென்றால்–
3. மகன் பெரியவன் ஆன பிறகு கோடிக் கணக்கில் சம்பாதிக்க வேண்டுமென்றால்–
4. கலைகள் மீது ஆர்வம் கொண்ட மகன் பிறக்க வேண்டுமென்றால்–
5. சரஸ்வதி போன்ற மகள் பிறக்க வேண்டுமானால்

இவ்விதமாக இருந்தது இன்டெக்ஸ்.

பாபு "மைகாட்!" என்றான் அந்த நூலைப் பார்த்து. "எங்கே கிடைத்தது இது?"

"நடைபாதைக் கடையில். போன ஞாயிறன்று வாங்கினேன்."

"பின்னே என்னிடம் சொல்லவேயில்லையே?"

"சனிக்கிழமைத் தவிர மற்ற நாளில் இதைப் படிக்கக் கூடாது என்று முதல் பக்கத்திலேயே எழுதி யிருக்கே. படிக்கவில்லையா?"

அவன் ஏதோ நினைவுக்கு வந்தது போல் "இன்றைக்கு சனிக்கிழமைதானே?" என்றான்.

"அதனால்தான் இதை இன்றைக்குப் பிரித்தேன்" என்றாள்.

பாபுவின் முகத்தில் புனிதமான உணர்ச்சி தோன்றியது. அந்தப் புத்தகத்தை ஜாக்கிரதையாக மேஜை மீது வைத்துவிட்டு "நான் சீக்கிரமாக வந்து விடுகிறேன். அதுவரையிலும் படிக்காதே" என்றான்.

"படிக்கமாட்டேன். இவ்வளவு நாட்களாய் கட்டுப்பாடாக இருந்தவளால் நீங்கள் வரும் வரையில் பொறுத்துக் கொள்ளவா முடியாது" என்றாள்.

அவன் வெளியே நடந்தான்.

அவள் புத்தகத்தை பக்தியுடன் நோக்கிவிட்டு அதை எடுத்துச் சென்று பூஜை மண்டபத்தில் வைத்தாள். கண்களை மூடிக்கொண்டே கடவுளை ஒரு நிமிடம் தியானித்துவிட்டு கணவனுக்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

★ ★ ★

"**நூ**று இரவுகள்"

பெரிய பேனர். கீழே மட்டும் மக்கள் இல்லை.

பரமசிவம் சொன்னான். "சினிமா ரிலீஸ் ஆகி ஒரு வாரம் ஆகிறது. முதல் நாளே ஃப்ளாப் என்றார்கள். இரண்டாவது நாளிலிருந்தே மக்கள் தியேட்டருக்கு வரவில்லை. முதல் வாரம் முடிந்ததுமே எடுத்துவிடலாம் என்று நினைத்தோம். ஆனால் அதற்குள் விஸ்வநாத் சார் இந்தத் திட்டத்தைச் சொன்னார். ரிஸ்க் எடுத்துக் கொண்டு இந்த வாரம் கூட தியேட்டர் வாடகையைக் கட்டினேன்."



இனி பொறுப்பு உங்களுடையதுதான் என்பது போல் சொன்னான்.

மேலுக்கு உறுதியாக இருப்பது போல் தென் பட்டாலும் பாபுவின் இதயத்தில் ரயில் எஞ்ஜின் ஓடிக் கொண்டிருந்தது.

"முதல் நாள் மக்கள் விழுந்தடித்துக் கொண்டு வந்தார்கள். பிளாக்கில் டிக்கெட் நூறு ரூபாய்க்குக் கூட போயிற்று. ஆனால் எங்கள் டைரக்டர் என்ன எடுத்தார் என்று படத்தைப் பார்த்தப் பிறகுதான் புரிந்தது. ஒரு உழவனின் நிலத்தில் மழை பெய்ய வில்லை. நூறு இரவுகளும் வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பான்."

"வேறு எதுவும் செய்யமாட்டானா?" பாபு வியப்புடன் கேட்டான்.

"ஒன்றுமே செய்யமாட்டான். அப்படியே பார்த்துக் கொண்டிருப்பான். அதற்குள் மழைக்காலம் முடிந்து விடும். மனித வாழ்க்கையின் வெறுமையை சிம்பாலிக் ஆக காட்டினான் என்று எங்களுக்குப் புரியாத மொழியில் ஏதோ சொன்னார். இந்த வருடம் ஸ்வரண கமலம் அவார்ட் எங்களுக்குத்தானாம். ஒருக்கால் அந்த அவார்டு கிடைத்தாலும் டில்லிக்குப் போவதற்கு ரயில் செலவுக்குக்கூட எங்களிடம் பணம் இல்லை" என்றான் பரமசிவம்.

தியேட்டருக்கு அருகில் மக்கள் ஆங்காங்கே தென்பட்டார்கள். சூழ்நிலை ஏமாற்றம் தருவதாக இருந்தது. காட்சி தொடங்குவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன.

இரண்டு நிமிடங்கள் கழிந்து விட்டன. காட்சிக்கு நேரமாகி விட்டது. பெல் அடிக்கப்படவில்லை.

"தியேட்டரில் ஒருத்தர் கூட இருந்திருக்க மாட்டார்கள். காலியாக இருக்கும் தியேட்டரில் காட்சியை ஏன் காட்டணும் என்று நினைத்துக் கொண்டிருப்பாங்க" என்றான் பரமசிவம்.

இருவரும் கேட் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். மக்கள் ஒவ்வொருத்தராக வந்து கொண்டிருந் தார்கள்.

"பெங்களூரிலேயோ, பாம்பேலேயோ ஒரு தடவை இதே போல்தான் நடந்ததாம். இரண்டு தியேட்டர்களில் ஒரே சினிமா ரிலீஸ் ஆச்சு. ஒரு தியேட்டரில் நாலு பேர் தான் இருந்தார்கள். அப்பொழுது அந்தத் தியேட்டர் காரங்க அந்த நாலு பேரையும் ஒரு டாக்ஸியில் இரண்டாவது தியேட்டருக்கு அனுப்பிவைத்தாங்களாம்." பாபு சொன்னான்.

மனதில் வருத்தமாக இருந்தது. அவனுக்கு அனாவசியமாக தன்னால் இந்த பரமசிவத்திற்கு ஒரு வார தியேட்டர் வாடகை தண்டம். காம்ப்ளிமெண்டரி டிக்கெட் களும் வேஸ்ட். பிரிண்டிங் செலவு, விளம்பரச் செலவு எல்லாமே வேஸ்ட்.

உள்ளே வந்து கொண்டிருந்த மக்கள் தியேட்ட ருக்குள் வராமல் வெளியிலேயே அப்படியும் இப்படியு மாக நடந்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து பாபுவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. "நேற்று முந்தா நாளும் சினிமா பார்த்து விட்டு சலுகை டிக்கெட்டுகளை விற்பதற்காக வந்திருப்பாங்களோ என்னவோ" என்றான்.

"எல்லோரும் விற்கிறவங்கதான். வாங்குகிறவங்க யாருமே இல்லை." பரம சிவம் கவலையோடு சொன்னான்.



மேலும் பத்து நிமிடங்கள் கழிந்தன. கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக கூடியது.

"இதென்ன? இன்னும் புக்கிங் திறக்கவில்லையே?" உள்ளே வந்து கொண்டிருந்த மக்களைப் பார்த்துக் கொண்டே பாபு சொன்னான்.

"போய்ப் பார்க்கலாம் வாங்க."

இருவரும் தியேட்டரை நோக்கி நடந்தார்கள். உள்ளேயிருந்து மைக் பாக்ஸில் பேச்சுக்கள் கேட்டன. இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். படம் எப்பொழுதோ தொடங்கப்பட்டு விட்டது.

அவர்கள் கொஞ்சம் முன்னோக்கிப் போனதுமே தென்பட்டது.

"ஹவுஸ் ஃபுல்" என்ற போர்ட்.

அவர்களால் இன்னும் நம்ப முடியவில்லை. காட்சி எப்பொழுதோ, தொடங்கப்பட்டு விட்டது. கும்பல் கும்பலாக வந்து கொண்டிருந்தவர்கள் அடுத்த காட்சிக்காக வந்தவர்கள் என்று புரிந்தது.

நம்ப மாட்டாதவர்களாய் அவர்கள் உள்ளே போனார்கள். மலர்ந்த முகத்துடன் மேனேஜர் எதிர்ப் பட்டார்.

"என்ன? ஹவுஸ் ஃபுல்லா?"

"ஆமாம். அதனால்தான் பதினைந்து நிமிடங்களுக்கு முன்பாகவே தொடங்கினோம்.

"எல்லாமே பாதிரேட் டிக்கெட்டுக்கள் தானா?" பாபு கேட்டான்.

"ஆமாம் சார்."

இருவரும் தியேட்டருக்குள் நுழைந்தார்கள். ஒரு படத் தயாரிப்பாளருக்கு அதை விட உற்சாகம் தரக்கூடிய காட்சி வேறு இருக்க முடியாது. ஒரு சீட் கூட காலி இல்லாத விதமாய் ஜனங்கள்.

ஒரு மணி நேரம் உட்கார்ந்து விட்டு இடை வேளையில் வெளியே வந்தார்கள். வெளியே ஒரு அற்புதமான காட்சி. காம்பௌண்டில் மக்கள் எள் விழ இடமில்லாத படிக்கு நின்று கொண்டிருந்தார்கள்.

இந்த சினிமாவை இலவசமாய் பார்ப்பதோடு அதில் பாதி டிக்கெட் செலவு லாபம்.

கௌண்டரைத் திறக்காமலேயே அடுத்த காட்சிக்கு காம்ப்ளிமெண்டரி டிக்கெட்டுகளை விற்றுக் கொண்டிருந் தார்கள் சிலர். அதை வாங்கி மேலும் மூன்று ரூபாய்களைப் போட்டு டிக்கெட் வாங்கினால் ஆறு ரூபாய் வகுப்பில் நுழையலாம். மேலும் மூன்று காம்ப்ளிமெண்டரி டிக்கெட்டுகள் இலவசம்.

மனைவி, குழந்தைகளுடன் வீட்டில் இருக்கும் கிழவர்கள், பாட்டிமார்களையும் அழைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

பாபுவும், பரமசிவமும் பால்கனியில் நின்று கொண்டு அந்த மக்களையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். ரொம்ப நாளுக்குப் பிறகு பாபு மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைந்தான். வெற்றியைக் காட்டிலும் திருப்திதரக் கூடியது வேறு என்ன இருக்க முடியும்?

மேனேஜரும் அங்கே வந்து சேர்ந்தார். கீழே இருந்த மக்களைப் பார்த்துவிட்டு "நாளையிலிருந்து இன்னும் கஷ்டமாகிவிடும். வர்றவங்க அத்தனை பேருக்கும் இடம் கிடைப்பது கஷ்டம். காம்ப்ளிமெண்டரி டிக்கெட்டின் மீது தேதியையும் போடணும்" என்றார்.



அது ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை என்று நினைத்துக்கொண்டான் பாபு. முதலில் ஒரு யோசனை என்று வந்துவிட்டால் பிறகு அதற்குத் தேவையான சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

"இந்தக் கணக்கில் பார்த்தால் நூறு நாட்கள் கியாரண்டிசார்." மேனேஜர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நான் செய்தது என்ன இருக்கு. எல்லாம் இவருடைய யோசனைதான்" என்றான் பரமசிவம்.

பாபு சிரித்துவிட்டு "நான் மட்டும் பெரிதாக என்ன செய்து விட்டேன்? இதெல்லாம் இப்படி நடக்கும் என்று யாராவது சொல்லியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன். சமீபத்தில் ஒரு சினிமாவுக்கு ஒரு காட்சி இலவசமாக காட்டப்படும் என்றதுமே வந்த கூட்டத்தை சமாளிக்க இந்த யோசனை வந்தது. ஒரு ரூபாய் இலவசமாக வருகிறது என்றால் விழுந்தடித்துக் கொண்டு ஓடும் மக்கள் கூட்டம் இருக்கும் வரையில் போலி பைனான்ஸ் கம்பெனிகள், போகஸ் வியாபாரத் திட்டங்கள் இருக்கத்தான் செய்யும். இது அதில் ஒரு விதம்" என்றான்.

காரில் அவனை வீட்டு அருகில் இறக்கி விட்ட பரமசிவம் "உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். பொருளாதார நிலையில் என்னை உயர்த்தி விட்டீங்க" என்றான்.

பாபுவுக்கு உடனே இன்ஸ்பெக்டரின் ஞாபகம்தான் வந்தது. அவர் வைத்திருந்த கெடுவும் நினைவுக்கு வந்தது. ஆனால் அவ்வளவு பணம்?

இவ்வளவு சின்ன உதவிக்கு அவ்வளவு பணம் கேட்டால் நன்றாக இருக்காது. கேட்டு, இல்லை என்ற பெயரை வாங்கிக் கொள்வானேன்.

"ஏதாவது தேவைப்பட்டால் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கொண்டான்.

☆ ☆ ☆

# 9

இரவு பத்தடிக்க இருந்தது. அவன் மனதில் அந்த ஜப்பானீஸ் புத்தகம் தான் மிதந்து கொண்டிருந்தது.

ஸ்ரீ லக்ஷ்மி காத்துக் கொண்டிருந்தாள்.

அவன் சாப்பிட்டு முடித்து படுக்கையறைக்கு வந்தான். அவள் பூஜை அறையிலிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். மிகவும் பதட்டமாக இருந்தாள்.

பாபு இன்டெக்ஸ் பக்கத்தை புரட்டினான். "சொல்லு. உனக்கு எப்படிப்பட்ட குழந்தை வேண்டும்?"

"சரஸ்வதி தேவியைப் போன்ற மகள்."

"ஊஹூம். முதலில் மகன். கோடிக் கணக்காய் சம்பாதிக்கக் கூடிய மகன்" என்றான்.

"வேண்டாம். புத்திசாலியான மகனாக இருந்தால் நல்லது. கோடிக்கணக்கில் இல்லாவிட்டாலும் சொந்த காலில் நிற்க முடியும் அவனால்."

"கோடிக்கணக்கில் சம்பாதிக்க வேண்டும் என்றால் புத்திசாலித்தனம் எப்படியும் இருக்கணும் இல்லையா?"

"கொஞ்சம் கூட புத்திசாலித்தனம் இல்லாமல் அரசியலில் சேர்ந்து கோடிக்கணக்கில் சம்பாதிக்கிற ரவுடி தலைவன் பிறந்தால்?"

"நீ சொல்வதும் உண்மைதான்" என்று சொல்லி விட்டு ஒன்பதாவது பக்கத்தைத் திறந்தான்.

சிறந்த புத்திசாலியான மகள் பிறப்பதற்கு ஜப்பானிஸ் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங்.

ஜப்பானியர் ஆராதிக்கும் தேவதை ஹீயோ சின் மின் பாதங்களின் மீது ஆணை. உங்களுக்கு புத்திசாலியான மகன் பிறக்க வேண்டுமென்றால் கீழே கொடுத்திருக்கும் முறையை பின்பற்ற வேண்டும்.

ஆனால் முதல் வரியைப் படித்துவிட்டு, அந்த விதத்தை பின்பற்றிய பிறகு இரண்டாவது வரியைப் படிக்க வேண்டும். அந்த விதமாக சத்தியம் செய்து "ஆமென்" என்று சொல்லுங்கள் என்று எழுதியிருந்தது. இருவரும் "ஆமென்" என்றார்கள்.

"இந்தப் புத்தகத்தின் மீது கை வைத்து சத்தியம் செய்யுங்கள்" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி. அவன் திரும்பவும் அதே போல் செய்தான். எப்பொழுது இந்த புது விதமான முறையை பின்பற்றுவோம் என்று ஆர்வத்துடன் இருந்தான் அவன். முடிந்தால் எல்லா விதமான முறைகளையும் அன்றிரவே முயற்சி செய்து பார்த்து விட வேண்டும் என்ற விருப்பம் அவன் மனதில் தோன்றினாலும் ஜப்பான் தெய்வம் ஹிமோ சின்மின் மீது இருந்த மதிப்பால் அந்த ஆர்வத்தை அடக்கிக் கொண்டான்.

"நாங்கள் முதல் வரியைப் படித்த பிறகு அதில் இருப்பது போல் செய்து விட்டு பிறகு இரண்டாவது வரியைப் படிப்போம் ஆமென்" என்றாள் பக்தியோடு புத்தகத்தின் மீது கையை வைத்து.

பிறகு இரண்டாவது வரியைப் படித்தார்கள்.



"இருவரும் எதிரெதிரே நில்லுங்கள்."

நின்றுகொண்டார்கள்.

"ஆடைகளை களைத்து விடுங்கள்."

ஸ்ரீ லக்ஷ்மியின் முகம் சிவந்து கன்றிப் போய் விட்டது. "எனக்கு வெட்கமாய் இருக்கு. என்னால் முடியாது" என்றாள் உட்கார்ந்துகொண்டே.

"சுவிட்சர்லாந்தில் இல்லாத வெட்கம் இப்போ ஏன் வந்தது?" என்றான் தானும் கூட உட்கார்ந்துகொண்டே.

"என்னவோ எனக்குத் தெரியாது" அவன் மடியில் முகம் புதைத்துக் கொண்டே சொன்னாள்.

"நாம்ப பாதி படித்து விட்டு நிறுத்தி விட்டால் அந்த ஜப்பான் தேவதை நமக்குக் குழந்தைகளே பிறக்காமல் செய்து விடுவாளோ என்னவோ" என்றான்.

ஸ்ரீ லக்ஷ்மியின் முகத்தில் பயம் வெளிப்படையாக தெரிந்தது. "உண்மையாகவா?" என்றாள் மிரட்சியுடன்.

"இல்லையானால் உடல் ஊனத்துடன் பிறக்கலாம்."

அவள் மெதுவாய் எழுந்து கொண்டாள். "விளக்கை அணைத்து விடுங்களேன்." வேண்டுகோள் விடுத்தாள்.

"விளக்கை அணைத்துவிட்டால் புத்தகத்தை எப்படி படிப்பது?" என்றான்.

"அந்தப் பக்கமாக திரும்புங்கள்" என்றாள் சங்கடத்துடன்.

"எதிரெதிரே நிற்கும்படி எழுதியிருக்கு. நான் அந்தப் பக்கம் திரும்பினால் மகன் கால் ஊனத்துடன் பிறப்பானோ என்னவோ."

"போட்டும். முகத்தையாவது அந்தப் பக்கம் திருப்புங்கள்."

"அப்பொழுது மூன்றாம் மாதத்திலேயே அவனுக்கு ஸ்பாண்டிலேட்டிடீஸ் வந்துவிடும். வாழ்நாள் முழுவதும் அவன் கழுத்து வலியோடு கஷ்டப்படணும்."

அவளுக்கு என்ன செய்வதென்று புதியவில்லை. வேறு வழியில்லாமல் புத்தகத்தில் குறிப்பிட்டபடி செய்தாள். அவன் பார்வை தன் மீது படர்வதை உணர்ந்தாள். இந்த நிலையிலிருந்து சீக்கிரமாய் அடுத்த நிலைக்கு போய்விட்டால் தேவலை என்று இருந்தது. அவளுக்கு. கைகளால் இயன்றவரை தன்னை மறைத்துக் கொண்டு, "அடுத்ததாக என்ன எழுதியிருக்குன்னு பாருங்க சீக்கிரம்" என்றாள்.

"பெண்ணாக இருப்பவள் துவாலையை சுற்றிக் கொள்ளலாம்."

'இதை முதலிலேயே சொல்லியிருக்கலாம் இல்லையா' என்று நினைத்துக் கொண்டே அவள் சட்டென்று துவாலையை எடுத்து சுற்றிக் கொண்டாள்.

அடுத்த வரியை அவள் படித்தாள். "இரண்டு மீட்டர் நீளமுள்ள தாம்புக் கயிறுகள் இரண்டை எடுத்துக் கொள்ளுங்கள்."

அவள் கணவனிடம் "துணி உலர்த்துகிற கயிறுகள் வெளியே இருக்கு. எடுத்துக்கிட்டு வாங்க" என்றாள்.

"இப்படியேவா?" என்றான்.

அவளுக்கு அப்பொழுது தான் நினைவுக்கு வந்தது கணவன் இருந்த நிலைமை.



"துவாலையை சுற்றிக்கொண்டு போய் எடுத்துக் கிட்டு வாங்க" என்றாள்.

"நாம் அப்படி இஷ்டம் வந்தது போல் மாற்றினால் ஜப்பான் தேவதைக்குக் கோபம் வந்துவிடுமோ என்னவோ" என்றான்.

"அப்பொ என்ன செய்யலாம்?"

"நீ போய் எடுத்துகிட்டு வா"

அவள் வீலென்று கத்தினாள். "நா... னா?"

☆ ☆ ☆

புழக்கடையில் இருட்டாக இருந்தது. பாபு தட்டு தடுமாறிக் கொண்டே படியிறங்கினான். அவனுக்கு இந்த நிலைமை ரொம்பவும் சங்கடமாக இருந்தது. இரவு ரொம்ப நேரமாகி விடவில்லை. நகரம் இன்னும் உறங்கத் தொடங்கவில்லை. அதிர்ஷ்டவசமாய் காம்பௌண்டு சுவர் இருந்த வீடு அது. இதற்கு முன்னால் சின்ன அறையில் காரைப் பெயர்ந்து போன சுவர்களுக்கிடையே இருந்து வந்தார்கள். சிரஞ்சீவியுடன் காண்ட்ராக்ட் ஏற்பட்ட பிறகு பெரிய வீட்டிற்கு மாறினார்கள்.

இப்போ வெளியே வரும் முன் உள்ளே கணவன் மனைவிக்கு இடையே கடுமையான விவாதம் நடந்தது.

"உனக்கு துவாலையானும் இருக்கு இல்லையா. நீ போய் கயிறுகளை கொண்டு வா" என்றான் பாபு.

"இருட்டில் வெறும் டவலுடன் எப்படிப் போவது?" என்றாள்.

"ஆடையின்றி நான் மட்டும் எப்படி போவதாம்?"

"போட்டும். புடவை சுற்றிக் கொண்டு போய் எடுத்துக்கிட்டு வரட்டுமா?"

"குழந்தை ஆடைகளோடு பிறப்பானோ?" பாபு சொன்னான்.

"பின்னே என்ன செய்வது?"

பாபு அந்த மங்கோலிய அரசனை மனதிற்குள்ளேயே திட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

வெளியே நிலா வெளிச்சம் அவ்வளவாய் இல்லை. ஆனால் பக்கத்து வீட்டு பால்கனியில் எரிந்து கொண்டிருந்த புகழக்கடையில் வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. மரங்கள் காற்றிற்கு மெதுவாய் அசைந்து கொண்டிருந்தன. வானத்தில் முழு நிலா தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த இயற்கையைப் பார்த்து ரசிக்கக் கூடிய நிலையில் இல்லை அவன். கொல்லையில் இருக்கும் கொடி கயிறு வரையில் அந்த வெளிச்சத்தில் எப்படிப் போவது என்று யோசித்துக் கொண்டிருந்தான். அங்கே வெளிச்சம் இன்னும் அதிகமாய் இருந்தது. ரகசிய உளவாளியைப் போல் சத்தம் போடாமல் படியிறங்கி சுற்றிலும் பார்த்தான். காம்பெண்டுச் சுவருக்கு அப்பால் இருந்த வீடுகளில் எங்குமே சந்தடி இல்லை.

மெல்ல அடிமேல் அடி வைத்துக் கொண்டு கொடி கயிற்றின் அருகில் போனான். சுவரில் இருந்த ஆணியில் இழுத்துக் கட்டப் பட்டிருந்தது கயிறு. சுவற்றுப் பக்கமாகத் திரும்பி நின்று கொண்டு கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான். பின்னாலிருந்து குளிர்ந்த காற்று முதுகுத் தண்டைச் சிலிர்க்கச் செய்தது. சீக்கிரமாக அவிழ்க்க வேண்டும் என்று எண்ண எண்ண கயிறு இன்னும் இறுகிப் போய்க் கொண்டிருந்தது.



அதற்குள் பின்னாலிருந்து "பல பலே" என்ற குரல் கேட்டது.

பாம்பை மிதித்து விட்டாற்போல் அதிர்ந்து போய் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

தொலைவில் பால்கனியிலிருந்து எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் ஒரே பாய்ச்சலில் பக்கத்திலிருந்த புதருக்குப் பின்னால் மறைந்து கொண்டு 'போய்விடு' என்பது போல் ஜாடைக் காட்டினான். அந்தச் சிறுமி போகவில்லை. ஆள் காட்டி விரலைக் காட்டி மிரட்டுவது போல் பார்த்தான்.

அந்தப் பெண் நகரவில்லை. பயந்தாற்போலவும் தென்பட வில்லை. அவன் சிறு கல்லை எடுத்து அவள் பக்கமாய் வீசி யெறிந்து கொண்டே நாக்கை நீட்டி பழிப்புக் காட்டினான்.

அந்தப் பெண் உள்ளே ஓடினாள்.

தன் வெற்றிக்குத் தானே மகிழ்ந்து போனவனாக திரும்பவும் தன் வேலையில் ஆழ்ந்து போனான். அரை நிமிஷம் ஆயிற்று முடிச்சு அவிழ்க்க வரவில்லை. அதற்குள் சின்ன கூழாங்கல்லு ஒன்று வந்து முதுகில் பட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான்.

பால்கனிப் பெண் இன்னொரு கல்லை விட்டெறிந் தாள். பேஸ் பால் ஆட்டக்காரனைப் போல் சட்டென்று ஒதுங்கிக் கொண்டான். இந்த முறை அச்சிறுமி நாக்கை வெளியே நீட்டி பயங்கரமாக பழித்தாள்.

பாபுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பக்கத்திலேயே வாழை மரம் தென்பட்டது— அதன் இலை ஒன்றைக் கிழித்து அப்பொழுதுதான் கொஞ்சம்

நாகரீகத்தைக் கற்றுக் கொண்ட ஆதி மனிதனைப் போல் அதை இடுப்புக்கு குறுக்கே வைத்துக் கொண்டு காம்பௌண்ட் சுவர் அருகில் சென்று 'போ... போ' என்று சொல்லப் போனான்.

அதற்குள் அந்தப் பெண் உண்மையாகவே பயந்து போய் உள்ளே ஓடினாள்.

தனக்குள் சிரித்துக் கொண்டே வந்து கயிற்றை அவிழ்த்தான். சுலபமாக வந்து விட்டது. இன்னொரு முனையைக் கூட அவிழ்த்து விட்டுத் திரும்பிப் பார்த்தவன் சிலையாக நின்று விட்டான்.

மாடி பால்கனியில் சிறுமியின் தாய், தந்தையும், அவர்களுக்குப் பின்னால் வயதான தாத்தாவும் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த எதிர்பாராத விளைவுக்கு பாபு சலன மொடுங்கிப் போய் அப்படியே நின்று விட்டான். வாழை யிலை விஷயம் கூட மறந்து போய் விட்டான்.

"திருடனோ என்னவோ?" என்றார் தாத்தா.

"திருடனாக இருந்தால் துணி மணிகளை எடுத்துக் கொண்டு போவானே தவிர கயிற்றை எதுக்கு அவிழ்ப்பான்?" என்றாள் சிறுமியின் தாய்.

"அதுவும் ஆடையில்லாமல்" என்று முடித்தார் தந்தை.

"பைத்தியக் காரனாக இருக்கும்." க்ளூ கொடுத்தாள் சிறுமி.

"பாவம். அந்தக் குடும்பம் புதுசா வந்திருக்கு போலிருக்கு. நள்ளிரவு வேளையில் கொல்லையில் இந்தப்



பைத்தியக்காரன் வந்து சேர்ந்திருக்கிறான்." இரக்கப் பட்டாள் அந்த அம்மாள்.

கிழவர் பால்கனியிலேயே முன்னுக்கு வந்து நின்று "யாரடா நீ?" என்று கத்தினார்.

பாபு இன்னும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அவனிடமிருந்து பதில் இல்லாமல் போகவே "தமிழ் தெரியாதோ என்னவோ" என்றாள் அவள் சந்தேகத் தோடு.

"கௌன் ஹோ தும்?" மறுபடியும் கத்தினார் கிழவர்.

பாபு ஒரு அடி முன்னுக்கு வைத்தான்.

"ஹூ" ஆர் யூ?" சிறுமியின் தந்தை கையால் ஜாடை காட்டிக் கொண்டே கேட்டார்.

"பைத்தியத்திற்கு இங்கிலீஷ் புரியுமாப்பா?" சிறுமி கேட்டுக் கொண்டிருந்தாள்.

பாபு இன்னும் முன்னுக்கு வந்தான். தான் இன்னும் கிட்டே போனால் அந்த வெளிச்சத்தில் தன் உருவம் இன்னும் நன்றாக தெரிந்து விடும் என்று அறிவான் அவன். அப்படியும் போய் சுவற்றுக்கு எதிரில் நின்று கொண்டு நிமிர்ந்து உரத்த குரலில், "இது என் உடம்பு. இது எங்கள் வீட்டுக் கொல்லை. இது எங்கள் வீட்டுக் கயிறு. என் இஷ்டப்படி நான் எதுவும் செய்து கொள்வேன். நீங்கள் யார் கேட்பதற்கு?" என்று கத்தினான்.

அப்பொழுது முழுவதுமாக வெளிச்சம் அவன் உடம்பில் பட்டுக்கொண்டிருந்தது. அடுத்த வினாடி பால்கனியில் யாருமே இல்லை. துப்பாக்கிச் சத்தத்திற்குச் சிதறிய பறவைகளைப் போல் உள்ளே ஓடி விட்டார்கள்.

பாபு தன்னைத் தானே திட்டிக்கொண்டு கொஞ்சம் அவர்களையும் திட்டிவிட்டு கயிறுகளை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

"என்ன? யாரை திட்டிக் கிட்டு இருக்கீங்க?" ஸ்ரீ லக்ஷ்மி கேட்டாள். துவாலையைச் சுற்றிக் கொண்டு நின்றிருக்கையில் அவள் "ஆதிமாணவனின் வரலாறு" சினிமாவில் வரும் இரண்டாவது கதாநாயகியைப் போலவே இருந்தாள்.

"என்னையே திட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றான் கோபமாய்.

"அய்யோ! அப்படிச் சொல்லாதீங்க. புத்திசாலித் தனத்தோடு முன் கோபியான மகன் பிறப்பானோ என்னவோ." பயந்து கொண்டே சொன்னாள்.

பாபுவுக்கும் அது சரியென்று பட்டது. மனதை அமைதியாக வைத்துக் கொண்டான். இரண்டு கயிறு களையும் கையில் வைத்துக் கொண்டு அடுத்த வரியைப் படித்தான்.

"உங்கள் மனைவியை கட்டிலில் மல்லாந்து படுக்கச் சொல்லுங்கள்."

பாபு மெலிதாக விசிலடித்துக் கொண்டே, "படுத்துக் கொள்" என்றான் மனைவியைப் பார்த்து.

அவள் பயந்துகொண்டே படுத்துக்கொண்டாள். விளக்கு வெளிச்சத்தில் அவள் சலவைக்கல் பதுமையாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள். அவன் கண்கள் அடுத்த வரியின் மீது ஓடின.

"உங்கள் கையிலிருக்கும் இரண்டு கயிறுகளையும் நான்கு துண்டுகளாக்குங்கள்."



சமையலறைக்குள் ஓடிப்போய் கத்தியால் நான்கு துண்டுகளாக்கினான். அதை எடுத்துக் கொண்டு வந்து அடுத்த வரியைப் படித்தான்.

"உங்கள் மனைவியின் இரண்டு கைகளையும், கட்டிலுக்கு இருபக்கங்களிலுமாய்க் கட்டிப் போடுங்கள்."

தான் படித்தது சரிதானா என்று சந்தேகம் வந்து மறுபடியும் படித்தான். அப்படித்தான் எழுதியிருந்தது. பிறகு என்ன எழுதியிருக்கு என்று படிக்க நினைத்தாலும் அந்த விருப்பத்தை கட்டுப்படுத்திக் கொண்டு மனைவியின் கைகளை கட்டத் தொடங்கினான்.

"என்னங்க எனக்கென்னவோ பயமாக இருக்குங்க" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி படுத்த வாக்கிலேயே.

"புத்திசாலியான மகன் பிறக்க வேண்டும் என்றால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் ஆகணும்."

"ஆனாலும் இந்த அளவுக்கா?"

"கல்யாணம் ஆன முதல் நாள் ஒவ்வொரு பெண்ணும் இப்படி பயந்தால் மனித இனம் எப்பொழுதோ அழிந்து போயிருக்கும் தெரியுமா?" என்று சொல்லி விட்டு மேற்கொண்டு படித்தான்.

"கண்களை மூடிக்கொண்டு கட்டிலை மூன்று முறை பிரதட்சணம் செய்யவும்" என்றிருந்தது. செய்து முடித்தான். அப்பொழுது வெளியே கதவைத் தட்டிய சத்தம் கேட்டது.

எல்லைக் கோட்டைத் தாண்டிக் கொண்டிருக்கும் போது எதிரி நாட்டு போர் வீரன் கழுத்தில் துப்பாக்கி முனையை வைத்து அழுத்தினாற்போல் அதிர்ந்து போனான் பாபு.

கதவைத் தட்டிய சத்தம் மறுபடியும் கேட்டது. ஸ்ரீ லக்ஷ்மி குழப்பத்துடன் கணவனைப் பார்த்தாள். கீழே இருந்த துவாலையை எடுத்துச் சுற்றிக் கொள்ளப் போனான்.

அவள் கலக்கத்துடன் "வேண்டாம். விரதபங்கம்" என்றாள்.

மறுபடியும் கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. "இப்படியே போய் நான் எப்படி திறப்பேன்?" என்றான்.

"கதவைத் திறப்பதா? நான் கட்டில் மீது இருக்கிறேன் என்ற விஷயத்தை மறந்துட்டீங்களா?"

பாபு நாக்கைக் கடித்துக் கொண்டான். முன்னால் ஒரு சின்ன அறை இருந்தது. அதற்கடுத்து படுக்கையறை. வெளியே கதவைத் திறந்தால் படுக்கை அறையில் உள்ள கட்டில் கண்ணில் படும்.

"கதவைத் திறக்காமலேயே யாருன்னு தெரிஞ்சுக்குங்க. அப்புறமாய், வாங்கன்னு சொல்லிடுங்க." தாழ்வான குரலில் சொன்னாள்.

"ஆனாலும் பாதிராத்திரியில் இவங்களுக்கு வேறு வேலை இல்லையா?" என்று அலுத்துக் கொண்டே படுக்கை அறைக் கதவை வெறுமே சாத்திவிட்டு முன் அறைக்கு வந்தான். கதவைத் திறக்காமலேயே "யாரு?" என்றான்.

"அதே பைத்தியம்தான் தாத்தா" என்று சிறுமியின் குரல் வெளியே ரகசியமாக கேட்டது. பாபுவுக்கு பகீரென்றது. பால்கனியிலிருந்து பார்த்த கிழவர் பேத்தியைக் கூடவே அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்கே வந்து விட்டார் என்று புரிந்தது.



"நாங்கள் உங்க வீட்டுக்கு பின்னால் இருக்கும் பிளாட்டில் குடியிருக்கிறோம். கதவைத் திறங்க" என்றார் கிழவர்.

"எதுக்கு?" என்றான் பாபு இல்லாத தைரியத்தை குரலில் காட்டிக் கொண்டே.

"உங்கள் வீட்டுக் கொல்லையில் யாரோ ஒரு பைத்தியக்காரன் நுழைந்து கொடியிலிருந்த துணியெல்லாம் உருவி கீழே போட்டு விட்டான். உங்களை எச்சரிக்கலாம் என்றுதான் வந்தேன்."

"பைத்தியக்காரன் யாரும் இல்லை. அது நான்தான்."

"அது அந்தப் பைத்தியத்தின் குரல்தான் தாத்தா. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கு. வீட்டுக்குள்ளேயே வந்து விட்டான் போலிருக்கு. இந்த வீட்டில் இருக்கிறவங்களை என்ன செய்தானோ?" சிறுமியின் குரல் தெளிவாக கேட்டது.

இந்தப் பக்கம் பாபுவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"இது உங்கள் வீடுதான் என்கிறாயா?" கிழவர் கேட்டார்.

"ஆமாம்."

பைத்தியங்களுக்கு புத்திக் கூர்மை அதிகமாய் இருக்கும் என்று எங்கேயோ படித்திருந்தார் கிழவர். அதனால் சாமர்த்தியமாக அவனை மடக்கணும் என்று திட்டம் போட்டார்.

"உன் பெயர் என்ன தம்பி?" குரலில் அன்பொழுக கேட்டார்.

"பாபு."

"வெறும் பாபுவா? பித்து பிடித்த பாபுவா?"

"பாபுதான்." பற்களைக் கடித்துக் கொண்டே பதிலளித்தான்.

"உன் மனைவியைக் கொஞ்சம் கூப்பிடு."

"நள்ளிரவில் என் மனைவியை எதுக்காக கூப்பிடணும்?"

"நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. இந்த வீட்டுக்குப் புதிதாக குடி வந்திருக்கீங்க இல்லையா. சாப்பிடக் கூப்பிடலாம்னு."

"அதுக்கு நள்ளிரவில்தான் நேரம் கிடைத்ததா? ஆனால் தெருவில் யார் புதிதாக குடி வந்தாலும் இப்படிச் சாப்பிடக் கூப்பிடுவதுதான் உங்களுக்குப் பழக்கமா?" என்றான் கோபத்தை அடக்கிக்கொண்டே.

"வீட்டுக்கு வந்தவங்களை இப்படி வெளியே நிற்க வைத்துப் பேசுவது மரியாதை இல்லை தம்பி. கதவைக் கொஞ்சம் திற."

"எதுக்குன்னு சரியாகச் சொல்லுங்க."

"உன்னை ஒரு தடவை பார்க்கிறேன்" என்றார் அன்போடு.

"பார்த்தால் பயந்து ஓடிவிடுவீங்க."

"போய்விடலாம் தாத்தா" என்றாள் சிறுமி பயத்துடன்.

"சரி. உள்ளேயே இரு" என்றார் கிழவர். பேத்தியுடன் சேர்ந்து படியிறங்கிக்கொண்டே "வீட்டுக்கு வேண்டாம்மா. முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்கு போகலாம். பாவம்.



உள்ளே அந்த பைத்தியம் அவர்களை என்ன செய்தானோ" என்று சொன்னது காதில் விழுந்தது.

பாபு திடுக்கிட்டவனாய் கதவை லேசாக திறந்து முகத்தை மட்டும் வெளியே நீட்டி "பெரியவரே" என்று குழைவோடு அழைத்தான்.

கிழவரும் பேத்தியும் திரும்பிப் பார்த்தார்கள்.

உடம்பை கதவிற்குப் பின்னால் மறைத்துக் கொண்டு முகத்தை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்த பாபுவைச் சந்தேகத்துடன் பார்த்து விட்டு "இதென்ன அவதாரம்?" என்றார் அவனை அடையாளம் கண்டு கொண்டவரைப் போல்.

பாபு இன்னும் கதவிற்குப் பின்னால் ஒதுங்கிக் கொண்டான். அவன் கதவைத் திறந்த பொழுது வீசிய காற்றினால் உள்ளே படுக்கையறையின் கதவு லேசாகத் திறந்து கொண்டது. சிறுமி ஆர்வத்துடன் உள்ளே எட்டிப் பார்க்க முயன்றாள்.

"இன்னிக்கு சனிக் கிழமையில்லையா? சனிக்கிழமை இரவு நாங்கள் இப்படித்தான் படுத்துக் கொள்வோம்" என்றான் வெட்கப்படுவது போல் நடித்துக் கொண்டே.

"ஏன்?" சந்தேகத்துடன் கேட்டார்.

"எல்லோரும் சனிக்கிழமையில் உபவாசம் இருப்பாங்க இல்லையா. நாங்க 'அதுக்கு'க் கூட உபவாசம்தான்" என்றான்.

கிழவருக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை. "பின்னே அதற்கு இப்படி உடையில்லாமல் வேலைகளை செய்வானேன்?" என்றார் குறுக்கு விசாரணை செய்வது போல்.

பாபு விளக்கமளிப்பது போல் சொன்னான். "ஒருவன் தனக்கு எது ரொம்பவும் பிடிக்குமோ அதைத் துறந்து கடவுளுக்கு நேர்த்திக் கடன் செலுத்துவான் இல்லையா. அதே போல் நாங்களும் எங்களுக்குப் பிடித்ததை விட்டு விட்டோம், சனிக்கிழமைகளில் மட்டும்.

"ஆனால் அதுக்கு..." முணுமுணுத்துக் கொண்டே ஏதோ சொல்லப் போனவரை இடைமறித்துவிட்டு சொல்லத் தொடங்கினான்.

"மனிதன் தன் அழகான கேசங்களை நேர்த்திக் கடனாக செலுத்தி ஏழுமலையானின் அருளை பெற முயற்சி செய்வான். அதே போல் நாங்கள் இந்த விதமாக இருந்தும் கூட அதைத் தியாகம் செய்தால் அருள் கிடைக்கும் என்று விரதம் இருக்கிறோம்" சொல்லி முடித்து விட்டு 'இனி போய்விட்டு வாங்களா' என்பது போல் பார்த்தான்.

"என்னவோப்பா. உலகத்தில் ஒவ்வொருத்தருக்கும் ஒரு விதமான பித்துக்குளித்தனம்."

"சரியாக சொன்னீங்க பெரியவரே."

அவர் படியிறங்கப் போனார். சிறுமி கதவிற்கு அருகிலிருந்து நகரவில்லை.

"தாத்தா! ஆன்ட்டியை கட்டிலில் கட்டிப் போட்டிருக்காங்க" என்றாள், உள்ளே மேலும எட்டிப் பார்த்து.

பாபுவுக்கு பக்கென்றது. லேசாக திறந்திருந்த படுக்கை அறைக் கதவு வழியாய் ஸ்ரீ லக்ஷ்மியின் கை மட்டும் தென்பட்டது. நல்ல வேளையாய் மீதி உடம்பு தெரிய வில்லை.



கிழவர் சிறுமியின் தோளைப் பிடித்துக் கொண்டே படியிறங்கினார். "யாருக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய்து கொள்ளட்டும். நமக்கெதுக்கு? வா போகலாம்" என்றார்.

பாபு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டே கதவை ஓங்கிச் சாத்தினான்.

"என்ன நடந்தது?" கேட்டாள் ஸ்ரீ லக்ஷ்மி அவன் உள்ளே வந்ததும்.

"வாய்க்கு வந்த கதையை அளந்து விட்டு வந்தேன்" என்று சொல்லிவிட்டு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே "புத்திசாலி மகன் பிறக்கறது இருக்கட்டும். ஆனால் இன்றிரவு சிவராத்திரியாய்த்தான் கழியும்னு எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

"அப்படிச் சொல்லாதீங்க. எதையும் சோதிச்சு சாதிக்க வேண்டும். அது தான் வீரனுக்கு அடையாளம் என்று சொல்லியிருக்கிறார் ஒரு கவிஞர். கஷ்டப்படாமல் நல்ல குழந்தைகள் எப்படிப் பிறப்பாங்க?" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி தேற்றுவது போல்.

"குழந்தைங்க பிறக்கறதுக்கு ஒரு கஷ்டம், நல்ல குழந்தைங்க பிறக்கறதுக்கு இன்னொரு கஷ்டம் என்று தனித்தனியாக இருக்காது" என்றான் எரிச்சலோடு.

"அந்த வித்தியாசத்தைத் தெரிந்துகொள்வதற்குத் தான் இந்தப் புத்தகம். சீக்கிரமாக படித்து முடியுங்கள். நடுவில் இப்படி இடையூறு வந்தால் ப்ரிமெச்சூர் பேபி பிறக்குமோ என்னவோ" என்றாள் பயந்துகொண்டே.

பாபு அடுத்த வரியைப் படித்தான்.

"உங்கள் இரண்டு கயிறுகளையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் செல்லுங்கள்."

எதுக்காக இருக்கும் என்று நினைத்துக் கொண்டே சமையலறைக்குப் போனான். ஸ்ரீ லக்ஷ்மி டென்ஷனுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கே போன பிறகு அடுத்ததாக என்ன எழுதியிருக்கு என்று படித்தான். இரண்டு கைகளையும் ஜென்னலுக்கு இரு பக்கங்களிலுமாய் வைத்து கயிற்றினால் கட்டிக் கொள்ளும் படி எழுதியிருந்தது.

ஒரு கையைச் சுலபமாக கட்டிக் கொள்ள முடிந்தது அவனால். அடுத்த கையை எப்படிக் கட்டிக் கொள்ளவது என்று தெரியவில்லை. இது ஒரு சவாலாகத் தோன்றியது. தன் திறமைக்கு ஒரு பரிசோதனை என்று நினைத்துக் கொண்டான்.

கயிற்றின் ஒரு நுனியை ஜென்னல் கம்பியோடு வைத்து சுறுக்கு முடி போட்டுக் கொண்டு பிறகு கயிற்றின் இடைவெளியில் தன் கையை நுழைத்துச் சுற்றிக் கொண்டான். முடிச்சின் நுனியை பலமாக விரலால் இழுத்தான். இப்பொழுது இரண்டு கைகளும் கட்டப்பட்டு விட்டன.

இதையெல்லாம் செய்து முடிக்கப் பத்து நிமிடங்கள் ஆயிற்று. மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. முன் காலத்தில் அரசகுமாரர்கள் காளிகா தேவியின் அருளை பெறுவதற்காக என்னவெல்லாமோ செய்வார்களாம். இப்பொழுது ஜப்பான் தேவதை ஹிமோ சின்மின்னின் அருளைப் பெற வேண்டும் என்றால் தன்னுடைய திறமையை நிரூபித்துக் கொள்ள வேண்டும்.



மூளையைக் கசக்கிக் கொண்டு அருமையான திட்டம் போட்டு இரண்டாவது கையையும் ஜென்னலோடு சேர்த்து கட்டிப் போட்டாகிவிட்டது. ஸ்ரீ லக்ஷ்மி இரக்கம் ததும்பும் விழிகளுடன் அவனது முயற்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலடியில் இருந்த புத்தகத்தில் கடைசியாய் இருந்த வரியைப் படித்தான். அதில் இவ்வாறு இருந்தது.

"முட்டாளே! நீ சமையலறையிலும் அவள் படுக்கையறையிலும் இருந்தால் குழந்தை எப்படி பிறக்கும்? உன்னைப் போன்றவனுக்கு புத்திசாலியான குழந்தைகள் பிறக்கக் கூடிய வாய்ப்பே இல்லை. முதலில் உன் புத்திசாதுரியத்தை வளர்த்துக் கொள். அதற்கப்புறம் குழந்தைகளைப் பற்றி யோசி."

பாபுவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அந்தப் புத்தகத்தைக் கிழித்துக் கொளுத்தி விட வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். கைகளை விடுவித்துக் கொள்ள திமிறினான். முடியவில்லை.

இவ்வளவு தூரம் தன்னை ஏமாற்றியது யாராக இருக்கும் என்று காலால் புத்தகத்தின் முதல் பக்கத்தைத் திருப்பினான். 'லக்ஷ்மி பப்ளிகேஷன்ஸ்' என்று இருந்தது. அதில் அதை எழுதியவரின் பெயரும் இருந்தது.

"காந்தி."

"என்ன ஆச்சுங்க?" படுக்கையறையிலிருந்து கேட்டாள் ஸ்ரீ லக்ஷ்மி.

கயிறுகளுக்கிடையே சிக்கிக் கொண்டிருந்த கைகளை விடுவித்துக் கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டே "ஒன்றுமில்லை" என்றான் பாபு. எவ்வளவு திமிறிய

போதிலும் கயிறு இன்னும் இறுகிக் கொண்டதே தவிர விடுபடவில்லை.

அவனுக்கு தன் மீதே கோபம் வந்தது. இவ்வளவு முட்டாளாக அவன் என்றுமே நடந்து கொண்டதில்லை. அகராதியில் இல்லாத திட்டுகளை யெல்லாம் உபயோகித்து அவன் தன்னைத்தான் திட்டிக் கொண்டிருக்கும் போது பக்கத்து அறையிலிருந்து ஸ்ரீ லக்ஷ்மி "அடுத்ததாக என்ன எழுதியிருக்கு?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"பத்து நிமிஷம் கடவுளை பிரார்த்தனை பண்ணச் சொல்லியிருக்கு. தியானம் பண்ணு" என்றான் கோபத்தை அடக்கிக் கொண்டே.

இரண்டு நிமிடங்களுக்குக்குப் பிறகு ஏதோ முணு முணுக்கும் குரல் கேட்டது.

"என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டான் சந்தேகத்தோடு.

"ஜெயதேவனின் அஷ்டபதி பாடுகிறேன்."

"இந்தச் சமயத்தில் பார்த்து அந்தப் பாடல்களை பாடுவாங்களா?"

"கிருஷ்ணன்தான் என் ஆராத்திய தெய்வம்." அப்பாவித்தனமாக பதில் வந்தது.

இனி அவளோடு வாதாடிப் பயன் இல்லை என்று நினைத்துக் கொண்டு கைகளை விடுவித்துக் கொள்ள முயன்றான் பாபு.

அதற்குள் கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. பாபுவின் இதயம் ஒரு நிமிடம் நின்றுவிட்டது.

"யாரு?" என்று கத்தினான்.



"நான்தான் இன்ஸ்பெக்டர்."

அவ்வளவு குளிரிலும் வியர்த்துக் கொட்டிற்று. இந்த நள்ளிரவில் அவர் ஏன் வந்தாரோ என்று நினைத்தபோது மூளையே கலங்கி விட்டாற்போல் தோன்றியது. ஒரு பக்கம் முடிச்சு நெகிழவே கயிறு கழன்று வந்தது. தப்பித்தோம் பிழைத்தோம் என்று நினைத்துக் கொண்டே இரண்டாவது கயிற்றையும் அவிழ்த்துக் கொண்டு படுக்கையறைக்குள் ஓடி வந்தான்.

அனுமாரைப் போல் தாவிக் குதித்துக் கொண்டு ஓடி வந்த கணவனை வியப்போடும், பயத்தோடும் பார்த்தாள் ஸ்ரீ லக்ஷ்மி. பாபு மளமளவென்று உடையணிந்து கொண்டு ஓடிப் போய் கதவைத் திறந்தான்.

"ஏன் இவ்வளவு தாமதம்?"

"நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள்."

"ஒன்றுமில்லை. நான் கொடுத்த கெடுவில் இன்னும் இரண்டுநாள் தான் பாக்கியிருக்கு. அதை நினைவுப் படுத்தலாமென்றுதான் வந்தேன்."

"இந்த நள்ளிரவிலா?"

"பக்கத்து ஜங்ஷனில் ட்யூட்டி இருந்தது. அதை முடித்துக் கொண்டு திரும்பிப் போகும் போது உங்கள் வீடு கண்ணில் பட்டது. வேலையோடு வேலையாய் உனக்கு நினைவுப்படுத்தலாம்னு வந்தேன். போய் வருகிறேன்" என்று கிளம்பிப் போனார்.

பாபு உள்ளே வந்து. மனைவியின் கட்டுக்களை அவிழ்த்தான்.

"வந்தது யாருங்க?"

"இன்ஸ்பெக்டர். என்னை அரெஸ்ட் செய்வதற்கு இன்னும் இரண்டு நாள் தான் டயம் இருக்கும்னு சொல்லி விட்டுப் போவதற்கு வந்தார்."

அவன் முகத்தில் இப்பொழுது சிருங்கார உணர்ச்சியோ, நகைச்சுவை உணர்ச்சியோ இல்லை. வரப்போகும் ஆபத்தைப் பற்றிய டென்ஷன் தான் இருந்தது.

யோசித்தபடியே சமையலறைக்கு வந்தான். கயிறுகளைத் தூக்கி வெளியே போட்டான். உள்ளே வரும் போது புத்தகம் கண்ணில் பட்டது.

பக்கத்திலேயே இருந்த தீப்பெட்டியை எடுத்து அதை பற்ற வைத்தான். பின்னாடியே வந்து நின்று கொண்டாள் ஸ்ரீ லக்ஷ்மி. அவள் முகம் ரொம்ப டல் ஆக இருந்தது. தாமிருவரும் முட்டாள் ஆனதற்கோ அல்லது இன்ஸ்பெக்டர் வைத்த கெடுவினையோ தெரியாது. கணவன் செய்து கொண்டிருந்த காரியத்தை சலனமில்லாமல பார்த்துக் கொண்டிருந்தாள்.

புத்தகத்தை பற்ற வைத்து விட்டு தொலைவில் போய் நின்று கொண்டான். தீ நாக்குகள் சிவப்பாய் உயரே எழும்பின. அந்த தீயையே பார்த்துக் கொண்டிருந்தான் பாபு. அந்த தீயைப் பார்க்கும் போது அவன் மூளையில் ஒரு யோசனை மின்னலாய் பளிச்சிட்டது.

பத்து நாட்களில் பத்து லட்சம் சம்பாதிக்க வேண்டுமென்ற யோசனை.

★ ★ ★

# 10

இரண்டு நாட்களுக்குப் பிறகு பாபுவும் பரமசிவமும் சந்தித்துக் கொண்டார்கள். நாளுக்கு நாள், காட்சிக்கு காட்சி பெருகிக் கொண்டிருந்த வதூலைப் பார்த்து பரமசிவம் மிகவும் மகிழ்ந்து போனான். பாபுவை அன்போடு வரவேற்று காபி வரவழைத்து தந்தான்.

சிறிது நேரம் கழித்து "டின்னருக்கு இருந்து விட்டுப் போங்க. நல்ல பார்ட்டீ தருகிறேன். ஃபாரின் விஸ்கி கூட இருக்கு" என்றான்.

"சாரி சார். நான் டிரிங்க்ஸ் குடிக்க மாட்டேன்."

"இதென்னது? டிரிங்க் பண்ண மாட்டீங்களா? இவ்வளவு திட்டங்களை யோசித்துச் சொல்றீங்க. அதோடு பிசினெஸ் சர்க்கிளில் புழங்க வேண்டுமென்றால் அது ரொம்ப முக்கியம் இல்லையா."

பாபு சிரித்து விட்டு பேசாமல் இருந்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"ஒன்றுமில்லை. நான் சொல்வதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். வீண் வாதம் எதுக்குன்னு தான்."

"பரவாயில்லை. சொல்லுங்கள்."

"சிலபேர் சாமர்த்தியமாக சால் ஜாப்புச் சொல்லிக் கொள்வார்கள். 'நாளெல்லாம் கஷ்டப்பட்டு வேலை

செய்து களைத்துப் போகிறோம்" என்பார்கள். இன்னும் சிலரோ லட்சக் கணக்கில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் போது மாலையாகி விட்டால் இந்த அளவுக்குக் கூட ரிலாக்ஸ் ஆக வேண்டாமா?' என்று வாதாடுவார்கள். ரிலாக்ஸ் ஆவதற்கு சிகரெட், ரேஸ் போலவே இது கூட ஒரு சாதனம் என்று சொன்னால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இதை ஊக்க பானம் என்று சொன்னால் என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. இவங்களைப் போலவே லட்சக் கணக்கில் இல்லாமல் கோடிக் கணக்கில் வியாபாரம் செய்பவர்களும் இவங்களை விட பத்து மடங்கு உழைக்கிற பிரதம மந்திரியும் கூட இரவு ஆகி விட்டால் மதுபானத்தை நாடி போகமாட்டார்கள்."

"அப்படின்னா டிரிங்க் பண்ணுவது தவறு என்கிறீங்களா?"

"அது அவங்கவங்க தனிப்பட்ட விஷயம். நான் சொல்ல வந்தது 'களைத்துப் போனதால் ரிலாக்ஸ் ஆவதற்கு குடித்தேன்' என்று யாராவது தன் மனைவியிடம் வாதாடினால் அதைக் காட்டிலும் நகைப்பிற்குரிய விஷயம் வேறில்லை. வியாபார சம்பந்தப்பட்ட கூட்டங்களில் இது சகஜம் என்று சொல்றீங்களா? நான் கவனித்தது என்னவென்றால் மிகப்பெரிய தொழிலதிபர்கள் அம்பானி க்ரூப்பிலும் சரி, ஜெ.டி.வாலா க்ரூப்பிலும் சரி பிரமுகர்கள் யாருமே குடிக்க மாட்டாங்க. இப்படிப்பட்ட பார்ட்டிக்களில் 'நான் குடிக்க மாட்டேன்' என்று சொல்றவங்களுக்குத் தான் அதிக மதிப்பு உண்டு. காலமும் விரயம் ஆகாது."

பரமசிவம் கொஞ்ச நேரம் நிசப்தமாக இருந்து விட்டு "ஒரு நாள் நீங்கள் கண்டிப்பாக பெரிய மனிதன் ஆகப் போறீங்க" என்றான்.



பாபு சிரித்தான். "பெரிய மனிதன் ஆவேனோ இல்லையோ தெரியாது— ஆனால் சீக்கிரத்திலேயே அரெஸ்ட் ஆகப் போகிறேன்" என்றான்.

பரமசிவம் வியப்போடு "எதுக்கு?" என்றான்.

பாபு இன்ஸ்பெக்டர் விஷயத்தை விவரமாகச் சொன்னான்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு "அவ்வளவு ரூபாயா கேட்டான்?" என்று நிறுத்தி "அவனை ரௌடிக்களை விட்டு உதைக்கச் சொல்லட்டுமா?" என்று தாழ்வான குரலில் கேட்டான்.

"அந்த ஆள் ஒரு இன்ஸ்பெக்டர்."

"இருந்தால் என்ன? அவனும் மனிதன் தானே."

பாபு தன் கை விரல் நகங்களை ஆராய்ந்து கொண்டே "அதெல்லாம் வேண்டாம் சார். நான் அவருடன் பேசி இன்னும் இரண்டு மாதம் டயம் வாங்கிக் கொண்டிருக்கிறேன், தினமும் ஆயிரம் ரூபாய் வட்டி கட்டுவதாய்" என்றான்.

"தினமும் ஆயிரம் ரூபாய் வட்டியா? ஆனாலும் இரண்டு மாதங்களுக்கப் புறமாவது அவனுக்கு எட்டு லட்சங்களை எப்படித் தர முடியும் உங்களால்."

"பாங்கில் கடன் வாங்கி."

பரமசிவம் மேலும் வியப்படைந்து "பாங்கில் எட்டு லட்சத்தைக் கடனாக உங்களுக்கு யார் கொடுப்பாங்க? அந்தப் பணத்தை எல்லாம் இன்ஸ்பெக்டருக்குத் தந்து விட்டால் அந்தக் கடனை மறுபடியும் எப்படி அடைப்பீங்க?" என்று கேட்டான்.

"முதலாவதுதான் பிரச்னை. இரண்டாவது பிரச்னை இல்லை."

"எனக்குப் புரியவில்லை. விவரமாகச் சொல்லுங்கள்" என்றான் பரமசிவம்.

அந்தக் கேள்விக்கு பதிலை சொல்லாமல் "பரமசிவம் சார்! எனக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் சொல்லச் சொன்னீங்க. எனக்கு ஒரு லட்சம் ரூபாய் கடன் வேண்டும் கொடுக்க முடியுமா?" என்றான் பாபு.

பரமசிவம் உடனே பதில் சொல்லவில்லை. திரும்பவும் பாபுவே சொன்னான். "நீங்கள் அளிக்க வந்த உதவியை நான் என் தகுதிக்கு மீறி கேட்டு உங்களைச் சங்கடப்படுத்துகிறேன் என்று தெரியும். ஆனால் இது என் வாழ்க்கைப் பிரச்னை."

பரமசிவம் மௌனமாக யோசித்துக் கொண்டிருந் தான். பாபு தனக்கு உதவி செய்தது உண்மைதான். ஆனால் ஒரு லட்சம் என்றால் சின்ன தொகை அல்ல.

"நீங்கள் எனக்குச் சும்மா கொடுக்க வேண்டாம். லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இரும்பை உங்களிடம் அடமானமாக வைக்கிறேன்."

"இரும்பா!" வாயைப் பிளந்தான் பரமசிவம்.

"ஆமாம். இரும்புதான். உண்மையில் நான் உங்களிடம் ஒரு லட்சம் அந்த இரும்பை வாங்குவதற் காகத்தான்."

"ஒருக்கால் நீங்கள் என் கடனை திருப்பித் தர முடியாமல் போனால் அந்த இரும்பை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்."

"கொடுக்காமல் போவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் உங்கள் சந்தேகம் நியாயமானது



தான். நான் கடனை கொடுக்காத பட்சத்தில் அந்த இரும்பை சரியாக இரண்டு மாதங்களுக்கு அப்புறம் விற்றுவிட்டு உங்கள் பணத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். விலை எப்படியும் ஏறிக் கொண்டி ருப்பதால் உங்கள் பணத்திற்கு கவலை இல்லை."

பரமசிவம் ஆழமாய் பெருமூச்சு விட்டான். "எனக்கு யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் வேண்டும்" என்றான்.

மேற்கொண்டு என்ன பேசுவது என்று பாபுக்குப் புரியவில்லை.

"என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. உங்களுக்குத் தர முடியுமா முடியாதா என்ற விஷயத்தை நாளை காலையில் சொல்கிறேன்" என்றான்.

அது பொய் என்று பாபுவுக்குத் தெரியும். லட்சம் ரூபாய்க்கு ரிஸ்க் எடுத்துக் கொள்வானேன் என்று யோசிக்கிறானோ என்னவோ.

அவன் யோசனைகளை சிதறடித்தபடி பரமசிவம் அழைப்பு மணியை அடித்து மேனேஜரைக் கூப்பிட்டு "நாம் எடுத்துக் கொண்டிருந்த மாவட்டங்களிலிருந்து நேற்றைக்கும் இன்றைக்கும் கலெக்ஷன் எவ்வளவு? கணக்குப் பார்த்துச் சொல்லுங்கள்" என்றான்.

மேனேஜர் போய் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு துண்டு காகிதத்துடன் திரும்பி வந்தார். பரமசிவம் அதை வாங்கிப் பார்த்து விட்டு மேஜை மீது வைத்தான்.

"சில தியேட்டர்களில் முதல்வாரமே எடுத்து விட்டார்கள். இந்த இரண்டு நாட்களில் மற்ற தியேட்டர்களில் ஒரு லட்சத்து இருபதாயிரம் வந்திருக்கு. தியேட்டர் வாடகை, மற்ற செலவுகள் எல்லாம் போக

எனக்கு எண்பதாயிரம் மிச்சம் இருக்கும். உங்களுக்கு பணம் எப்பொழுது வேண்டும்?"

"எவ்வளவு சீக்கிரம் தரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்."

"இந்த எண்பதாயிரம் ரூபாய் உங்கள் யோசனை மூலமாக சம்பாதித்ததுதான். உங்களுக்குப் பாதி எனக்குப் பாதி என்று வைத்துக் கொண்டால் நான் உங்களுக்கு நாற்பதாயிரம் தர முடியும்."

பாபுவின் இதயம் நன்றியால் நிரம்பிவிட்டது. வியாபாரத்தில் அப்படிப்பட்ட தானங்கள் எதுவும் இருக்காது. மேலுக்கு மிகச் சாதாரணமான நபராக தென்படுகிறவரிடம் இவ்வளவு கொடுக்கல் வாங்கலை அவன் ஊகித்திருக்கவில்லை.

ஆனால் பிரச்னை அப்படியே இருந்தது. நாற்பதாயிரத்தோடு அது தீர்ந்து விடாது.

"ரொம்ப தாங்க்ஸ் பரமசிவம் சார். இந்த மட்டு மாவது உதவி செய்வதாக சொன்னீங்களே. அது போதும். இனி இந்தப் பேச்சை விட்டுவிடுவோம்."

"நீங்கள் டின்னருக்கு இருந்து விட்டு போங்க. ஸ்பெஷல் அயிட்டங்களை வர வழைக்கிறேன்."

"ஸ்பெஷல் எதுவும் தேவையில்லை. டின்னருக்கு இருக்கிறேன்."

"தாங்க்ஸ்" என்று பாட்டிலை எடுத்தான்.

"இப்பொழுதேவா?" வியப்போடு கேட்டான் பாபு.

"எர்லி டு டிரிங்க் அண்ட் எர்லி டு டை என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்." பரமசிவம்



37809 5476729 15

சிரித்தான். பாபுவுக்காக கோல்ட் ஸ்பாட்டைத் [illegible] கொண்டே "கோல்ட் ஸ்பாட் என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டான்.

"தங்க நிற மச்சம்." முறுவலுடன் சொன்னான் பாபு. அப்பொழுது அவன் மூளையில் மற்றொரு மின்னல் மின்னியது. அவனுக்கு ஏதாவது யோசனை வந்ததுமே அதை ஜாக்கிரதையாய் மூளையில் பத்திரப்படுத்திக் கொள்வான். அப்புறமாய் எப்பொழுதாவது பயன் படுத்துவான். மிகச் சிலருக்குத்தான் இந்த திறமை இருக்கும். 'தங்க நிற மச்சம்' என்று எண்ணிக் கொண்டான் மற்றொரு முறை.

பரமசிவம் முதல் பெக்கை முடித்திருந்தான். அப்பொழுதே தள்ளாடத் தொடங்கி விட்டான்.

"சொல்லுங்கள் குருவே" என்றான் பாபுவிடம்.

"என்ன சொல்லட்டும்?"

"பணம் சாம்பாதிக்கிற வழி ஏதாவது சொல்லுங்கள்."

பாபுவுக்கு சிரிப்பு வந்தது. எல்லோருக்கும் பணம் சம்பாதிப்பதென்றால் ஏன் இவ்வளவு விருப்பம்? தனக்கு மட்டும் இல்லையா? அதனால்தானே இந்த மாலை நேரத்தில் ஸ்ரீ லக்ஷ்மியோடு கழிக்காமல் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இதுவே மேலும் சில மாதங்கள் போனால் தாமதமான இரவுகள்... மன்னிப்பு வேண்டலும்.

"இவ்வளவு நேரமா யோசிப்பதற்கு?"

"நீங்க இன்னும் என்னென்ன வியாபாரம் செய்யறீங்க?" பாபு கேட்டான்.

"கேசட் வியாபாரம். அதைத் தவிர கொரியர் சர்வீஸ் கூட இருக்கு."

"கேசட் என்றால் ஆதித்யா ஆடியோ கேசட்காரங்க போலவா?"

"ஆமாம். அவங்க எங்களுக்கு போட்டியாளர்கள். எதிரியின் எதிரி நண்பனாம். அந்த விதமாக நாமிருவரும் நண்பர்கள் என்று அர்த்தம்." இரண்டாவது பெக்கை முடித்துக்கொண்டே சொன்னான் பரமசிவம். போதை ஏறிவிட்டதால் வார்த்தைகள் குழறத் தொடங்கின. "நீங்கள் என் நண்பர். என்னையும் என் சினிமாவையும் நிலைக்க வைத்தவர். உங்களை அரெஸ்ட் பண்ண வெச்சுடுவானா அந்த ஆதித்யா ஆடியோகாரன்? அவனையும், அந்த இன்ஸ்பெக்டரையும் செங்கல்பட்டு நாற்சந்தியில் நிற்க வைத்து உதைக்கச் செய்கிறேன். என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறான்?"

"அவங்க செங்கல்பட்டுக்கு வரமாட்டாங்களே?

"வர மாட்டாங்க இல்லையா. ஆமாம் வர மாட்டாங்க. இதோ பார். நான் குடித்திருக்கிறேன்னு குறைவாக எடை போடாதே. அடுத்த படம் 'ஆயிரத்தொரு இரவுகள்' என்று ரிஜிஸ்டர் பண்ணி வெச்சுட்டேன். நூறு நாள் ஓடும்."

"ஆயிரத்தோரு நாள் ஓடும் விதமாக செய்து விடலாம்."

"எப்படி? மறுபடியும் ஏதாவது திட்டம் இருக்கா?"

"இல்லை. இல்லை. அதற்குள் யோசித்துக் கொள்ளலாம் என்கிறேன்."

"யோசனை என்றதும் ஞாபகம் வருது. என் கேசட் கம்பெனிக்கும், கொரியர் கம்பெனிக்கும் லாபம் வரக்கூடிய வழியைச் சொல்வதாகச் சொன்னாயே."



"அதைத்தான் யோசித்துக்கிட்டிருந்தேன். ஒரு ஐடியா வந்திருக்கு."

பரமசிவம் உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே "இரண்டு கம்பெனிகளுக்கும் ஒரே யோசனையா?" என்று கேட்டான்.

குடித்திருக்கிறான் என்று குறைவாக எடைபோட்டு விட்டதை நினைத்துக் கொண்டே, "இரண்டிற்கும் தனித்தனி திட்டங்கள். முதலில் கேசட் கம்பெனிக்குச் சொல்கிறேன்" என்றான்.

"கொஞ்சம் இரு" என்று சொல்லி விட்டு இன்னொரு பெக்கை ஊற்றிக் கொண்டான் பரமசிவம்.

"இப்படி குடிப்பதால் என்ன லாபம் வரும் உங்களுக்கு?" அதற்குள் ஏற்பட்ட அறிமுகத்தால் கேட்டான் பாபு.

"அப்படிச் சொல்லாதே. இதில் இருக்கிறது உனக்கென்ன தெரியும்? வேண்டுமானால் நீயும் கொஞ்சம் குடித்துப் பாரு."

"வேண்டாம்." மறுப்பது போல் தலையை அசைத்தான் பாபு.

பரமசிவம் அவனை இரக்கத்தோடு பார்த்தான். பாபுவும் அவனை இரக்கத்தோடு பார்த்தான்.

"இப்போ சொல்லு" என்றான் பரமசிவம்.

"நம்ப வீடுகளில் பாத்ரூம்களில் பாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இல்லையா."

"பாத்ரூம் என்றவுடன் நினைவுக்கு வருகிறது. ஒரு நிமிஷம்" என்று எழுந்து போய் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்து "ஊம். சொல்லு" என்றான்.

"பெண்கள் பாட்டு பாடிக்கொண்டே சிக்கன் 65ஐ சமைத்தால் வீடு முழுவதும் அதன் மணம் நிரம்பி யிருக்கும்" என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

"ஏன் நிறுத்திவிட்டாய்? சொல்லு."

"ஒன்றுமில்லை. சிக்கன் 65 என்றதும் அது ஞாபகத்திற்கு வந்து உடனே அதை வரவழைக்கப் போறீங்களோ என்ற ஒரு நிமிஷம் நிறுத்தினேன்."

"வரவழைக்கட்டுமா?"

"எனக்காக இல்லை. உங்களுக்கு" என்று திட்டத்தை விளக்கத் தொடங்கினான். "சமையல் அறையிலும், பாத்ரூமிலும் பாடுவதைப் பற்றிச் சொல்லிக்கிட்டு இருந்தேன் இல்லையா. ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்குள் தானே பாடிக் கொள்ளும் வழக்கம் உண்டு. சிலர் தனியாக இருக்கும் போது உரக்கவும் பாடச் செய்வார்கள்."

"ஆமாம். என் மனைவி பாடினால் அந்தத் தெரு முழுவதும் கேட்கும்."

"அப்படிப்பட்டவர்களுக்காக நாம் கேசட்டுகளை ரிகார்டு பண்ணுவோம். அதில் குரல் இருக்காது. வெறும் மியூசிக் மட்டுமே இருக்கும்."

"அப்படி என்றால்?"

"சினிமா பாட்டுக்களை ரிகார்டிங் செய்யற ஸ்டுடியோக்களில் மியூசிக்கை ஒரு ட்ராக்கிலும், பாட்டை இன்னொரு டிராக்கிலுமாய் ரிகார்ட் பண்ணுவோம் இல்லையா."

"ஆமாம்."



"நாம் குரல் இல்லாமல் வெறும் மியூசிக்கை மட்டும் ரிகார்ட் செய்து ரிலீஸ் பண்ணலாம். அந்த கேசட்டை பெண்கள் சமையலறையில் போட்டுக் கொண்டு தாங்களே பாடுவார்கள். "அன்னக்கிளியே உன்னைத் தேடுதே" என்று பாடிக் கொண்டே சமையல் செய்வார்கள். எஸ். ஜானகி இருக்கமாட்டாள். இளையராஜா மட்டும் பின்னாலிருந்து ம்யூசிக் போட்டுக் கொண்டிருப்பார். நீங்கள் பாத்ரூமில் குளித்துக் கொண்டே "சங்கரா நாத சரீரா" என்று பாடிக் கொள்ளலாம். S.P. பாலசுப்ரமணியம் இருக்கமாட்டார். K.V. மகாதேவன் மட்டும் இருப்பார். உங்களை நீங்களே சோமயாஜுலுவாய் ஊகித்துக் கொண்டு நீராடலாம். இந்த விதமாக வெறும் ம்யூசிக் ட்ராக்கை மட்டுமே ரிகார்டு செய்து மார்க்கெட்டில் விட்டால் இளைஞர்கள் விழுந்தடித்துக்கொண்டு வந்து வாங்குவார்கள் என்பது என் உத்தேசம்."

பரமசிவம் சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். அடிக்கத்தான் போகிறானோ என்று நினைத்தான் பாபு. ஆனால் அவன் வந்து பாபுவின் காலடியில் உட்கார்ந்துகொண்டு "பிரமாதம் பாபு. எக்ஸலெண்ட்" என்றான்.

"எழுந்து கொள்ளுங்கள் சார். யாராவது பார்த்தால் நன்றாக இருக்காது" என்றான் பாபு.

"ஹீரோக்களிடம் இப்படி உட்காருவது எங்களுக்கு பழக்கம் தாம்பா. சொல்லு."

"இனி கொரியர் சர்வீஸ் பற்றிக் கேட்டீங்க இல்லையா. அந்த கம்பெனியில் உடல் ஊனமுற்றவர் களையும், சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர் களையும் வேலைக்கு வைத்துக் கொள்ளுங்கள்."

"அதனால் என்ன லாபம்?"

"ரயில்வே டிக்கெட்டில் படிக்கு பாதி சலுகை கிடைப்பதோடு துணையாய் இன்னொரு நபரை ப்ரீயாக அழைத்துக் கொண்டு போகலாம்."

பரமசிவத்திற்குத் தலை சுழன்றது. சட்டென்று எழுந்து கொண்டான். "என் மூளையே குழம்பிவிட்டது தம்பி. வா வெளியே போகலாம்."

"எங்கே?"

"சும்மா அப்படி வெளியே சுற்றிவிட்டு வருவோம்."

இருவரும் காரில் புறப்பட்டார்கள். கொஞ்சம் நேரம் வேகமாகவும், கொஞ்ச நேரம் மெதுவாகவும் ஓட்டினான். ஆழ்ந்த யோசனையில் இருந்தார் போல் தென்பட்டான்.

"உன்னோடு சேர்ந்து வியாபாரம் செய்தால் நன்றாக இருக்கும்னு தோணுது." பரமசிவம் சொன்னான்.

"எப்படி முடியும்?"

"ஏன் முடியாது?"

"அடுத்த மாதத்திலிருந்து நான் ஜெயிலில் இருப்பேன் இல்லையா?"

மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து போனான் பரமசிவம்.

"அப்படி என்றால் உனக்கு லட்ச ரூபாய் கடன் வேண்டும் என்கிறாய். எப்படித் திருப்பிக் கொடுப்பாய்?"

"என் புத்திசாலித்தனத்தின் மேல் நம்பிக்கை இருந்தால் கொடுங்கள்."



"திட்டங்கள் நிறையச் சொல்லலாம். ஆனால் நடைமுறையில் இறங்கும் போது பணம் சம்பாதிப்பது கஷ்டம். உனக்கு அந்த சாமர்த்தியம் இருக்கா இல்லையா என்பது என் சந்தேகம். என் மீது கோபம் கொள்ளாதே. நான் உன்னை நம்பி லட்ச ரூபாய் முதலீடு செய்யணும் என்றால் கொஞ்சமாவது யோசித்துக் கொள்ள வேண்டாமா?"

"ஆமாம். உங்கள் நிலைமையில் இருந்தால் நானும் அப்படித்தான் யோசிப்பேன். நீங்க என்னை எந்த விதமாக டெஸ்ட் செய்யப் போறீங்க?"

பரமசிவம் சட்டென்று காரை நிறுத்தினான். அப்பொழுது தான் கடையிலிருந்து படியிறங்கிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். அடக்க ஒடுக்கமாய், தமிழ் பண்பாட்டிற்கு எடுத்துக் காட்டாய் தலைகுனிந்தபடி போய்க் கொண்டிருந்தாள்.

"உனக்கு ஐந்து நிமிடம் டயம் தருகிறேன். அந்தப் பெண்ணின் ப்ரா சைஸைத் தெரிந்து கொண்டால் உன்னோடு சேர்ந்து பார்ட்னர்ஷிப் வைத்துக் கொள்வதற்கும், ஒரு லட்சம் தருவதற்கும் நான் தயார்" என்றான்.

"ப்ரா சைஸா?" என்றான் பாபு திகைப்படைந்து.

"உத்தேசமாய் சொன்னால் மட்டும் போறாது. அந்தப் பெண்ணைத் தன் வாயாலேயே சொல்ல வைக்கணும்."

"ஐந்து நிமிடங்களுக்குள்ளேயே?"

"இப்பவே அரை நிமிஷம் ஆகிவிட்டது."

"குறைந்த பட்சம் பத்து நிமிடங்களாவது அவகாசம் கொடுங்கள்.

"தந்தால் கண்டுபிடித்து விடுவேன் என்கிறாயா?"

"முயற்சி செய்கிறேன்."

"பார்வைக்கு நீ அழகாக இருக்கிறாய். அதற்காக அவளிடம் ரொமான்ஸாக பேசிக் கண்டுபிடிப்பது சரியில்லை."

"பத்து நிமிடங்களுக்குள் ப்ரா வரைக்கும் எப்படி சார் ரொமான்ஸ் நடக்கும்? இப்பவே ஒரு நிமிடம் ஆகிவிட்டது. போயிட்டு வரேன்" என்று காரை விட்டு இறங்கினான்.

அந்தப் பெண் அதற்குள் கொஞ்ச தூரம் போய் விட்டாள். சாலையில் நெரிசலாக இருந்தது. பாபுவுக்கு அதிகமாக நேரம் இல்லை. தான் இறங்கிய காரிலிருந்து அவளைப் போய்ச் சேருவதற்கு ஒரு நிமிடமாவது ஆகும். இந்த ஒரு நிமிடத்திற்குள் ஏதாவது ஒன்றை யோசித்து விட வேண்டும். அவனுக்கு இந்த பந்தயத்தில் தான் ஜெயிப்போமா என்ற பயம் கூட இருந்தது.

பரமசிவம் இந்த பந்தயத்தை வைத்ததுமே அவனுக்கு முதலில் எரிச்சல்தான் வந்தது. தன்னை பார்ட்னர் ஆக சேர்த்துக் கொள்வதற்கும் இந்த அர்த்தமில்லாத பந்தயத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நினைத்தான். குடித்துவிட்டு இப்படி முட்டாள் தனமான பந்தயத்தை வைத்து விட்டான் என்றுதான் முதலில் தோன்றியது.

ஆனால் பரமசிவம் வைத்த பரிசோதனையில் ஏதோ ஒரு உள் அர்த்தம் இருப்பது போல் இப்பொழுது தோன்றியது. இதைத்தான் "க்ரைஸிஸ் மேனேஜ்மெண்ட்" என்பார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமாக வியாபாரி களுக்கு அந்த விதமான "க்ரைஸிஸ்" அடிக்கடி வந்து கொண்டிருக்கும். நிமிடத்தில் முடிவு செய்ய வேண்டி யிருக்கும். ஒரு பக்கம் நேரம் கடந்து கொண்டே இருக்கும்.



இன்னொரு பக்கம் பதட்டம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். மனம் அப்பொழுது சொன்னபடி கேட்காது. வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும் என்றால் மனதை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது அவசியம்.

பரமசிவம் இதையெல்லாம் யோசிக்காமல் இருந்திருக்கலாம். மிகச் சாதாரணமாய் இந்த சவாலை விட்டிருக்கலாம். ஆனால் தனக்கு மட்டும் இது பரீட்சை.

அவள் சரியாய் இரண்டடி தொலைவில் இருந்தாள். அதற்குள் இரண்டு நிமிடங்கள் கழிந்து விட்டன. அவன் இன்னொரு அடி எடுத்து வைத்தான் அவளை நோக்கி.

அவள் மிக அழகாக இருந்தாள். ஆனால் அதையும் மீறிய அப்பாவித்தனமோ, அடக்கமோ தெரியவில்லை, அவள் அழகை மேலும் கூட்டியது. அப்படிப்பட்ட பெண்ணின் வாயிலிருந்து அவள் உள்ளாடையின் அளவை அதுவும் ஏழு நிமிடங்களுக்குள் எப்படி வரவழைப்பது என்றுதான் புரியவில்லை அவனுக்கு.

அவள் சாலையைக் குறுக்காகக் கடந்து அந்தப் பக்கமாய் போகத் தொடங்கிய போது அவன் "எக்ஸ்க்யூமி மேடம்" என்றான்.

அதிர்ந்து போனவளாய் தன்னைத்தானா என்பது போல் சுற்றிலும் பார்த்தாள்.

பாபு சினேகபூர்வமாய் முறுவலித்தான். முதல் முறையாக மைக்கின் முன்னால் நின்ற அரசியல் வாதியைப் போல் அவன் பதட்டமடைந்தாள்.

"நான் சேல்ஸ் டாக்ஸ் கமிஷனர்ஸ் ஆபீசில் குவாலிடீ கண்ட்ரோலர்" என்றான் குரலில் அதிகாரத்தை வரவழைத்துக் கொண்டு.

அந்தப் பெண் திகைப்புடன் பார்த்தாள். இன்னும் குழப்பத்திலிருந்து மீளவில்லை. இல்லாவிட்டால் சேல்ஸ் டாக்ஸ் ஆபீசில் குவாலிடீ கண்ட்ரோலராவது என்று சந்தேகம் வந்திருக்கும்.

"கடைக்காரர்கள் சேல்ஸ் டாக்ஸை ஏய்த்து விட்டு பொருட்களை விற்பதாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது. அதனால்தான் இப்படி வெளியிலிருந்து கண்காணித்து வருகிறோம். அந்தக் கடைக்காரன் உங்களுக்கு பில் தந்தானா? கையை நீட்டிக் கொண்டே கேட்டான்.

"இல்லைங்க" என்றாள் அவள் பணிவோடு.

"இல்லையா?" தன் ஏமாற்றத்தை வேறு விதமாக வெளிப்படுத்தியபடி சொன்னான்.

அவள் குறுக்காக தலையை அசைத்தாள். அவன் கம்பீரமாய் தலையைச் சாய்த்து விட்டு "உங்கள் பையிலுள்ள பொருட்களை வெளியே எடுங்க" என்றான்.

எதற்கு என்பது போல் பார்த்தாள். உடனே என்ன நினைத்துக் கொண்டாளோ பேக்கைத் திறந்து ஒவ்வொரு பொருளாய் எடுத்துக்காட்டத் தொடங்கினாள். பாபு மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான்.

அவள் வளையல்கள், ஸ்டிக்கர்கள், ஹேர் கிளிப்புகள் என்று எல்லாவற்றையும் எடுத்துக் காண்பித்தாள். அவனுக்கு அதற்கு மேல் என்ன செய்வதென்று தெரிய வில்லை. ஆழ்ந்து பெருமூச்சு விட்டான்.

தொலைவில் காரில் உட்கார்ந்து கொண்டு இதை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பரமசிவம் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான்.



ஐந்து நிமிஷம் ஆயிற்று. இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. அந்தப் பெண் பேக்கிலிருந்து பொருட்களை எடுத்துக் காட்டுவதை தொலைவிலிருந்து பரமசிவம் பார்த்தான். பாபு ஜெயித்து விடுவானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. லட்ச ரூபாய்க்காக இல்லை என்றாலும் பந்தயத்தில் தோற்பதற்கு தன்மானம் குறுக்கே வந்தது.

இரண்டு நிமிடங்களில் அந்தப் பெண்ணைக் கொண்டு கைப் பையைத் திறக்கச் செய்தவன் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் எதை வேண்டுமானாலும் செய்யக் கூடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இதை எப்படியாவது தடுத்து விடவேண்டும் என்று நினைத்தான். சரியாய் அதே சமயத்தில் பின்னாலிருந்து போலீஸ்காரர் வந்து "இது பார்க்கிங் ப்ளேஸ் இல்லை சார். காரை சீக்கிரமாய் எடுங்க" என்றான் அதட்டுவது போல்.

பரமசிவம் மூளையில் பளிச்சென்று ஒரு யோசனை மின்னியது.

"அதோ அந்த இளைஞனைப் பார்த்தீங்களா? அந்தப் பெண்ணை எப்படி அழ வைத்துக்கிட்டு இருக்கிறான் பாருங்க" என்றான்.

"போலீஸ்காரர் அந்தப் பக்கமாகக் கூர்ந்து பார்த்தார்."

"அந்தப் பெண் எனக்குத் தெரிந்தவரின் மகள். அதனால்தான் காரை நிறுத்தி விட்டுப் பார்த்துவிட்டு இருக்கேன். உங்களைப் போன்ற போலீஸ்காரர்கள் இப்படி கார்களை யார் எங்கே நிறுத்தறாங்க என்ற விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இப்படிப்பட்ட ரோட் சைட் ரோமியோக்களைக் கட்டுப்படுத் தினால் நன்றாகயிருக்கும்" என்றான்.

போலீஸ்காரர் பாபுவை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினார். பரமசிவம் வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டான். இந்தக் காட்சியைத் தன் அடுத்த படத்தில் கண்டிப்பாக புகுத்த வேண்டும் என்று அந்த நிமிடம் முடிவு செய்து விட்டான். தலையை நிமிர்த்தி போலீஸ்காரர் போன திசையைப் பார்த்தான். அவர் பாபுவை தொலைவிற்கு அழைத்துக் கொண்டு போய் மிரட்டிக் கொண்டிருந்தார். அந்தப் பெண் அதே இடத்தில் நின்று கொண்டு மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தாள்.

பரமசிவம் மறுபடியும் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். ஆறு நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் நான்கு நிமிடங்கள் தான் இருந்தன. பரமசிவம் உதட்டில் குறுநகை இன்னும் அப்படியே இருந்தது.

அங்கே நடந்தது என்னவென்றால் போலீஸ்காரர் பாபுவிடம் போய் ஒரு முறை உச்சி முதல் உள்ளங்கால் வரை கூர்ந்து பார்த்தார். அதற்குள் அந்தப் பெண் தம்மை நோக்கி வந்த போலீஸ்காரரைப் பார்த்து பயந்து போய் தொலைவில் போய் நின்றுகொண்டாள்.

போலீஸ்காரர் பரமசிவத்தின் காரை நோக்கிப் போனதையும், அங்கிருந்து தன்னை நோக்கி வந்ததையும் பார்த்ததுமே பாபுவுக்கு விஷயம் புரிந்து விட்டது. பரமசிவம் என்ன ட்ரிக் ப்ளே செய்தானோ. இப்பொழுது அவன் மனம் பாதரசத்தைப் போல் வேலை செய்யத் தொடங்கியது.

உண்மையில் அவன் ஏறக்குறைய பந்தயத்தில் தோற்றுவிட்டாற்போல் ஏமாற்றத்தில்தான் இருந்தான். எப்பொழுது அந்தப் பெண் பேக்கிலிருந்து, ப்ராவை எடுக்காமல் வளையல்கள், ஸ்டிக்கர் போன்றவற்றை



எடுத்துக்காட்டினாளோ அப்பொழுதே அவனுக்கு இனி வேறு எந்த விதத்திலேயும் தெரிந்துகொள்ள முடியாது என்று தோன்றி விட்டது. தன்னுடைய திட்டம் தோல்வி அடைந்து விட்டது என்று நினைத்துக் கொண்டான். அந்த சமயத்தில்தான் போலீஸ்காரர் அங்கு வந்தார்.

பாபுவின் கை வேகமாக பாக்கெட்டுக்குள் நுழைந்தது. கைக்கு அகப்பட்ட ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து போலீஸ்காரரின் கையில் வைத்து உள்ளங்கையை மூடிவிட்டான். அந்த வேகத்திற்கு போலீஸ்காரர் அதிர்ந்து போனார். ஆனாலும் உடனே தேறிக் கொண்டு டபாயிப்பது போல "என்னது? அந்தப் பெண்ணை நடு ரோட்டில் அழவைத்துக் கொண்டு இருக்கிறாயாமே?" என்றார்.

"அழவைக்கிறதாவது?" என்றான் பாபு மேலும் டபாயிப்பது போல். நானும் அந்தப் பெண்ணும் விரைவில் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம். வேணுமென்றால் உங்க எதிரிலேயே பேசுகிறேன். பாருங்கள்" என்று வேகமாக அந்தப் பெண்ணை நோக்கிப் போனான். அதற்குள் அந்தப் பெண் அங்கிருந்து போக முயன்று கொண்டிருந்தாள்.

"நாம்ப நினைத்ததை விட மிகப் பெரிய ராக்கெட்டே நடந்து கொண்டிருக்கு மேடம்" என்றான் குரலில் பரபரப்பை வரவழைத்துக் கொண்டு.

"என்ன?"

"இப்பொழுதுதான் போலீஸ்காரர் வந்து சொன்னார். அந்தக் கடைக்காரர் சேல்ஸ் டாக்ஸை ஏய்ப்பதோடு மட்டுமே இல்லை. கள்ள நோட்டு அச்சடிக்கிற வியாபாரத்தில் கூட பார்ட்னர் ஆக இருக்கிறானாம்.

நீங்கள் தான் பார்த்தீங்களே. உங்க எதிரிலேயே அந்த போலீஸ் காரரிடம் நூறு ரூபாய் கொடுத்து சில்லறைக்காக அனுப்பினேன்" என்றான்.

அந்தப் பெண் பயந்து போய் "ஐயோ!" எனறாள்.

பாபு ஓரக் கண்ணால் போலீஸ்காரர் இருந்த பக்கம் பார்த்தான். அவ்விருவரும் பழக்கப்பட்டவர்களைப் போல் பேசிக் கொள்வதைப் பார்த்து கிடைத்த ஐந்து ரூபாயே போதும் என்று எண்ணிக் கொண்டு போலீஸ்காரர் அங்கிருந்து போய் விட்டார்.

தொலைவில் காரில் இருந்துகொண்டு இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பரமசிவத்திற்கு விஷயம் புரியவில்லை. போலீஸ்காரரிடம் பேசிவிட்டு மறுபடியும் பாபு அந்தப் பெண்ணிடம் போனதில் தான் இந்த பந்தயத்தில் தோற்றுப் போய்க் கொண்டிருக் கிறோமோ என்ற அபிப்பிராயம் மறுபடியும் ஏற்பட்டது. வாட்சைப் பார்த்துக் கொண்டான். இன்னும் மூன்று நிமிடங்கள் தான் இருந்தன.

மூன்று நிமிஷங்களில் பாபு இந்த விஷயத்தை எப்படிக் கண்டு பிடிப்பான்? பரமசிவம் கண்களை இடுக்கிக் கொண்டு அவர்களையே பார்க்கத் தொடங் கினான்.

அங்கே பாபு அந்தப் பெண்ணிடம் "மேடம்! உங்க பெயர்?" என்று கேட்டான்.

"சீதா" என்றாள்.

"நீங்கள் அசல் சீதா பிராட்டியாரைப் போலவே இருக்கீங்க. இப்பொழுது இந்த நாடு முழுவதும் உங்கள் மீதுதான் ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் இந்த



நிமிடம் ஜான்ஸிராணியாய் மாற வேண்டும்" என்றான் ஆவேசமாக. அதற்கப்புறம் அவள் செய்ய வேண்டிய காரியத்தைச் சொன்னான்.

"ஐயோ! நானா?" என்றாள்.

"அதிக நேரம் இல்லை. இரண்டு நிமிஷம் தான் இருக்கு."

"இரண்டு நிமிடம் டயம் இருக்கா? எதுக்கு?"

பாபு நாக்கைக் கடித்துக் கொண்டே அது அப்படித் தான். சுற்றிலும் போலீசார் வளையமாய் நின்று கொண்டு இருக்காங்க. நீங்க போய் நான் சொன்ன காரியத்தைச் செய்து விட்டு வந்து விடுங்க" என்றான்.

"என்னை விட்டு விட்டு வேறு யாரையாவது பார்த்துக் கொள்ளுங்கள். இந்த மாதிரி வேலைகளை செய்ய நான் லாயக்கு இல்லை."

"நீங்க செய்ய வேண்டியது சாதாரணமான காரியம் தான். மீதியை நாங்க பார்த்துக் கொள்வோம்."

"என்னவோப்பா. என்னை இதில் இழுக்காதீங்க. வேறு யாரையாவது பாாத்துக்குங்க. அதுவும் கள்ள நோட்டு என்கிறீங்க. அதில் எல்லோரும் கொலைக் காரர்களும், குண்டர்களுமாய் இருப்பாங்க" என்று நகரப் போனாள்.

"நில்லுங்கள்" என்று கத்தினான்.

சீதாவோடு கூட தெருவில் போய்க் கொண்டிருந்த வர்களும் நின்றார்கள்.

அவன் தயங்கவில்லை. அவள் கையைப் பிடித்து பெட்டிக் கடையின் நிழலுக்கு அழைத்துக் கொண்டு போய் "கொடி" என்றான்.

"வாட்!" என்றாள்.

"புனிதமான கொடி... தாய் நாடு... தேசபக்தி... நாட்டிற்காக உயிரை விடுவது... தியாகம்... ஜனாதிபதி பதக்கம்... அமர வீரர்கள்" என்றான், சம்பந்தமே இல்லாமல்.

தனக்குத் தான் வைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறதா அல்லது அவனுக்குப் பயித்தியம் பிடித்து விட்டதா என்று சீதாவுக்கு புரியவில்லை. கண்கள் அகலமாய் விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஒரு அநியாயத்தை ஒடுக்குவதற்காக நாங்கள் சிப்பாய்களைப் போல் வெயிலிலும் மழையிலும் இப்படிக் கடை வீதிகளில் சுற்றிக் கொண்டிருக்கிறோம். போலீசார் உயிரைப் பணயமாக வைத்து எங்கள் உத்தரவிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். "ஆபரேஷன் கள்ள நோட்டுக்களுக்காக." இப்பொழுது இதன் வெற்றி உங்கள் மீதுதான்... உங்கள் மீது மட்டுமே ஆதாரப்பட்டிருக்கிறது."

காருக்குள் இருந்த பரமசிவம் மணியைப் பார்த்தான். இன்னும் ஒரு நிமிஷம் தான் இருந்தது. பாபு அந்தப் பெண்ணைப் பெட்டிக்கடை பக்கமாய் அழைத்துக் கொண்டு போய் கைகளை ஆட்டிக் கொண்டே வாதம் புரிவது போல் ஏதோ சொல்வது கண்ணில் பட்டது.

என்ன வாதாடிக் கொண்டிருக்கிறான் அவன்? கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்துகிறானா? நேரத்தைப் பார்த்தான். நாற்பத்தி ஐந்து வினாடிகள் இருந்தன. தான் ஜெயித்து விடுவோம் என்ற நம்பிக்கை அப்பொழுது தான் ஏற்பட்டது பரமசிவத்துக்கு.

"சொல்லுங்கள். நான் என்ன செய்யணும்?" சீதா பயந்துகொண்டே கேட்டாள்.



"இப்படிச் சொன்னது நன்றாகயிருக்கு" என்றான் பாபு. சட்டைப் பையிலிருந்து போனாவையும், பேப்பரையும் எடுத்து "நீங்கள் எப்படியாவது அந்த கடைக்காரனிடமிருந்து சில்லரை நோட்டை வாங்கிக் கொண்டு வர வேண்டும். ஆமாம். உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கு?"

"நூறு ரூபாய்."

"வெரிகுட். ஆடிட் ஆட்சேபணை மட்டும் இல்லை என்றால் இந்த நாட்டுக்கு தீங்கு இழைக்கும் குற்றவாளிகளை பிடிப்பதற்காக எங்க டிபார்ட்மெண்டே உங்களுக்கு நூறு ரூபாய் தந்திருக்கும். தற்சமயம் உங்களிடமுள்ள நூறைக் கொண்டு உங்களுக்குவேண்டிய பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள். அவ்வளவுதான் நீங்கள் செய்ய வேண்டியது."

"அவ்வளவுதானா?" என்றாள் நம்பமாட்டாதவளாய்.

"ஆமாம் அவ்வளவுதான். யாருக்கும் சந்தேகம் வராது. அதோடு இந்த வருஷம் ஜனாதிபதி பரிசுக்கு உங்கள் பெயர் கூட சிபாரிசு செய்யப்படும். எங்களுக்கு வேண்டியதெல்லாம் அவனிடமிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டு, ஒரு ஐந்து ரூபாய் நோட்டு இவை மட்டுமே. அவன் விரல் அடையாளங்கள் அந்த நோட்டுகளின் மேல் இருக்கும் படியாய் பார்த்துக் கொள்ளுங்கள், அது போதும்."

"அவன் அந்த நோட்டுகளை அதான் நீங்கள் கேட்ட நோட்டுகளை சில்லரையாய் தராவிட்டால்?"

"முதலில் ஒருபொருளை வாங்குங்கள். சில்லரை தருவான். நமக்கு வேண்டிய நோட்டுகளைத் தந்து விட்டால் சரி. இல்லாவிட்டால் அப்பொழுதான் நினைவுக்கு

வந்தாற் போல் இன்னொரு பொருளை வாங்குங்கள். பை தி யை நீங்க என்ன மையை பயன்படுத்துவீங்க?"

"ஐ டெக்ஸ்?"

"குட். நீங்களே ஐடெக்ஸ் கம்பெனிக்கு விளம்பரம் கொடுக்கலாம்." என்று பேப்பர் மீது ஐடெக்ஸ் ஒன்று என்று எழுதினான். பிறகு வரிசையாக கேட்டுக் கொண்டே லிஸ்ட் எழுதினான்.

"சீப்பு எந்த கம்பெனியாக இருந்தாலும் பரவா யில்லை இல்லையா?"

"சீப்புக்குக் கூட கம்பெனி பெயர் இருக்கும்னு எனக்குத் தெரியாதுங்க" என்றாள். அவளுக்கு இப்போ பயம் போய்விட்டது. பார்ப்பதற்கு பாபு சினிமா ஹீரோவைப் போல் இல்லையென்றாலும் ஏதோ புரியாத கவர்ச்சி இருந்தது அவன் பேச்சில்.

"சீப்புக்கு பிரைட் கம்பெனி சிறந்தது. ஐந்து ரூபாய் விலையுள்ளதை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் பத்து ரூபாய் தந்தால் அவன் ஐந்து ரூபாயைத் திருப்பித் தருவான். ஓ.கே.வா?"

"ஓ.கே." என்றாள் உற்சாகமாய். சாதாரணமாக மேலுக்கு இண்ட்ராவர்ட்ஸ் போல் தென்படும் பெண்கள் தீங்கு விளைவிக்காத சினேக பூர்வமான இளைஞர்களை சந்திக்க நேர்ந்தால் தம்முடைய கூட்டை விட்டு உற்சாகமாக வெளியே வருவார்கள்.

"ரப்பர் பேண்ட் எந்த கலர்? சிவப்பா கருப்பா?"

"இரண்டுமே."



"அதற்கு ஐந்து ரூபாய் நோட்டைத் திருப்பித் தருவான்னு வெச்சுப்போம்." எழுதிக்கொண்டே சொன்னான்.

"ஸ்டிக்கர்கள் எந்த கம்பெனி?"

"சில்பா."

அவன் பேனா வேகமாக நகர்ந்து கொண்டே இருந்தது.

"உங்களுக்குத் தேவையில்லை தான். இருந்தாலும் வாங்குவோம். லிப்ஸ்டிக்?"

"லாக்மே."

அவன் மளமளவென்று கேள்விகள் கேட்டுக் கொண்டே எழுதிக் கொண்டிருந்தான்.

"பௌடர்?"

"பாண்ட்ஸ்."

"சின்ன சைஸ் போதுமா?"

"போதும்."

"டூத் பேஸ்ட்?"

"க்ளோசப். மீடியம் சைஸ்." தானே சொன்னாள்.

"ஃபேர் அண்ட் லவ்லீ ஒன்று எழுகிறேன். சைஸ்?"

"ஸ்மால்."

"ப்ரா ஒரு ஜதை. சைஸ்?"

"முப்பத்தி நாலு."

“தாங்க்யூ” என்று அவன் பேப்பரைத் தந்துவிட்டான். தான் அவசரத்தில் என்ன சொல்லி விட்டாளோ? நினைவுக்கு வந்து அவள் நாக்கைக் கடித்து கொள்வதற்குள் அவன் சாலைக்கு வந்து அங்கிருந்தே விரல்களால் ஜாடை காட்டினான் மூன்று நான்கு என்று.

பரமசிவத்தால் தன் கண்களையே தன்னால் நம்ப முடியவில்லை. நேரத்தைப் பார்த்துக் கொண்டான். சரியாய் பத்து நிமிஷம் ஆகிவிட்டிருந்தது.

★ ★ ★

# 11

“நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதற்காக முதல் முறையாக வருத்தப்படுகிறேன். உண்மையாகவே சொல்கிறேன்.” சிவந்த கண்களுடன் சொன்னாள் ஸ்ரீ லக்ஷ்மி.

“கணவன் மீது இவ்வளவு தீவிரமாக கோபித்துக் கொள்ளும் பெண்கள் சின்ன வயதிலேயே பி.பி.யும், நரையும் வந்து அவதிப்படுவார்களாம்.” சிரிக்க வைப்பதற்கு முயன்றபடிச் சொன்னான் பாபு.

“கன்றாவி ஜோக்கெல்லாம் அடிக்காதீங்க. உங்களைக் கண்டாலே எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது.”

“ஏன் ?”

“ஏனா? ஒரு பெண்ணின் உள்ளாடை சைஸைத் தெரிந்து கொள்வதற்காக நடுத்தெருவில் இவ்வளவு சீப்டிரிக்குகளை பயன்படுத்தியதற்கு.”

“அந்தப் பெண்ணின் மேல் எனக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயமே இல்லை லக்ஷ்மி. ஒரு லட்சம் ரூபாயை சம்பாதிப்பதற்காக அந்த நாடகம் போட வேண்டியிருந்தது. அந்தப் பெண்ணின் வாயால் எனக்கு வேண்டியதை சொல்ல வைத்த பிறகு பரமசிவத்தின் கார் வரையில் போய்விட்டு வந்தாற் போல் நடித்து விட்டு மேலதிகாரிகளிடமிருந்து அந்தக் கடையின் மீது ரைடிங் தேவையில்லை என்று ஆணை வந்து விட்டதாய் தெரிவித்தேன். அந்த விதமாக அந்தப் பெண்ணிற்கு நூறு

ரூபாய் அனாவசியமாக செலவு ஆகாமல் தடுத்து விட்டேன்."

"நீங்க அந்தப் பெண்ணிற்கு நூறு ரூபாய் மிச்சம் செய்தீங்களா? உங்களுக்கு அந்தப் பெண்ணின் மீது அது போன்ற அபிப்பிராயம் இருக்கா இல்லையா? அதைப் பற்றி நான் கேட்கவில்லை. பணத்திற்காக நீங்க எந்த காரியத்தை வேண்டுமானாலும் செய்வீங்க என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அது போதும்."

"பணத்திற்காக இதற்கு முன் போலீஸ் ஸ்டேஷனில் உதைபட்டேன். அப்பொழுது கூட உனக்கு இவ்வளவு கோபம் வரவில்லை."

"அந்த விஷயம் வேறு. எல்லாம் முடிந்த பிறகு அந்தப் பெண் உங்களுடைய முகவரியைக் கேட்டாளா இல்லையா?"

"கேட்டாள். ஆனால் நீ நினைக்கும் எண்ணத்தில் இல்லை. வெறுமே த்ரில்லுக்காக கேட்டாள். அதுபோன்ற பெண்களின் வாழ்க்கையில் இதைவிட த்ரிதில் தரக்கூடிய நிகழ்ச்சி என்ன இருக்க முடியும்?"

கடைசியாய் சொன்னதைக் கேட்டு ஸ்ரீ லக்ஷ்மியின் கோபம் இருமடங்காகி விட்டது. "ஓஹோ... பெண்களின் வாழ்க்கையில் த்ரில் ஏற்படுத்துவதற்காக இந்த பூவுலகில் அவதாரம் எடுத்து வந்திருக்கீங்க. அப்படித்தானே."

அவன் வேகமாய் அவளை அருகில் இழுத்துக் கொண்டு "என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? நான் அவ்வளவு நேர்மை இல்லாதவனாக தென்படுகிறேனா?" ஆவேசமாக கேட்டான்.

"நேர்மை எந்த கோட்டின் அருகில் வீழ்ச்சி அடையுமோ சொல்வது ரொம்ப கடினம்."



"என்ன சொன்னாய்?" அவன் இன்னும் அருகில் இழுத்துக் கொண்டதால் அவள் முகம் அவனுக்கு அருகாமையில் வந்தது.

அவள் கண்களில் பளபளத்த ஈரத்தைப் பார்த்து அவன் மனம் கரைந்து விட்டது. தன்னையறியாமல் அவன் உதடுகள் அவள் இதழ்கள் மீது அழுந்தின. அவள் அவன் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் போட்டு அருகில் நகர்ந்து கொண்டாள். இருவருக்குமிடையே காற்று கூட நுழைய முடியாதபடி அணைப்பில் கட்டுண்டு போனார்கள். அவன் அவள் இதழ்களுக் கிடையில் ஏதோ ரகசியத்தை சோசித்துக் கொண்டிருந்தான். சின்னக் குழந்தை பொம்மைகளோடு விளைவாடுவது போல் அவன் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்ததை அவள் திருப்தியோடு கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் இந்த உலகத்திலேயே இல்லாததுபோல் கண்களை மூடிக்கொண்டு தியான நிலையில் இருந்தான். அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருக்கிறோம் என்ற நிறைவு அவளுக்கு அதிக திருப்தியைத் தந்து கொண்டிருந்தது.

"ஒரு விஷயத்தைக் கவனித்தாயா?" அவளுக்குப் பக்கத்தில் மல்லாந்து படுத்து களைப்பாறிக் கொண்டே சொன்னான்.

"என்ன?"

"வழக்கமாக அல்லாமல் சண்டை போட்டுக் கொண்டு பிறகு நமக்குள் நிகழும் கூடல்தான் மிகச் சிறப்பாய் இருக்கிறது."

"இருக்கலாம். ஆனால் கூடலால் என் கோபம் தணிந்து போய் விடும் என்று நினைக்காதீங்க."

"மைகாட்! அந்தப் பேச்சை இன்னும் நீ விடவில்லையா?"

"அது போகட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்கள்."

"என்ன?"

"என் பிரா சைஸ் என்ன?"

அவன் திடுக்கிட்டு மெதுவாக நகரப் போனான்.

"நில்லுங்கள்" என்றாள். அப்படியே திரும்பி தரையில் கிடக்கிற நம்பரை பார்த்து விடலாம்னு முயற்சி செய்யாதீங்க" என்று சொல்லிக்கொண்டே அவன் கண்களை தன் கையால் மறைத்தாள்.

"அது இல்லை ஸ்ரீ லக்ஷ்மி." ஏதோ சொல்லப் போனான்.

"எது இல்லை?" என்றாள் கோபமாய். "வெட்கமாக இல்லை? கல்யாணமாகி இவ்வளவு நாளாச்சு. இதுவரை மனைவியின் ப்ரா சைஸ் தெரியாது. அதுவே வேறு பெண்ணாக இருந்தால் தெரிந்துகொண்டு விடுவீங்க."

பாபுவுக்கு கூனிக்குறுகிப் போய் விட்டாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. "பெரும்பாலான கணவன்மார்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம் ஸ்ரீ லக்ஷ்மி" என்றான் தேற்றுவது போல்.

"பெரும்பாலானவர்களுக்குத் தெரியாமல் போவது வேறு. உங்களுக்குத் தெரியாமல் போவது வேறு. இது உங்கள் அலட்சியப் போக்கைக் காட்டுகிறது. ஒரு மனைவி எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்வாள். ஆனால் கணவன் தன்பால் அலட்சியமாக இருப்பதை மட்டும்



சகித்துக் கொள்ள மாட்டாள். உங்களுக்கு இருபத்தி நான்கு மணி நேரம் டயம் தருகிறேன். அதற்குள் சொல்ல முடியாவிட்டால் உங்களை விவாகரத்து செய்து விடுகிறேன். சீரியஸாகச் சொல்கிறேன்" என்று எழுந்து கொண்டாள்.

"எங்கே எழுந்து போகிறாய்?"

"இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு என் உள்ளாடைகளை யெல்லாம் ஒளித்து வைப்பதற்கு."

"தேவையில்லை. சொல்கிறேன்" என்று ஒரு வினாடி நிறுத்தி" இருபத்தி எட்டு என்றான்.

அவன் கன்னம் சுளீரென்றது. ஏற்கெனவே மல்லாந்து வாகாய் படுத்துக் கொண்டிருந்ததால் ஐந்து விரல்களும் பதிந்து போயிருந்தன. திகைத்துப் போய் "எதற்காக இப்படி அடித்தாய்? என்ன ஆச்சு இப்பொழுது?" என்றான்.

"நான் பனியனை போட்டுக் கொண்டிருந்தார் போலவா தென்பட்டேன் இவ்வளவு நாளாய்?" என்றாள் கோபமாய்.

பாபுவுக்கு தன்னுடைய தவறு புரிந்துவிட்டது. "நாற்பத்தி இரண்டு" என்றான்.

"மறுபடியும் என்ன ஆச்சு?" ரோஷத்துடன் கேட்டான்.

"பத்து குழந்தைகளைப் பெற்று பலுனைப் போல் உடல் பெருத்துப் போய் விட்ட அம்மாமியைப் போல் தென்படுகிறேனா?" என்றாள்.

"கடவுளே" என்று நொந்து கொண்டான் பாபு.

★ ★ ★

**அ**ன்று மாலையில் அவன் அதே கடையருகில் காத்துக் கொண்டிருந்தான். அவள் மறுபடியும் கண்ணில் படுவாளோ மாட்டாளோ என்று நினைத்துக் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாய் கண்ணில் பட்டாள்.

முறுவலுடன் "குட் ஈவினிங்" என்றாள் சீதா.

"குட் ஈ வினிங்"

"என்ன ஆச்சு உங்கள் ரைடிங்?"

"மேலதிகாரிகளிடமிருந்து அனுமதி வாங்கி விட்டேன். அவர்களைவிடப் போவதில்லை" என்றான் கையிலிருந்த பாக்கெட்டை நீட்டிக் கொண்டே.

"என்ன இது?" கேட்டாள்.

"ரப்பர் பேண்ட்ஸ், ஸ்டிக்கர்ஸ், பௌடர், லிப்ஸ்டிக்."

"இதெல்லாம் எனக்கெதற்கு?" வியப்போடு கேட்டாள்.

"எங்கள் டிபார்ட்மெண்ட் சார்பில் சிறிய அன்பளிப்பு. நிறைய பேர் நாட்டிற்கு உதவி செய்யணும் என்றால் அதேதோ தங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயம் என்று நினைப்பார்கள். நீங்க அப்படி இல்லை. அதனால்தான் உங்களுக்கு இந்த அன்பளிப்பு."

"தாங்க்ஸ்."

"ஒருக்கால் என்னால் உங்களை இனிமேல் சந்திக்க முடியாமல் போகலாம் மிஸ் சீதா. என் வாழ்க்கையில் நான் சந்தித்த மிக சாத்வீகமான பெண் நீங்கதான். நம் நட்பின் கடைசி நினைவாக ஒரு கப் காபி குடிக்கலாமா?"



அவள் சற்று தயங்கிவிட்டு "சரி" என்றாள்.

"இருவரும் ஓட்டலில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டார்கள்."

"சொல்லுங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்றான்.

"நான் காபி குடிக்க மாட்டேன்."

"டிரிங்க்ஸ்?"

"கோல்ட் ஸ்பாட்" என்றாள்.

அலை வந்து மோதினாற் போல் அந்த ஞாபகம் மறுபடியும் வந்தது.

கோல்ட் ஸ்பாட்... தங்க நிற மச்சம்!

"என்ன யோசிக்கிறீங்க?" அவன் நிசப்தமாக இருந்ததைப் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

"சமீபத்தில் ஒரு புத்தகத்தை படித்தேன் மச்சத்தைப் பற்றி."

"என்ன?" புரியாதவள் போல் பார்த்தாள்.

"எந்தெந்த மச்சம் எங்கெங்கே இருந்தால் என்ன பலன் ஏற்படும் என்று விவரமாக எழுதியிருந்தது அதில். உங்களுக்கு வலது புறங்கையின் மீது தங்க நிற மச்சம் கோல்ட் ஸ்பாட் இருக்கு இல்லையா. அப்படி இருந்தால் உங்களுக்கு வரப் போகிற கணவன் ரொம்ப புத்திசாலியாகவும், நல்லவனாகவும், சாதுவாகவும் இருப்பான்னு அர்த்தம்."

அந்தப் பெண்ணின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. "இன்னும்?" என்றாள் உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு.

"அந்தப் புத்தகத்தில் ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் போட்டிருந்தது. என்னுடையதைப் படித்தேன் அவ்வளவுதான்."

அவள் முகத்தில் ஏமாற்றம் தென்பட்டது. "சரி, போட்டும்" என்றாள்.

அவன் கொஞ்சம் மௌனமாக இருந்து விட்டு, "நீங்க ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை என்றால் நான் பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தைக் கூட கொஞ்சம் படித்தேன், ஆர்வத்தை அடக்க முடியாமல் ஆங்காங்கே" மனதிற்குள் கடவுளை மூடிக்கொண்டே சொன்னான்.

"என்ன எழுதியிருந்தது?"

"இடது பக்கம் காலர் எலும்புக்கு இரண்டு அங்குலம் கீழே மச்சம் இருக்கும் பெண்ணுக்கு வெளிநாட்டில் வேலை செய்பவன் கணவனாய் வருவான். வலது பக்கம் மச்சம் இருந்தால் நன்றாக சமையல் செய்பவன் வருவானாம்."

கடவுள் அவன் வேண்டுகோளை காது கொடுத்து கேட்டு விட்டார் போலும். அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததுமே அப்படி ஏதாவது இருக்க வாய்ப்பு இருப்பது போல் தோன்றிற்று.

"மேலும் ஒரு சின்ன சிறப்பு விஷயம் கூட இருக்கு" என்றான். "அதுவே மூன்று அங்குலம் கீழே இருந்தால் அந்தப் பெண்ணே வெளிநாட்டிற்கு வேலைக்காக போவாளாம். வலது பக்கமாக இருந்தால் சமையல் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் அவளுக்குக் கீழே பத்து பேர் வேலைக்காரர்கள் இருப்பார்களாம்."

வெயிட்டர் கோல்ட் ஸ்பாட் கொண்டு வந்து இருவருக்கும் முன்னால் வைத்தான்.



"எக்ஸ் க்யூஸ் மீ" என்று அவன் எழுந்து கொண்டு வாஷ்பேசின் கண்ணாடி இருந்த அறைக்குப் போனான். அங்கிருந்து கண்ணாடி வழியாய் அவளையே பார்க்கத் தொடங்கினான்.

ஓட்டல் காலியாய் இருந்தது. அவளுக்கு அவன் கண்ணில் படவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு சாதாரணமாக பார்ப்பதுபோல் கழுத்திற்குக் கீழே பார்த்துக் கொண்டாள். அங்கே எதுவும் தென்படாமல் போகவே மேலும் காஷுவலாய் உள்ளாடையின் பட்டையை சரி செய்து கொள்வது போல் உள்ளே பார்த்தாள்.

மச்சம் இரண்டங்குலத்திற்குக் கீழே இருந்ததா மூன்றங்குலத்திற்குக் கீழே இருந்ததா என்று தெரிந்து கொண்டு விட்டாள் போலும். அவள் முகம் ரகசியத்தை கண்டுபிடித்து விட்டாற் போல் மலர்ந்து விட்டது.

சீதாவைப் போன்ற பெண்ணை வார்த்தைகளால் ஏமாற்றியதற்கு மனதிற்குள்ளேயே கடவுளிடம் மன்னிப்பு கேட்டு விட்டு அங்கிருந்து வெளியே வந்தான். அவன் முகம் கூட ஏதோ ரகசியத்தை சோதித்து விட்டாற் போல் மலர்ந்திருந்தது.

இருவரும் வெளியே வந்ததும் "நான் போய் வருகிறேன். தாங்க்ஸ்" என்றான் கைகளைக் கூப்பி.

அவன் நகரப் போன பொழுது "நீங்கள் தவறாக நினைக்கவில்லை என்றால் ஒரு விஷயம் சொல்ல நினைக்கிறேன்" என்றாள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு.

அவன் நின்றான்.

"நீங்க சின்ன வயதில் கல்யாணம் செய்து கொண்டு விட்டதால் நிறைய பெண்களுக்கு ஒரு அபூர்வமான பாய்பிரண்ட் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லாமல் செய்து விட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

★ ★ ★

பாபு திரும்பி வந்த போது ஸ்ரீ லக்ஷ்மி ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். "ஏன் தாமதமாச்சு?" என்று கேட்டாள்.

முதல் நாளிரவு நடந்த அநுபவத்தால் அசல் விஷயத்தைச் சொல்லாமல் "என்ன எழுதிக் கொண்டிருக் கிறாய்?" என்று கேட்டான்.

"விவாகரத்து நோட்டீஸ்."

"அதான் நாளை காலை வரையில் டயம் இருக்கே?" என்றான்.

"அவ்வளவு தைரியம் எனோ?"

"பார்க்கத் தானே போகிறாய்" என்றவன் அவளை அப்படியே இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு அறைக்குள் சென்றான்.

"ஐயையோ! சாப்பாடு?" பதட்டமாக சொன்னாள்.

"இந்தச் சாப்பாடு ஆன பிறகு."

சற்று நேரம் கழித்து அவள் போர்வையால் போர்த்திக் கொண்டாள். ஒரு வினாடி நிசப்தத்திற்குப் பிறகு மெல்லிய குரலில் "உன் நம்பரைச் சொல்லட்டுமா?" என்றான்.



அவன் திடீரென்று அப்படிக் கேட்டதும் அவள் திடுக்கிட்டுப் போய் அவன் பக்கம் திரும்பி, "தெரிந்து விட்டதா?" என்று கேட்டாள்.

"முப்பத்தி ஆறு" பயந்து கொண்டே மறுபடியும் அவள் கன்னத்தைப் பதம் பார்த்து விடுவாளோ என்று அஞ்சியபடி சொன்னான்.

ஆனால் அவள் பரபரப்படைந்தவளாய், "எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள்.

அவன் வெளியே பதில் சொல்லவில்லை. ஆனால் மனதிற்குள் எண்ணிக் கொண்டான். 'காமா' ஹாக்கி பால என்றால் ஆல்ஃபா கிரிக்கெட் பால். ஆல்ஃபா அந்தப் பெண் என்றெண்ணிக் கொண்டால் காமாவின் பரிமாணம் அவனுக்குத் திருமணம் ஆன முதல் நாளிலிருந்து தெரியும். ஆல்ஃபாவின் பரிமானம் முப்பத்தி நாலு என்று நேற்று மாலை ஓட்டலில் தெரிந்து விட்டது. பிறகு கணக்குப் போடுவது மிகச் சுலபம்.

"ஏன் பேசமாட்டேங்கிறீங்க? எப்படித் தெரிந்தது?" மறுபடியும் கேட்டாள்.

"அது அப்படித்தான்."

"நேற்று தெரியாதது இன்னிக்கு எப்படித் தெரிந்தது?" இரட்டிப்பது போல் கேட்டாள்.

"நிறைய கணக்குப் போட்டேன். துளசி இதழைத் தராசில் போடுவதற்கு முன்னால் ருக்மிணியோ சத்யபாமாவோ 'என் நாதரின் எடை எனக்குத் தெரியாதா சுவாமி' என்று நாரதரிடம் சொன்னாற் போல் இவ்வளவு தூரம் கூட கணக்குப் போட முடியாதா என்னால்?"

"பின்னே அந்த கணக்கு ஏதோ நேற்றே போட்டு விட்டுச் சொல்லியிருக்கலாம் இல்லையா?" குறுக்கு விசாரணை செய்தாள்.

"நேற்றைக்கு ஆல்ஃபா பற்றித் தெரியாதே? வாய்த் தவறி சொல்லி விட்டு சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"ஆல்ஃபாவா? அதென்னது?" சந்தேகத்துடன் கேட்டாள்."

அவன் அதற்கு பதில் சொல்லவில்லை. மேலுக்கு மட்டும் "காமா/ஆல்ஃபா X 34/36" என்றான்.

"எனக்கொன்றும் புரியவில்லை." என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை. புரியும் படியாய்ச் சொன்னால் அடுத்த நாள் கண்டிப்பாக விவாகரத்து நோட்டீஸ் கொடுத்து விடுவாள் என்று தெரியும்.

* * *

# 12

ஸ்ரீ பாபு கவலையுடன் ஓட்டலில் உட்கார்ந்திருந்தான். அவன் கவலைக்குக் காரணம் பெரிய விஷயம் தான்.

லட்ச ரூபாயை முதலீடு செய்து வங்கியிலிருந்து பத்து லட்சம் ரூபாயை கடனாகக் பெறுவது மிகவும் சுலபம் என்று நினைத்திருந்தான். ஆனால் அது அவ்வளவு சுலபம் இல்லை என்று தெரிந்து விட்டது.

பாங்க் மேனேஜர் ரொம்பவும் கண்டிப்பானவர். எவ்வளவு முயன்ற போதிலும் மசியவில்லை. ஒரு ரூபாய் கூட கடன் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்.

வெயிட்டர் வந்த போது ஒரு கப் தேநீருக்கு ஆர்டர் கொடுத்தான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு தேநீர் வந்தது. ஆர்வமில்லாமலேயே குடிக்கத் தொடங்கினான்.

அதற்குள் எதிரே ஒரு தாடிக்காரன் வந்து உட்கார்ந்து கொண்டு தானும் தேநீருக்கு ஆர்டர் கொடுத்தான். அந்த நபரை எங்கேயோ பார்த்தாற்போல் இருந்தது.

"ஜப்பான் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங் புத்தகத்திற்குப் பின்னால் உங்கள் போட்டோவைப் பார்த்தேன். அது நீங்கள் தானே."

"ஆமாம்."

பாபு பரபரப்படைந்தவனாய் "நீங்க.. நீங்கள் காந்திதானே" என்றான்.

அவன் சிரித்துவிட்டு "ஆமாம்" என்றான்.

பாபு துடிப்போடு "நீங்கள் இவ்வளவு சாதாரண மான ஓட்டலுக்கு வந்திருக்கீங்களே. ஏன்?" என்றான்.

"உங்களுக்கு ஏன் அந்த சந்தேகம் வந்தது?"

"ஐம்பது லட்சம் சம்பாதித்த நீங்கள்..." பாதியில் நிறுத்திவிட்டான்.

"ஆமாம். அப்போ நான் காபிடலிஸ்ட் ஆக இருந்தேன். இப்போ என் புத்தகங்களை சொந்தமாக பிரசுரித்துக் கொள்ளும் எழுத்தாளன். அதுதான் வித்தியாசம்" என்றான் காந்தி. புத்திசாலித்தனத்தை பயன்படுத்திக் கொள்பவன் காபிடலிஸ்ட். அதை பிறருக்கு எடுத்துச் சொல்கிறவன் எழுத்தாளன்."

"உங்கள் மீது எனக்கு ரொம்ப கோபம் வந்தது உண்மைதான். ஆனால் அப்புறமாய் யோசித்துப் பார்த்த பொழுது என் முட்டாள் தனத்திற்கு எனக்கே சிரிப்பு வந்தது. ஜப்பானில் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங் என்று நீங்கள் எழுதுவதாவது? அதை நாங்கள் நம்பி அதில் எழுதியிருந்தது போல் நடந்து கொள்வதாவது?" வெட்கத்தோடு சொன்னான்.

காந்தி கூட நொந்து கொண்டாற்போல் தென் பட்டான். "சாரி. நான் அதை எழுதிய போது யாராவது அதைக் கடைப்பிடிப்பாங்க என்று நினைக்கவில்லை. வேடிக்கையாகப் படித்து விட்டு தூக்கிப் போட்டு விடுவார்கள் என்று நினைத்தேன்."

"எனக்கு இன்னும் ஒரு விஷயம் புரியவில்லை. ஐம்பது லட்சம் சம்பாதித்த நீங்கள் இப்படி ஏன் மாறிப் போயிட்டீங்க?"



"அதான் சொன்னேனே. தினசரி தேவைகள் நிறை வேறி விட்ட பிறகு எந்தச் சந்தோஷமாகயிருந்தாலும் அதன் மூலமாய் கிடைக்கிற திருப்தி ஒன்றுதான். விலையுயர்ந்த பாரில் உட்கார்ந்துகொண்டு குடிப்பது எவ்வளவு சந்தோஷத்தைத் தருமோ அதே அளவு சந்தோஷத்தைத்தான் தரும் இராணி ஓட்டலில் உட்கார்ந்து தேநீர் குடிப்பதும். அப்பொழுது த்ரில்லுக்காக ஏதோ செய்தோம். இப்போ நிம்மதியாக இருக்கிறது வாழ்க்கை."

பாபு வியப்படைந்து "த்ரில்லுக்காகக் கூட பணம் சம்பாதிப்பாங்களா?" என்று கேட்டான்.

"ஒரு லெவலைத் தாண்டி விட்ட பிறகு பணத்தின் தேவைதான் என்ன இருக்கு?"

'நானும் அந்த லெவலுக்கு எப்பொழுது வர முடியுமோ' என்றெண்ணிக் கொண்டான் பாபு. எதிரே இருந்த காந்தியை பரிசீலிப்பது போல் பார்த்தான். காந்தியின் கண்களில் கூர்மை இல்லை. நிர்மலமாக இருந்தன. ஒரு காலத்தில் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சை ஆட்டி வைத்த மூளை, வெள்ளம் வடிந்து விட்டபின் அமைதி யாகி விட்ட நதியைப் போல் அவன் இமைகளுக்குப் பின்னால் சலனமில்லாமல் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

பாபுவுக்கு சந்தேகம் வந்தது. உடனேயே தன் சந்தேகத்தை நினைத்து தனக்கே வெட்கம் ஏற்பட்டது.

"என்ன யோசிக்கிறாய்?" காந்தி கேட்டான்.

"ஒன்றுமில்லை சார்."

"நீ என்ன யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். சாதாரணமாக ஒரு துறையில் மேலும் முன்னேறுவதற்கு எதுவுமே இல்லாதவன் அல்லது அந்தத் துறையில்

தோல்வி அடைந்தவனும் அதன்பால் விரக்தி மனப்பான்மையை வளர்த்துக் கொள்வான். சினிமாத் துறையில் தோல்வி அடைந்து ஊர் திரும்பிய எழுத்தாளர்கள் அந்தத் துறையின் மோசடியைத் தாங்க முடியாமல் வந்து விட்டதாகச் சொல்லிக் கொள்வார்கள். கதைகள் பிரசுரிக்கப்படாமல் திரும்பப் பெற்றுக் கொண்ட எழுத்தாளர்கள் இலக்கியமே கெட்டுப் போய் விட்டது என்பார்கள். நானும் கூட அப்படி தோல்வி அடைந்து இது போல் வேதாந்தம் பேசுகிறேன் என்று நினைக்கிறாய். அப்படித்தானே."

இல்லையென்று மறுக்கவில்லை பாபு. அப்படிச் சொல்லி ஆத்ம வஞ்சனை செய்து கொள்வானேன் என்று பேசாமலிருந்து விட்டான்.

காந்தி முறுவலித்தான். "நீ கூட பணம் சம்பாதிப்பதில் குறியாய் இருக்கிறாய் இல்லையா. நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொல்லு."

இதுதான் மூளைக்கு பரீட்சை என்று தெரியும். பாபுவுக்கு. "கேளுங்கள்" என்றான்.

காந்தி கேட்டான். "நீ பரமசிவம் என்ற தயாரிப்பாளருடன் ஆடியோ கம்பெனியில் பார்ட்னர் ஷிப் எடுத்துக் கொள்ளப் போகிறாய் என்று நினைத்துக் கொள். சும்மா நினைத்துக்கொள். அதில் உன் முதலீடு கூட அவன் மூலமாகவேதான் சம்பாதிக்கணும். உன் கையிருப்பிலிருந்து எதுவும் போடக் கூடாது. அவனுக்கு எந்த நஷ்டமும் இல்லாமல் ஒரு லட்ச ரூபாயை அவன் மூலமாகவே சம்பாதிக்கிற வழியைச் சொல்லு."

பாபுவுக்கு பகீரென்றது. கடைசி வரையில் மிகச் சுலபமான விஷயம் என்று நினைத்திருந்தான். எதிராளிக்கு



எந்த நஷ்டமும் இல்லாமல் சம்பாதிக்க வேண்டும் என்று சொன்னதும் அதிலுள்ள கஷ்டம் மலையாய்த் தென்பட்டது.

பாபு கேட்டான். "நீங்கள் ஐம்பது லட்சம் சம்பாதிப்பதாய் சவால் விட்ட பந்தயத்திற்காக அந்தக் காலத்தில் நிறைய திட்டங்கள் போட்டீங்க இல்லையா?"

"ஆமாம்."

"ஹாரிகா என்ற பெண்ணிற்காக!"

காந்தி சிரித்து விட்டு "இன்னும் அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தால் என் மனைவி என்னை வீட்டுக்குள்ளேயே விட மாட்டாள். என்ன சந்தேகம்? கேளு" என்றான்.

"கடைசியில் ஸ்கூட்டர்களுக்காக டிபாஸிட் கலெக்ட் செய்து, ஐம்பது லட்சங்களை சம்பாதித்தீங்க. நினைவு இருக்கா?"

"இருக்கு. ஏன்?"

"டிபாஸிட்டுகள் கஸ்டமர்களின் பணம் இல்லையா. அது உங்களுடையது எப்படி ஆகும்? இப்படிக் கேட்கிறதற்காக மன்னித்து விடுங்க. இந்தக் கேள்வியை ரொம்ப நாளாக கேட்கணும் என்றிருந்தேன். இன்றைக்கு தான் உங்களைச் சந்திக்க முடிந்தது."

"அந்தக் காலத்தில் ஸ்கூட்டரின் விலை பதினைந் தாயிரமாக இருந்தது. அதில் ஆயிரம் ரூபாய் எங்களுடைய லாபம், அவங்க கட்டிய டிபாஸிட் பணம் ஐநூறு ரூபாய் எங்களுடைய லாபத்தின் பகுதிதானே. அதுதான் எங்களுடைய முதலீடும் கூட" சுருக்கமாக விவரித்தான்.

"ஆனால் டிபாஸிட் பணத்தைத் திருப்பித் தரணும் இல்லையா."

"அது ஷேர்களுக்கு. ஷேர்கள் அலாட் ஆகாமல் போனால் கம்பெனி அந்தப் பணத்தைத் திருப்பித் தரணும். இதில் அப்படி இல்லை. அப்ளிகேஷன் போட்ட ஒவ்வொருத்தருக்கும் ஸ்கூட்டர் தருகிறோம் இல்லையா."

"நீங்கள் கேட்ட கேள்விக்கு எனக்கு ஒரு யோசனை வந்தது" என்றான் பாபு.

காந்தி கைக் கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே "சொல்லு" என்றான்.

"எங்கள் பார்ட்னர் எடுக்கிற சினிமாவில் விளம்பரங்களை சேகரித்துத் தருவேன். கிரிக்கெட் மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் அணிந்து கொள்வது போல் எங்கள் ஹீரோ எம்.ஆர்.எஃப். என்று எழுதியிருக்கும் ஷர்ட்டுகளை போட்டிருப்பார். அதற்காக எம்.ஆர்.எஃப் காரங்க எனக்கு இருபத்தி ஐந்தாயிரம் தருவாங்க. கதாநாயகியின் அப்பா வீட்டில் ஒனிடா டி.வி. இருக்கும். ஹீரோவும் ஹீரோயினும் காம்ப்ளான் விளம்பரப் பலகையின் கீழே டூயெட் பாடுவார்கள். இந்த விதமாக பல கம்பெனிகளிடமிருந்து லட்ச ரூபாய் வரை சம்பாதித்துக் கொள்வேன். டைரக்டருக்கு ஏதாவது ஸ்காட்ச் பார்ட்டி கொடுத்தால் அவரும் எனக்கு ஒத்துழைப்பு தருவார்."

"குட்" என்றான் காந்தி. இந்த யோசனை எனக்குச் சொல்வதற்கு நீ ஐந்து நிமிஷங்கள் யோசிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது நீ கேள். நான் கேட்டாற் போலவே எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கலாம்."



பாபுவுக்குப் புரிந்துவிட்டது. 'திறமை குறைந்து விட்டதால் நான் ஒன்றும் ரிடையர் ஆகவில்லை. உன்னைவிட என் மூளை கூர்மையாக இருக்கிறது' என்று சொல்ல விரும்புகிறேன்.

பாபு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு "ஒரு வங்கியிலிருந்து பத்து நாட்களுக்குள் பத்து லட்சம் சம்பாதிப்பது எப்படி?" என்றான்.

"வேறென்ன? கடன் வேண்டுமென்று அப்ளிகேஷன் போட்டுத்தான்" என்று எளிதாகச் சொல்லி விட்டான்.

"எந்த செக்யூரிடியும் இல்லாமல் யார் கடன் தருவாங்க?"

"கோடவுனில் இருக்கிற சரக்குதான் செக்யூரிட்டி."

"சார்! நீங்க என்னை பேச்சால் ஆழ்த்தி நேரத்தை கடத்தறீங்க. நான் கேட்ட கேள்விக்கு அர்த்தம் உங்களுக்குத் தெரியும். முன்பின் தெரியாத நபருக்கு எந்த வங்கிதான் பத்தே நாட்களில் பத்து லட்சம் கடன் தரும்? அப்படிக் கடன் தரவேண்டுமென்றால் என்ன செய்யணும்? ஐந்து வினாடிகள் டயம் தருகிறேன். இல்லாவிட்டால் நீங்க தோற்று விட்டாற்போல்தான்" என்றான்.

காந்தி சிரித்து விட்டு "ஜப்பானிஸ் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங்" என்றான்.

பாபு வியப்போடு "அதற்கும் நான் கேட்ட கேள்விக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான்.

காந்தி இன்னும் சிரித்துக் கொண்டே "ஐந்து வினாடிகள் டயம் என்றாய். அதற்குள் சொன்னேன். அதை விட விவரமாய் சொல்லணும் என்றால் ஐந்து வினாடிகள் போறாதே" என்றான்.

"உங்கள் மனதில் ஏதோ யோசனை இருக்கிறது. சொல்லுங்கள் ப்ளிஸ்."

"சொல்கிறேன். கோடவுன் சரக்கின் மீது கடன் தருவதற்கு அதுவும் 'இரும்பு' மீது தருவதற்கு ஆட்பேசணை என்ன?"

"முன்பின் தெரியாதவங்களுக்கு எப்படித் தருவார்கள்? அது கூட இல்லை பிரச்னை. மேலிடத்தி லிருந்து சிபாரிசு வேண்டும் அல்லது ஏதாவது சொத்தை அடமானம் வைக்கணும்."

"கடன் தருகிற அதிகாரம் யாருக்கு இருக்கு?"

"மேனேஜருக்குத்தான். அதை முன்னாடியே விசாரித்து விட்டேன்."

"மேனேஜர் எப்படிப் பட்டவர்?" காந்தி கேட்டான்.

பாபு சற்று தயங்கிவிட்டு சொல்லத் தொடங்கினான். "அங்கேதான் அடி வாங்கினேன் சார். ஒரு மாதத்திற்கு முன்னால் நானும் லக்ஷ்மியும் சேர்ந்து ஓபேராய் ஒட்டலுக்கு போனோம்."

"லக்ஷ்மி யாரு?"

"என் மனைவி."

"ஓ.ஹோ. உன் மனைவியின் பெயர் கூட லக்ஷ்மிதானா? மேலே சொல்லு."

"அங்கே நான் இந்த மேனேஜரையும், அவர் மனைவியையும் பார்த்தேன். அவர்களுடைய பத்து வய மகன், மகளுடன் வந்திருந்தார்கள். அதுதான் முதல் தடவையாய் ஒரு விலையுயர்ந்த ஓட்டலுக்கு வந்திருப்பது போல் தோன்றியது."



"ஒரு பெரிய வங்கியின் மேனேஜர் ஸ்டார் ஓட்டலுக்கு குடும்பத்துடன் வந்தது ஒன்றும் ஆச்சரியமான விஷயம் இல்லையே?"

"இல்லை. அவர்கள் நடந்து கொண்ட விதம் தான் வேடிக்கையாக இருந்தது. மேனேஜர் தேவைக்கு அதிகமாக மிடுக்காய், ரிசர்வ்ட் ஆக இருந்தார். மனைவியோ தம் குழந்தைகளை மதிப்பாக காட்ட வேண்டுமென்று தவித்துக் கொண்டிருந்தாள். குழந்தை களோ காணாததைக் கண்டது போல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். 'அம்மா! ஐஸ் க்ரீம்" என்று மகன் கேட்டபோது தாய் சங்கடத்துடன் தடுத்துக் கொண்டிருந்தாள்."

"வேடிக்கையாக இருக்கே?" என்றான் காந்தி யோசித்தபடியே.

"வேடிக்கை ஒன்றுமில்லை சார். அவர்களோடு கூட இரண்டு வடநாட்டுக்காரர்கள் இருந்தார்கள். அந்த சர்தார்ஜியையும், குஜராத்தியையும் பார்த்ததுமே தெரிந்து விட்டது. அந்த வங்கியில் கடன் வாங்குவதற்காக வந்திருக்கிறார்கள் என்று. குஜராத்திக்காரன்! பெஹன் பெஹன்' என்று அளவுக்கு மீறி மரியாதையைக் காட்டிக் கொண்டிருந்தார். பாங்க் மேனேஜர் மட்டும் இந்த மாதிரி சூழ்நிலை தனக்கு மிகவும் பழக்கப்பட்டது தான் என்பது போல் சர்தார்ஜியுடன் சண்டிகாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" ஆச்சரியத்துடன் கேட்டான் காந்தி.

"எனக்கு அந்த ஆறு பேரையும் பார்த்த போது வேடிக்கையாய் இருந்தது. பக்கத்து மேஜைதானே. காதைக் கொஞ்சம் அந்தப் பக்கமாக போட்டுவைத்தேன். அவங்க

ஐ.டி.பி.ஐ. யைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தாங்க. அங்கே கடன் சாங்க்ஷன் ஆக வேண்டு மென்றால் சில ஊழியர்களுக்கு கண்டிப்பாக ஷேர்களை அலாட் பண்ணவேண்டுமாம்."

"ஆமாம். இது ஒரு புது விதமான லஞ்சம். மேலுக்கு லஞ்சம் போல் தென்படாது. ஷேர்கள் கைக்கு வந்ததுமே அவற்றை ப்ரீமியத்திற்கு விற்று ஊழியர்கள் பங்கு போட்டுக் கொள்வார்கள்."

"அதைப் பற்றித்தான் பேசிக்கொண்டு இருந்தார்கள். மேனேஜர் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு மகன் தன்னுடைய உடையின் மீது இறைத்துக் கொண்டிருந்த நூடுல்ஸைப் பார்த்துக் கொண்டே "அப்படியா! ஐ ஸீ" என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவர் மனைவி நாசூக்காய் கைக்குட்டையால் துடைக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். சர்தார்ஜி இதை யெல்லாம் கவனிக்காதவரைப் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு இவர்களுடைய உரையாடலை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். மனதில் மட்டும் நிச்சயமாய் 'டேய் பைத்தியக்காரா! இப்போ நீ செய்து கொண்டிருப்பது கூட அது தானே' என்று நினைத்துக் கொண்டிருப்பார். ஆகமொத்தம் கடன் வாங்கிக் கொள்பவர்கள் மேல் படியில் இருப்பது போலவும் கொடுக்கிறவர் பிச்சை எடுக்கிறவரைப் போலவும் அங்கே காட்சியளித்தார்கள்.

"அதற்குள் பில் வந்தது. மேனேஜர் பார்த்தும் பார்க்காதவரைப் போல் ஓரக் கண்ணால் ஒரு பார்வையை அதன் மீது வீசினார். இன்னும் கொஞ்சம் கம்பீரமாய் சோம்பை எடுத்து வாயில் போட்டு மெல்லத் தொடங்கினார். பிறகு அவர்கள் போய் விட்டார்கள். அதற்குள் எங்கள் டின்னரும் முடிந்து விட்டது.



சுவிட்சர்லாந்திலிருந்து திரும்பி வந்த பிறகு எங்களிடம் எஞ்சியிருந்த கடைசிப் பணம் தான் அது.

நாங்களிருவரும் வெளியே வந்து கொண்டு இருந்த போது கார் அருகில் அவர்கள் மேனேஜர் குடும்பத்திற்கு மரியாதையோடு விடை கொடுத்துக் கொண்டிருந் தார்கள். காரின் மீது வங்கியின் பெயர் இருந்தது. கார் போனதுமே அவர்கள் என்னைத் தாண்டி போய் கொண்டே "கல் ஜாகே ஏ பேப்பர் ஜல்தி ஃபைனலைஸ் கர்வானா" என்று சொன்னது என் காதில் விழுந்தது. என் கணிப்பு சரியாய் இருந்ததை நினைத்து சந்தோஷப் பட்டேன். சின்ன டவுனில் படித்து விட்டு இந்த நாகரீக உலகத்திற்கு வந்து இதை அநுபவிக்க வேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம். இவ்விரண்டிற்கு மிடையே நலிந்து போய் மெல்ல மெல்ல கம்பளிப் பூச்சிக்கு சிறகு முளைத்து பட்டாம் பூச்சியாய் மாறுவது போல் மனைவி மக்களுக்கு விலையுயர்ந்த உலகத்தைக் காட்ட வேண்டும் என்ற ஆசையில் மிகத் தாமதமான வயதில் அந்தப் பக்கமாக சாய்ந்து கொண்டிருக்கும் நபர்." பாபு சிரித்தான்.

காந்தி பாபுவையே வெகு நேரம் உற்று பார்த்துக் கொண்டிருந்தான். "ரொம்பவும் உயர்ந்த அப்சர்வேஷன் உன்னுடையது" என்றான்.

"எதற்குமே பயன்படாத அப்சர்வேஷன்." ஏமாற்றம் வெளிப்பட்டது பாபுவின் குரலில்.

"சாதாரணமாக ஓட்டலுக்குப் போனால் பளிச் சென்று கண்ணில் படும் விஷயமாக இருந்தால் தவிர நாம் பொருட்படுத்த மாட்டோம். அப்படியிருக்கும் போது நீ இவ்வளவு நுட்பமாக கவனித்தாய் என்றால்... எதிர்

காலத்தில் நீ ரொம்ப பெரிய மனிதன் ஆவாய். என் வார்த்தை பொய்யாகாது."

"நீங்கள் காந்தி என்பதால் நீங்கள் சொன்னதை நான் நம்புகிறேன். ஆனால் ஒருத்தன் பெரிய மனிதன் ஆவதற்கு நுட்பமான பார்வை ஒன்றே போதுமா என்ன?"

"அப்சர்வேஷன் மீதுதான் எஞ்சிய எல்லா புத்திசாலித்தனங்களும் ஆதாரப்பட்டிருக்கும்."

"இப்பொழுது அந்த அப்சர்வேஷன் தான் என் குடியை மூழ்கச் செய்து விட்டது."

"ஏன்? என்ன நடந்தது?"

"பாங்கிலிருந்து கடன் வாங்குவது அவ்வளவு சுலபமா என்று நினைத்துக் கொண்டேன். எங்கள் தெருவிலேயே ஒரு பாங்க் இருக்கிறது. மேனேஜர் வயதானவர். அவரை விருந்து சாப்பிட அழைத்தேன்."

"வந்தாரா?"

"வரவில்லை. அதோடு என்னை கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாய் என்னை வெளியே அனுப்பினார். அதற்கப்புறம் விசாரித்தபொழுது அவர் மிகவும் கண்டிப்புப் பேர்வழி என்று தெரிந்தது. பாங்கிற்கு மறுபடியும் போனபோது என்னைப் போல் லஞ்சம் கொடுப்பவர்களுக்கு தன் பாங்கிற்குள் காலடி எடுத்து வைக்கக் கூட தகுதி இல்லை என்பது போல் பேசினார். 'நான் லஞ்சம் கொடுக்கவில்லை சார். வெறுமே உங்களை டின்னருக்கு அழைத்தேன். அவ்வளவுதான்' என்று தலையில் அடித்துக் கொண்டு சொன்ன போதும் அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. யார் கூப்பிட்டாலும் அவங்களோடு டின்னருக்குப் போய் விடும் அளவுக்கு



சீப்பாய் தென்படுகிறேனா என்று மறுபடியும் திட்டினார். போகட்டும் வேறு பாங்கில் வாங்கிக் கொள்ளலாம் என்றால் நாம் வியாபாரத்தை எங்கே தொடங்குகிறோமோ அந்த ஏரியாவிலேயே உள்ள பாங்கில்தான் கடன் வாங்க வேண்டுமாம். அந்தச் சாக்கில் மற்ற வங்கிகள் கடன் தர மறுத்து விட்டன. நானோ கெடு வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். அந்தக் கெடுவைத் தாண்டிவிட்டால் இன்ஸ்பெக்டர் என்னை அரெஸ்ட் செய்து விடுவார். என்ன செய்வ தென்று புரியவில்லை."

காந்தி இரக்கத்தோடு பாபுவைப் பார்த்தான். அதற்குப் பிறகு மெதுவாகச் சிரித்தான். "நீ எனக்கு ஐந்து வினாடிகள் டயம் கொடுத்து விட்டு, பாங்கை ஏமாற்றுவது எப்படி என்று கேட்டாய். ஜப்பானிஸ் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங் என்று பதில் சொன்னேன்."

"ஆமாம் நினைவு இருக்கு. அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"பாபு! நீ ரொம்பவும் புத்திசாலி. ஒவ்வொன்றையும் உன்னிப்பாக கவனிக்கிறாய். தர்க்க ரீதியில் யோசிக்கிறாய். அப்படிப்பட்ட நீயே புத்திசாலியான மகன் பிறப்பான் என்றதுமே அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்ததை அப்படியே பின்பற்றுவதற்குக் கூட பின் வாங்கவில்லை. நான் எழுதியது எவ்வளவு நகைப்பிற் குரியதாக இருந்த போதிலும், அதை மனைவியோடு சேர்ந்து கடைபிடித்தாய். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு துறையில் மிக மேதாவியாய் இருப்பவர்கள் கூட மற்றொரு துறையில் மிகச் சாதாரணமான நபராக நடந்துகொள்ளலாம். ஒரு கோணத்தில் மிக நேர்மையாக தென்படும் நபருக்கு எந்த மூலையிலாவது வேறு பலவீனம் இருக்கலாம். அதைக்

கண்டு பிடிப்பதுதான் நமக்கு வேண்டியது. அதனால் நான் பாங்க்லிருந்து கடன் பெறுவது எப்படி என்று நீ கேட்டபோது ஜப்பனீஸ் ஸ்டைல் ஆஃப் லவ் மேக்கிங் என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னேன்."

பாபு திகைப்புடன் பார்த்தான். காந்தி அவ்வளவு பெரிய மனிதன் எப்படி ஆனான் என்று அப்போ புரிந்தது.

இருவரும் எழுந்து வெளியே வரும் பொழுது பாபு சொன்னான். "இப்போ தெரிந்து விட்டது எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று."

"பாவம். அந்த பாங்க் மேனேஜரின் வேலை போய் விடும்படியாக செய்து விடாதே. நேர்மையானவர் என்று வேறு சொல்லியிருக்கிறாய்." காந்தி சொன்னான்.

"ச்ச... ச்ச. அப்படி எதுவும் செய்ய மாட்டேன். இதில் அவருடைய பிரஸ்தாபனையே இருக்காது. இவ்வளவு சுலபமா என்று எல்லோரும் வியக்கும் விதமாக செய்து காட்டுகிறேன். நீங்களே பார்க்கத்தானே போறீங்க. இது பாபு ஸ்டைல் ஆஃப் பாங்க் சீட்டிங்."

காந்தி சிரித்தான். "நீ எப்படி ஏமாற்றப் போகிறாய் என்பது எனக்கே சஸ்பென்ஸ் ஆக இருக்கு. அவ்வளவு சுலபமாக பத்து லட்சம் சம்பாதிக்க முடியும் என்றால் இந்நேரம் யாராவது அதைச் செய்திருக்க மாட்டார்களா?"

"எதையும் தொடங்குவதற்கு மிகச் சிலர்தான் இருப்பார்கள். மற்றவர்கள் அதைப் பின்பற்றுவார்கள். ஒரு வங்கியில் ஒன்றுமே தெரியாத முட்டாள் ஒருவன் ஜெனரல் மேனேஜர் என்றும் ஒரு ஸூடோ மேதாவி அவருடைய அஸிஸ்டெண்ட் என்றும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவங்க இரண்டு பேரையும் நூறு



கோடிக்கு ஏமாற்ற முடியும் என்ற எண்ணம் ஹர்ஷத் மெஹதா ஒருவனுக்குத்தானே வந்தது."

உண்மைதான் என்பது போல் தலையை அசைத்தான் காந்தி.

"போய் வருகிறேன்." பாபு விடை பெற்றுக் கொள்வது போல் சொன்னான்.

"நல்லது."

பாபு நகரப் போனபொழுது காந்தி "ஒரு நிமிஷம்" என்றான்.

பாபு நின்றான்.

"எங்கே மச்சம் இருந்தால் என்னென்ன பலன் உண்டு என்பதைப் பற்றி நான் ஒரு புத்தகம் எழுதலாமா?" காந்தி கேட்டான்.

பாபுவுக்கு முதலில் புரியவில்லை. புரிந்ததும் சிரித்துக்கொண்டே "கண்டிப்பாய்" என்றான்.

* * *

மாவட்ட கிளை
37809
5476729

# 13

எதிர்பார்த்த அளவுக்கு சுலபமாக வேலை நடக்கவில்லை. ஒரு பாங்க் மேனேஜரின் பலவீனம் என்னவென்று தெரிந்து கொள்வது அத்தனை சுலபமா? அந்த பாங்க் மேனேஜரின் பெயர் பரமானன்தன். பெயர் வேடிக்கையாய் இருப்பதுடன் இதற்குப் பின்னால் ஒரு சுவையான கதை இருந்தது. பரமானந்தனின் முன்னோர்கள் எல்லோரும் ட்யூஷன் சொல்லித் தந்து பிழைப்பை நடத்தியவர்கள் தாம். பரமானந்தரின் தந்தையும் ஒரு வாத்தியார்தான். அந்த வீடு எப்பொழுதும் ட்யூஷனுக்கு வரும் பையன்களின் கூச்சல்களாலும், ரகளையினாலும் அதிர்ந்து போய்க் கொண்டிருந்தது. அதோடு வரும் படியும் கம்மிதான். மனைவிக்கு மட்டும் இதெல்லாம் எரிச்சலாய் இருந்து வந்தது. கணவரை இந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு ஏதாவது தொழிலைக் கைப்பிடிக்கும் படி நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவர் ஒப்புக் கொள்ள வில்லை. பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ட்யூஷன் தொழிலை விட முடியாது என்று பிடிவாதம் பிடித்தார். அது மட்டுமே இல்லை. இனி மேலும் தன் வம்சம் இப்படியே தான் தொடர வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

அப்பொழுது அவர் மனைவி கருவுற்று இருந்தாள். பிறக்கப் போகும் மகனை எப்படியாவது பள்ளிக் கூட வாத்தியாராகாமல் காப்பாற்ற வேண்டும் என்று மனதிலேயே சபதம் எடுத்துக் கொண்டாள். பெயர் சூட்டு விழாவுக்கு முதல் நாள் இரவு தனக்கு ஒரு கனவு வந்ததாகச் சொன்னாள்.



சிவபெருமான் கனவில் தோன்றி மகனுக்கு பரமானந்தன் என்று பெயர் வைக்கச் சொன்னார் என்றும் அவ்வாறு வைக்காமல் போனால் கொல்லைக் கிணற்றில் தண்ணீர்வற்றிப் போகும் படியாகச் செய்யும் படி கங்கைக்கு உத்தரவு தரப் போவதாக மிரட்டினார் என்றும் கணவரிடம் தெரிவித்தாள். அவர் பயந்து போய் அப்படியே பெயர் சூட்டினார். பாவம் அவர் யோசனை அதைக் காட்டிலும் முன்னுக்குப் போக வில்லை.

பரமானந்தன் பெரியவன் ஆன பிறகு பி.ஏ. பாஸ் செய்து விட்டு தந்தையைப் போலவே ட்யூஷன் சொல்லித் தர ஆரம்பித்தான். மூன்று மாதம் போவதற்குள் ஒரு மாணவன் கூட மிஞ்சவில்லை. அவர் பையன்களை கூப்பிட்டு விசாரித்தார். அவர்கள் கைகளைக் கட்டிக் கொண்டு பணிவோடு "ஊரில் எங்களை எல்லோரும் பரமானந்தரின் சீடர்கள் என்று கிண்டல் செய்கிறார்கள் சார்" என்றார்கள் ஒரே குரலில். உள்ளேயிருந்து இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவருடைய தாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

இந்த விதமாக முதல் முறையாக அந்த வம்சத்தி லிருந்து ஒரு நபர் வழிமாறி வேறு தொழிலை... அதாவது வங்கியில் சேர்ந்து கொண்டார். இது முப்பது வருடங் களுக்கு முந்தைய கதை. அதே பரமானந்தன் தான் தற்போது பாங்க் மேனேஜராகி பாபுவின்பால் யமனாகி விட்டிருந்தார். எல்லோரும் அவரை 'அக்னி ஹோத்ர ஜனகர்' என்பார்கள்.

அவர் காபி குடிக்க மாட்டார். தன்னுடைய கேபினில் யாரையும் சிகரெட் புகைக்க விட மாட்டார். கேபின் முழுவதும் சுவாமி படங்களை மாட்டியிருந்தார். காலையிலேயே கோவிலுக்குப் போய் விட்டு நெற்றியில்

விபூதியுடன் பாங்கிற்கு வருவார். டிபாஸிட்டுகளுக்காக போகும் போது ராகு காலத்தைப் பார்த்துக் கொள்வார். கடன் வசூலுக்குப் போகும் போது நல்ல நேரம் பார்த்து தான் புறப்படுவார். இப்படிப்பட்ட நபரை எப்படி வலையில் போட்டுக் கொண்டு கடனைப் பெறுவது என்று பாபுவுக்குப் புரியவில்லை. அதோடு இன்னொரு சிக்கல் என்னவென்றால் வாத்தியார் வம்சத்திலிருந்து வந்தவர் என்பதால் ஒவ்வொரு விஷயத்திற்கும் முன்னுரை, பின்னுரை இருக்கும்.

முதல் நாள் பாபு சட்டைப் பையிலிருந்து பாக்குப் பொட்டலத்தை எடுத்தான். "கொஞ்சம் போட்டுக் கொள்றீங்களா சார்?" என்று உபசரித்தான். அவர் பாக்குப் பொட்டலத்தை கண்கொட்டாமல் ஐந்து வினாடிகள் பார்த்துவிட்டு ஆழ்ந்து பெருமூச்சு விட்டார். பாக்குப் பொட்டலத்திற்கும் அவருடைய இளமை பிராயத்து காதல் தோல்விக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ, அந்தக் கதையைச் சொல்லப் போகிறாரோ என்று எதிர்பார்த்தான். அதை இரக்கத்தோடு கேட்பதன் மூலம் கடனை பெற்று விடலாம் என்று நினைத்தான்.

"பாக்குத்தூள் பல்லிடுக்கில் சிக்கிக்கொண்டு விட்டால் நாற்பது வயது ஆவதற்குள் பற்கள் எல்லாம் உதிர்ந்துவிடும்" என்றார் அவர் கம்பீரமாய்.

பாபு திடுக்கிட்டுப் போனான். அவர் தொடர்ந்தார்.

"அது மட்டுமில்லை. பாக்கிற்கு ரத்தத்தை முறிக்கும் குணம் உண்டு. அதோடு நாலணா தண்டம் வேறு. எங்க அப்பாவுக்கும் பாக்கு சாப்பிடும் பழக்கம் இருந்தது. எங்க அம்மா அவரை காசிக்கு அழைத்துச் சென்று அந்தப் பழக்கத்தை விடும்படிச் செய்தாங்க. இப்பொழு தெல்லாம்



பாக்குத் தூளில் விறுவிறுப்பிற்காக ஏதேதோ ரசாயனப் பொருளை கலக்கராங்களாம். அதனால் ஜீரண சக்தி குறைந்து விடும் என்று எங்கேயோ படித்தேன். அசல் பாக்குத் தூளில்..."

"சார்! எனக்குக் கடன் வேண்டும்." கேட்டே விட்டான்.

அவருடைய வாக் பிரவாகத்திற்கு அணை போட்டாற் போலாயிற்று. "நான் என்ன சொல்லிக்கிட்டு இருந்தேன்?" என்றார்.

"நீங்க பாக்குத் தூளைப் பற்றிச் சொல்லிக்கிட்டு இருந்தீங்க. நான் கடன் பற்றி கேட்டுக் கிட்டு இருந்தேன்" என்றான் பணிவோடு.

"இவ்வளவு சொல்லியும் உன் மூளையில் ஏற வில்லை போலிருக்கிறது. நாலணா செலவைப் பற்றி இவ்வளவு சொன்ன பிறகும் கூட உனக்குப் புரிய வில்லையா?"

இங்கேதான் பாபு தவறாக கணக்கு போட்டு விட்டான். அவர் கேட்பது நாலணா பங்கு என்று நினைத்துக் கொண்டான். தனக்குத் தரவேண்டிய பங்கை இப்படி மறைமுகமாக சொல்லுகிறார் என்று ஊகித்து "கட்டாயம் தருகிறேன் சார்" என்றான்.

பரமானந்தன் நெற்றியைச் சுளித்து விட்டு "தருகிறாயா? எதை?" என்றார்.

துரதிர்ஷ்ட உருவில் மினுக் மினுக்கென்று எரியத் தொடங்கிய சிவப்பு விளக்கை பாபு உணர்ந்து கொள்ள வில்லை. கேபினுக்குள் யாரும் இல்லை. பாபு முன்னால் குனிந்து· தாழ்வான குரலில் "பதினைந்து லட்சம் கடன் வேண்டும். நீங்கள் கேட்ட விதமான நாலணா பங்கு தருகிறேன்." என்றான்.

அவ்வளவுதான்! அதற்கப்புறம் ஐந்து நிமிடங்கள் கழித்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான். வாழ்க்கையில் என்றுமே அவ்வளவு திட்டுக்களைக் கேட்டுக் கொண்டதில்லை. நாட்டைப் பற்றியும், நேர்மையைப் பற்றிம் சொற்பொழிவை கேட்டதும் இல்லை.

"என் அசல் பெயர் பரமானந்தன். எல்லோரும் அந்தப் பெயர் நன்றாக இல்லை என்றதால் வங்கியில் சேர்ந்ததுமே அக்னிஹோத்ரன் என்று மாற்றிக் கொண்டு விட்டேன். என்னிடம் போய் நாலணா பங்கு பற்றிப் பேசுவாயா?" என்று வசைமாறி பொழிந்தார்.

பாபு டல்லாக இருந்ததற்குக் காரணம் அதுதான். அந்த வட்டாரத்தில் அதைத் தவிர வேறு வங்கி இல்லை. ஒரு பக்கம் இன்ஸ்பெக்டருக்குப் பணம் தர வேண்டிய கெடு நெருங்கிக் கொண்டிருந்தது.

பரமானந்தனை வலையில் போட்டுக் கொள்வதற்கு காந்தி சொன்னவழி நன்றாகத்தான் இருந்தது. ஆனால் அவருடைய வீக் பாயிண்ட் என்னவென்றுதான் புரிய வில்லை. அதைத் தெரிந்துகொள்ள அவன் செய்த முயற்சி முற்றிலும் பலிக்காமல் இல்லை. ஓரளவுக்குத்தான் பலித்தது.

மறுபடியும் பாபு அவரிடம் போனபொழுது பரமானந்தன் நெற்றியைச் சுளித்து "மறுபடியும் எதற்காக வந்தாய்?" என்று கேட்டார்.

"கடனுக்காக இல்லை சார். நீங்கள் தெற்குப் பக்கமாய் உட்கார்ந்திருக்கீங்க. எனக்குக் கொஞ்சம் வாஸ்து சாஸ்திரம் தெரியும். அதைச் சொல்லி விட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றான்.



பரமானந்தனின் முகம் கொஞ்சம் மலர்ந்தது. "இந்தப் பக்கம் நல்லதுன்னு சொன்னாங்களே" என்றார்.

'போதும். இவ்வளவாவது பேசினாரே' என்று நினைத்த பாபு ஆழமாய் மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டான். மனதில் கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது. நாற்காலியில் மிடுக்காக உட்கார்ந்து கொண்டான். "உங்களுக்கு சமீபத்தில் ஆபீசில் ஏதாவது கஷ்டம் வந்திருக்கணுமே" என்றான் ஜோதிட சிகாமணியைப் போல்.

"ஆபீசிலா? இம்பாசிபிள். என்னைக் கண்டால் எங்க மேனேஜ்மெண்டுக்கு கௌரவம், பக்தி." பெருமையோடு சொல்லிக்கொண்டார்.

பாவுக்குத் திக்கென்றது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ஆபிசில் உட்கார்ந்திருக்கிற விதத்தைப் பொறுத்து அதன் பலன் வீட்டிலும் தென்படும். சமீபத்தில் வீட்டில் ஏதாவது தொந்தரவு ஏற்பட்டதா?"

"இல்லை."

"சமீபத்தில் என்றால் ஆறு மாதத்தில்... ஒரு வருடத்தில்..."

"இல்லை. ஆனால்..."

பாபு ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சொல்லுங்கள்" என்றான்.

"என் பெண்ணிற்கு ஒரு நல்ல வரன் கை விட்டுப் போயிடுத்துப்பா."

பாபு ஆவேசமாய் "பார்த்தீங்களா. அதான். அதேதான். தெற்கு திசைக்கு அதிபதி சுக்கிரன். சுக்கிரன்

நீச்ச கிரகம். நீங்க எப்போதும் அவன் பக்கமாகவே உட்கார்ந்திருக்கீங்க. 'சுக்ர ஜாமாதா நீச பிரதிஷ்டாப நாம்யா க்யூ ஹ்ரிம்' என்று சொல்லியிருக்காங்க. சுக்கிரனை வணங்கும் நபர்களுக்கு ஜாமாதா அதாவது நல்ல மருமகன் வரமாட்டான் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கு. அதனால்தான் உங்க மகளுக்கு நல்ல வரன் கிடைக்க வில்லை" என்றான்.

பரமானந்தம் கவலையோடு "அப்படித்தான் என்கிறாயா?" என்றார்.

"ஆமாம். அதோடு நீங்கள் ஜனவரி ஜுலைக்கு நடுவில் பிறந்திருப்பீங்க. அப்படித்தானே."

"டிசம்பரில்."

"அதான் டிசம்பரில். அப்படி என்றால் உத்தரா யணத்தில். அதான் சுக்கிரன்..."

வேகமாக சொல்லிக் கொண்டு போன அவனைத் தடுத்து "டிசம்பர் என்றால் தக்ஷிணாயனம்" என்றார் பரமாநன்தன்.

பாபுவுக்கு தான் அதிகமாகப் பேசுவதன் மூலம் தன் அஞ்ஞானத்தை வெளிப்படுத்திக் கொள்கிறோம் என்று புரியவே, அவசர அவசரமாக உரையாடல் முடித்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

அன்றிரவு பாபு நன்றாக உறங்கினான். ஆனால் மறுநாள் அவன் போனபொழுது பரமானந்தன் இன்னும் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தார். பாபு வியப்புடன் பார்த்தான். அவர் இந்த முறை அதிக ஆர்வம் காட்ட வில்லை.



"வாஸ்து சாஸ்திர நிபுணரை அழைத்துப் பேசினேன். தெற்கு திசைக்கும் மருமகன் வருவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லிவிட்டார். நீ சொன்ன சுலோகத்திற்கு அர்த்தமே இல்லையாம்" என்றார்.

பாபு மறு பேச்சுப் பேசாமல் திரும்பி வந்து விட்டான். அன்றிரவு ஸ்ரீ லக்ஷ்மியிடம் சொன்னான். "முன் போல் எரிந்து விழவில்லை என்பது உண்மை தான். ஆனால் இந்த வாஸ்து எந்த விதத்திலும் பயன்படக் காணும். அவருடைய வீக் பாயிண்ட் எது என்று புரியவில்லை."

"வீட்டில் முயற்சி செய்து பாருங்களேன்."

பாபு அதிர்ச்சி அடைந்து "வாட்!" என்றான்.

"ஆமாம். ஆபீசில் கிடைக்காத வீக் பாயிண்ட். வீட்டில் கிடைக்கலாம். ஒரு தடவை வீட்டிற்குப் போய்ப் பேசிப் பாருங்கள்."

"இந்த யோசனை நல்லாதான் இருக்கு."

மறுநாள் காலையிலேயே அவன் புறப்பட்டுக் கொண்டிருந்த போது "அவருக்குக் கல்யாணம் ஆகாத மகள் இருக்கிறாளாம். ஜாக்கிரதை" என்றாள் எச்சரிப்பது போல்.

"என் கற்பை சந்தேகப்பட்டால் உன் நாக்கு அழுகிப் போய்விடும்" என்று சொல்லி விட்டு கிளம்பினான்.

அவன் பரமானந்தனின் வீட்டிற்குப் போனபொழுது மணி எட்டடித்து இருந்தது.

காலிங் பெல்லை அடித்தான்.

முதலில் வளையல் சத்தம் கேட்டது. பிறகு ஒரு பெண் வந்து கதவைத் திறந்தாள். பாபு திகைத்துப் போனவனாய் "நீங்களா?" என்றான் தன்னை அறியாமலேயே.

அவள் முகத்தில் வியப்பு இருந்த இடத்தில் குறும்பு இடம் பெற்றது. "என் பெயர் நீங்களா இல்லை. *சீதா*" என்றாள் சிரித்துக் கொண்டே.

அவனும் சிரித்துவிட்டு "ஜனகரின் மகள் சீதாவாக இல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்?" என்றான்.

"ஐயோ! வெளியில் நிற்க வைத்து விட்டுப் பேசுகிறேன். உள்ளே வாங்க." நொந்து கொண்டே சொன்னாள்.

"அப்பா இல்லையா?"

"இல்லை. கேம்புக்குப் போயிருக்கிறார்."

"அப்புறமாக வந்து சந்திக்கிறேன்." பாபு திரும்பப் போனான்.

"இதென்ன? காபி குடித்து விட்டுப் போகலாம். யார் வந்ததாய் சொல்லட்டும்?"

"பாபு என்று சொல்லுங்கள். காபி வேண்டாம். போய் வருகிறேன்."

அவள் முகத்தில் லேசாக ஏமாற்றம் தென்பட்டது. இன்னும் ஒரு நிமிஷம் அதிகமாக பேசிக்கொண்டி ருந்தால் நன்றாக இருக்குமே என்ற எதிர்பார்ப்பு.

"சேல்ஸ் டாக்ஸ் இண்டெலிஜெண்ட் டிபார்ட் மெண்ட்காரர்களுக்கு எங்க அப்பாவோடு என்ன வேலையோ?" முறுவலுடன் கேட்டாள்.



பாபுவுக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது தான் அவளிடம் பொய் சொல்லியிருந்த விஷயம்.

கொஞ்சம் தடுமாறிவிட்டு எந்த விஷயத்தையும் சொல்லாமல் "அப்பா எப்போ வருவார்?" என்று கேட்டான்.

"நாளை மாலை."

"நான் நாளை மாலையில் வருகிறேன்."

"சரி. நீங்கள் வந்ததாகச் சொல்கிறேன்."

பாபு அங்கிருந்து நேராக போலீஸ் இன்ஸ் பெக்டரிடம் போனான். இன்ஸ்பெக்டர் வட்டி பணத்தை வாங்கிக் கொண்டே "விஷயம் எவ்வளவு தூரத்தற்கு வந்திருக்கு?" என்று கேட்டார்.

"இன்னும் கொஞ்ச நாள் டயம் வேணும்."

இன்ஸ்பெக்டர் புருவத்தைச் சுளித்து விட்டு, "எனக்கு சீக்கிரமாக பணம் வேணும். கொஞ்ச நாள் கழித்து நீ அந்தப் பணம் தரமாட்டேன்னு சொன்னால் உன் மேல் அப்போது கேஸ் கூட போட முடியாது." என்றார்.

பாபுவுக்கு எரிச்சல் ஏற்பட்டது. கோபமும் வந்தது. செய்யாத தவறுக்கு தன்னை பிளாக் மெயில் செய்வதுடன், அடுத்த தவறைச் சீக்கிரமாக செய் என்று சொல்கிறார்.

"நான் என் முயற்சியை செய்து கொண்டுதான் இருக்கிறேன்" என்றான்.

இன்ஸ்பெக்டர் கண்களை உருட்டி விழித்துக் கொண்டே "என்னடா? குரல் உயர்த்திப் பேசுகிறாய்?" என்றார் காவல் அதிகாரிகளுக்கே உரிய மொழியில்.

பாபுவும் எரிச்சலோடு "அவ்வளவு பணத்தை ஒரே வாரத்தில் சம்பாதிப்பது எளிது இல்லை" என்றான்.

"ஓஹோ! அடுத்தவங்களை ஏமாற்றி சம்பாதிக்க மட்டும் முடியுமோ." ஏளனம் தொனித்தது இன்ஸ்பெக்டரின் குரலில்.

"நான் யாரையுமே ஏமாற்றவில்லை. அக்ரிமெண்டில் கையெழுத்துப் போடும் போதே ஆதித்தியா ஆடியோக் காரர்களுக்குத் தெரியும், அந்தப் படம் உடனே ரிலீஸ் ஆகப் போவதில்லை என்று. இப்பொழுது அந்தப் பாடல் கேசட்டுகள் விற்பனை ஆகவில்லை என்றதும் குற்றத்தை என் மீது தள்ளி விட்டார்கள். இந்த விஷயம் உங்களுக்கும் தெரியும்."

"அப்படி என்றால் நீ சத்ய அரிச்சந்திரன் என்றும் நான் உங்களைப் போன்ற நல்லவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்யும் கிராதகன் என்கிறாயா?"

"நான் எதுவும் சொல்லவில்லை. எல்லாவற்றையும் நீங்கள் தான் நினைச்சுக்கறீங்க."

இன்ஸ்பெக்டர் பாபுவின் காலரைப் பிடித்து வேகமாய் இழுத்தார். கண்களுக்குள் கூர்ந்து பார்த்துக் கொண்டே, "என்னிடம் வைத்துக் கொள்ளாதே. முதுகுத் தோலை உரித்து விடுவேன் ஜாக்கிரதை. எனக்குப் பணம் சீக்கிரமாக வேண்டும். இல்லாவிட்டால் லாக்கப் டெத் கேஸ் ஆனாலும் பரவாயில்லை. உன்னைக் கொன்றுப் போட்டு விடுவேன்." என்று சொல்லிக் கொண்டே பலமாக பின்னால் தள்ளிவிட்டார்.

பாபு தரையில் போய் விழுந்தான். அவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. அங்கிருந்து மௌனமாக



வெளியே வந்து விட்டான். எதிர்த்துப் போராடுவதற்கு அவன் ஒன்றும் சினிமா ஹீரோ இல்லை.

அவன் வீட்டிற்கு வந்த போது பிற்பகல் ஆகியிருந்தது. ஸ்ரீ லக்ஷ்மி சாப்பாட்டைப் பரிமாறிக் கொண்டே காலையில் போய்விட்டு இப்பதான் வந்திருக்கீங்க? எங்கே போயிருந்தீங்க?" என்றாள்.

ஏற்கெனவே எரிச்சலோடு இருந்ததால் "வேலை இருப்பதால் போனேன். அதையெல்லாம் கூட உன்னிடம் சொல்லணுமா?" என்றான்.

அவள் காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை. பசியாய் இருந்தது. அந்தக் கோபத்தில் "எப்போ வருவீங்கன்னு போகும் போது சொல்லிவிட்டுப் போயிருக்கலாம் இல்லையா. உங்களுக்காக பட்டினிக் கிடக்காமலாவது இருந்திருக்கலாமே" என்றாள்.

"பட்டினி கிடந்து யார் தியாகம் செய்யச் சொன்னாங்க? சாப்பிட்டுவிட்டுப் படுத்திருக்கலாமே?" எரிச்சலோடு சொன்னான்.

அவன் கண்முன் இன்ஸ்பெக்டரின் உருவம் நிழலாடியது. காலரைப்பற்றிப் பிடித்துத் தள்ளி விட்ட காட்சி அவன் ரோஷத்தைத் தூண்டிவிட்டது. அந்த எரிச்சலை மேலும் அதிகமாக்குவது போல் அவள் கிண்ணத்தை வேகமாக தரையில் வைத்தாள். அவ்வாறு வைத்ததில் ரசம் அவன் உடையில் சிந்தியது.

அவன் சட்டென்று டம்பளரை எடுத்து கை கழுவிக் கொண்டு, "கோபம் இருந்தால் தீர்த்துக் கொள்ள வேறு வழியில்லையா? இப்படி கிண்ணத்தை ஏன் தரையில் வைக்கணும்?" என்றான்.

அவள் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. "செய்யறதெல்லாம் செய்து விட்டு குற்றத்தை என் மீது ஏன் சுமத்தறீங்க?" என்றாள்.

"அப்படிச் செய்யக் கூடாத காரியத்தை நான் என்ன செய்து விட்டேன்?"

"நான் மட்டும் என்ன செய்தேன்?"

"ஒவ்வொன்றுக்கும் எதிர்த்துப் பேசுவது உனக்கு வழக்கமாகி விட்டது."

"அப்படிப் பேசத் தெரியாததால்தான் நீங்கள் இன்னொருத்தியின் உள்ளாடையின் அளவுகளை தெரிந்து கொண்டாலும் வாயை மூடிக் கொண்டு சும்மாயிருக் கிறேன்."

அந்த வார்த்தைகள் அவனுக்கு அளவுக்கு மீறிய கோபத்தை வரவழைத்தன.

"நான் எந்த வேலை செய்தாலும் அது நமக்காக. நான் ஒன்றும் பொழுது போக்கிற்காக செய்யவில்லை. எவ்வளவு கஷ்டப்படுகிறேனோ பார்த்துகிட்டுதானே இருக்கிறாய்."

"இந்த அளவுக்கு கஷ்டம் எல்லோரும் தான் படுவாங்க."

அவன் மனம் காயப்பட்டது. "பணம் சம்பாதிப்பது எவ்வளவு கஷ்டம் என்று ஒரு முறை சம்பாதித்துப் பார்த்தால்தான் தெரியும். வீட்டில் உட்கார்ந்துகொண்டு வெறுமே பேசுவது இல்லை. வெளியே போய் சம்பாதித்துப் பார் அப்போ புரியும்."

"நீங்கள் வீட்டில் இருந்துகொண்டு சமையலைக் கவனித்துக் கொள்வீங்களா?"



அவன் வாயடைத்துப் போய் விட்டான். ஸ்ரீ லக்ஷ்மிக்கு இவ்வளவு பதிலடி கொடுக்கும் திறமை யிருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இன்னொரு பக்கம் உள்ளேயிருந்து கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அது கோபம் மட்டுமே இல்லை. வருத்தம், ஆத்திரம், இயலாமை, குற்ற உணர்ச்சி எல்லாம்.

அவன் வீட்டை விட்டு வெளியே வந்து மாலை வரையிலும், கடைத் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தான். மனதிற்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. இப்பொழுது இன்னொரு கோணத்திலிருந்து யோசிக்கத் தொடங் கினான். அவனுக்கு ஒரு எழுத்தாளர் எழுதிய மனவியல் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் இருந்தது நினைவுக்கு வந்தது.

அதில் எழுத்தாளர் இவ்வாறு எழுதியிருந்தார்:

"ஒரு நாள் மாலை வேளை.

பொது நூலகத்தில் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருந்தேன். தொலைவிலிருந்து மைக்கில் துவாரம் வெங்கடசாமி நாயுடுவின் இசை கேட்டுக் கொண்டிருந்தது. அந்த இசையைத் தெளிவாகக் கேட்பதற்காக நூலகத்தின் வாசலில் வந்து நின்று கொண்டேன். என்னைப் போல் இன்னும் சிலர் அங்கே நின்று இசையை ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது முப்பது வயது மதிக்கத் தக்க ஒருவன் இரண்டு குழந்தைகளுடன் அங்கே வந்து உட்கார்ந்து கொண்டான்.

அதுவரை நிசப்தமாக இருந்த சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. அந்தக் குழந்தைகள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு, ஓடிப்பிடித்து விளையாடி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

வயலின் இசையை அநுபவித்து கேட்க முடிய வில்லையே என்ற எரிச்சல் எல்லோருடைய முகத்திலும் தெரிந்தது. தயக்கத்தின் காரணமாக யாரும் எதுவும் சொல்லாமல் இருந்தார்கள். ஐந்து நிமிடங்கள் இப்படியே கழிந்தன. என்னால் பொறுமையாக இருக்க முடிய வில்லை. "மிஸ்டர்! இது நூலகம். குழந்தைகளைச் சத்தம் போடாமல் இருக்கச் சொல்லுங்கள்." என்று கடினமான குரலில் சொன்னேன்.

அந்த இளைஞன் என்னை வெறுமையாகப் பார்த்தான். "ஆஸ்பத்திரியில் சத்தம் போடறாங்களேன்னு இங்கே அழைச்சுக்கிட்டு வந்தேன். அவங்கம்மா இப்போ தான் இறந்து போய் விட்டாள். அரைமணி நேரம் கழித்து பிணத்தைத் தருவதாகச் சொன்னார்கள்." சொல்லும் போதே அவனுடைய குரல் நடுங்கியது.

அதுவரை அவன் மீது இருந்த கோபம் இரக்கமாக மாறியது. கோபம் இரக்கமாக, பொறாமை அன்பாக, பகை நட்பாக மாற ரொம்ப நேரம் தேவைப்படாது.

பிரச்னையை அடுத்தவரின் கண்ணோட்டத்திலிருந்து பாாக்க முடிந்தால் போதும். நமக்குப் பகைவர்கள் இருக்க மாட்டார்கள். பிரச்னைகளும் இருக்காது. ஒருக்கால் இருந்தாலும் புன்முறுவலுடன் அவற்றை எதிர்த்துப் போராட நம்மால் முடியும்."

இந்த விதமான தர்க்க ரீதியான விளக்கம் கிடைத்ததுமே கோபமும் எரிச்சலும் மாயமாகி அந்த இடத்தில் ஸ்ரீ லக்ஷ்மியின்பால் மனதில் இரக்கம், அன்பும் தோன்றின. அவள் சொன்னது உண்மைதானே. லட்சக் கணக்கில் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையில் அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். உண்மையில் அது



கஷ்டம் கூட இல்லை. ஏமாற்று வேலை. ஆனாலும் டென்ஷன் டென்ஷன் தானே.

அந்த எரிச்சலை வீட்டில் காட்டும்படியாய் நேர்ந்து விட்டது.

பெரும்பாலான பணக்காரர்கள் ஏன் குடியை நாடுகிறார்களோ, அவர்களின் குடும்ப நபர்கள் அவர்கள்பால் ஏன் கோபத்தோடும், விரக்தியோடும் இருப்பார்களோ புரிந்து கொள்ள முடிந்தது.

"நான் வாழ்க்கையில் நிறைய சாதித்துவிட்டேன். அதற்கான முயற்சியில் என்னை நான் இழந்து விட்டேன்." பார்க்கில் மல்லாந்து படுத்துக்கொண்டு இரண்டு மணி நேரம் சுயபரிசோதனை செய்துகொண்ட பிறகு நினைவுக்கு வந்த வரி இது.

நேராக வீட்டிற்குப் போய் ஸ்ரீ லக்ஷ்மியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் மனம் இன்னும் கொஞ்சம் அமைதி பெற வேண்டும்.

பார்க்கிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த போது "ஹலோ!" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் சீதா நின்றிருந்தாள்.

"என்ன? இப்படி வந்திருக்கீங்க?" என்ற கேட்டான்.

"பக்கத்தில்தானே எங்க ஆபீஸ். இப்படி பார்க் வழியாகப் போனால் பஸ் ஸ்டாப் ரொம்ப பக்கம்." அவள் கண்களில் மின்னல் ஒளி. "கொஞ்ச நேரம் இப்படி உட்கார்ந்திருப்போமா?" என்று கேட்டாள்.

அவனுக்கும் அவளோடு பேசவேண்டும் போல் இருந்தது. இருவரும் புல்வெளியில் உட்கார்ந்து கொண்டார்கள். மாலை ஆறுமணி ஆகியிருந்தது.

"உங்களுக்கு மாற்றல் ஆகியிருப்பதாகச் சொன்னீங்களே."

"இல்லை. நான் சேல்ஸ் டாக்ஸ் ஆபீசிலேயே வேலை பார்க்கவில்லை."

அவள் வியப்படைந்தவளாய் அவன் பக்கம் பார்த்தாள்.

அவன் எதையும் மறைக்கவில்லை. பந்தயத்தைப் பற்றியும், அவள் உள்ளாடையின் அளவைத் தெரிந் கொள்ள வேண்டிய நிபந்தனைப் பற்றியும் சொன்னான்.

அவள் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொல்லச் சொல்ல அவள் வெட்க மடைந்த வளாய் தலையைக் குனிந்து கொண்டாள். அப்பொழுது தான் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அந்த செம்மை அவள் முகத்தில் பட்டு மேலும் சிவப்பாய் மின்னிக் கொண்டிருந்தது.

அந்தக் காட்சி மிக அற்புதமாய் இருந்தது. அந்த பார்க்கிற்கு வேலி இருந்தது. அந்தப் பக்கமாக சாலை இருந்தது.

ஸ்ரீ லக்ஷ்மிக்குக் கூட மதியத்திலிருந்து மனநிலை சரியாக இல்லை. தன் மீது அன்பு வைத்திருந்த தன் வீட்டாரை விட்டு விட்டு இப்படி வந்து தவறு செய்து விட்டோமோ என்று முதல் முறையாக நினைத்துக் கொண்டாள். வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஷாப்பிங் வேலையை வைத்துக் கொண்டு வெளியே வந்தாள். வேலி வழியாக உள்ளே பார்த்த அவளுக்கு அந்தக் காட்சி தென்பட்டது.



அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அவள் முழங்காலைச் சுற்றி கைகளை கட்டிக் கொண்டு, முழங்கால் மீது மேவாயைப் பதித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். பின்னால் சிவப்பாய் அஸ்தமிக்கும் சூரியன்.

மிக அற்புதமான காட்சி அது!

அவளுக்குத் தவிர.

★ ★ ★

பாபு, சுமார் ஒரு மணி நேரமாக அந்த இருட்டில் காத்திருந்தான், அக்னி ஹோத்ரனின் வீட்டிற்கு எதிரே,

பெட்டிக் கடைக்குப் பின்னால் மறைவாக நின்று கொண்டு.

அவர் இன்னும் வெளியே வரவில்லை. பாபுவுக்கு ரொம்ப டென்ஷனாக இருந்தது. தான் நினைத்தாற் போல் நடக்குமா? அக்னிஹோத்ரன் கையும் களவுமாக பிடிபடுவாரா? பிடிபட்டாலும் தனக்கு 'அந்த' காரணத்திற்காக உதவி செய்ய சம்மதிப்பாரா?

பலவிதமான எண்ணங்கள்.

ஏழரை ஆயிற்று. காலம் மெதுவாக ஊர்ந்து கொண்டிருப்பது போல் தோன்றியது. எதிர்பார்த்தாற் போல் நடக்கவில்லை என்றால் ரொம்ப கஷ்டம். இன்னொரு பக்கத்தில் கெடு நெருங்கிக் கொண்டிருந்தது.

வீணாய் இந்த அக்னிஹோத்ர ஜனகரைச் சுற்றிச் சுற்றி வந்து தன்னுடைய நேரத்தை வியர்த்தமாக்கிக் கொண்டிருக்கிறோமோ. ஆனால் வேறு வழி எதுவும் தென்படவில்லை. ஒருக்கால் தன் திட்டம் பலிக்காமல்

போனால் நடுக்கடலில் படகு மூழ்கினாற் போல் ஆகி விடும்.

அவன் யோசனைகளை சிதறடித்தபடி அக்னி ஹோத்ரன் வெளியே வந்தார். பாபுவின் உடல் அவனையும் அறியாமல் விரைப்பாக மாறியது. அக்னி ஹோத்ரன் வாசலில் நின்று அக்கம் பக்கம் பார்த்தார். பிறகு மெதுவாக படியிறங்கி இருட்டில் மறைந்து விட்டார்.

பாபு அவரை பின் தொடர்ந்தான்.

அவர் திரும்பிப் பார்க்கவேயில்லை. தன்னை அவன் பின் தொடர்ந்து வருகிறான் என்ற எண்ணமே அவருக்கு இருக்கவில்லை. வேகமாக நடந்து பிரதான சாலைக்கு வந்தார். அப்பொழுதுதான் இண்டர்வெல் விட்டிருந்த தால் தியேட்டருக்கருகில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அதிலும் ஐந்தாறு தியேட்டர்கள் இருந்த நாற்சந்தி அது.

பின்னாலேயே வந்து கொண்டிருந்த பாபுவின் யோசனைகள் முதல் நாள் நடந்த சம்பவத்தை நோக்கிச் சென்றன. பார்க்கில் அவன் சீதாவிடம் எல்லா வற்றையும் சொன்னான். எந்தச் சூழ்நிலையில் அவன் இதில் சிக்கிக் கொண்டான் என்ற விஷயம் உள்பட.

அவள் முழுவதுமாக கேட்டுக் கொண்டாள். ஒரு பக்கம் வெட்கம். இன்னொரு பக்கம் இரக்கம்.

எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டு அவன் சொன்னான். "இந்தச் சூழ்நிலையில் எனக்கு உதவி செய்யக் கூடிய நபர் நீங்கள் ஒருவர் தான். ப்ளீஸ் சொல்லுங்கள், உங்கள் தந்தையிடமுள்ள ஒரே ஒரு பலவீனத்தை."



அவள் உடனே பதில் சொல்லவில்லை.

"இப்படிக் கேட்கிறது தவறுதான். ஆனால் நான் எல்லா விதத்திலேயும் சிக்கிக் கொண்டு விட்டேன். என்னைக் காப்பாற்றக் கூடியவர் நீங்கள் ஒருத்தர்தான்."

"என்னால் என்ன செய்ய முடியும்?"

"ஒவ்வொரு நபருக்கும் ஏதாவது ஒரு பலவீனம் இருக்கும். அது என்னவென்று சொல்லி உங்க அப்பாவுக்கு நெருக்கமானவனாக ஆகும் படியாகச் செய்யுங்கள். போதும்."

அவள் குழப்பத்துடன் பார்த்தாள்.

"வாஸ்து சாஸ்திரத்தை முயற்சி செய்தேன். ஜோதிடம் சொல்லிப் பார்த்தேன். எதுவுமே பலனளிக்க வில்லை. உங்க அப்பா குடிக்கமாட்டார். சீட்டாடும் பழக்கம் இல்லை. லஞ்சம் வாங்க மாட்டார்."

"ஆமாம் எனக்குத் தெரியும்."

"பின்னே எப்படி அவருக்கு நெருக்கமாவது?"

"இவற்றால் அவரை விலைக்கு வாங்கி விடலாம்னு நினைத்தீர்களா?" சுருக்கென்று கேட்டாள்.

"இல்லை. தவறாக நினைக்காதீங்க ப்ளீஸ்" என்றான். "பாங்க் மூலமாக என் கடன் அப்ளிகேஷனை மேலே அனுப்பி வைத்தால் போதும்."

"எங்க அப்பா ரொம்ப கண்டிப்பானவர். இது போன்றவற்றுக்கெல்லாம் சம்மதிக்கமாட்டார்."

"எனக்குத் தெரியும். அதனால்தான் உங்கள் உதவியைக் கேட்கிறேன். சாதாரண சூழ்நிலையாய்

இருந்தால் நானும் இந்த கொள்கைகளை நம்புகிறவன் தான். ஆனால் என் நண்பன் காந்தி ஒரு புது தியரியைச் சொன்னான். அதற்கு என்னையே உதாரணமாகக் காட்டினான். அதனால்... "சற்று நிறுத்தி விட்டுச் சொன்னான். "ஒரே ஒரு பலவீனத்தைச் சொல்லுங்கள் போதும். அவருடைய சாம்ராஜ்ஜியத்திற்குள் நான் ஊடுருவிக் கொண்டு போய் விடுவேன். இல்லா விட்டால்... இல்லாவிட்டால் என் வாழ்க்கை இதோடு முடிந்து விடும்."

அவள் அவனை பயந்தபடி பார்த்தாள். "அப்புறமாக எந்தப் பிரச்சனையும் வராது இல்லையா? அப்பாவின் வேலைக்கு எந்த ஆபத்தும் வராது இல்லையா?" என்றாள்.

"நான் சத்தியம் செய்து சொல்கிறேன். அப்படி எதுவும் நடக்காது. நான் கடனை அடைக்காமல் போவதோ, உங்க அப்பாவின் மீது குற்றம் வரும்படியாக செய்வதோ நடக்காது. இந்த விஷயத்தில் நீங்கள் என்னை நம்பலாம்." நேர்மையுடன் சொன்னான்.

அப்பொழுது சொன்னாள் அவள், தன் தந்தைக்கு இருந்த ஒரே ஒரு பலவீனத்தை.

அக்னிஹோத்ரன் படியேறினார். அந்த இடத்தில் ரொம்ப கும்பலாக இருந்தது. மக்களை விலக்கிக் கொண்டு பாபு உள்ளே நுழைந்தான். அக்னிஹோத்ரன் பாக்கெட்டி லிருந்து பர்ஸை எடுத்தார். அதிலிருந்து நோட்டுகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது பாபு இனி மேலும் தாமதிக்காமல் "குட் ஈவினிங் சார்" என்றான்.

பின்னாலிருந்து காதுக்கு அருகில் கேட்ட அந்த மூன்று வார்த்தைகள் புல்லெட்போல் தாக்கின.



திடுக்கிட்டுத் திரும்பினார். பாபுவைப் பார்த்துமே அவர் முகம் களையை இழந்தது.

பாபு மட்டும் இதெல்லாம் மிகச் சாதாரணமான விவகாரம் என்பது போல் தானும் பாக்கெட்டிலிருந்து பர்ஸை எடுத்தான். உண்மையில் பாபுவுக்கு இந்த லாட்டரி சமாசாரம் எதுவும் தெரியாது. அக்னி ஹோத்ரனிடம் அறிமுகத்தை வளர்த்துக் கொள்ளத்தான் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்து தனக்கும் அந்த ஆட்டத்தில் உற்சாகம் இருப்பது போல் நடித்தான்.

அக்னிஹோத்ரன் இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. பகல் முழுவதும் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றிய சாமியார் மாலை வேளையில் வேசியின் வீட்டில் பிடிபட்டால் எப்படியிருக்குமோ அவருடைய நிலைமை அப்படி இருந்தது. உண்மையில் அவருக்கு வெற்றிலை போடும் பழக்கம் கூட இருந்தது இல்லை. ஆனால் இந்தப் பழக்கம் மட்டும் எப்படித்தான் ஒட்டிக் கொண்டதோ தெரியாது. தினமும் பத்து ரூபாய்க்காவது லாட்டரி டிக்கெட் வாங்கா விட்டால் அவருக்கு தூக்கமே வராது.

பாபு அவருடைய சங்கடத்தை உணர்ந்தான். அந்த சங்கடத்திலிருந்து அவரை மீட்க வேண்டிய பொறுப்பு தன்னுடையது தான் என்று முடிவு செய்தவனாய் "ஜோதிடர் உங்களிடம் கூட இதைத்தான் சொன்னாரா சார்" என்றான்.

"ஜோதிடர் சொன்னதாவது? எதை?" நெற்றியைச் சுளித்தார் அவர்.

"இந்த வாரம் எனக்கு லாட்டரி விழும் என்று சொன்னார். அதான் வந்தேன்" என்றான்.

அவருக்கு ஆதாரம் கிடைத்து விட்டாற்போல் ஆயிற்று. "ஆமாம். ஆமாம். அதனால் தான் நானும் வந்தேன். ஒரே ஒரு டிக்கெட் மட்டும்தான்" என்று அதை வாங்கிக் கொண்டு அங்கிருந்து வேகமாக வெளியேறி விட்டார்.

பாபு தனக்குள் சிரித்துக் கொண்டான். பிறகு கடைக்காரனை நோக்கித் திரும்பி விசாரித்தான்.

"சிங்கிள் நம்பர் லாட்டரி."

லட்சாதிபதிகளை பிட்சாதிபதிகளாக மாற்றிக் கொண்டிருக்கும் வியாபாரம். நடுத்தரக் குடும்பத்தினரை நடுத்தெருவில் நிற்க வைக்கக் கூடிய சூதாட்டம். போலீசார் ரைடிங் செய்த போதும், கோர்ட்டிலிருந்து ஸ்டே ஆர்டர் வாங்கிக் கொண்டு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் மட்கா!

கடைக்காரன் சொன்னதிலிருந்து இதை ஆடுவது ரொம்ப சுலபம் என்று தோன்றியது. ஐந்து அல்லது பத்து ரூபாய் போட்டு ஒரு லாட்டரி டிக்கெட்டை வாங்க வேண்டும். அந்த டிக்கெட்டிற்குப் பரிசு விழுந்தால் லட்சமோ ஐம்பதாயிரமோ கிடைக்கும். அதுவரை சரிதான். அதற்கப்புறம்தான் இருக்கிறது உண்மையான தந்திர மெல்லாம்.

நாம் வாங்கிய டிக்கெட்டின் கடைசி எண்ணும் பரிசு விழுந்த நம்பரின் கடைசி எண்ணும் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் நாம் கட்டிய பத்து ரூபாய்க்கு எண்பது ரூபாய் கிடைக்கும்.

மிகக் கவர்ச்சியாக தென்படும் இந்த சூதாட்டத்தில் உண்மையான பாயிண்ட் என்னவென்றால் ஒவ்வொரு பத்து டிக்கெட்டுகளுக்கும் ஒரு பரிசு (எண்பது ரூபாய்)



நிச்சயம். முதல் பரிசு போக மீதி எல்லாம் லாட்டரி நிர்வாகிகளுக்கும், ஏஜெண்டுகளுக்கும் போய்ச் சேரும்.

மாநில அரசு இந்த டிக்கெட் வரிசைகளை இரண்டு லட்சத்திற்கு விற்பனை செய்கிறது. மொத்தம் வருவாய் 20 லட்சம். செலவுகள் இந்த விதமாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| சிங்கிள் நம்பர் பரிசுகள் | 16 | லட்சம் |
| முதல் மற்றும் இதர பரிசுகள் | 1 | " |
| செலவுகள், கமிஷன் | 2 | " |
| மொத்த செலவு | 19 | லட்சம் |

இவ்விதமாக தினமும் ஒரு லட்சம் லாபம் வரும். அதாவது ஆண்டுக்கு மூன்றரைக் கோடிகள் நிகர ஆதாயம். இவ்வளவு லாபம் இருப்பதால்தான் அரசாங்கமே இதை நடத்தி வருகிறது.

பூட்டான் லாட்டரி, பாக்ய லக்ஷ்மி போன்றவை இந்த ரகத்தைச் சேர்ந்த லாட்டரிகள். தினந்தோறும் இந்த லாட்டரி நடக்கும். கொஞ்சம் அதிர்ஷ்டத்தை ருசி பார்த்து விட்டால் மக்கள் எப்படியும் விழுந்தடித்துக் கொண்டு வருவார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். பத்து பேர் சேர்ந்து நூறு ரூபாய் போட்டு அதில் எண்பது ரூபாய் தம்மில் ஒருவர் எடுத்துக் கொண்டு பத்து ரூபாயைக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு எஞ்சிய பணத்தை பூட்டான் அரசாங்கத்திற்கு அனுப்புவதை விட முட்டாள் தனம் வேறு என்ன இருக்க முடியும்?

இதைப் பற்றி அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் கூட வேடிக்கையாக இருக்கும். மத்திய பிரதேஷ் மாநில அரசைத் தவிர வேறு எந்த அரசும் இந்த லாட்டரிகளைத்

தடுத்து நிறுத்துவதற்கு சுமுகமாக இல்லை. ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பொருளாதார அமைச்சர் ஒரு படி மேலேயே போய் விட்டார். "இதனால் மக்களுக்கு பெரிதாய் என்ன செலவு இருக்கப் போகிறது? ஒரு நாளைக்குப் பத்து ரூபாயை செலவு செய்து அடுத்த நாள் லாட்டரி விழுமோ என்ற ஆசையோடு இரவு முழுவதும் நிம்மதியாக தூங்குவான். அதோடு குடி, விபசாரம் போன்றவற்றை விட லாட்டரியில் ஏற்படும் தீங்கு குறைவு தான்" என்று அறிக்கை விட்டார்.

சாராயத்தை தடை செய்ய வேண்டும் என்று பெரிதாக தலையங்கம் எழுதும் பத்திரிகைகள் கூட இந்த லாட்டரி ரிசல்டுகள் தினமும் பிரசுரிப்பது வருந்தத்தக்க விஷயம். இதனால் சர்குலேஷன் பெருகும், வியாபார விளம்பரங்கள் கிடைக்கும் என்பதால் பத்திரிகைகள் தொடர்ந்து பிரசுரித்து வந்தன. பல லட்சம் பேர் இந்த லாட்டரி வியாபாரத்தின் மீது ஆதாரப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பது மற்றொரு வாதம்.

எது எப்படியிருந்தாலும் இந்த யோசனை தனக்கு வராததற்கு பாபு வருந்தினான். மறு நாள் அக்னி ஹோத்ரன் வரும் பொழுது எப்படியாவது இந்த விவகாரத்தில் மேலும் அறிவைப் பெற்று அவருடன் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் நினைத்தான்.

கடைக்காரனிடம் சார்ட் கேட்டான்.

தினந்தோறும் லாட்டரியின் கடைசி எண் எது வந்தது என்பதைத் தெரிவிக்கும் சார்ட் ஒன்று இருக்கும். அதைப் பொறுத்து மறுநாள் எந்த எண் வரும் என்று கணக்கிடுவார்கள். இதற்குப் பல தியரிகள் இருந்தன. யாருடைய முட்டாள்தனம் எந்த லெவலில் இருக்குமோ தியரியும் அதே லெவலில் இருக்கும்.



கடைக்காரன் அந்த மாதத்திற்கு சம்பந்தப்பட்ட சார்ட் கொடுத்தான்.

| BHAGYA LAKSHMI | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| * | * | 2 | 9 | 4 | 6 | 5 |
| 3 | 1 | 8 | 2 | 7 | 6 | 4 |
| 8 | 8 | 9 | 1 | 8 | 4 | 3 |
| 2 | 2 | 2 | 6 | 9 | 3 | 1 |
| 8 | 5 | 8 | 4 | 6 | * | * |

பாபு அதைக் கூர்ந்து பார்த்தான். அந்த விதமான சார்ட் எதற்கு என்று புரியவில்லை அவனுக்கு. தினந் தோறும் லாட்டரியை எடுப்பார்கள். அதில் ஒரு நம்பர் இருக்கும். அந்த நம்பர் வந்தவருக்கு ஐம்பதாயிரமும் கடைசி நம்பர் ஒன்றாக இருந்தவருக்கு எண்பது ரூபாயும் தருவார்கள். இதற்குப் போய் சார்ட் எதற்கு?

அவன் யோசித்துக் கொண்டிருந்த போது கடைக் காரன் சொல்லத் தொடங்கினான்.

"ஒன்றாம் தேதி செவ்வாய்க் கிழமையை பாருங்கள் சார். இரண்டாம் எண் வந்திருக்கு. அதற்குக் குறுக்காய் மறுபடியும் கீழே இரண்டு வந்திருக்கு. அதே போலவே இருபத்தி மூன்றாம் தேதி ஆறு வந்திருக்கு. அதற்குக் குறுக்காய் மேலே இன்னொரு ஆறு வந்திருக்கு."

"அதனால் என்ன?" என்றான் பாபு.

"மேலே அப்படிக் குறுக்காக நம்பர் வந்திருக்கும் போது பக்கத்திலேயே இரண்டாம் எண்ணின் ஆபோசிட்

நம்பரான ஏழு வந்திருக்கு. அதனால் இன்னிக்கு அதாவது ஒண்ணாம் தேதி அன்று ஒன்றாம் எண் வரும்."

"எப்படி வரும்?"

"ஆறுக்கு ஆபோசிட் எண் ஒன்று என்பதால்."

பாபுவுக்கு அவன் சொன்னது கொஞ்சம் கூடப் புரியவேயில்லை. "ஆபோசிட் என்றால்?"

"ஒரு எண்ணோடு ஐந்தைக் கூட்டினால் அதன் ஆபோசிட் நம்பர் வரும். 2ம் எண்ணுக்கு ஆபோசிட். அதே போல் 3 என்ற எண்ணுக்கு ஆபோசிட் நம்பர் 8."

பாபுவுக்கு இரக்கம் ஏற்பட்டது. நாட்டின் மீதே. தன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்பட்டு விடாமல் "இந்த மாதம் முழுவது சைபர் வரவேயில்லை. அதற்கு பிராபபிலிடி அதிகமாக இருக்குமோ" என்றான்.

"அது கட் நம்பர் சார்."

"கட் நம்பர்கள் மாதக் கணக்கில் வராது. அறுபது எழுபது நாட்களுக்கு ஒரு தடவை கூட வராது."

"ஏன்?"

"சில வாடிக்கையாளர்கள் இன்னிக்கு பத்து ரூபாய் ஆடினால், மறுநாள் அதே நம்பர் மீது இருபது ரூபாய்க்கு ஆடுவாங்க. எப்பவாவது அந்த நம்பர் வந்தால் லட்சக் கணக்கில் லாபம் வரும்" என்றான் கடைக்காரன்.

"ஆனால் ஆயிரக்கணக்கில் முதலீடு செய்யணும் இல்லையா?"

"ஆயிரக் கணக்கிலா?" சிரித்தான். கடைக்காரன். "லட்சக் கணக்கில் போடணும் சார். வீடு வாசல், நிலம் நீச்சு எல்லாவற்றையும் அடமானம் வெச்சு ஆடுவாங்க. போன வாரம் ஒருத்தர் வேலூரிலிருந்து வந்து சைபர்



மீது இரண்டு லட்சம் வைத்து ஆடினார் வரவில்லை. பாவம் அவருடைய வாழ்க்கையே நாசமாகி விட்டது.

(இது உண்மையாக நடந்த சம்பவம்)

பாபு அந்த சார்ட்டை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். சாதாரணமாக நடக்கும் லாட்டரிக்குப் பின்னால் இவ்வளவு கதை இருக்கிற தென்று அவனுக்கு இதுவரை தெரியாது. அவன் சார்ட்டைப் பார்த்தான். சைபரிலிருந்து ஒன்பது வரை பலவித எண்கள், மொத்தம் பத்து நம்பர்கள், அதில் நாளுக்கு ஒன்று. அதைக் கண்டு பிடிப்பது எப்படி? இதில் அதிர்ஷ்டத்தை நம்பி பயன் இல்லை.

நாளுக்கு நாள் முதலீட்டை இரு மடங்காய் பெருக்கிக் கொண்டே போனாலும் லாபமில்லை. அந்த விதமாக செய்தால் பதினைந்து நாட்களுக்குள் மொத்தம் மூன்று லட்சம் வரை போட வேண்டியிருக்கும். பதினைந்து நாட்களில் நாம் கட்டிய நம்பர் வராமல் போவதற்கு சான்ஸ் நிறைய இருக்கு. உதாரணமாக 7 என்ற எண் கடந்த இருபத்தோரு நாளாய் வரவில்லை. 2 என்ற எண் கடந்த ஒன்பது நாட்களாய் வரவில்லை.

பின்னே எப்படி? இந்த லாட்டரி விஷயம் எப்படி யிருந்தாலும் அக்னிஹோத்ரனை தன் பக்கம் திருப்பிக் கொள்ள வேண்டும் என்றால் ஏதாவது ஒன்று செய்ய வேண்டும். பாபு யோசிக்கத் தொடங்கினான். எங்கேயோ இதற்கு தீர்வு இருப்பது போல் தோன்றியது.

பத்து ரூபாய்க்கு எண்பது ரூபாய்.

பத்து எண்களில் ஒரு எண்.

பாபுவின் மூளை கம்ப்யூட்டரை விட வேகமாக யோசிக்கத் தொடங்கியது.

* * *

# 15

ஸ்ரீ பாபு வீட்டிற்குத் திரும்பி வந்த போது வீட்டிற்கு உள்ளேயிருந்து பேச்சுக் குரல்கள் காதில் விழுந்தன. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. திருமணம் ஆன பிறகு ஏறத்தாழ உறவினர்கள் அத்தனை பேரும் இவர்களை ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஒரு விதத்தில் சொல்லப் போனால் அவர்களைப் பழி தீர்த்துக் கொள்ளணும் என்ற எண்ணம் கூட பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறியை அவனுள் தூண்டியது.

பின்னே ஸ்ரீ லக்ஷ்மி யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாள்?

"நீங்கள் ஸ்போர்ட்ஸ் மேன் என்று நினைக்கிறேன்." ஸ்ரீ லக்ஷ்மியின் குரல்.

"உங்களுக்கு ஏன் அந்த அபிப்பிராயம் ஏற்பட்டது?"

"உங்கள் உயரத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றுகிறது."

பாபு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தான். அழகாக இருந்த ஒரு இளைஞன் ஸ்டூலின் மீது ஏறி மெழுகு வர்த்தியைக் கையில் பிடித்துக் கொண்டு மெயினை செக் செய்து கொண்டிருந்தான்.

அவனுடன் தமக்கு அறிமுகம் இருந்தது இல்லை. பக்கத்து வீட்டுப் பையன் ஸ்ரீ லக்ஷ்மியுடன் சிரித்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான். "நீங்கள் டான்ஸர் என்று நினைக்கிறேன்."



"உங்களுக்கு ஏன் அப்படித் தோன்றியது?"

உங்கள் உடற்கட்டைப் பார்த்தால் அப்படித் தோன்றியது." அந்த இளைஞன் சொல்லிக் கொண்டிருந்தான்.

பாபுவுக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இவ்வாறு புகழ்ந்து கொண்டிருந்தார்கள் என்றால் அது காதலுக்கு முதல் படி என்று அர்த்தம். யாரோ ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அப்படிப் பேசிக் கொண்டிருந்தால் யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அதில் ஒருத்தி தன் மனைவியாக இருந்ததால்தான் கஷ்டம்.

"நீங்க பியர்ஸ் சோப் பயன்படுத்துவீங்களா? உங்கள் முகம் பளபளவென்று மின்னிக் கொண்டி ருப்பதைப் பார்த்தால்..."

"நீங்கள் கால்கேட் டூத் பேஸ்ட் பயன்படுத்துவீங்களா?"

"ஏன் கேட்கிறீங்க?"

"உங்கள் பல் வரிசை பளிச்சென்று வெண்மையாய் இருக்கே?"

"உங்க அம்மா நிறைய பாலேட்டை சாப்பிட்டு இருப்பாங்களோ?"

"ஏன்?"

"நீங்க பாலேட்டை போல் வழுவழுப்பாய் இருக்கீங்க."

இதெல்லாம் முதல் படிகள். இளைஞன் சாமர்த்தியசாலியாக இருந்தால் சீக்கிரமாக இரண்டாவது படிக்கு வழிவகுப்பான்.

"நீங்கள் பச்சை வெள்ளிரிக்காயை நிறைய சாப்பிடுவீங்களா?"

"ஏன் கேட்கிறீங்க?"

"வேண்டாம். சொன்னால் நன்றாக இருக்காது."

"ப்ளீஸ்! சொல்லுங்களேன்."

"அம்மம்மா! ஆசையைப் பார். சொன்னால் எனக்கு என்ன தருவீங்க?"

"என்ன வேண்டும்?"

"சொல்லித்தான் ஆகணும் என்கிறீங்களா? ஊஹூம். என்னால் இப்படிச் சொல்ல முடியாது. காதில் சொல்கிறேன்."

"சரி. சொல்லுங்கள்."

"எதைச் சொல்லட்டும்? பச்சை வெள்ளிரிக்காயைச் சாப்பிட்டால் என்ன ஆகுமோ சொல்லட்டுமா இல்ல எனக்கு என்ன வேணும்னு சொல்லட்டுமா?"

இப்படிப் போய்க்கொண்டிருக்கும் உரையாடல். காதலர்கள் இருவரும் உப்புச் சப்பில்லாத தொலைக் காட்சி நடிகர்களாய் இருந்தால் உரையாடல் வேறு விதமாய் இருக்கும்.

அவன்: நீங்கள் இன்னிக்கு ரொம்ப அழகாய் இருக்கீங்க.

ஹி... ஹி...

அவள்: (கலக்கத்துடன்) ஐயோ! என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இந்த துக்கம்?



அவன்: துக்கம் இல்லைங்க. சிரித்தேன்.

அவள்: மன்னியுங்கள். தவறாகப் புரிந்து கொண்டு விட்டேன். (சிரிக்கிறாள்)

அவன்: ஏன் சிரிக்கிறீங்க? மன்னிப்பு கேட்கும் போது இரக்கம் ததும்ப கேட்கணும் இல்லையா. போகட்டும் விடுங்க. இனி விஷயத்துக்கு வருவோம். நான் உங்களைக் காதலிக்கிறேன். மல்லிகைக் கொடி போன்ற உங்கள் இடை, அரச இலை போன்ற கண்கள், சுருட்டிய வெற்றிலைப் போல் இருக்கும் உங்கள் வாய் (என்று சொல்லிக் கொண்டே பதட்டத்துடன்) ஐயோ! என்ன ஆச்சு உங்களுக்கு? வயிற்று வலியா?

அவள்: இல்லைங்க.

அவன்: பின்னே? வயிற்றில் சங்கடமாக இருக்கா? ஏன் அப்படி நெளியறீங்க?

அவள்: வெட்கத்தால். (மேலும் வெட்கப்படுவாள்)

இதுதான் தொலைக் காட்சிக் காதல்.

பாவுக்கு தன்மீதே தனக்குக் கோபம் வந்தது. மனைவி பக்கத்து வீட்டு இளைஞனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, தான் வாசலில் நின்று கொண்டு இளைஞர்கள் இளம் பெண்களோடு எந்த விதமாக பேசுவார்கள் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறான் என்றால் தன்னை விட முட்டாள் வேறு யாரும் இருக்க முடியாது.

உள்ளே இளைஞன் சொல்லிக்கொண்டிருந்தான். "ஃப்யூஸ் சரியாகத்தான் இருக்கு. ஒருக்கால் வெளியே கம்பத்திலேயே போயிருக்கும்."

"அப்படித்தான் இருக்கும். இப்போ என்ன செய்வது? எனக்கு இருட்டு என்றாலே பயம். அவர் வருவதற்குக் கூட தாமதமாகும்னு. நினைக்கிறேன்."

"கொஞ்சம் நேரம் வேண்டுமானால் துணைக்கு உட்கார்ந்திருக்கிறேன்."

பாபுவுக்கு முள் மேல் நிற்பது போல் இருந்தது.

ஸ்ரீ லக்ஷ்மி சொல்லிக் கொண்டிருந்தாள். "வீணாக உங்களுக்கு சிரமத்தைத் தருகிறேன்."

"நன்றாகக் சொன்னீங்க போங்க. உங்களைப் போன்ற அழகான பெண்ணோடு பேசுவது சிரமமா? இட்ஸ் எ ப்ளெஷர். கரெண்ட் போனால் மட்டும் என்ன? நீங்களே பிரகாசமாய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் போது."

"ரொம்ப தமாஷாக பேசுறீங்க."

இனியும் தாமதித்தால் நிலைமை கை மீறிப் போய் விடும் ஆபத்து இருப்பதை உணர்ந்தான் பாபு. அவன் முகம் சிவந்து விட்டது. ஸ்ரீ லக்ஷ்மி தனக்கு இப்படி அநியாயம் செய்வாள் என்று நினைக்கவில்லை. திருமணத்திற்கு முன்பு காதலித்த போது தன்னிடம் கூட இதே போல் பேசினாள்.

கதவு அருகில் சத்தம் கேட்கவே "யாரு?" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி.

"நான் தான்."

"நீங்களா? வாங்க. கரெண்ட் போயிடுத்து."

"அதான் தெரிகிறதே."

"மீட் மிஸ்டர் பிரதாப். நம்ப பக்கத்து வீட்டில் இருக்கிறார். இஞ்ஜினியரிங் பைனல் இயர். "ஸ்ரீ லக்ஷ்மி அறிமுகப்படுத்தினாள்.



"கிளாட் டு மீட் யூ" என்றான் கையை நீட்டிக் கொண்டே அந்த இளைஞன். ஒரு கையில் மெழுகு வர்த்தியை தீவட்டியைப் போல் பிடித்துக் கொண்டே இன்னொரு கையை நீட்டிக் கொண்டு ஒலிம்பிக் ரன்னரைப் போல் இருந்தான்.

'இந்த உலகத்தில் நான் சந்திக்க விரும்பாத ஒரே நபர் நீதான்" என்று மனதில் நினைத்துக்கொண்டே கை குலுக்கினான் பாபு.

"நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் போய்விட்டான்.

அவன் போன பிறகு ஸ்ரீ லக்ஷ்மியிடம் சொன்னான். "எனக்கு இந்த மாதிரியெல்லாம் பிடிக்காது."

அவள் திகைப்போடு "உங்களுக்கு எந்த மாதிரி யெல்லாம் பிடிக்காது?" என்று கேட்டாள்.

"இப்படி பக்கத்து வீட்டு இளைஞனை அழைத்து ஃப்யூஸ் போடச் சொல்வது." வெறுப்போடுச் சொன்னான்.

"இருட்டு என்றால் எனக்கு பயம்" என்றாள் அப்பாவியாய்.

அதற்குள் தான் அதிகப்படியாக பேசி விட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவள் அதை உணராமல் போனது நிம்மதியாக இருந்தது.

"இதோ பாரு லக்ஷ்மி. இப்படிப்பட்ட இளைஞர்கள் முதலில் நன்றாகவே பேசுவார்கள். கொஞ்சம் இடம் தந்து விட்டால் அப்புறம் அட்வான்டேஜ் எடுத்துக் கொண்டு விடுவார்கள்."

"ஐயோ! என் மனதில் அப்படிப்பட்ட எண்ணமே இல்லைங்க."

"உனக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவங்களுக்கு வீண் ஆசையைக் கிளப்பி விட்டதாக ஆகி விடாதா?"

"அக்கம் பக்கத்திலுள்ளவர்களை இந்த அளவுக்குக் கூட உதவிக்குக் கூப்பிடமாட்டங்களா என்ன? இதில் தவறென்ன இருக்கு?"

"சாதாரணமாக கேட்கலாம். அதற்காக நீ ஸ்டூலைப் பிடித்தபடி வம்பு பேசிக்கொண்டு ரொம்ப தமாஷாக பேசுறீங்களே என்றெல்லாம் சொல்லத் தேவையில்லை."

"அந்த அளவுக்குக் கூட சிரித்துப் பேசவில்லை என்றால் அவங்க வந்து எப்படி நமக்காக வேலையைச் செய்வாங்க?"

"அதாவது நீ உன் முறுவலை இரையாய் பயன் படுத்தி வேலையைச் செய்ய வைத்துக் கொள்கிறாய். அப்படித் தானே. எனக்கு இதெல்லாம் பிடிக்காது. என் மனைவி என்னோடு மட்டுமே சிரித்துப் பேசணும்னு விரும்புகிறேன். லக்ஷ்மி! என்னைப் புரிந்துகொள். இது தான் காதல் என்றால்."

ஸ்ரீ லக்ஷ்மி தன் ப்ளவுஸுக்குள்ளிருந்து காகிதம் ஒன்றை எடுத்தாள். அவன் திகைப்படைந்து "என்ன இது?" என்றான்.

"கடிதம்."

பாபு திடுக்கிட்டு "அதற்குள் கடிதம் வரை வந்து விட்டதா விவகாரம். இது அவன் எழுதியதுதானா?" என்று கேட்டான் கொதித்தெழுந்தபடி.

"இல்லை. நான் உங்களுக்கு எழுதியது" என்று அவன் இன்னும் வியப்பிலிருந்து மீளும் முன்பே அவன் கையில் அக்கடிதத்தை வைத்துவிட்டு அங்கிருந்து போய் விட்டாள்.



மெழுகு வர்த்தி வெளிச்சத்தில் அவன் அதைப் படிக்கத் தொடங்கினான்.

அன்புள்ள கணவருக்கு,

இன்று மாலையில் உங்களை அந்தப் பெண்ணோடு பார்க்கில் பார்த்தேன். நீங்கள் வீட்டுக்கு வந்ததுமே அதைப் பற்றி விசாரித்தேன் என்று வையுங்கள். நீங்கள் சொல்லுவீர்கள். இதெல்லாம் சாதாரணம் தான் அவளோடு பேச வேண்டிய வேலை இருந்தது. அதனால் தான் பார்க்கிற்கு அழைத்துக் கொண்டு போனேன்' என்று. 'பேச வேண்டியிருந்தால் சாதாரணமாக பேசியிருக்கலாம் இல்லையா. பார்க்கிற்கு அழைத்துக் கிட்டுப் போவானேன்?' என்று நான் கேட்பேன்.

'அந்த அளவுக்குக் கூட சிரித்துப் பேச வில்லை என்றால் நமக்கு வேண்டிய சமாசாரத்தை எப்படிச் சொல்வார்கள்?' என்று சொல்வீங்க.

எனக்கு உங்கள் மேல் கோபம் வரும். வேலை ஆகணும் என்பதற்காக சிரித்துச் சிரித்துப் பேசுவது அநியாயம் என்பேன். நீங்கள் எனக்கு அபயமளிப்பது போல் 'என் மனதில் ஒன்றுமே இல்லை. நீ இதைப் பற்றிக் கவலையே பட வேண்டாம்' என்பீங்க.

'உங்கள் மனதில் ஒன்றுமில்லாமல் இருக்கலாம். வீணாய் அந்தப் பெண்ணின் மனதில் ஆசையை விதைப்பானேன்' என்று வாதாடுவேன். நீங்கள் என் அருகில் வந்து எனக்கு லெக்சர் கொடுப்பீங்க. வியாபாரத்தில் எந்தெந்த நபர்களோடு எப்படிப் பேச வேண்டி

வரும் என்றும் இதையெல்லாம் தவிர்க்க முடியாது என்றும் தொடர்கதை லெவலில் சொற்பொழிவு ஆற்றுவீங்க.

என் சின்னஞ் சிறு மூளைக்கு இதெல்லாம் புரியாது. "நீங்கள் என்னிடம் தவிர வேறு யாரிடமும் சிரித்துப் பேசுவது எனக்குப் பிடிக்காதுங்க" என்பேன். நீங்கள் என்னை ஒரு முறை இரக்கத்துடன் பார்ப்பீங்க. "நீ இன்னும் நிறைய வளரணும்" என்பீங்க. "ஒவ்வொன்றையும் குறுகிய மனப்பான்மையுடன் பார்க்காமல், அடுத்தவன் மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளணும்" என்று இலவச அறிவுரையை வழங்குவீங்க.

அன்புள்ள கணவரே!

நீங்கள் இவ்வாறு வாதிட வழியில்லாமல் நானே கடிதம் எழுதி, நீங்கள் வரும் சமயம் பார்த்து மெயினை அணைத்து விட்டு பக்கத்து வீட்டு இளைஞனைக் கூப்பிட்டேன். சரியாய் எனக்கு என்னென்ன பதில் வேண்டுமோ அதே கேள்விகளைக் கேட்டு வரவழைத்தேன். இப்பொழுது சொல்லுங்கள், அந்தப் பெண்ணோடு பார்க்கிற்கு ஏன் போனீங்க என்று."

அறைக்குள் திடீரென்று வெளிச்சம் வந்தது. வெளிறிப் போன முகத்தோடு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த பாபு திடுக்கிட்டான். ஸ்ரீ லக்ஷ்மி மெயின் சுவிட்ச் அருகில் நின்று சிரித்துக் கொண்டிருந்தாள். "அந்த இஞ்ஜினியரிங் இளைஞனுக்கு மெயின் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருக்கோ, ஃப்யூஸ் போய் விட்டதோ என்று கூடத் தெரிய வில்லை பாவம்" என்றாள்.



பாபு அந்த வார்த்தைகளை காதில் வாங்கவில்லை. தன்னை எங்கே அடிக்க வேண்டுமோ அங்கே அடித்து விட்ட மனைவியைப் பார்த்து ஒரு பக்கம் ஆத்திரம் வந்தாலும் இன்னொரு பக்கம் அவள் சாமர்த்தியத்தைப் பார்த்துத் தலை சுற்றியது. 'நான் இல்லை ஸ்ரீ லக்ஷ்மி! உன்மையில் சம்பாதிக்க நினைத்தால் இருபது லட்சம் என்ன? இருபது கோடி கூட சம்பாதித்து விடுவாய்' என்று நினைத்துக் கொண்டான்.

அவள் அவனிடம் வந்தாள். "இப்போ புரிந்ததா காதல் என்றால் என்னவென்று?" என்றாள். அவன் பதில் சொல்லவில்லை. அவளை அப்படியே அலாக்காய்த் தூக்கிக் கொண்டு படுக்கையறைக்குள் அழைத்துச் சென்றான்.

ஊடலுக்குப் பின் ஏற்படும் கூடல் அவர்களுக்கு எப்போதுமே ஒரு அற்புதம் தான்.

திடீரென்று தூக்கத்திலிருந்து விழிப்பு ஏற்பட்டது ஸ்ரீ லக்ஷ்மிக்கு. பாபு விளக்கு வெளிச்சத்தில் சார்ட்டைப் பரிசீலித்துக் கொண்டிருந்தான்.

நள்ளிரவில் அவன் என்னதான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற ஆர்வத்தில் அருகில் சென்று பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். தோளைச் சுற்றிலும் கைகளைப் போட்டு கழுத்துப் பக்கமாக அந்தக் காகிதத்தின் மீது பார்வையைச் செலுத்தினாள்.

அந்த சார்ட் முழுவதும் நம்பர்கள் இருந்தன.

"என்ன இது?" என்று கேட்டாள்.

"இதற்கு முன் உன்னிடம் சொன்னதில்லையா?"

"ஊஹூ¬ம்."

"சிங்கிள் நம்பர் லாட்டரி. சைபர்லிருந்து ஒன்பது வரை. தினமும் ஒரு நம்பரை லாட்டரி எடுப்பாங்க. பத்து ரூபாய் கட்டினால் அந்த நம்பர் வந்தால் எண்பது ரூபாய் வரும். மக்கள் இந்த மோகத்தில் லட்சக் கணக்கான பணத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள்."

"இழக்காமல் என்ன செய்வாங்க? லாபம் வருவதற்கு சான்ஸ் நூற்றுக்கு எண்பது சதவீதம் இருக்கே?" என்றாள்.

"ஒரு விதத்தில் அப்படிச் சொல்லலாம். ஆனால் இன்றைக்குப் பத்து நாளைக்கு இருபது அதற்கு அடுத்த நாள் நாற்பது என்று கட்டினோம் என்று வைத்துக் கொள். என்னிக்கு லாட்டரி விழுந்தாலும் ஆயிரக் கணக்கில் வரும்" என்றான்.

"ஆனால் பதினைந்து நாட்கள் வரை நாம் கட்டிய நம்பர் வராமல் போனால் பதினாறாவது நாள் முப்பத்தி மூன்று ஆயிரம் வரை கட்ட வேண்டியிருக்கும். அன்றைக்கு மொத்தம் அறுபத்தைந்து ஆயிரம் வரை நம்ப முதலீடு இருக்கும்" என்றாள் அவள் கணக்குப் போட்டு விட்டு.

"இந்த சார்ட்டைப் பார்த்தால் சில நம்பர்கள் மாதக் கணக்கில் கூட வரவில்லை. அதைத்தான் கட் நம்பர் என்பார்கள். ஒரு மாதம் ஆகிவிட்டால் ஆறு கோடிக்கு மேல் போட வேண்டியிருக்கும். இதே போல் சொத்துக் களை விற்று திவாலானவர்கள் இருக்காங்களாம்." அவன் ஆழ்ந்து பெருமூச்சு விட்டான்.

'எங்கேயோ இதைப் பிரேக் பண்ண முடியும் என்று தோன்றுகிறது. எங்கே?'



இருவரும் அந்த சார்ட்டையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். பத்து நிமிஷம் ஆயிற்று. ஒரு மணி நேரமும் ஆகிவிட்டது. ஸ்ரீ லக்ஷ்மிக்கு சலிப்பு ஏற்பட்டது. பாபு அந்த சார்ட்டையே கூர்ந்து பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். ஸ்ரீ லக்ஷ்மிக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை.

"என்ன இருக்கு அந்த எண்களில்? எவ்வளவு நேரம் தான் பார்த்துக்கிட்டு இருப்பீங்க?" என்றாள்.

அவன் பேசவில்லை. அவள் போய் படுத்துத் தூங்கி விட்டாள்.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து அவள் மறுபடியும் விழித்துக் கொண்டு பார்த்த போது அவன் கணக்குப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். சுற்றிலும் காகிதங்கள் உருண்டையாய் கசக்கிப் போட்ட படி இருந்தன. அவள் வியப்போடு அவனிடம் வந்தாள். அவன் ஒரு மனதாக வேலை பார்த்துக் கொண்டிருந் தான்.

'என்ன? ஒரு விஞ்ஞானியைப் போல் ரொம்ப சீரியஸாக ஆராய்ச்சி செய்துக்கிட்டு இருக்கீங்களே?' என்று சொல்ல நினைத்தவள் அவன் கவனம் சிதறி விடுமோ என்று மௌனமாக இருந்து விட்டாள்.

சற்று நேரம் கழித்து அவன் பேனாவைக் கீழே வைத்து விட்டு சோம்பல் முறித்துக் கொண்டே "கம்ப்யூட்டர் வேண்டியிருக்கும்" என்றான்.

அவள் அதிர்ந்து போய் "என்னது?" என்றாள்.

"இன்னும் கொஞ்சம் ஆழமாய் சோதிக்கணும். நம் மேதாவித்தனம் போறாது" என்றான்.

"இப்போ நேரம் என்ன ஆச்சு தெரியுமா? ஒரு மணி. நள்ளிரவு ஒரு மணிக்கு கம்ப்யூட்டர் எங்கே கிடைக்கும்? படுத்துத் தூங்குங்க. நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம்."

"நாளைக்கு எந்தச் சூழ்நிலையிலும் பரமானந்தன் சாருக்கு இதைச் சொல்லணும். நேரம் அதிகம் இல்லை. நீ போய்த் தூங்கு" என்று சொல்லிவிட்டு மறுபடியும் கணக்கில் ஆழ்ந்து போனான்.

அவளுக்குப் படுத்துக் கொள்ளத் தோன்றவில்லை. அவனைப் பார்த்தால் அவளுக்கு இரக்கமாக இருந்தது. இன்னொரு பக்கத்தில் சந்தோஷமாகவும் இருந்தது. வேலையின்பால் அவனுக்கு இருந்த நேர்மையும், அவனிடம் இருந்த சிறுப்பிள்ளைத்தனமும் அவளுக்குப் பிடித்திருந்தன. ஒரு சிறுவன் பொம்மை வீடு கட்டும் போது உலகத்தையே மறந்து போய் எப்படி ஈடுபடுவானோ அதே விதமாக வேலையில் ஆழ்ந்து போவான். மற்றவர்களுக்கு ஆர்வம் தரும் விஷயங்கள் எதுவும் அவனுக்கு ஆர்வத்தை உண்டாக்காது. வேலை முடிந்து விட்டால் தன் மடியில் படுத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்து விடுவான். எந்த மனைவிக்குமே இதை விட வேறென்ன வேண்டும்?

திடீரென்று அவன் "வந்து விட்டது" என்று கத்தினான்.

அவள் ஆர்வத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு "எப்படி?" என்று கேட்டாள்.

அவன் விவரித்தான். "மொத்தம் பத்து எண்கள். அதில் ஒரு நம்பர் மீது லாட்டரி கட்டி அந்த நம்பர் வந்தால் நமக்குப் பத்து ரூபாய்க்கு எண்பது ரூபாய் தருவாங்க இல்லையா?"



"ஆமாம். ஜெயிப்பதற்கு நமக்கு நூற்றுக்கு எண்பது பர்செண்ட் சான்ஸும், அவனுக்கு நூறு பர்செண்ட் சான்ஸும் இருக்கிறது" என்றாள்.

"ஆனால் அவனுக்கு இல்லாத ஒரு அட்வாண்டேஜ் நமக்கு இருக்கிறது. நாம் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் கட்டி அவனிடமிருந்து எட்டு மடங்கு கேட்கலாம். என்றைக்கு வேண்டுமானாலும் கட்டலாம். வேண்டா மென்றால், விட்டு விடலாம். அவன் அப்படியில்லை. தினமும் கடையைத் திறந்து எந்த கஸ்டமர் எவ்வளவு பெட்டிங் வைக்கிறானோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளணும்.

"ஆமாம். அது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? இதில் சிறப்பு என்ன இருக்கு?"

"யோசித்துப் பார்த்தால் இருக்கும். சூதாட்டத்தில் எப்போதும் அடுத்தவனின் பலவீனம் நமக்கு லாபத்தைத் தரும். நம்மில் பத்து பேருக்கு ஆசையைக் காட்டி எட்டு மடங்கு தந்து எஞ்சிய இரண்டு பங்கை அவன் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொள்கிறான். நம்மை முட்டாளாக்குகிறான். அவனைப் பிடிக்க வேண்டும் என்றால் அந்த நெளிவு சுளிவு மூலமாகவே வீழ்த்த வேண்டும். நீ இந்த சார்ட்டை கவனமாக பாரு. அவனுக்கு இருக்கிற நம்பர்கள் எவ்வளவு? சைபர்லிருந்து ஒன்பது வரை. மொத்தம் பத்து. அதில் இரண்டு நம்பர்கள் கட் நம்பர்கள் என்று வைத்துக் கொண்டாலும் மற்ற நம்பர்களில் ஏதோ ஒரு நம்பரை தினந்தோறும் தர வேண்டும். ஒரு நம்பர் இன்னிக்கு வந்தால் திரும்பவும் ஒன்பதாவது நாள் வர வேண்டும். அப்படித்தானே?"

"அவன் இரண்டு நம்பர்களை மறைத்து வைத்துக் கொண்டு எஞ்சிய நம்பர்களை தரத் தொடங்கினால் அவ்வளவுதான்" என்றாள்.

"இந்த சாட்டைப் பாரு" என்றான்.

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 5 | 7 | 7 | 8 |
| 6 | 4 | 8 | 2 | 7 | 8 | 4 |
| 0 | 5 | 8 | 0 | 6 | 1 | 2 |

"இதில் மூன்றும் ஒன்பதும் கட் நம்பர்கள். எந்த கஸ்டமராவது, ஒரே நம்பர் மீது பணம் கட்டிக் கொண்டே போனால், அதை கொஞ்ச நாள் நிறுத்தி விடுவான் லாட்டரிக்காரன். கஸ்டமரிடம் பணம் தீர்ந்து போகும் வரை அந்த நம்பரைக் கொடுக்க மாட்டானாம். அதை கம் நம்பர் என்பார்களாம்."

ஸ்ரீ லக்ஷ்மி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"மொத்தம் இருப்பதோரு நாட்கள் வந்த நம்பர்கள் அவை. ஒன்றாம் எண் இரண்டு முறை இரண்டாம் எண் மூன்று முறை, நாலு என்ற எண் இரண்டு முறை இப்படி வந்திருக்கின்றன. ஒரே நம்பர் மீது அதிக மடங்கு ஆடிக் கொண்டே போனால் நிறைய முதலீடு செய்ய வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு ஒன்று என்ற எண் மீது பத்து ரூபாய் கட்டினோம் என்று வைத்துக் கொள். முதல் நாள் எண்பது ரூபாய் வரும். திரும்பவும் இருபது நாட்கள் வரை வராது. அதற்குள் நாம் பத்து லட்சம் வரை முதலீடு போட வேண்டியிருக்கும். இது நடக்காத காரியம். அத்தனை டிக்கெட்டுகளை நமக்கு விற்கவும் மாட்டார்கள்.



"அதனால்?"

"அதனால் நான் ஒரு புதுவிதமான சார்ட்டைத் தயாரித்திருக்கிறேன். இந்தக் கணக்கில் தினமும் லாட்டரி டிக்கெட்டுக்களை வாங்க வேண்டும் ஒரே நம்பர் மீது."

அந்த சார்ட்டில் நாள், டிக்கெட், விலை, மொத்த முதலீடு, லாட்டரி வந்தால் வரும்படி, நிகர லாபம் என்று ஆறு வரிசையில் கணித்திருந்தான் பாபு.

| நாள் | டிக்கெட்டுகள் | விலை | மொத்தம் முதலீடு | லாட்டரி வந்தால் வருமானம் | நிகர லாபம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | 10 | 10 | 80 | 70 |
| 2. | 1 | 10 | 20 | 80 | 60 |
| 3. | 1 | 10 | 30 | 80 | 50 |
| 4. | 1 | 10 | 40 | 80 | 40 |
| 5. | 2 | 20 | 60 | 160 | 100 |
| 6. | 2 | 20 | 80 | 160 | 80 |
| 7. | 2 | 20 | 100 | 160 | 60 |
| 8. | 2 | 20 | 120 | 190 | 40 |
| 9. | 3 | 30 | 150 | 240 | 90 |
| 10. | 3 | 30 | 180 | 240 | 60 |
| 11. | 3 | 30 | 210 | 240 | 30 |
| 12. | 4 | 40 | 250 | 320 | 70 |

"பன்னிரெண்டாவது நாள் நம் மொத்த முதலீடு இருநூற்றி ஐம்பது ரூபாய். இந்தக் கணக்கில் இருபதாவது நாள் ஆகும் போது ஆயிரம் ரூபாயை விட அதிகம் ஆகாது எந்த நம்பராக இருந்தாலும். கம் நம்பர் ஆக இல்லா விட்டால் அதை விட தாமதமும் ஆகாது. ஒருக்கால் நாற்பது நாள் தாமதமானாலும் நம் முதலீடு அதிகமாய் இருக்காது. வாரத்திற்கு ஒரு தடவை நாம் கட்டிய நம்பர் வருகிறது என்று வைத்துக் கொண்டாலும் இரு நூற்றி ஐம்பது ரூபாய் முதலீட்டின் மீது வாரத்திற்குக் குறைந்தது நாற்பது ரூபாய் லாபம் வரும். அப்படி யென்றால் வருடத்திற்கு 800% லாபம். முதல் மாத்திலேயே நமக்கு நம் முதலீடு திரும்ப வந்து விடும்."

"உண்மையாகவா?" ஸ்ரீ லக்ஷ்மி வியப்போடு பார்த்தாள். அவளால் நம்ப முடியவில்லை. "இது எவ்வளவு சுலபமாக இருந்தால் இவ்வளவு நாளாய் ஏன் எல்லோரும் பேசாமல் இருந்தாங்க?" என்று கேட்டாள்.

"சும்மா இல்லை. பணத்தைக் கட்டிக் கொண்டுதான் இருந்தாங்க. ஆனால் சார்ட்டில் நான் காட்டினாற் போல் முதல் நான்கு நாட்களும் ஒரே டிக்கெட் வாங்கி பிறகு முதலீட்டை இரண்டாவது நாளே இருமடங்காக்கு கிறார்கள். விரைவில் லாபத்தை சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையில் பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டு ஓட்டாண்டியாகி விடுகிறார்கள். பத்தாவது நாளே கையில் காசு இல்லாமல் போய் விடுகிறது. பதினோராவது நாள் நம்பர் வந்தால் வருத்தப்படுகிறார்கள். இதில் வேண்டிய தெல்லாம் பொறுமையும் நிதானமும்தான்.

ஸ்ரீ லக்ஷ்மி அவன் தயாரித்த சார்ட்டைப் பார்த்தாள். அவள் கூட புத்திசாலிதான். ஏனோ அவன் சொன்ன தியரி அவ்வளவு திருத்தியாய் தோன்றவில்லை. "நீங்கள் சொன்னது போல் ஒரு நம்பர் வாரத்திற்கு ஒருமுறையோ பத்து நாட்களுக்கு ஒரு முறையோ வந்தால் பரவாயில்லை. குறைந்தது இருபது நாட்களுக்கொரு முறை வந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால் நாற்பது நாட்கள் வரையில் வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது என்னதான் இருந்தாலும் இருபத்தி ஐயாயிரம் வரை இழப்பு ஏற்படும் இல்லையா? இது ரிஸ்க் என்று தோன்றுகிறது."



பாபு சிரித்தான். "எந்த விஞ்ஞானியாக இருந்தாலும் ஃபார்மூலா கண்டுபிடித்த முதல் நாளே முழுமை பெற்று விடாது. மெருகிட வேண்டும். அதற்கு நாளை மாலை வரை டயம் இருக்கிறதே." நம்பிக்கை வெளிப்பட்டது அவன் குரலில்.

☆ ☆ ☆

# 16

மாலை ஆறடித்தது. பரமானந்தன் கடையருகில் வந்தார். பரபரப்புடன் சார்ட்டைப் பார்த்தார். SE 459063 என்று இருந்தது. அப்படி என்றால் ஒற்றை நம்பர் (கடைசி எண்) எட்டு மடங்காய் வருவது மூன்று என்று அர்த்தம்.

அவருக்குக் கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு திரும்ப போனபொழுது "குட் ஈவினிங் சார்" என்ற குரல் கேட்டது. பாபு முறுவலுடன் வணங்கினான். பரமானந்தமும் 'குட் ஈவினிங்' என்றார். அவரிடம் நேற்றைக்கு இருந்த தயக்கம், சங்கோசம் இன்று இல்லை. சீட்டாட்டம், சூதாட்டம், குடி போன்ற இடங்களில் மனிதர்கள் சீக்கிரமாக நண்பர்கள் ஆகிவிடுவார்கள்.

"உன் நம்பர் வந்திருக்கு போலிருக்கு?"

"ஆமாம் சார்." பணிவோடு சொன்னான்.

"ப்ச. இந்த தடவை கூட என்னோடது வரவே இல்லை."

இருவரும் சேர்ந்து நடக்கத் தொடங்கினார்கள். பாபு கேட்டான். "எவ்வளவு கட்டினீங்க சார்?"

"ஐம்பது ரூபாய்."

பெரிய தொகைதான். ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய். வந்தால் நான்காயிரம் வந்திருக்கும். ஆனால் ஐம்பது



ரூபாய் போய்விட்டது என்பதுதான் உண்மை. நடுத்தரக் குடும்பங்களை இந்த சிங்கிள் நம்பர் லாட்டரி எப்படி நாசமாக்கி வருகிறது என்பதற்கு பரமானந்தமே ஒரு உதாரணம்.

"நான் இரண்டு மாதங்களாய் கட்டி வருகிறேன் சார். இதுவரை ஐந்தாறு ஆயிரம் வரை சம்பாதித்து விட்டேன்" என்றான் பாபு. பொய் சொல்கிறோம் என்ற தடுமாற்றம் அவன் குரலில் கொஞ்சம் கூட இருக்க வில்லை.

பரமானந்தம் வியப்புடன் பார்த்தார் அவனை. "எப்போதாவது பெரிய தொகையைக் கட்டியிருக் கிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை சார். ஒரு முறைப்படி கட்டிக்கொண்டே வந்தேன்."

"அப்படியென்றால் நாளுக்கு நாள் இரு மடங்காக பணத்தைக் கட்டி வந்தாயா?"

"அவ்வளவு பணம் என்னிடம் இல்லைங்க. அதற்கு லட்சக் கணக்கில் பணம் வேண்டுமே?"

"பின்னே என்ன செய்தாய்?"

இருவரும் ஜங்ஷனுக்கு வந்தார்கள். நாற்சந்தியில் சின்ன பார்க் ஒன்று இருந்தது. பார்க்கின் நடுவில் *Maintained by* என்று ஒரு வங்கியின் பெயர் இருந்தது. அது பரமானந்தம் வேலை பார்க்கும் வங்கி தான். இருவரும் பார்க்கையொட்டி நடக்கத் தொடங் கினார்கள்.

"நான் ஒரு சார்ட் தயாரித்திருக்கிறேன் சார். அந்த சார்ட் பிரகாரம் கட்டிக் கொண்டு வருகிறேன். வாரத்திற்கு ஒரு முறை பணம் வரும்" என்றான்.

"என்ன சார்ட் அது?" பரமானந்தம் கேட்டார்.

பாபு சட்டைப் பையிலிருந்து சார்ட்டை எடுத்துத் தந்தான். அவர் அதை ஆர்வத்துடன் பரிசீலித்து விட்டுத் திருப்பித் தந்து கொண்டே "இது போன்றவற்றால் பிரயோஜனம் இல்லையப்பா. இப்படிப்பட்ட கணக்குகளை நிறைய பேர் இதற்கு முன்பே போட்டிருப்பாங்க" என்றார்.

"போட்டிருக்க மாட்டாங்க சார்" என்றான் பாபு. "ஒவ்வொருத்தரும் பத்து ரூபாயைக் கட்டி எண்பது ரூபாய் சம்பாதிப்பது எப்படின்னு தான் யோசிப்பாங்க அல்லது தினம் தினம் இரு மடங்காக கட்டி ஒரே தடவையில் ஆயிரக்கணக்கில் சம்பாதிப்பது எப்படி என்று யோசிப்பாங்க."

"அப்படி என்றால் அவர்களுக்கு அந்த அளவுக்குக் கூட புத்தியில்லை என்கிறாயா?" அவர்களுக்கு என்றால் அவர் உத்தேசம் தனக்கு என்று.

பரமானந்தத்திற்கு கோபம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்ட பாபு. "ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கோணம் இருக்கும் சார். உதாரணமாக இந்த பார்க்கையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பாங்க் தான் இதை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எதற்காக?"

"எதற்காகவா? விளம்பரத்திற்காக."

"ஆனால் இந்த பார்க்கைப் பார்த்தீங்களா? மரங்கள் எப்படி காய்ந்து போய் கிடக்கோ பார்த்தீங்களா. விளம்பரம் கிடைப்பது இருக்கட்டும். உங்கள் வங்கிக்கு இதனால் கெட்ட பெயர் வரக்கூடிய வாய்ப்பு கூட இருக்கு. இந்த பார்க்கைப் போலவே உங்கள் பாங்க் விவகாரங்களும் பராமரிக்கப்படுகின்றனவோ என்று."



"அதையும் இதையும் முடிச்சுப் போடாதே. எங்கள் பாங்க் பற்றி ஏதாவது சொன்னால் எனக்குக் கோபம் வரும்."

"உங்கள் கடமை உணர்ச்சிக்கு என் பாராட்டுக்கள்" என்று மனதில் நினைத்துக் கொண்டு வெளியில் "நான் சொல்ல வந்தது பாசிடிவ் திங்கிங் பற்றி. ஒரு பார்க்கைப் பராமரிப்பதாய் போர்ட் வைப்பதால் விளம்பரம் கிடைக்கும் என்று உங்கள் மேனேஜ்மெண்ட் நினைக்கிறது. அதுவே ஒரு டி.வி.வைத்தால் இன்னும் அதிகமாக விளம்பரம் கிடைக்கும் இல்லையா."

பரமானந்தம் புரியாதவர் போல் பார்த்தார். "ஆமாம் சார். பார்க்கிற்கு முன்னால் போர்ட் வைத்தாலும், சாலைக்குப் பக்கத்தில் வைத்தாலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. உண்மையிலேயே பார்க்கு இன்னும் அழகாக இருந்து அந்த வங்கி எவ்வளவு நன்றாக பராமரிக்கிறது பார்த்தாயா என்ற பேச்சு மக்களுக்கு இடையே பரவினால் தவிர அந்த வங்கியின் பெயரும் புகழும் வெளியில் தெரிய வாய்ப்பு இல்லை. பார்க்கைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவு, தண்ணீர் செலவு, எருவின் செலவு, முனிசிபாலிடிக்கு செலுத்த வேண்டிய வரி எல்லாவற்றையும் சேர்த்தால் எப்படியும் ஐம்பதாயிரம் வரை ஆகும் இல்லையா. அதே ஐம்பதாயிரத்தைப் போட்டு இரண்டு கலர் டி.வி.க்களை வாங்கி எங்கேயாவது ஓரிடத்தில் வைத்து அதை பாதுகாக்கும் பொறுப்பை பக்கத்திலேயே இருக்கும் ஏதாவது ஓட்டல்காரரிடம் ஒப்படைத்தோம் என்று வையுங்கள். நூற்றுக்கணக்கான பேர் பார்ப்பார்கள். அந்த டி.வி.க்கு மேலேயே உங்கள் வங்கியின் விளம்பரப் பலகையை வைத்தோமானால் பார்க்கில் போர்ட்டை வைப்பதை விட நல்ல விளம்பரம்

கிடைக்கும். செலவு கூட குறைவு. கேபிள் டி.வி. கனெக்ஷனை போட்டு விட்டாலோ இனி கேட்கவே வேண்டாம். மக்கள் கும்பலாக வந்து கூடுவார்கள்.

பரமானந்தம் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீள வில்லை.

பாபு மேலும் சொன்னான். "இந்த யோசனை எந்த தொழிலதிபருக்குமே வரவில்லை என்றால் அவர் களுடைய திறமையை குறைவாக எடைபோட வேண்டிய தில்லை. வேறு கோணத்தில் யோசிக்காமல் போனது தான் அதற்குக் காரணம். அதனால் எதையுமே இவ்வளவு சின்ன விஷயம் இவ்வளவு நாளாய் யாருக்குமே ஏன் தோன்ற வில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஷேர்களின் விலை அதிகமாகக் கூடும் என்ற யோசனை ஹர்ஷத் மெஹதாவிற்குத் தானே வந்தது. சிங்கிள் நம்பர் லாட்டரி மூலமாய் மட்காவை சட்ட ரீதியாய் நிர்வகிக்க முடியும் என்ற யோசனை யாரோ ஒருத்தனுக்குத்தானே வந்தது? அதே விதமாக இந்த லாட்டரி மூலமாக பணம் சம்பாதிக்கலாம் என்ற யோசனை எனக்கு வந்தது."

பரமானந்தம் கொஞ்சம் தயக்கத்தோடு "என்ன வோப்பா. எனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை" என்றார்.

"சரி. விடுங்கள் சார் இந்த விஷயத்தை. நான் இந்த தியரியை என் நண்பர் படத் தயாரிப்பாளர் ஒருவரிடம் சொன்னேன். அவர் பத்து பேராக சேர்ந்து ஆளுக்கு பத்தாயிரம் ரூபாய் என்ற வீதம் லட்ச ரூபாய் முதலீடு செய்து ஆடப் போவதாகச் சொன்னார். இந்த ஐடியா சொன்னதற்காக எனக்கும் பங்கு தருவதாகச் சொன்னார். நீங்களும் சேருங்கள்."



"நானா? என்னிடம் அவ்வளவு பணம் ஏது? ஏதோ தினமும் பத்து ஐம்பது என்று ஆடுவேனே தவிர."

"உங்கள் பெயரில் நானே ஏதாவது கொஞ்சம் போடுகிறேன் சார்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான் பாபு.

பரமானந்தம் வீட்டிற்குப் போனார். பாபுவின் வார்த்தைகளே அவர் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. பாபு கொடுத்த சார்ட்டும் கையில் இருந்தது. இரவு சாப்பாடு ஆன பிறகு சாவகாசமாக அதைப் பரிசீலித்தார். அதில் பாயிண்டுகள் இப்படி இருந்தன.

**BHAGYA LAKSHMI**

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | * | * | 8 |
| 7 | 1 | 3 | 1 | 5 | 9 | 4 |
| 4 | 7 | 1 | 6 | 3 | 1 | 2 |
| 7 | 9 | 6 | 9 | 2 | 0 | 4 |
| 4 | 9 | 7 | 7 | 5 | 8 | 9 |
| 2 | 0 | 2 | 4 | 9 | 3 | |

(நவம்பர் 1992ம் வருடத்து ஒரிஜினல் பட்டியல் இது)

1. சாதாரணமாக வந்த நம்பர்களே திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தன. உதாரணமாக முதல் தேதி அன்று வந்த எட்டு என்ற எண் மறுபடியும் இருபத்தெட்டாம் தேதி வரையில் வரவில்லை.

இதற்கிடையில் ஏழு என்ற எண் ஐந்து முறை வந்து விட்டது.

2. அதனால் எப்போதும் வராத ஏதோ ஒரு நம்பர் மீது கட்டுவதை விட முதல் வாரத்தில் வந்த நம்பர்கள் மீது கட்டுவது நல்லது. உதாரணமாய் திங்கட் கிழமை ஆடவேண்டுமென்றால் அதற்கு முதல் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் வந்த நம்பர்கள் மீது ஆடவேண்டும். அன்றைக்கு வராவிட்டால் அந்த வாரம் தொடர்ந்து அதே நம்பர்கள் மீது ஆட வேண்டும்.

3. மூன்று நம்பர்கள் மீது ஆடுவதால் நமக்கு முப்பது ரூபாய் செலவு ஆகும். எண்பது ரூபாய் கிடைக்க வாய்ப்பு அதிகம். ஒரு வேளை பரிசு கிடைத்தால் லாபம் ஐம்பதுதான் என்றாலும் ரிஸ்க் குறைவு.

4. முதல் நாள் லாட்டரி விழவில்லை என்றால் அடுத்த நாள் முதலீட்டை இருமடங்காக்க வேண்டும். ஒரு முறை லாட்டரியில் பரிசு கிடைத்து விட்டால் மறுபடியும் பழைய இடத்தி லிருந்து தொடங்க வேண்டும்.

5. ஒவ்வொரு திங்கள் கிழமையும் நம்பர்களை மாற்ற வேண்டும். முந்தைய வாரம் வந்த நம்பர்களை தேர்ந்தெடுப்பது நல்லது. உதாரணமாக மேலே குறிப்பிட்ட சார்ட்டில் இரண்டாவது திங்கள் கிழமை ஆடவேண்டும் என்றால் அதற்கு முதல் திங்கள், செவ்வாய், புதனில் வந்த 7, 1, 3 என்ற நம்பர்கள் மீது ஆட வேண்டும். ஒருக்கால் இந்த நம்பர்களில் எதுவும் வரவில்லை என்றால் ஏமாற்றம் அடையாமல்



37809
6476729

திரும்பவும் அதே மூன்று நம்பர்கள் மீது இரு மடங்கு பணம் வைத்து ஆடணும்.

எல்லாவற்றையும் படித்து விட்டு 'பாவம் பையன் ரொம்ப கஷ்டப்பட்டிருக்கிறானே' என்று நினைத்துக் கொண்டார். அதற்குள் போன் ஒலித்தது.

"ஹலோ" என்றார்.

"நான்தான் சார் பாபு."

"என்ன விஷயம்?"

"உங்கள் பெயரில் எட்டு சதவீதத்திற்கு பங்கு போட்டிருக்கிறேன் சார்."

பரமானந்தம் கலவரமடைந்தார். "வேண்டாம்னு சொன்னேனே."

"பணத்தை அப்புறமாய் தருவதாகச் சொல்லியிருக் கிறேன் சார். உண்மையில் ஒரு மாதத்திற்கு முன்பே கூட்டணி தொடங்கி விட்டது. எப்படியும் என்னுடைய பங்கு இருக்கு இல்லையா? அதில் பாதியை உங்களுக்கு மாற்றச் சொல்லி சொல்லியிருக்கிறேன்."

பரமானந்தம் ஏதோ சொல்லப் போகும் முன்பே போன் கட் ஆகிவிட்டது.

* * *

நான்கு நாட்கள் கழிந்தன.

பரமானந்தம் வங்கியில் இருக்கும் போது பாபு வந்தான். அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. அவன் கையில் பணப்பை இருந்தது.

"ஜாக்பாட் அடித்து விட்டோம் சார். இதோ உங்கள் பங்கு" என்றான்.

"எவ்வளவு?"

"நான்காயிரம்."

"வாட்!" என்றார் உணர்ச்சிவசப்பட்டு.

"ஆமாம் சார்."

"அவ்வளவு எப்படி வந்தது?"

"இதோ இதைப் பாருங்கள்" என்று சார்ட்டைத் தந்தான். பரமானந்தம் அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் பாபு சொல்லத் தொடங்கினான்.

"உங்களுக்கு முன்பு கொடுத்த பட்டியலின் படி கட்டிக் கொண்டே வந்தோம். வேண்டுமென்றால் இந்த நம்பர்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். நவம்பர் ஒன்பதாம் தேதியிலிருந்தே கட்டிக் கொண்டு வந்தோம். முதல் நாள் அதற்கு முந்தைய திங்கள், செவ்வாய், புதனில் வந்த நம்பர்கள் மீது கட்டினோம்.

பரமானந்தம் பாபு சொல்வதை காதில் வாங்கவில்லை. அவன் கொடுத்த சார்ட்டை கூர்ந்து பரிசீலித்துக் கொண்டிருந்தார். அதில் அந்தந்த நாட்களில் கட்டிய நம்பர்கள் வாங்கிய டிக்கெட்டுகள், அன்று விழுந்த நம்பர்கள், அதன் மூலமாக கிடைத்த வருவாய், நிகரமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.



| அந்த வாரம் கட்டிய நெம்: | வாங்கிய டிக்கெட்ஸ் | விலை | அன்று வந்த நெம்: | மொத்த செலவு | வருமானம் | நிகர லாபம் |
|---|---|---|---|---|---|---|
| 7,1,3 | 3x100 | 3000 | 4 | 3000 | - | - |
| 7,1,3 | 3x200 | 6000 | 7 | 9000 | 16000 | 7000 |
| 7,1,3 | 3x100 | 3000 | 1 | 3000 | 8000 | 5000 |
| 7,1,3 | 3x100 | 3000 | 6 | 3000 | - | - |
| 7,1,3 | 3x200 | 6000 | 3 | 9000 | 16000 | 7000 |
| 7,1,3 | 3x100 | 3000 | 1 | 3000 | 8000 | 5000 |
| 7,1,3 | 3x100 | 3000 | 2 | 3000 | - | - |
| 4,7,1 | 3x200 | 6000 | 7 | 9000 | 16000 | 7000 |
| 4,7,1 | 3x100 | 3000 | 9 | 3000 | - | - |
| 4,7,1 | 3x200 | 6000 | 6 | 9000 | - | - |
| 4,7,1 | 3x400 | 12000 | 9 | 21000 | - | - |
| 4,7,1 | 3x600 | 18000 | 2 | 39000 | - | - |
| 4,7,1 | 3x800 | 24000 | 0 | 63000 | - | - |
| 4,7,1 | 3x1600 | 48000 | 4 | 111000 | 128000 | 17000 |
| 7,9,6 | 3x100 | 3000 | 4 | 3000 | - | - |
| 7,9,6 | 3x200 | 6000 | 9 | 9000 | 16000 | 7000 |
| 7,9,6 | 3x100 | 3000 | 7 | 3000 | 8000 | 5000 |
| 7,9,6 | 3x100 | 3000 | 7 | 3000 | 8000 | 5000 |

"என்னால் நம்பவே முடியவில்லை. லட்ச ரூபாய் முதலீடு செய்து பதினெட்டு நாட்களில் அறுபத்தைந்து ஆயிரம் லாபமா?" உணர்ச்சி வசப்பட்டவராய் சொன்னார் பரமானந்தன்.

பாபு சிரித்தான். "ஒரு நாள் முழுவதும் டென்ஷனை அனுபவித்தோம் சார். சுமார் எண்பதாயிரம் போட்ட அன்றைக்கு. ஆனால் குறைந்த முதலீட்டில் குறைந்த ரிஸ்கோடு மாதத்திற்கு நூற்றுக்கு நூறு சதவீதம் லாபம் அடையலாம்."

"இதெல்லாம் வெளியே தெரிந்தால் மக்கள் டெம்பட் ஆகமாட்டார்களா?"

"அரசங்கம் நடத்துகிற லாட்டரி சார் இது. எண்பது என்ற ஆசை காட்டி பத்து ரூபாயை சாதாரண மனிதனிடமிருந்து கொள்ளையடிக்கிறது அரசாங்கம். அதை வீழ்த்துவதற்குதான் இது."

பரமானந்தம் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். "நீ சொன்னது உண்மைதான்" என்றார். பாபுவுக்கு ஷேக் ஹேண்ட் கொடுத்துக்கொண்டே "யூ ஆர் பிரில்லியண்ட் பாய்" என்றார்.

"என் வாழ்க்கை உங்கள் கையில்தான் இருக்கு சார். எனக்குக் கடன் வாங்கித் தந்தால் எனக்கொரு வழிகாட்டியவராய் ஆவீங்க. உங்கள் உதவியை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டேன்."

"அப்ளிகேஷன் போடு. சிபாரிசு செய்கிறேன்" என்றார்.

சரியாய் பதினைந்து நாட்களில் கடன் சாங்ஷன் ஆகி வந்தது. இரும்பின் மீது பதினைந்து லட்சங்கள். இன்ஸ்பெக்டர் வைத்திருந்த கெடுவுக்கு இன்னும் மூன்று நாட்கள் இருந்தன.

"பாருப்பா. செக்யூரிட்டி இல்லாமல் கடன் தர மாட்டாங்க. வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் கடன் தரச் செய்தேன். கடன் அடைக்காமல் போனால் எனக்கு ரொம்ப கெட்ட பெயர் வந்து விடும்." சாங்ஷன் லெட்டரைத் தந்துகொண்டே சொன்னார் பரமானந்தம்.

"உங்களுக்கு கெட்ட பெயர் வரும்படியான காரியம் எதையும் செய்யமாட்டேன் சார். கோடவுன் சாவி உங்களிடம் தான் இருக்குமென்பதால் நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. சட்டத்தை ஏமாற்றி சிறைக்குள் உட்கார்ந்து கொள்கிற தைரியமோ துணிச்சலோ எனக்குக் கிடையாது." பாபுவின் குரலில் நேர்மை வெளிப்பட்டது.

★ ★ ★

# 17

எல்லா பேப்பர்களிலும் கையெழுத்துப் போட்டு அக்கௌண்டைத் தொடங்கினான். இரும்பு சப்ளை செய்யும் டீலரிடம் போய் தனக்குப் பதினைந்து லட்சம் விலை மதிப்புடைய சரக்கு வேண்டும் என்றும், பில் மட்டும் இருபது லட்சத்திற்கு வேண்டுமென்றும் கேட்டான்.

வியாபார உலகில் இது சாதாரண விஷயம் தான். ஏதாவது பொருளின் மீது பைனான்ஸ் நிறுவனம் கடன் தரும் பொழுது நூற்றுக்கு எழுபத்தி ஐந்து சதவீதம் அந்த நிறுவனம் வழங்கும். பாக்கி 25% தொழில் தொடங்கும் நபர் போட வேண்டும். அதனால் கடன் வாங்கும் நபர் சரக்கு முக்கால் பங்காக இருந்தாலும் பில் மட்டும் முழுத் தொகைக்கு வாங்கிக் கொள்வார். இந்த விதமாக தன் கையிலிருந்து முதலீடு எதுவும் போடாமலேயே வியாபாரத்தைத் தொடங்குவார். இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

பாபு கூட அப்படியேதான் தொடங்கினான். இருபது லட்சத்திற்கு சரக்கு வாங்கியதாக காட்டியதும் வங்கி பதினைந்து லட்சத்திற்கு ட்ராப்ட் தந்தது. அதை எடுத்துக் கொண்டு டீலரிடம் போனான்.

"சரக்கை எப்படி எடுத்துக் கிட்டுப் போகப் போறீங்க?"

"எடுத்துக்கிட்டு போகமாட்டேன்."

"பின்னே?" வியப்போடு பார்த்தான்.

"நாளைக்கு இங்கேயே அக்கௌண்டை செட்டில் செய்கிறேன், நாளைய இரும்பு விலைக்கு."

டீலர் நெற்றியைச் சுளித்தான். "மன்னியுங்கள். நாங்கள் தரகர்கள் இல்லை. ஃபார்வார்ட் ட்ரேடிங் செய்ய மாட்டோம். நீங்கள் பணம் தந்தீங்க. அதனால் சரக்கை எடுத்துக் கொள்ளுங்கள்."

"நாளைக்கு எடுத்துக்கிட்டுப் போறேன்."

"இன்றைய விலைக்கே எடுத்துக்கிட்டுப் போகணும்."

"கண்டிப்பாய்" என்றான் பாபு.

மறுநாள் இரும்பின் விலை பத்து பைசா கூடியது. பாபு போய் "இந்த சரக்கை உங்களுக்கே விற்று விடு கிறேன். வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

டீலர் சற்று கோபமாய் "நாங்கள் இரும்பு வியாபாரி தான். தரகர்கள் இல்லை என்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன்" என்றான்.

"நான் நேற்றைய விலைக்கே வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறேன்."

டீலர் அதிர்ந்து போய் "என்ன?" என்றான்.

"ஆமாம். பத்து பைசா குறைவாக."

மெண்டல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கிறானோ என்பது போல் பாபுவின் பக்கம் பார்த்தான்.

பாபு சொன்னான். "கோடவுன் வரைக்கும் சரக்கைக் கொண்டு போவது அனாவசியம் என்று தோன்றுகிறது. அந்த செலவும், விலை உயர்வும், சமம் தான் எனும் போது சரக்கை எதுக்காக எடுத்துக்கிட்டுப் போகணும்?"



"ஆனால் இந்த சரக்கை வெளியில் விற்றால் உங்களுக்கு லாபம் வருமே. இன்னும் கொஞ்ச நாள் போனால் விலை இன்னும் அதிகமாகலாம். இப்போதே விற்பதால் உங்களுக்கு லாபம் என்ன?"

பாபு சங்கடத்துடன் பார்த்தான். கொஞ்சம் தயங்கி விட்டு "வியாபாரத்தைத் தொடங்கிய அன்றைக்கே முதல் ட்ரான்ஸாக்ஷனை முடித்து விடணும் என்று எண்ணினேன். பார்க்கிறவங்களுக்கு இது பைத்தியக்காரத் தனமாக தென்படலாம். ஆனால் என்னோட செண்டி மெண்ட் எனக்கு." என்றான்.

டீலருக்கு இப்பொழுது நன்றாகப் புரிந்து விட்டது. பாபு தன் சரக்கை தனக்கே ஏன் விற்கிறான் என்று. இன்னொரு ஐநூறு அதிகம் போட்டு செக் எழுதித் தந்தான்.

"இதென்னது?" வியப்புடன் கேட்டான் பாபு.

"முதல் ட்ரான்ஸாக்ஷன் என்று சொன்னீங்க இல்லையா. கொஞ்சம் லாபம் இருக்கட்டும். எதிர் காலத்தில் வியாபாரம் நன்றாக இருக்கும்."

பாபு திகைப்படைந்தான். வியாபாரத்தில் இவ்வளவு தூரம் மனிதாபிமானம் தென்படுவது அரிது.

அங்கிருந்து நேராக பாங்கிற்கு வந்தான். கையோடு ஸ்வீட் பாக்கெட்டையும் வாங்கிக் கொண்டு போயிருந் தான். பரமானந்தத்திற்கு ஸ்வீட்டை தந்து விட்டு "முதல் நாளே ட்ரான்ஸாக்ஷனை முடித்து விட்டேன் சார். நேற்று வாங்கிய சரக்கைப் பத்தாயிரம் லாபத்திற்கு விற்று

விட்டேன். அதான் ஸ்வீட் கொண்டு வந்தேன்" என்று சொல்லி விட்டு டீலர் தந்த செக்கைக் கொடுத்தான். "இதை என் அக்கௌண்டில் கட்டி விடுங்கள்" என்றான்.

"குட்" என்றார் பரமானந்தம் செக்கைப் பெற்றுக் கொண்டே.

சற்று நேரம் கழித்து கிளார்க் க்ரெடிட் ஸ்லிப் கொண்டு வந்து கொடுத்தார். அதை வாங்கி பத்திரமாக வைத்துக் கொண்டான் பாபு. பதினைந்து லட்சங்கள் அக்கௌண்டில் கட்டப்பட்டதற்கான ரசீது அது.

"போய் வருகிறேன் சார்" என்று எழுந்து கொண்டான் பாபு. அங்கிருந்து மறுபடியும் டீலரிடம் சென்றான்.

"இன்னொரு பதினைந்து லட்சத்திற்கு சரக்கு வேண்டும்" என்றான், பதினைந்து லட்சத்திற்கு செக்கைத் தந்துவிட்டு.

டீலர் அந்த சரக்கை லாரியில் ஏற்றினார். லாரி பாபுவின் கோடவுனிற்குக் கொண்டு போய் சேர்க்கப் பட்டது. பாங்கின் கோடவுடன் கீப்பர் சரக்கை செக் செய்து விட்டு குறிப்பெழுதிக் கொண்டார்.

அன்று மாலையே ஐந்து மணிக்கு பாபு திரும்பவும் பாங்கிற்குப் போனான். ஊழியர்கள் எல்லோரும் வீட்டிற்குப் புறப்படும் அவசரத்தில் இருந்தார்கள். லெட்ஜர்களை, வவுச்சர்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். பாபு தன்னுடன் கொண்டு போன ப்ரீஃப் கேஸில் பால் பாக்கெட் போன்ற பாக்கெட்டுகள் இருந்தன.

அதற்குள் அவனுக்கு ஊழியர்களில் நிறைய பேர் அறிமுகமாகியிருந்தார்கள். பாபு உரிமையுடன் உள்ளே



போனான். குடிநீர் டிரம் உள் பக்கம் இருந்தது. அங்கே சென்று தண்ணீர் குடிக்கும் சாக்கில் சாக்கில் பாக்கெட்டுக் களை பீரோவின் பின்னால் போட்டு விட்டான்.

அந்த பாக்கெட்டில் சிறிய ஓட்டை இருந்தது. அதிலிருந்து ஒவ்வொரு சொட்டாக வெளியே வந்து கொண்டிருந்தது.

பரமானந்தத்துடன் பேசிக்கொண்டே பாபு வெளியே வந்து விட்டான். கதவுகளைச் சாத்திவிட்டு எல்லோரும் போய் விட்டார்கள்.

★ ★ ★

இரவு ஒரு மணிக்கு ஜன்னலுக்கு மேலே இருந்த சன்ஷேடின் மீது பாபு நின்று கொண்டிருந்தான். அந்த வங்கியின் மேலே இன்னொரு மாடி இருந்தது. அதில் நான்கு கடைகள் இருந்தன. அதில் ஒன்றை அவன் வாடகை எடுத்துக்கொண்டு பத்து நாட்களாகியிருந்தன.

பத்து நாட்களுக்கு முன்பே இரண்டு டிரம்கள் நிறைய மண்ணெண்ணையை வாங்கி வைத்திருந்தான். மற்றொரு டிரம்மில் பெட்ரோல் நிரப்பியிருந்தான். இருபதடி நீளமுள்ள குழாய்கள் மூன்றை முன்னாடியே வாங்கி வைத்திருந்தான். அந்த பைப்புகளை டிரம்மிற்குள் நுழைத்து மறுமுனையை பிடித்துக்கொண்டு சன்ஷேட் மேல் இறங்கினான்.

வங்கியின் பின்பக்கம் ஆள் நடமாட்டம் இல்லாமல் இருந்தது. சுவர் மிக உறுதியாக இருந்தது. ஒரு ஜென்னல் கூட இருக்கவில்லை. ஆனால் எக்ஸாஸ்ட் ஃபேன் மட்டும் இருந்தது.

குழாயை வாயில் வைத்துக் கொண்டு காற்றை பலமாக உள்ளே இழுத்தான். மண்ணெண்ணை பிரவாகமாக பாய்ந்து வந்தது. மூன்று பைப்புகளையும் அப்படியே செய்து விட்டு பிறகு எக்ஸாஸ்ட் ஃபேன் வழியாக உள்ளே விட்டான்.

உள்ளேயிருந்து பைப் வழியாய் தாரையாய் விழும் சத்தம் கேட்டது. மறுபடியும் பால்கனியில் ஏறி தன்னுடைய கடைக்கு வந்து விட்டான். மூன்று டிரம்களும் காலியாவதற்கு அரைமணி நேரம் பிடித்தது. பைப்புகளை மேலே இழுத்துக் கொண்டு விட்டு கடையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

மண்ணெண்ணையின் நாற்றம் லேசாக வந்து கொண்டிருந்தது. பின் பக்கமாக ஊற்றிய பெட்ரோல் மற்றும் மண்ணெண்ணையின் கலவை உள்ளே முழுவதுமாக பரவியிருப்பதற்கு அடையாளமாய் வங்கியின் வாசல் கதவிற்குக் கீழே ஈரம் தென்பட்டது. தீக்குச்சியைப் பற்ற வைத்து அதன் மீது போட்டான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து உள்ளே சிவப்பாய் தீப்பிழம்புகள் தென்பட்டன. அவன் அங்கிருந்து வெளியே வந்து விட்டான்.

☆ ☆ ☆

**'வங்கியில் தீ விபத்து ரிக்கார்டுகள் அழிந்து விட்டன.'**

மறுநாள் பேப்பரில் பெரிய எழுத்துக்களில் செய்தி வெளியாகியிருந்தது. பேப்பரை முழுவதுமாக படித்து விட்டு பாங்கிற்குப் போனான்.



அங்கே தீயணைக்கும் இஞ்சின்கள் ஏற்கெனவே வந்த வேலையை முடித்துவிட்டு போயிருந்தன. இரண்டு மூன்று பேர் போலீசார் மட்டும் நின்று கொண்டிருந்தார்கள்.

வங்கி ஊழியர்கள் எல்லோரும் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பர்னிச்சர்கள், கேஷ் கௌண்டர் எல்லாமே எரிந்து சாம்பலாகி விட்டன.

"அதிர்ஷ்டவசமாய் லாக்கர்களும், கேஷ் சேஃப் எரிந்து போகவில்லை." பரமானந்தம் சொல்லிக் கொண்டிருந்தார். பாபுவுக்கு அதில் எந்த ஆர்வமும் இருக்கவில்லை. தலையை பக்கத்தில் திருப்பிப் பார்த்தான். தினசரி வவுச்சர்களும், லெட்ஜர்கள் இருக்கும் பீரோவும் முழுவதும் எரிந்து போயிருந்தன. அவனுக்கு வேண்டியது அதுதான்.

பால் பாக்கெட் போன்ற பெட்ரோல் பாக்கெட்டுகளை அந்த பீரோவின் பின்னால்தான் முதல் நாள் மாலை அவன் போட்டிருந்தான்.

வங்கியின் ரிகார்டுகள் எரிந்து போய் மூன்று நாட்களாகி விட்டன. சேமிப்புக் கணக்குகளை வைத்துக் கொண்டிருந்தவர்கள் மிகவும் தொல்லைக்கு ஆளானார்கள். முக்கியமாக செக் வசதி இருந்தவர்கள். அவர்களுடைய பாஸ் புத்தகங்களில் உடனுக்குடன் எண்ட்ரி போட மாட்டார்கள். அதனால் அவர்களுடைய கணக்கில் எவ்வளவு பணம் இருக்கு என்று தெரிந்து கொள்வது கஷ்டம். ஐநூறுக்கு மேல் தரப்பட மாட்டாது என்று வங்கியில் போர்ட் மாட்டினார்கள். அதை எதிர்த்து சில கஸ்டமர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். அது வேறு விஷயம்.

இப்படிப்பட்ட சம்பவம் உண்மையிலேயே பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்தது. வங்கி ஊழியர்கள் இருவர் வங்கியில் இருந்த பணத்தை கையாடி விட்டார்கள். அது வெளிப்பட்டு விடக் கூடிய நேரம் நெருங்கிய போது அவர்களுடைய அதிர்ஷ்டம் அந்த வங்கியை வேறு கட்டிடத்திற்கு மாற்ற வேண்டி வந்தது. சில லெட்ஜர்களை வவுச்சர்களை ஏரியில் போட்டுவிட்டு ஷிஃப்டிங் சமயத்தில் அவை தொலைந்து போய் விட்டதாக கதை கட்டி விட்டார்கள். அந்த வங்கியின் விவகாரங்கள் அத்தனையும் தாறுமாறாகி விட்டன. கஸ்டமர்கள் பணத்தை எடுக்க முடியாமல் அவஸ்தைப் பட்டார்கள்.

பாபு அதற்கு மறுநாள் பாங்கிற்குப் போனான். பரமானந்தம் தலை போகும் அவசரத்தில் பிசியாக இருந்தார். வெளியே கஸ்டமர் யாரோ உரத்த குரலில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். தன்னுடைய பாஸ் புத்தகத்தில் எண்ட்ரி போடவில்லை என்றும் இருபத்தி ஐயாயிரம் வரை தன் கணக்கில் இருந்ததாகவும், அந்தப் பணம் வேண்டுமென்று ரகளை செய்து கொண்டிருந்தார். வங்கி ஊழியர் அவரிடம் நயமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

'என்ன விஷயம்?' என்பதுபோல் பாபுவைப் பார்த்தார் பரமானந்தம்.

"சரக்கை எடுத்துக்கணும் சார். நாலு நாளாய் கஸ்டமர்கள் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்க இந்த ரகளையில் பிசியாய் இருப்பீங்க என்று தான் வரவில்லை."

"அதனால் என்ன? எடுத்துக்கொள். கஸ்டமர் டிராஃப்ட் தந்தானா? செக்கா?" பரமானந்தம் கேட்டார்.



"டிராஃப்ட் தந்தார். அதை அன்னிக்கே வங்கியில் கட்டி விட்டேன். சரக்கை மட்டும் எடுத்துக் கொள்ள வில்லை."

பரமானந்தம் சந்தேகத்தோடு "டிராஃப்ட்டைக் கட்டி விட்டு சரக்கை எடுத்துக் கொள்ள வில்லையா?" என்றார்.

"ஆமாம் சார். உங்களுக்கு நினைவு இல்லையா. டிராஃப்டுடன் முதல் விற்பனை என்று சொல்லி ஸ்வீட் பாக்கெட் கூட வாங்கிட்டு வந்தேனே" என்றான் பாபு.

"ஆமாம் நினைவிருக்கு." பரமானந்தம் முகவாயைச் சொறிந்து கொண்டார். கொஞ்சம் தயங்கி விட்டு கோடவுன் கீப்பரை அழைத்தார். கோடவுன் கீப்பர் வயதானவர். நாலு மகள்களுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். வந்து எதிரே நின்றார்.

"இவர்" என்று பாபுவை காண்பித்தார். "இவர் கோடவுனில் சரக்கை நான்கு நாட்களுக்கு முன்னால் ரிலீஸ் பண்ணவில்லையா?"

"பண்ணியதாக நினைவு இல்லை சார்."

அதே நாளில் இரண்டாவது ட்ரான்ஸாக்ஷன் நடக்கக் கூடிய வாய்ப்பு இருக்கு என்ற சந்தேகம் அவருக்கு வரவில்லை. மேலும் யோசிக்கும் அவசாகசம் பாபு அவருக்குத் தரவில்லை. சட்டைப் பையிலிருந்து கிரெடிட் ஸ்லிப்பைக் காட்டிவிட்டு "இதோ பாருங்க." என் அக்கௌண்டில் கிரெடிட் ஆனதற்கான வவுச்சர்" என்றான்.

பரமானந்தம் ஸ்டேட் பாங்கிற்கு போன் செய்தார். கஸ்டமர் கொடுத்தது அந்த வங்கியின் டிராப்ட்தான். அதன் விவரங்களைச் சொல்லி விட்டு "அதை உங்களுக்கு

பிரசெண்ட் செய்தோமா இல்லையா என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

மறுமுனையிலிருந்தவர் கொஞ்சம் குழப்பமடைந்து "உங்களிடம் கூட அந்த ரிகார்ட் இருக்குமே?" என்றார்.

"எங்கள் க்ளியரிங் டிபார்ட்மெண்ட் சிக்கல்களில் மாட்டியிருக்கிறது. உங்களிடம் கேட்டால் உடனே தெரியுமே என்று நினைத்தேன். எதிரில் கஸ்டமர் உட்கார்ந்திருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன்னாடி எங்கள் பிராஞ்சில் தீ விபத்து ஏற்பட்டு பல ரிகார்டுகள் எரிந்து போய் விட்டன" என்றார்.

"ஓஹோ! அந்த பிராஞ்சா? ஒரு நிமிடம் லைனில் இருங்க" என்று செக் செய்து விட்டு "உங்கள் டிராஃப்ட் அன்றைக்கே பாஸாகிவிட்டது" என்றார் மேனேஜர்.

"தாங்க்யூ" என்று கோடவுன் கீபர் பக்கம் திரும்பி "அந்த சரக்கை ரிலீஸ் செய்துவிடு" என்றார் பரமானந்தம்.

பாபு எழுந்துகொண்டு "போய் வருகிறேன் சார்" என்றான். தான் திரும்பி வரப் போவதில்லை என்றும் அப்படியே வந்தால் ஒரே ஒரு முறை அக்கௌண்டை முடிக்க மட்டுமே வருவான் என்றும் அவனுக்கு மட்டும் தான் தெரியும்.

கோடவுன் கீப்பரோடு சேர்ந்து தன்னுடைய சரக்கு இருந்த இடத்திற்குப் போனான் பாபு. தயாராக இருந்த லாரியில் சரக்கை ஏற்றினார்கள்.

சின்ன பாக்கெட் ஒன்றை கோடவுன் கீப்பரிடம் தந்தான் பாபு. ஐயாயிரம் இருந்தது அதில்.

"எதுக்கு சார்?" சங்கோஜப்பட்டான் கோடவுன் கீப்பர்.



"பாங்க் மேனேஜர் முன்னால் ரிலீஸ் பண்ணி விட்டேன் சார் என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு என் சரக்கு வெளியில் வந்திருக்காது. அந்த விதமாக உதவி செய்ததற்கு" என்றான் பாபு.

கோடவுன் கீப்பர் சல்யூட் செய்து விட்டுப் போய் விட்டான்.

பாபு அந்த லாரியோடு சேர்ந்து தனக்கு சரக்கை சப்ளை செய்த முதலாளியிடம் போனான்.

"பட்ஜெட் வரப் போகிறது இல்லையா. நூறு ரூபாய் ஜாஸ்தியாகி விட்டது."

"முந்தா நாள் விலைக்கு வாங்கிக்கொள்ள முடியுமா மொத்த சரக்கையும்?"

'உங்களுக்கு புத்தி பிசகிவிட்டதா?' என்பது போல் பார்த்தார் அந்த முதலாளி.

"நான் வியாபாரத்தை விட்டு விடப்போகிறேன்."

"ஏன்?" தெரிந்து கொள்ளும் ஆவலில் கேட்டார்.

பாபு ஒரு வினாடி மௌனமாக இருந்து விட்டு "எனக்கு... எனக்கு ப்ளட் கான்சர்" என்றான் தலையைக் குனிந்து கொண்டு.

முதலாளி சலனமற்று நின்ற விட்டார். வெகு நேரம் கழித்து "ஐ யாம் சாரி" என்றார்.

"பரவாயில்லை சார்" என்றான் பாபு.

"செக் தரட்டுமா?"

"உங்கள் விருப்பம்."

அவர் செக் எழுதித் தந்தார். அதை பெற்றுக் கொண்டு அவரோடு சேர்ந்து வங்கிக்குப் போனான். அது பரமானந்தம் வேலை பார்க்கும் வங்கி இல்லை. ஸ்டேட் பாங்க்.

முதலாளியே பாபுவை அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த அறிமுகத்தின் பேரில் அக்கௌண்டைத் தொடங்கி பதினைந்து லட்சத்திற்கான செக்கைப் போட்டான் பாபு. மறுநாளே கேஷ் வேண்டும் என்று சொன்னான்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

"ட்ரீட்மெண்ட் எங்கே எடுத்துக் கொள்ளப் போறீங்க?"

"இன்னும் முடிவு செய்யவில்லை. ரொம்ப செலவாகும்னு நினைக்கிறேன். பார்க்கணும்."

முதலாளி இரக்கம் ததும்பப் பார்த்து விட்டு கை குலுக்கிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

★ ★ ★

**"எ**ன்னால் இன்னும் நம்பவே முடியவில்லை" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி கண்கள் அகல விரிய.

"எதை நம்ப முடியவில்லை?"

"இவ்வளவு சுலபமா?"

"இல்லை. கோடவுன் கீப்பர் செய்த உதவி இது."

"ஆனாலும்."

"ரிகார்டுகள் இருந்த பீரோ எரிந்து போனது அதிர்ஷ்டம். ஆனால் அதில்லை யோசிக்க வேண்டியது.



வங்கி ஊழியர் ஒருவரை நம் பக்கம் திருப்பிக் கொண்டு விட்டால் ஏமாற்றுவது எவ்வளவு சுலபம் என்று சொல்வது தான் என் உத்தேசம். நம் ரிகார்டிங் சிஸ்டம், ஆடிட்டிங், செக்கிங் இதெல்லாம் அவ்வளவு தாறுமாறாய் இருக்கிறது" என்றான்.

"இந்த குட்டு என்றைக்குமே வெளிப்பட்டு விடாதா?"

"கேஷ் செஸ்ட் எரிந்து போகவில்லை. அதனால் இருப்புத் தொகையில் பதினைந்து இருபது லட்சம் வரை வித்தியாசம் வரலாம். நான் மட்டுமே இல்லை. இந்த விபத்தை சாக்கிட்டு பாஸ் புத்தகங்களில் கொளறுபடி செய்து பணம் பெற்றுக் கொண்டவர்கள் இன்னும் சிலர் இருக்கக்கூடும்.

"பதினைந்து லட்சம் வித்தியாசம் என்றதுமே பரமானந்தத்திற்கு சந்தேகம் வருமோ என்னவோ."

"வராது. வந்தாலும் வெளிப்படுத்தமாட்டார். அது அவருக்கே ஆபத்து."

"அருகில் வாங்களேன்."

"என்ன விஷயம்?"

"வந்து என் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுங்க. என்னால் எழுந்து உங்களிடம் வரக்கூட முடியவில்லை. அவ்வளவு எக்ஸைட்டிங் ஆக இருக்கு" என்றாள்.

பாபு எழுந்து அருகில் சென்று குனிந்து அவளை முத்தமிடப் போனான்.

அப்பொழுது வந்தது இருமல் அவனுக்கு. உதட்டில் கரிப்பது போன்ற சுவை!

ஈறுகளிலிருந்து சிவப்பாய் வெளிவந்து கொண்டிருந்த ரத்தத்தைப் பார்த்து ஸ்ரீ லக்ஷ்மி பதட்டமடைந்து "என்னங்க? என்ன ஆச்சு?" என்று கத்தினாள். அவள் கண்களில் நீர் நிரம்பியது. பதட்டத்தோடு அவனை உலுக்கிக் கொண்டே, "என்ன ஆச்சுங்க?" என்று கேட்டாள் நா தழுதழுக்க.

இது நடந்த ஒரு மணி நேரத்தில் அவ்விருவரும் நகரத்தில் வசதி மிக்க, விலை உயர்ந்த ஆஸ்பத்திரியில் இருந்தார்கள்.

★ ★ ★

டாக்டர் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டே ரிப்போர்ட்டை மேஜை மீது வைத்தார். ஸ்ரீ லக்ஷ்மி அவரையே பதட்டத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். டாக்டர் பிரிஸ்க்ரிப்ஷன் பேட் மீது எழுதித் தந்து விட்டு "இந்த ரிப்போட்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் சில டெஸ்டுகளை பண்ண வேண்டியிருக்கும்." என்றார்.

"என் ஆச்சு டாக்டர்? என்ன சந்தேகம் உங்களுக்கு?" பாபு கேட்டான்.

"இப்போ எதுவும் சொல்ல முடியாது. இந்த டெஸ்டுகளை செய்து கொண்டு வாங்க" என்றார் டாக்டர்.

அதே ஆஸ்பத்திரியில் இருந்த இன்னொரு சேம்பருக்குள் நுழைந்தார்கள் இருவரும். எல்லா டெஸ்டுகளும் செய்து முடிக்க சுமார் ஒரு மணி நேரம் ஆயிற்று. ரிசல்ட்டை மறுநாள் தெரிவிப்பதாகச் சொன்னார்கள்.



ஸ்ரீ லக்ஷ்மி மிகவும் தளர்ந்து போய் விட்டாள். எப்போதும் உற்சாகத்தோடு, துடிப்பாக இருக்கும் மனைவி இப்படி மௌனமாகி விட்டதைப் பார்த்து அவனுக்கு இரக்கம் ஏற்பட்டது. பொது இடம் என்று கூடப் பார்க்காமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு அவள் அழத் தொடங்கினாள்.

"இப்போ என்ன ஆகிவிட்டது? இன்னும் ரிசல்ட் வரவில்லையே?" என்றான். வெளியில் அப்படிச் சொன்னானே தவிர அவனும் தளர்ந்து போய் விட்டான். ஒரு விதமாக பார்த்தால் அவன் மன நிலை அவனுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

நேற்று இதே நேரத்தில் பதினைந்து லட்சம் சம்பாதிப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டி ருந்தான். இன்னிக்கு சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே. இதுதான் வாழ்க்கையோ! எவ்வளவு பேர் புகழ் பெற்றாலும் கடைசியில் அதே நலிந்து போன உடம்பு, நோயால் படுக்கையில் தள்ளப்பட்டு போகத் தயாராக இருக்கும் உயிர்.

பாபு இந்த மயான வைராக்கியத்தில் இருக்கும் போதே இன்ஸ்பெக்டர் எதிர்பட்டார்.

"இதென்ன? நீ இங்கே இருக்கிறாய்?"

"உடம்பு சரியாக இல்லை."

"உடம்புக்கு என்ன?"

"கான்சராய் இருக்குமோன்னு சந்தேகம்."

"ஓ. ஐ யாம் சாரி."

பாபு அங்கிருந்து நகரப் போன பொழுது இன்ஸ்பெக்டர் பின்னாலிருந்து அழைத்தார்.

"என் பணம் விஷயம் என்ன ஆச்சு?"

"இந்த டெஸ்ட்டின் ரிசல்ட் வரட்டும்."

"அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்,"

பாபு வியப்புடன் பார்த்தான். "ஒருக்கால் இந்த டெஸ்ட் பாசிடிவ் ஆக வந்தால் நான் சில மாதங்கள் தான் உயிரோடிருப்பேன்" என்றான்.

"அதனால் என்ன?"

"எப்படியும் சாகப் போகிறேன். உங்களுக்குப் பணம் தந்துதான் ஆகணுமா?"

"போலீஸ் ஸ்டேஷனிலும், நீதி மன்றத்திலும் குற்றவாளிக்கு என்னென்ன நோய்கள் இருக்கு? எப்போ போவான் என்று பார்க்க மாட்டார்கள்."

ஸ்ரீ லக்ஷ்மி ஆச்சரியமடைந்தவளாய் பார்த்துக் கொண்டிருந்தாள். மனிதர்களில் இவ்வளவு கொடூர மானவர்களையும், பணத்திற்காக எதையும் செய்யக் கூடியவர்களையும் நேரில் பார்ப்பது இதுதான் முதல் தடவை.

"நாளைக்கு வந்து என்னை ஒரு தடவை பார்." ஆர்டர் தந்துவிட்டு இன்ஸ்பெக்டர் போய்விட்டார்.

அன்றிரவு முழுவதும் தம்பதிகள் இருவருக்குமே தூக்கமில்லை.

☆ ☆ ☆



மறுநாள் காலையிலேயே ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். இவர்களைப் பார்த்துவிட்டு டாக்டர் "வாங்க வாங்க" என்று வரவேற்றார்.

இருவரும் உட்கார்ந்து கொண்டதும் "கங்கிராஜு லேஷன்ஸ்" என்றார். "உங்கள் ரிப்போர்டுகளை எல்லாம் பரிசீலித்தேன். அது சாதாரண இருமல்தான். எந்த கான்சரும் இல்லை."

ஸ்ரீ லக்ஷ்மியின் முகத்தில் சந்தோஷம் பொங்கி வந்தது. கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீர். பாபுவின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு அழுத்தினாள். முதல் நாள் இரவெல்லாம் அவளுக்குத் தூக்கம் இல்லை. கனவிலாவது ஆறுதல் பெறுவோம் என்று நினைத்தால் தூக்கமே வராத நிலைமை. துக்கம் இல்லாவிட்டால் சுகத்தின் மதிப்பு தெரியாது.

அதற்குள் டாக்டர் சொன்னார். "ஏனோ எனக்கு சந்தேகமாய் இருந்தது. அதனால்தான் அத்தனை டெஸ்டு களையும் செய்யச் சொன்னேன்."

பாபு எழுந்து டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். ஸ்ரீ லக்ஷ்மி அவனைத் தொடர்ந்தாள்.

☆ ☆ ☆

# 18

மறுநாள் காலையில் பாபு ப்ரீஃப் கேஸோடு இன்ஸ்பெக்டர் வீட்டிற்குப் போனான்.

இன்ஸ்பெக்டர் அவனுக்காகவே காத்துக் கொண்டிருந்தார்.

"பணம் கொண்டு வந்தாயா?"

பாபு ப்ரீஃப் கேஸைத் தந்துவிட்டு "இரண்டு லட்சம் கொண்டு வந்தேன்" என்றான்.

இன்ஸ்பெக்டர் நெற்றியைச் சுளித்தார். "இரண்டு லட்சமா? பிச்சை போடுவதாக நினைத்துவிட்டாயா?"

"இவ்வளவாவது சம்பாதிக்க முடிந்ததே என்று சந்தோஷப்படுங்கள். இதொன்றும் குறைந்த தொகை இல்லை" என்றான் ஜென்னல் வழியாய் வெளியே பார்த்துக்கொண்டே.

முதல் நாள் தான் ஒரு நாடகக் கம்பெனிகாரர் களோடு பேசியிருந்தான். மிக அருமையான திட்டம் போட்டிருந்தான். லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த வர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு வரச் சொல்லி அந்த நாடகக் கம்பெனிகாரர்களிடம் சொன்னான்.

"அபாரமாக நடிப்போம். கவலையேப்படாதீங்க" என்று உத்தரவாதம் அளித்தார்கள். ஏதாவது ரசா பாசமாகிவிடுமோ என்று ஒரு பக்கம் பயமாகக் கூட இருந்தது பாபுவுக்கு. ஆனாலும் வேறு வழியில்லை.

இன்ஸ்பெக்டர் ப்ரீஃப் கேஸைத் திறந்து பணத்தை எண்ணிக் கொண்டிருந்தபோது சட்டென்று அந்த நான்கு பேரும் உள்ளே வந்தார்கள். தம் ஐடெண்டிடி கார்ட்டு களைக் காட்டிவிட்டு இன்ஸ்பெக்டர் கையிலிருந்து கேஸை



வாங்கிக் கொண்டு சீல் பண்ணி விட்டார்கள். கண் மூடி திறப்பதற்குள் இதெல்லாம் நடந்து முடிந்து விட்டது. இன்ஸ்பெக்டர் வாயடைத்துப் போனார். பாபு கூட வியப்படைந்து விட்டான். அவர்கள் இவ்வளவு திறமையாக நடிப்பார்கள் என்று அவன் ஊகிக்க வில்லை.

இன்ஸ்பெக்டர் நடுங்கிக்கொண்டிருந்தார். புலியாய் இருந்தவர் பூனையாகி விட்டார். லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் கால்களில் விழுந்து கெஞ்சத் தொடங்கினார். துக்கத்தில் அவருக்குத் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது.

"எந்தக் காரணத்திற்காக இவர் உங்களை மிரட்டி லஞ்சம் கேட்டார்?" சீஃப் போல் தென்பட்டவர் கேட்டார்.

பாபு நடந்ததையெல்லாம் சொன்னான்.

ரொம்ப சீரியஸாக கேட்டுக் கொண்டிருப்பது போல் தென்பட்டார் சீஃப். பிறகு இன்ஸ்பெக்டரை நோக்கித் திரும்பி "யு ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார் சினிமாவில் வருவதுபோல்.

இன்ஸ்பெக்டர் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார். "இந்த ஒரு தடவைக்கு என்னை விட்டு விடுங்கள். ப்ளீஸ்" என்று வேண்டிக் கொள்ளத் தொடங்கினார்.

"உனக்கு புத்தி இல்லையா? அந்தப் பையன் தனக்கு கான்சர் என்றும் இன்னும் சில நாட்களில் செத்துப் போய் விடுவேன் என்று சொன்ன பிறகும் லஞ்சம் கேட்டாயா? அதோடு செய்யக் கூடாத குற்றத்தில் சிக்க வைத்து விடுவதாய் மிரட்டினாயா?"

இன்ஸ்பெக்டர் சட்டென்று ப்ரீஃப் கேஸைத் தூக்கி சீஃபின் கையில் வைத்தார். "இந்தப் பணத்தை எல்லாம் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். என்னை விட்டு விடுங்கள்" என்றார் பேரம் பேசுவது போல்.

இந்த விவகாரத்தை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாபுவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "இதென்ன? என் பணத்தை அவங்க கையில் தந்து உங்களை விட்டு விடச் சொல்றீங்க?" என்றான் கோபமாய்.

இன்ஸ்பெக்டர் உள்ளே போய் இரண்டு நிமிடங்களில் இன்னொரு இருபத்தி ஐந்தாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு வந்துகொடுத்தார். "என்னை விட்டு விடுங்கள்" என்றார் காலில் விழாத குறையாய்.

சீஃப் பாபுவைப் பார்த்து "இந்த ப்ரபோசல் உங்களுக்குச் சம்மதம்தானா?" என்று கேட்டார்.

பாபு தன் சந்தோஷத்தை அடக்கிக் கொள்ள மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. "இனி ஒரு நாளும் என் ஜோலிக்கு வரமாட்டேன் என்றும் நடந்ததற்கு மன்னிப்புக் கடிதம் எழுதித் தரச் சொல்லுங்கள்" என்றான்.

"அந்தக் கடிதம் வெளியே வந்தால் என் வேலை போய் விடும்." தீனமாகச் சொன்னர் இன்ஸ்பெக்டர்.

"என்னை இவ்வளவு நாளாக நீங்க அழவைக்க வில்லையா? அதற்கு இது பரிகாரம். அதோடு அப்புறமாக நீங்க என் ஜோலிக்கு வரமாட்டீங்க என்று என்ன நிச்சயம்?" பாபு அதட்டினான்.

இன்ஸ்பெக்டர் வேறு வழியில்லாதவராய் கடிதம் எழுதித் தந்தார்.

எல்லோரும் வெளியே வந்தார்கள். இன்ஸ்பெக்டர் மிகவும் நிம்மதி அடைந்தவராய் தென்பட்டார். வர வேண்டிய லட்சக் கணக்கான பணம் கை நழுவிப்போய் விட்டாலும் அரெஸ்ட் ஆகாமல் தப்பித்து விட்டதற்கு சந்தோஷப்பட்டார்.

"நானும் உங்களோடு வருகிறேன். தெருமுனையில் என்னை இறக்கி விடுங்கள்" என்று அவர்களோடு தானும் ஜீப்பில் ஏறிக் கொண்டான் பாபு.



தெரு முனையில் இறங்கிக் கொண்டு "தாங்க்ஸ். மொத்தத்தில் இன்ஸ்பெக்டருக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டோம். உங்களை என்னாலேயே அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த மேக்கப்பும், உடையும், ஜீப்பும் ரொம்பவும் தடபுடல் பண்ணி விட்டீங்க" என்று தன்னுடைய ப்ரீஃப் கேஸை வாங்கிக்கொள்ளப் போனான்.

ஜீப்பில் உட்கார்ந்திருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பாபு பேசியது அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்று அவர்கள் முகத்தைப் பார்த்தாலே புரிந்தது. ஆனால் பாபு எதையும் கவனிக்கவில்லை. தன்னுடைய சந்தோஷத்தில் மூழ்கிப் போயிருந்தான்.

"மாலையில் வந்து உங்களுக்குத் தர வேண்டிய தொகையைத் தருகிறேன்" என்றான்.

"எங்கே வருவாய்? என்ன தருவாய்?" என்று கேட்டார். சீஃப் நெற்றியைச் சுளித்துக் கொண்டே.

"எங்கேயாவது? உங்கள் நாடகக் கம்பெனிக்குதான்."

"வாட் நான்சென்ஸ் யு ஆர் டாகிங்? எங்கள் நாடகக் கம்பெனியா? நாங்கள் லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்."

பாபு வாயடைத்துப் போய் விட்டான். சீஃப் டிரைவரிடம் "ஜீப்பை எடுப்பா" என்றார்.

"என் பணம்!" பதட்டமாய் கத்தினான் பாபு பின்னாலிருந்து.

"கேஸ் இல்லாமல் செய்ததற்கு எங்களுக்குத் தர வேண்டிய லஞ்சம் அது." என்றார் ஆன்ட்டி–கரப்ஷன் அதிகாரி. அவர் குரல் ஜீப் சத்தத்தில் கலந்து விட்டது.

செய்வதறியாமல் பாபுவின் முகம் களையிழந்தது. "இந்த நாடு இனி உருப்படப் போவதில்லை" என்று முனு

முணுத்துக் கொண்டே பின்னால் திரும்பிப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் வீட்டின் முன்னால் கும்பலாய் அப்பொழுதுதான் இறங்கிக் கொண்டிருந் தார்கள்.

அவர்கள்... அவன் ஏற்பாடு செய்திருந்த நாடகக் கம்பெனிக்காரர்கள்.

★ ★ ★

"அவங்க அத்தனை பேரையும் நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளணும்." குதித்துக் கொண்டிருந்தான் பாபு.

ஸ்ரீ லக்ஷ்மி அவனை இரக்கத்தோடு பார்த்தாள். "போகட்டும் விடுங்க. கேஸ் இல்லை என்றாகி விட்டதே. அது போதும்" என்றாள்.

"இரண்டு லட்சம்!" கத்தினான்பாபு வெறி பிடித்தாற் போல். "என்ன அநியாயம்? அவன் மீது கேஸ் போடாமல் இருப்பதற்கு என்னுடைய பணத்தை எடுத்துக் கொள்வார்களா? இதென்ன லஞ்ச ஊழல்? இதென்ன டிபார்ட்மெண்ட்?"

"அதன் பெயரே அதுதானே. நீங்க அந்தப் பணத்தை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து விட்டீர்கள். அதனால் இனி அது அவர்களுடையதுதானே. அதன் மூலமாய் அவர் கேஸிலிருந்து விடுபட்டார். நடுவில் உங்களுக்கு என்ன வருத்தம்?"

"நான் ஒன்றும் அவருக்கு உண்மையிலேயே தந்துவிடனும் என்று நினைத்திருக்கவில்லை. அதனால் தான் ஜீப்பில் அவர்களோடு கூடவே புறப்பட்டேன். தெருமுனையில் இறங்கிக் கொண்டு என் ப்ரீஃப் கேஸை வாங்கிக் கொள்ளலாம் என்றிருந்தேன். ஆனால் அந்த ஒரிஜினல் ஆண்ட்டி கரப்ஷன் ப்யூரோ காரர்களுக்கு இந்த விவாரமெல்லாம் எப்படித் தெரிந்தது?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.



"நான் தான் போன் பண்ணி சொன்னேன்."

பாபு துள்ளிக் குதித்தான். "நீ சொன்னாயா?" ஹிஸ்டீரியா வந்தவன் போல் கத்தினான்.

"ஆமாம். உங்களை அவ்வளவு கஷ்டப்படுத்திய அந்த இன்ஸ்பெக்டருக்குப் பாடம் கற்பிக்கனும் என்று எண்ணினேன். நீங்கள் கிளம்பிப் போன கையோடு லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளுக்கு போன் செய்தேன்."

"அடியே ராட்சசீ! என்னிடம் முன்னாடியே சொல்லி யிருக்கலாம் இல்லையா. அதே வேஷத்தில் வரச்சொல்லி நான் நாடகக் கம்பெனிகாரர்களை ஏற்பாடு செய்தேன். இப்பொழுது இரண்டு லட்சமும் கையை விட்டுப் போய் விட்டது. அது சரி. செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கணவனிடம் சொல்லணும் என்கிற இங்கித ஞானம் கூடவா இல்லை உனக்கு?"

"செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் மனைவியிடம் சொல்லணும் என்கிற இங்கித ஞானம் உங்களுக்கு இருந்திருந்தால் இந்தப் பிரச்னையே வந்திருக்காது இல்லையா. போகட்டும் விடுங்க. நடந்ததென்னவோ நடந்துவிட்டது. அந்த இன்ஸ்பெக்டரைக் கோர்ட்டுக்கு அழைத்துப் போயிருந்தால் எல்லா கதையும் வெளியே வந்திருக்கும். சிரஞ்சீவியின் ரசிகர்கள் உங்களை உண்டு இல்லை என்று ஆக்கியிருப்பார்கள்" என்றாள் ஸ்ரீ லக்ஷ்மி.

"அப்படித்தான் என்கிறாயா?"

"நிச்சயமாக அப்படித்தான் நடந்திருக்கும். இனி அதைப் பற்றி யோசிக்காதீங்க. முடிந்தால் வேறொரு வழியை யோசித்து அந்த இரண்டு லட்சத்தையும் மறு படியும் சம்பாதிக்கப் பாருங்க. இப்படி இன்ஸ் பெக்டரிடம் உதை வாங்குவது போல் வேண்டாம். நல்ல பெயரெடுக்கும்படியாக யோசியுங்கள்."

"இனி எனக்குப் பொறுமை இல்லை" என்றான்.

"பின்னே என்ன செய்யப் போறீங்க?"

"சமூக சேவை செய்வேன்."

ஸ்ரீ லக்ஷ்மி சிரிப்பை அடக்கிக் கொண்டே "கையில் ஒற்றை ரூபாய் இல்லை. சமூக சேவை செய்யப் போறீங்களா?" என்றாள்.

"சமூக சேவைக்கு பணம் எதுக்கு? நீயே பார். நான் இந்த நிமிடத்திலிருந்து மக்களுக்காகவே வாழப் போகிறேன்" என்றான்.

★ ★ ★

ஆடிட்டோரியத்தில் எள் விழ இடமில்லாத அளவிற்கு மக்கள் கூடியிருந்தார்கள். அவ்வளவு கூட்டம் முதலமைச்சர் வருகிறார் என்பதற்காக வந்ததோ அல்லது தங்கள் அபிமான கதாநாயகன் முக்கிய விருந்தினராக வருகிறார் என்பதற்காக வந்ததோ தெரியாது. ஒரே சந்தடியாக இருந்தது.

பாபு முன் வரிசையில் அமர்ந்திருந்தான். வயது இன்னும் முப்பதைத் தாண்டாத போதிலும் அளவுக்கு மீறிய வேலைச்சுமையினால் கண்களுக்கு அடியில் கரு வளையங்கள் ஏற்பட்டிருந்தன. அவனுக்குப் பக்கத்தில் ஸ்ரீ லக்ஷ்மி, அவளுக்குப் பக்கத்து இருக்கைகளில் இரு குழந்தை களும் உட்கார்ந்து இருந்தார்கள்.

அவனை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப் பட்ட விழா அது. அந்த வருஷத்து பத்மஸ்ரீ பட்டம் கிடைத்தவர் களில் அவனும் ஒருவன். அந்த பட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக மறுநாள் டில்லிக்குப் போக வேண்டும். அதை முன்னிட்டு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழா அது. பிரமுகர்கள் எல்லோரும் வரப் போகிறார்கள். அதற்குக் காரணம் இருந்தது.

இதுவரை பத்மஸ்ரீ பட்டம் பெற்ற பிரமுகர்கள் எல்லோரையும் விட வயதில் சிறியவன் அவன். இவ்வளவு



சின்ன வயதிலேயே அவ்வளவு பெரிய விருதை பெறுவதற்கு அவனது உழைப்பும் ஒன்றும் குறைவானது இல்லை.

முதலமைச்சரும், எஞ்சிய பிரமுகர்களும் மேடை மீது அமர்ந்திருந்தார்கள். விழா தொடங்கியதுமே செயலாளர் மைக் முன்னால் வந்து நின்று பேசத் தொடங்கினார்.

"சுய நலம் ஒவ்வொரு மனிதனிடம் வளர்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் பாபுவைப் போன்ற நபர் நம்மிடையே இருப்பது நம் அதிர்ஷ்டம்."

மக்கள் நிசப்தமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். செயலாளர் சொன்னதில் பொய் எதுவும் இல்லை. இந்தியாவில் ஏறக்குறைய ஐநூறு மருத்துவமனைகள் பாபுவின் மேற்பார்வையில் செயல்பட்டுக் கொண்டி ருந்தன. நோயாளிகளிடமிருந்து பணம் எதுவும் வாங்கிக் கொள்ளாமல் டாக்டர்கள் இந்த மருத்துவ மனைகளில் இலவசமாக பணி புரிந்து வந்தார்கள். ஆபரேஷன், டெஸ்டுகள் போன்றவை இல்லாமல் வெறும் க்ளினிக்காக மட்டுமே இவை செயல்பட்டு வந்தன. இவற்றின் பெயர் 'ஸ்ரீ க்ளினிக்.'

தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும் திறந் திருப்பது இவற்றின் சிறப்பு. இப்படிப்பட்ட க்ளினிக்கு களைக் காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரைக்கும் ஏறக்குறைய எல்லா நகரங்களிலும் தோற்றுவித்திருந்தான் பாபு. ஒவ்வொரு க்ளினிக்கிலும் நான்கு டாக்டர்கள் இருந்தார்கள். ட்யூட்டி வாரியாய் இந்த டாக்டர்கள் பணிபுரிந்து வந்தார்கள். கன்சல்டிங் ஃபீஸ் கூடக் கொடுக்க முடியாத ஏழைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினார்கள். ஒவ்வொரு க்ளினிக்கிலும் ஒரு சின்ன உண்டியல் இருந்தது. நோயாளி அதில் ஒரு ரூபாயை போட

வேண்டும். போடா விட்டாலும் கேட்க மாட்டார்கள். ஆனால் போட விரும்பினால் எந்தச் சூழ் நிலையிலும் ஒரு ரூபாய்க்கு மேல் போடக் கூடாது. அதே போல் தர்ம ஸ்தாபனங்களிலிருந்து வரும் நன் கொடைகளைக் கூட அவன் ஏற்க மறுத்து விட்டான்.

"எனக்கு இந்த டாக்டர்களுக்கான சம்பளம் மற்றும் செலவுகள் எல்லாம் சேர்ந்து மாதத்திற்கு நான்காயிரத் திற்கு மேல் ஆகாது. ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருகிறார்கள். அவர்கள் தருகிற ஒரு ரூபாய் நன்கொடை போதும்" என்று விளக்கம் தந்தான். அது மட்டுமில்லை தேவைக்கு அதிகமாய் பணம் உண்டியலில் சேர்ந்து விட்டால் அந்தப் பணத்தை அரசாங்க மருத்துவ மனைக்குத் தந்து விடுவான். ஸ்ரீ க்ளிக்லிருந்து வரும் நோயாளிகளில் யாருக்காவது ரத்தம் ஏற்ற வேண்டும் என்றாலோ, இன்பேஷண்டாய் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தாலோ அந்தப் பெரிய ஆஸ்பத்திரியில் இலவசமாய் சிகிச்சையளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இந்த அதிகப்படியான பணம் அங்கு அனுப்பப்படும்.

"நீங்கள் இதையெல்லாம் ஏன் செய்கிறீர்கள்?" என்று தொலைக்காட்சி பேட்டியில் கேட்டபொழுது பாபு விளக்கம் தந்தான்.

"பிளட் கான்சராய் இருக்குமோ என்ற சந்தேகத்தில் நான் சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே ஒரு இரவைக் கழித்தேன். அதிர்ஷ்டவசமாய் திரைப்பட பாடல் காண்ட்ராக்டில் நான் நிறைய சம்பாதித்து இருந்ததால் டாக்டர்களைக் கொண்டு பரிசோதனைகளை செய்து கொண்டேன். அதுவே ஒரு ஏழையாக இருந்தால் என்ன செய்திருப்பான் என்ற ஆத்ம விமரிசனம் ஏற்பட்டது. மனிதனின் வாழ்க்கையில் பணம் மட்டுமே முக்கியம்



இல்லை என்ற சத்தியம் புரிந்தது. என்னிடமிருந்த பணத்தில் ஒரு இலவச மருத்துவமனையைத் தொடங்கினேன். முதல் மாதம் அதன் செலவிற்குத் தகுந்த வருமானம் வரவில்லை. ஆனால் அப்புறமாய் போதுமானதாய் இருந்தது. க்ளினிக்கிற்கு போய் தன் உடல் நலனை பரிசோதித்துக் கொள்ள வேண்டுமென்றால் ஒரு ரூபாய் போதும் என்ற நம்பிக்கை ஏழை மக்களுக்கு வந்தது. எதிலும் கிடைக்காத திருப்தி எனக்கு இதில் ஏற்பட்டது. அதனால்தான் நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் ஸ்ரீ க்ளினிக் நிறுவ வேண்டும் என்பதை என் லட்சியமாக்கிக் கொண்டேன்."

சொன்னது போலவே அவன் ஏறக்குறைய ஐநூறு ஊர்களில் மருத்துவமனைகளை தோற்று வித்தான். கால்களில் சக்கிரம் கட்டிக்கொண்டு திரிந்தான். எங்கேயாவது சின்ன மோசடி நடந்தாலும், டாக்டர்கள் அலட்சியமாக பார்க்கிறார்கள் என்று தெரிந்தாலும் அடுத்த நிமிடமே நடவடிக்கை எடுத்துவிடுவான். மாதத்தில் இருபத்தி ஐந்து நாட்களும் ஊர் ஊராய் சுற்றிக் கொண்டிருந்தான். ஜெய்பூரிலும், ஒரிஸ்ஸாவிலும் அவனை தெய்வமாகக் கொண்டாடினார்கள். அவன் சேவையைப் பாராட்டி மதர் தெரெஸா கூட கடிதம் எழுதியிருந்தார்.

ஸ்ரீ க்ளினிக்கில் வேலை செய்வதைத் தம் அதிர்ஷ்டமாக பாவித்தார்கள் டாக்டர்கள். ஆனால் அங்கே சம்பளம் குறைவு. வெறும் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டும். நோயாளிகள் உண்டியலில் போடும் ஒரு ரூபாய், மாதத்திற்கு இரண்டு மூன்று ஆயிரங்களுக்கு மேல் தேறாது. அந்தப் பணம் டாக்டர்களின் சம்பளத்திற்கே சரியாய் இருக்கும். ஆனாலும் என்ன? ஏழைகளின் கற்பக விருட்சம் அது.

முதலமைச்சர் தன் உரையில் இந்த விஷயத்தைத் தான் சொன்னார். இந்த க்ளினிக்குகள் இவ்வளவு சேவை

செய்வதைப் பார்த்து விட்டு அரசாங்கம் உதவி செய்ய முன் வந்தது என்றும் ஆனால் பாபு மறுத்து விட்டான் என்றும் சொன்னார். இப்படிப்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட நிறுவனங்களுக்கு நன்கொடைகள் தாராளமாய் வரும் என்றும் அவற்றை மறுத்ததிலிருந்தே பாபுவின் சுயநலமற்ற குணம் தெரிகிறது என்றும், சொன்னார். இப்படிப்பட்ட நபருக்கு பத்மஸ்ரீ பட்டம் கிடைப்பதில் மிகச் சந்தோஷமாய் இருப்பதாகச் சொல்லிவிட்டு உரையை முடித்துக் கொண்டார்.

அடுத்ததாக வந்த பேச்சாளர் நடிகர் சிரஞ்சீவி. பாபு தன்னை முதன் முதலில் சந்திக்க வந்ததைப் பற்றி சுருக்கமாக தெரிவித்துவிட்டு ரொம்ப நாளாக தனக்கு சில்ட்ரன்ஸ் டிரஸ்ட் ஒன்றை நிறுவவேண்டும் என்று விருப்பம் இருப்ப தாகவும் அதை நிர்வகிக்க சரியான ஆள் கிடைக்காததால் இதுநாள் வரையில் செயல்படுத்த முடியவில்லை என்றும் சொன்னார். பாபு போன்ற நபர் கிடைத்தால் நன்றாக யிருக்கும் என்று குறிப்பிட்டார்.

அடுத்ததாக மைக்கிற்கு முன்னால் பாபு வந்த பொழுது ஆடிட்டோரியத்தில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது. அவன் பேசத் தொடங்கினான்.

"பல வருடங்களுக்கு முன்னால் கையில் ஒரு பைசா கூட இல்லாத காலத்தில் எனக்குப் பணம் தேவைப்பட்டு முதல் முதலாக மக்களை ஏமாற்றினேன், ஒரு கவிதையின் மூலமாக."

பார்வையாளர்கள் விக்கித்துப் போனார்கள். அவன் அவ்வாறு பேசுவான் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை. அவனுடைய கடந்த காலத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது. அவன் சொன்னது மக்களுக்கிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. அதற்குள் பாபுவின் குரல் திரும்பவும் கேட்டது.



"மக்களை ஏமாற்றுவது தவறு என்றும் அவர்களின் தேவையை கேஷ் செய்து கொண்டால் அது தவறு ஆகாது என்றும் தோன்றி இரண்டாவது முறையாக ஏமாற்றிவேன். சிரஞ்சீவியின் சினிமா பாட்டுக்களின் காசெட் மூலமாய்."

ஆடிட்டோரியத்தில் மக்கள் எவ்வளவு அதிர்ச்சியில் இருந்தார்கள் என்றால் பத்திரிகை நிருபர்கள் கூட எழுதுவதை நிறுத்தி விட்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"முதல் மோசடியில் மக்களுக்கு நான் தந்தது எதுவும் இல்லை. அவர்களைக் கொண்டு ஐஸ்க்ரீமுக்குப் பணம் செலவு செய்ய வைத்ததைத் தவிர. ஆனால் இரண்டாவது மோசடியில் ஆடியோ காசெட்டுகள் விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டேன். துரதிர்ஷ்ட வசமாக ஒரு இன்ஸ்பெக்டர் என்னை பிளாக்மெயில் செய்யத் தொடங் கினார். வேறு வழியில்லாத சூழ்நிலையில் மறுபடியும் பணம் சம்பாதிப்பதற்கு இந்த முறை ஒரு பாங்கையே ஏமாற்ற வேண்டியிருந்தது."

பத்திரிகை நிருபர்கள் அப்பொழுதுதான் சுயநினைவு பெற்றவர்களாய் எழுதிக்கொள்ளத் தொடங்கினார்கள். முதலமைச்சர் திகைப்புடன் பாபுவைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாபு தொடர்ந்தான்.

"நான் பாங்கை ஏமாற்றி சம்பாதித்த பணத்தை அந்த இன்ஸ்பெக்டருக்கு லஞ்சமாக கொடுத்து விடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் என் மனைவி ஆண்டி கரப்ஷன் டிபார்ட்மெண்டுக்கு போன் செய்து அந்த இன்ஸ்பெக்டரை சட்டத்தின் கையில் பிடித்துக் கொடுக்க விரும்பினாள். துரதிர்ஷ்டவசமாக அந்த டிபார்ட்மெண்ட் காரர்கள் கூட லஞ்சப் பேர்வழிகளாய் இருந்ததால் அந்த இன்ஸ்பெக்டர் தப்பித்துக் கொண்டார். அப்பொழுது எனக்கு இந்த சமுதாயத்தின் உண்மை நிலை புரியத் தொடங்கியது" என்று நிறுத்தி விட்டு மீண்டும் தொடர்ந்தான்.

"அதே சமயத்தில் ஒரு நாள் எனக்கு லேசாய் இருமல் வந்து ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கே டாக்டர் எனக்கு பிளட்கான்சராய் இருக்கக்கூடும் என்று சொல்லி விதவிதமான டெஸ்டுகளை செய்து விட்டு ஆயிரம் ரூபாய்க்கு மேல் வசூல் செய்து கொண்டு கடைசியில் அது சாதாரண இருமல்தான் என்று சொன்னார். அதன் மூலமாய் எனக்கு இந்தப் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் செய்து வந்த மோசடி எல்லாம் புரிந்தது. அந்த நேரத்தில் என் மனைவி மக்களை ஏமாற்றி கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்வதை விட மக்களிடமிருந்து வெற்றி முழக்கத்தை பெறக் கூடிய திட்டம் ஏதாவது யோசிக்கும் படி அறிவுரை வழங்கினாள்.

அப்பொழுது எனக்கு ஒரு யோசனை தோன்றியது. ஒரு சின்ன க்ளினிக்கை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் ஒரு டாக்டரை ஆயிரம் ரூபாய்க்கு சம்பளத்திற்கு அமர்த்தினேன். வந்த நோயாளிகளிடமிருந்து பணம் எதுவும் வாங்கிக் கொள்ளாமல் மருந்துகளுக்காக ப்ரிஸ்க்ரிப்ஷன் மட்டும் எழுதிக் கொடுக்கும் படிச் சொன்னேன். ஏழைகள், நாதியற்றவர்கள் நூற்றுக் கணக்கில் வரத் தொடங்கினார்கள். அப்பொழுது மேலும் இருவரை நியமித்து இருபத்தி நான்கு மணி நேரமும் அந்த க்ளினிக்கைத் திறந்து வைக்கும்படி ஏற்பாடு செய்தேன். அந்த டாக்டர்களுக்கு சம்பளம் தருவதற்காக ஒரே ஒரு ரூபாய் மட்டும் உண்டியலில் போடும்படி சொன்னேன். உண்மையில் என்னுடைய வருமானம் நீங்கள் உண்டியலில் போடும் பணம் இல்லை."

பார்வையாளர்கள் எல்லோரும் வாயைப் பிளந்தபடி கேட்டுக்கொண்டிருந்தார்கள். பாபு அவர்களைப் பார்க்க வில்லை. அவன் பார்வையெல்லாம் ஆடிட்டோரி யத்திற்கு அப்பால் இருளும் ஒளியும் கலந்த சூனியத்தில்



லயித்திருந்தது. தனக்குத்தானே பேசிக் கொள்வது போல், தன் கதையைத் தனக்கே சொல்லிக் கொள்வது போல் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஒவ்வொரு க்ளினிகிற்குப் பக்கத்திலேயே நான் ஒரு மெடிகல் ஷாப்பைத் திறந்தேன். அந்த மெடிகல் ஷாப் என்னுடையது என்று யாருக்குமே தெரியாது. டாக்டர் ப்ரிஸ்க்ரிப்ஷன் தருவார். மருந்துகள் மட்டும் அந்தக் கடையில்தான் வாங்க வேண்டும். ஏன் என்றால் ப்ரிஸ்ரிப்ஷனில் எழுதிய மருந்துகள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக உடனே அந்த மருந்துகளை வாங்கிக்கொண்டு வந்து காட்டச் சொல்லி நோயாளிகளுக்கு சொல்லும்படியாக டாக்டர்களுக்குப் பயிற்சி அளித்தேன். இதனால் உண்டயலில் ஒரு ரூபாய் போட்டாலும் சரி போடாவிட்டாலும் சரி என் மருந்துக் கடையில் தான் மருந்துகளை வாங்க வேண்டும். நாளொன்றுக்கு இருநூறு முன்னூறு பேர்கள் என் கடையில் மருந்துகளை வாங்கத் தொடங்கினார்கள். ஒரே மாதத்தில் என் கடையின் வருமானம் பதினைந்து ஆயிரத்திற்கு வந்து சேர்ந்தது. உடனே வேறொரு நகரத்தில் இப்படிப்பட்ட க்ளினிக்கைத் தொடங்கினேன். ஒரு வருடத்திற்குள் நாட்டில் இப்படிப்பட்ட இலவச க்ளினிக்குகள் ஐநூறு வரைக்கும் நிறுவப்பட்ட விஷயம் உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான்."

மக்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கிற்று. எல்லோரும் சலனமற்று பாபு சொல் வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"இன்னொரு பக்கத்தில் இந்த இலவச க்ளினிக்குகள் மூலமாய் என்னுடைய பெயரும் புகழும் நாடெல்லாம் பரவத் தொடங்கிற்று. பணம் மலையாய் வந்து குவிந்தது. ஆனால் என்னுள் மனப் போராட்டம் தொடங்கி விட்டது.

நான் செய்து கொண்டிருந்ததில் எந்த தவறும் இல்லை என்றும் மெடிகல் ஷாப்பில் நான் விற்கும் மருந்துகளை சாதாரண விலைக்கே விற்கிறேன் என்றும் எனக்குத் தெரியும். நான் செய்ததெல்லாம் மக்களை என் க்ளினிக்கை நோக்கி கவர்ந்து இழுத்தது தான். இந்த விதமாக கடந்த பத்து வருடங்களில் நான் சம்பாதித்த பணம்" என்று தன் பாக்கெட்டிலிருந்து ஒரு செக்கை வெளியே எடுத்தான்.

"ஐந்து கோடி ரூபாய்கள். என் க்ளினிக்கிற்கு செலவு மாதத்திற்கு மூவாயிரம் ரூபாய், மெடிக்கல் ஷாப்பிலிருந்து வருமானம் முப்பதாயிரம் ரூபாய்."

ஆடிட்டோரியத்தில் எல்லோரும் திடீரென்று அசைந்ததால் ஒரு விதமான சலசலப்பு ஏற்பட்டது. பாபு அந்த செக்கை உயர்த்திக் காட்டியபடி "இந்த செக்கை நான் முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்" என்று அவரிடம் போய் ஒப்படைத்து விட்டுத் திரும்பவும் மைக் அருகில் வந்தான்.

"நான் நாளைக்கு டில்லிக்குப்போகப் போவதில்லை. எனக்கு பத்மஸ்ரீ பட்டம் தேவையில்லை. அதற்கு நான் தகுதி உடையவன் இல்லை. நான் செய்த தவறுகள், செய்த மோசடிகள் இந்த ஆஸ்பத்திரிகள் நிறுவியதால் மட்டும் இல்லை என்றாகிவிடாது. உண்மையிலேயே இந்த க்ளினிக்குகள் மூலமாக சமூகத் தொண்டு செய்ய வேண்டும் என்று நினைத்தால் எனக்கு இவ்வளவு மரியாதைகளும், பரிசளிப்புகளும், கார்களும், இவ்வளவு மக்களும் தேவையில்லை. இவையெல்லாம் எதிர் பார்த்துக் கொண்டு இவ்வளவு நாளாக இருந்திருக்கிறேன் என்றால் என்னுள் இன்னும் சுய நலம் இருக்கிறது என்று அர்த்தம். நான் இந்த நிமிடத்திலிருந்து ஒரு ரிஷியாக மாற வேண்டுமென்று நினைக்கிறேன். என்னுள் தொடங்கி விட்ட இந்த மனப் போராட்டம் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது."



அவன் குரல் மந்திரஸ்தாயில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆடிட்டோரியத்தில் உட்கார்ந்திருந்த ஸ்ரீலக்ஷ்மியின் கண்கள் ஏனோ ஈரமாயின. தன் கணவனிடம் சமீபகாலமாய் தோன்றிக் கொண்டிருந்த மாறுதலை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். அதனால் தான் அவன் இதையெல்லாம் மக்களுக்கு முன்னால் சொல்வதாகச் சொன்ன போது முதல் நாள் இரவு அவள் உற்சாகப்படுத்தினாள்.

பாபு சொல்லத் தொடங்கினான். "இந்த நிமிடத்திலிருந்து இந்த க்ளினிக்குகளையும், மருந்துக் கடைகளையும் நான் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப் போகிறேன். அவற்றிற்கும் எனக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை. நானும், என் மனைவியும் குழந்தைகளும் எங்கள் வேலைகளை செய்து கொண்டு வாழப்போகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மக்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அப்பாவி மக்களை ஏமாற்றுவது ரொம்ப சுலபம். ஆனால் அதையே வாழ்க்கையின் லட்சியமாக வைத்துக் கொண்டால் எவ்வளவு பணம் வேண்டுமானலும் சம்பாதிக்க முடியும். எவ்வளவு புகழை வேண்டுமானாலும் பெற முடியும். ஆனால் மன நிம்மதியை மட்டும் சம்பாதிக்க முடியாது. என் வாழ்க்கையில் நான் தெரிந்து கொண்ட முதலும் கடைசியுமான பாடம் இது. வணக்கம்" என்று முடித்து விட்டு போய் உட்கார்ந்து கொண்டான்.

மக்கள் கை தட்டவும் மறந்து போனவர்களாய் நிசப்தமாய் இருந்துவிட்டார்கள். எல்லோருக்கும் முன்னால் தேறிக் கொண்டது முதலமைச்சர் தான். அவர் மைக்கிடம் சென்று "இதெல்லாம் விசித்திரமாகவும், கற்பனை செய்து பார்க்க முடியாததாகவும் இருக்கிறது. எது எப்படியிருந்தாலும் இத்தனை பேருக்கு பாபு சேவை செய்து சரித்திரப் புகழ் பெற்று விட்டார். இந்த ஐந்து கோடி ரூபாய்

களைக் கொண்டு பாபுவின் லட்சியத்தை நிறைவேற்றுவோம் என்று உறுதியளிக்கிறேன். "ஸ்ரீ ஹாஸ்பிடல்" என்ற சூப்பர் ஸ்பெஷல் ஆஸ்பத்திரிக்கு இந்த ஐந்து கோடி ரூபாய் மூலதனமாக வைக்கப்படும்" என்று அறிவித்ததும் ஆடிட்டோரியத்தில் கைதட்டல்கள் கேட்டன.

பாபு இவை எதையுமே பொருட்படுத்தவில்லை. நிகழ்ச்சி முடிந்ததுமே கீழே இறங்கி வந்தான். பத்திரிகை நிருபர்கள் பலவிதமான கேள்விகளை கேட்கத் தொடங்கினார்கள். அவன் எதுவும் பேசவில்லை. காமெராவின் ப்ளாஷ் வெளிச்சம் பளிச் பளிச் சென்று அவன் மீது மின்னிக் கொண்டிருந்தது. அதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

ஸ்ரீ லக்ஷ்மியிடம் வந்தான். அவளோடு சேர்ந்து நடந்து ஹாலை விட்டு வெளியே வந்தான். அவர்கள் நடந்து போகும் போது எதிரே காந்தி வந்தான். ஸ்ரீ லக்ஷ்மியும், லக்ஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பாபு காந்தியிடம் போனான். "நான் தவறு செய்து விட்டேனா?" என்று கேட்டான்.

காந்தி சிரித்துவிட்டு "இல்லை" என்றான்.

"நான் செய்த இந்தக் காரியத்திற்கு எதிர்காலத்தில் வருத்தப்படுவேனா?" பாபு கேட்டான்.

"நிச்சயமாக வருத்தப்பட மாட்டாய் என் அனுபவமே அதற்கு சாட்சி." காந்தி சொன்னான்.

**-நிறைந்தது-**

37809
5476729
கொளத்தூர், சென்னை